
# கமல மலர்

யாழ். புங்குடுதீவு
கமலாம்பிகை கனிஷ்ட மகா வித்தியாலயம்



## பவளவிழாச் சிறப்பு மலர்

75 ஆவது ஆண்டு
பவள விழாவையொட்டி மலரும்

# கமலமலர்

## பவள விழா சிறப்பு மலர்

**யாழ். புங்குடுதீவு**

**கமலாம்பிகை கனிஷ்ட மகாவித்தியாலயம்**

வெளியீடு:

ஆசிரியர், பவளவிழா மலர்க்குழு,

2011

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | கமலமலர்<br>பவளவிழாச் சிறப்பு மலர் |
| ஆசிரியர் | : | வைத்தியகலாநிதி ஆ.பேரின்பநாதன் |
| பதிப்புரிமை | : | ஆசிரியர், பவளவிழா மலர்க்குழு |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| வெளியீடு | : | ஆசிரியர், பவளவிழா மலர்க்குழு<br>யாழ். புங்குடுதீவு<br>கமலாம்பிகை கனிஷ்ட மகாவித்தியாலயம் |
| அச்சுப்பதிப்பு | : | கரிகணன் பிறிண்டேர்ஸ்<br>424, காங்கேசன்துறை வீதி,<br>யாழ்ப்பாணம். |
| பக்கம் | : | 166 |

இந்துப் போட்டினதும்,
இந்துக் கல்லூரிகள் சபையினதும் தலைவராக
1923 - 1962 வரையிலிருந்து
இந்துப் போட் பாடசாலைகளினதும்
இந்துக் கல்லூரிகளினதும்
தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் உதவிய

## "கல்வித்தந்தை"



## சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி

அவர்களுக்கு

## இந்நூல் சமர்ப்பணம்

# பாடசாலைக் கீதம்

யாழ் நகர் மீதமர் புங்குடுதீவினில் கமலாம்பிகை
வித்தியாலயம் வாழ்க.
அறிவொளி பெருக்கியே வாழ்க
அகிலம் புகழவே வாழ்க. (யாழ் நகர்)

செந்தமிழ் ஆங்கிலம் திகழ்ந்திடும் பலகலை
சேர்ந்தனல் இளைய கல்லூரி
விந்தை மகிழ்ந்திட கணிதம் விஞ்ஞானமும்
விளங்கிடும் இளைய கல்லூரி. (யாழ் நகர்)

எவ்விடம் ஏகினும் எந்நிலைமேவினும்
எம்கலாசாலையை நாம் மறவோம்
எமதாசிரியர் தமைப்பணிவோம் அவர்களை
என்றென்றும் மதிப்போம். (யாழ் நகர்)

கந்தனின் கருணையில் கலைபல சிறந்து
களிப்புடன் மேவுகை நாளும்
வித்தகனருளால் விந்தைகள் சிறந்து
விளங்குக வாழிய வாழியவே
விளங்குக வாழிய வாழியவே
விளங்குக வாழிய வாழியவே.

பண்டிதர் செ. ஐயாத்துரை ஆசிரியர்,
உரும்பராய்.

# புங்குடுதீவு கீதம்

புங்குடுதீவெனும் பொன்னகமே
புங்குடுதீவெனும் பொன்னகமே - அலை
பொங்கும் கடலரண் சூழ்நிலமே !
தெங்கு, பனை வளம் கொள்நிலமே - கமம்
செய்யும் பெருமக்கள் உய்வகமே.

செல்வம் கொழிக்கின்ற பெருவணிகர் - கல்வித்
தேனை அளிக்கின்ற நல்லறிஞர்
வெல்லற் கரிதான நெஞ்சுரத்தோர் - சேர்ந்து
வாழும் தனித்துவத் தீவகமே !

தெய்வ அருட்கொடை கொண்டபதி - தொல்லை
தீங்கு அனைத்தையும் வென்றபதி
உய்யவழி காட்டும் நான்மதம் - ஞானத் (து)
உண்மையில் ஒன்றெனக் கண்டபதி.

கிழக்கதன் எல்லையே வல்லன் என்றால் - குறி
காட்டுவான் இறுப்பிட்டி மேற்கெனலாம்
செழிப்போடு பெருங்காடு நடுவே கண்டு வீரா
மலை தெற்கே வடக்காக ஊரதீவாம்

ஏழ் சிறு தீவுகள் மத்தியிலே - நின்று
இயங்கி ஒளிகாலும் முத்தகமே !
யாழ்நகர் நெற்றியில் இட்டதொரு - விழிப்
பொட்டென நின்றொளிர் தீவகமே.

கோயில், குளம், பள்ளி, கலைகளுண்டு - திசை
காட்டும் கலங்கரைத் தீபமுண்டு
வாயில் என நிற்கும் மடத்துவெளி - கற்பை
வழுத்திடும் கண்ணகித் தெய்வமுண்டு.

கரைகள் எங்கும் காவல் தெய்வமுண்டு - மணி
பல்லவத் தன்னையும் பக்கம் உண்டு
வரையில் வரலாற்றுப் பெருமையுண்டு - கண்ணன்
வாழுமே பிருந்தா வனமிதுவே!

மு. பொன்னம்பலம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமி அவர்களின்**

# அருளாசிச் செய்தி



கல்விசார் பெருந்தகையீர் !

கமலாம்பிகை கனிஷ்ட மகாவித்தியாலயம் இன்று தனது 75ஆவது ஆண்டு பவளவிழாவைக் கொண்டாடும் நிலையையிட்டு மகிழ்வடைகின்றோம். நாவலர்பெருமானால் தொடக்கிவைக் கப்பட்ட சைவமும் தமிழும் தழுவிய இந்துப்பாரம்பரியக் கல்விக்கொள்கையின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட இந்து போட்டினது பாடசாலைகளில் இதுவும் ஒன்றாகும். இதன் ஆரம்பத் தலைவராக சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் விளங்கினார். சமகாலத்தில் இதன் செயலாளராக விளங்கியவர் தீவக மண்ணின் மைந்தரான சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி ஆகும். இவரது தலைமைத்துவம் இந்துபோட்டிற்கு 1923 முதல்-1962வரை நீடித்தது. புங்குடுதீவு இந்து போட் சார்பில் அமைக்கப்பட்ட 09 பாடசாலைகளில் இதுவும் ஒன்று. இப்பாடசாலை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி அவர்களின் குடும்ப ஆலயமான தல்லையப்பற்று சங்கரமூர்த்தி முருகமூர்த்தி ஆலயக் காணியில் அவரின் பாடசாலை ஆரம்பப் பணிகளை முன்னெடுப்ப தற்கு உதவியாக நியமிக்கப்பட்ட ஆசிரியர் நீ. சேதுபதி அவர்கள் முயற்சியால், அவரது சகோதரர் நீ. ஆறுமுகம் ஆசிரியர் மகள் கமலாம்பிகை பெயரால் இப்பாடசாலை 1936இல் ஆரம்பிக்கப்பட்டது. இவ்விரு சகோதரர்களும் நாவலர் பெருமானின் கந்தப்புராண கலாச்சாரத்தின் பரப்புரைஞர்களாக அன்று விளங்கியவர்கள். இப்பாடசாலை எல்லோருக்கும் கல்வி என்ற இந்துபோட்டின் கல்வித்திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டது.

"கண் உடையார் என்போர் கற்றோர் முகத்து இரண்டு
புண் உடையார் கல்லா தவர்"

என்னும் வள்ளுவர் வாக்கிற்கமைய இக்கல்விப்பணியினை ஆற்றி இருக்கின்ற அதிபர், ஆசிரியர், பழைய மாணவர், நலன்விரும்பிகள் அனைவரையும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம். இப்புனிதப்பணி பல்லாண்டு காலம் வளர்ச்சியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹாசந்நிதானம்,
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.


කාර්යාලය / அலுவலகம் / office: 2669277, 2690800
පොදු / பொது / General: 2669269, 2689360, 2689361
ෆැක්ස් / பக்ஸ் / Fax: 2669278

නිවස / வதிவிடம் / Residence: 2503467
Mobile: 0777781891
E-Mail: deva@slt.lk
ෆැක්ස් / பக்ஸ் / Fax: 2585255

ඩග්ලස් දේවානන්දා පා.ම.
டக்ளஸ் தேவானந்தா பா.உ.
DOUGLAS DEVANANDA M.P.

සම්ප්‍රදායික කර්මාන්ත හා කුඩා ව්‍යවසාය සංවර්ධන අමාත්‍ය
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்
MINISTER OF TRADITIONAL INDUSTRIES AND SMALL ENTERPRISE DEVELOPMENT

ඔබේ අංකය/உங்களது இல/ Your No : මගේ අංකය/எனது இல/ My No : දිනය/திகதி/ Date : 19.04.2011



யாழ். புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகா வித்தியாலயம் தனது பவளவிழாவைக் கொண்டாடும் முகமாக வெளியிடுகின்ற "கமலமலர்" சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்குவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தமையை யிட்டு மனமகிழ்கிறேன்.

1923ஆம் வருடம் முதல் 1962ஆம் வருடம் வரையில் இந்துபோட் மற்றும் இந்து கொலிச் கவுன்சில் ஆகியவற்றின் தலைவராக விளங்கிய, இலங்கை நாடாளுமன்றத்தின் முன்னாள் சபாநாயகர், மந்திரி சபைத்தலைவர் சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி அவர்கள், புங்குடுதீவுப் பகுதியில் உருவாக்கிய 10 பாடசாலைகளில் புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகா வித்தியாலயமும் ஒன்றாகும்.

2ஆம் வகைத் தரத்தைப் பெற்றுச் செயற்பட்டுவருகின்ற இப்பாடசாலை, இப்பகுதி மாணவர்களுக்குக் கல்வி மற்றும் விளையாட்டுத்துறை சார்ந்த சிறந்த சேவையை வழங்கி வருவதில் முன்னின்று உழைத்து வருவதைக் கண்டு நான் பெருமிதம் அடைகின்றேன்.

யாழ். குடாநாட்டின் கல்வி மற்றும் விளையாட்டுத்துறை சார்ந்த எனது துரித செயற்பாட்டுத் திட்டங்களுக்கு அமைவாக, இப்பாடசாலையின் வளர்ச்சியிலும் எனது பங்களிப்புக்கள் என்றென்றும் தொடரும் என்பதையும் இச் சந்தர்ப்பத்திற் குறிப்பிட விரும்புகின்றேன்.

இந் நிலையில், 75ஆவது வருடத்தைப் பூர்த்தி செய்து, பவளவிழாவைக் கொண்டாடுகின்ற இப்பாடசாலையின் வளர்ச்சியில் தங்களது பங்களிப்புக்களை வழங்கியுள்ள, வழங்கி வருகின்ற அனைத்துத் தரப்பினருக்கும் நன்றி கூறி, இந்தச் சஞ்சிகையை வெளிக்கொண்டு வருவதில் உழைத்துள்ள அனைவருக்கும் எனது பாராட்டினைத் தெரிவித்து, இப்பாடசாலையின் பணிகள் சிறந்தோங்க எனது வாழ்த்துக்களையும் ஆசியினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டக்ளஸ் தேவானந்தா பா.உ.**
செயலாளர் நாயகம் - ஈ.பி.டி.பி.
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும்
சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்
இணைத் தலைவர் - யாழ்-கிளிநொச்சி தேர்தல் மாவட்ட இணைப்புக் குழு

780, මරදාන පාර, කොළඹ 10. 780, மருதானை வீதி, கொழும்பு 10 780,Maradana Rd, Colombo 10.

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு செயலாளர்

**இ. இளங்கோவன் அவர்களின்**

# ஆசிச்செய்தி



எனது பிறந்த மண்ணில் கல்விச்சேவை புரிந்துவரும் யா/ புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகாவித்தியாலயம் தனது 75ஆண்டுகள் பூர்த்தி செய்வதையிட்டு அக மகிழ்வடைகின்றேன்.

புங்குடுதீவுப் பகுதியில் உள்ள 12 இந்துப் பாடசாலைகளில் 09 பாடசாலைகள் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் (Hindu Board) கீழ் உயர்திரு. சேர். வைத்திலிங்கம் துரைச்சுவாமி அவர்களின் கல்விச் சிந்தனையில் உருவாக்கப்பட்டு; புங்குடுதீவிலுள்ள பிள்ளைகளுக்குத் தொடக்க நிலை, இடை நிலைக் கல்வியை வழங்கி; அவர்களை உயர்கல்வித் தராதரத்துக்குயர யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிய பெருமை இப் பாடசாலைகளுக்கு உண்டு. மாணவர்களின் வசதிக்காகத் தற்போது "அனைவருக்கும் கல்வி" என்ற கோட்பாட்டை அக்காலத்திலேயே நிறைவேற்றிய நிலைமை நிதர்சனமாகின்றது.

பவள விழாவையொட்டி விழாச் சபையினர் வரலாற்றுப் பதிவுகளையும், மாணவர்களுக்கு உதவும்படியான மனதைத் தொடும் கட்டுரைகளையும் உள்ளடக்கி வெளிவரும் "கமலமலர்" சிறப்புற முகிழ எனது நல் வாழ்த்துக்கள்.

இம் முயற்சியிலும், பாடசாலையின் அபிவிருத்திக்குத் தொடர்ந்து பணிசெய்ய விழையும் பவள விழாச்சபையினரையும் மலர்க்குழுவினரையும், வாழ்த்துவதோடு, வித்தியாலய அன்னை; சூழலிலுள்ள பிள்ளைகளுக்குச் சிறந்த கல்விச் சேவைகளையும், மானிட விழுமியங்களையும் வழங்குமென எதிர்பார்ப்பதுடன் பவளவிழாச் சிறப்புற எனது உளமார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக.

**"வளர்க கல்விப் பணி"**

**இ. இளங்கோவன்,** செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர்

**ர. விஜயலட்சுமி அவர்களின்**

# ஆசிச்செய்தி



தீவகமான எனது தாய் மண்ணில் அறிவாலயமான புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம் பவளவிழாவை ஒட்டி மலரும் கமலமலருக்கு வாழ்த்துரை வழங்கும் வாய்ப்புக் கிடைத்தமையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

கல்விச் சான்றோருடைய புங்குடுதீவில் எனது பேரனார் சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி கல்விச் சிந்தனையில் உருவான பாடசாலைகள் பத்து. மிசனறிப் பாடசாலைகள் மூன்று, கத்தோலிக்கத் திருச்சபை பாடசாலை ஒன்று, அரசினர் கனிஷ்ட வித்தியாசாலை இரண்டு என பதினாறு பாடசாலைகள் உள. புங்குடுதீவின் முதல் பாடசாலை 1910இல் ஆரம்பமான எனது பேரனார் குடும்பத்தின் ஸ்ரீகணேச மகாவித்தியாலயமாகும். அவர் இந்துபோட் தலைவராயிருந்து உருவாக்கிய பாடசாலைகள் திருநாவுக்கரசு வித்தியாலயம், கமலாம்பிகை வித்தியாலயம், சண்முகநாதன் வித்தியாலயம், ஸ்ரீராஜராஜேஸ்வரி வித்தியாலயம், ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம், ஸ்ரீசித்தி விநாயகர் மகாவித்தியாலயம், பராசக்தி வித்தியாலயம், சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி வித்தியாயலம் என்ற எட்டுமாகும். அன்னார் அரசசபைச் சபாநாயகராகவும், மந்திரிசபைத் தலைவராகவும் இருந்த காலத்தில் உருவாக்கிய அரச பாடசாலைகள் புங்குடுதீவு மத்திய மகாவித்தியாலயம் (1945), மேற்குறிப்பிட்ட பத்துப் பாடசாலைகளும் எனது பேரனாரின் கல்விச் சிந்தனையின் வெளிப்பாட்டில் உருவாக்கப்பட்டவை.

அறிவைக் கற்றலின்மூலமே பெறமுடியும். இதற்குக் கல்விக் கூடங்கள் அவசியமாகும். மானிட விழுமியங்களின் மேம்பாட்டிற்கு மதம் சார்ந்த கல்வியின் அவசியம் என்ற கொள்கையில் எனது பேரானார் பற்றுறுதி உடையவராக இருந்தார். இதன் பெறுபேறே இந்துபோட் பாடசாலையின் உருவாக்கமும், இந்துக்கல்லூரிகளின் உருவாக்கமும் வளர்ச்சியும், தோற்றமுமமாகும்.

ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்ற அவரின் சிந்தனையில் உருவான இப்பாடசாலை, இடப்பெயர்வினால் மீளக்குடியேறாமையால் மாணவர் தொகையில் சரி அரைவாசியாகவுள்ள போதும், சாதாரண பரீட்சைப் பெறுபேற்றில் நூறு வீதத்தைக் கொண்டிருப்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இதற்கு உந்து சக்தியாக இருந்த அதிபரதும், ஆசிரியர்களினதும் அர்ப்பணிப்பினையும், ஆளுமையினையும் மனமாரப் பாராட்டுகின்றேன்.

மேற்படி பவளவிழாவை ஒட்டிப் பிரசவமாக இருக்கும் கமல மலரினைக் கண்டேன். மகிழ்ச்சி கொண்டேன். இதன் உள்ளடக்கம் அறிவுசார் அற்புதங்களாக இருக்கின்றது. இதன் ஆசிரியர் நாடறிந்த மருத்துவர் மட்டுமன்றி, கல்வி நல சமூக நலம்சார் பிரபல எழுத்தாளர். அவர் அறிவுக் கருவறையில் இருந்து பிரசவமாகியுள்ள இம்மலரானது மாணவர்களினதும் கல்வி நடவடிக்கைக்கு உதவும் ஒரு கல்விக் களஞ்சியமாகும். இதற்காக, இதன் ஆசிரியரையும். மலருக்கு மணம் சேர்த்த கட்டுரையாளர்களையும் இதயமார வாழ்த்துகின்றேன். பாராட்டுகின்றேன்.

விழா இனிதே நடந்தேற என் இதயபூர்வமான வாழ்த்துக்களை, இத்தால் உரித்தாக்குகிறேன். என் தாய் மண்ணில் என் மூதாதையர் தொட்டுச்சென்ற பணிகளைத் தொடர்ந்து செய்ய யான் என்றும் தங்களுக்குத் தோன்றாத் துணையாய் இருப்பேன்.

**ர. விஜயலட்சுமி,**

செயலாளர், உள்ளூராட்சி, நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு, கூட்டுறவு,
கிராம அபிவிருத்தி, கைத்தொழில் சமூக சேவைகள்
மற்றும் நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு, வடக்கு மாகாணம்.

துணைவேந்தர், பேராசிரியர்

## என். சண்முகலிங்கன் அவர்களின்

# வாழ்த்துச்செய்தி



எங்கள் நிலத்தின் பெருமை அறிவுச்சாலைகளின் பெருக்கத்திலேயே உள்ளது. எங்கள் மேம்பாடு அனைத்தினதும் அடிப்படையாகக் கல்வியே உள்ளது. தீவகப் பகுதி இந்துபோட் பாடசாலைகளிற் பல ஆண்டுகாலம் கற்பித்த என் தந்தையாரின் வழி இளவயதில் இருந்தே இப்பிரதேசக் கல்விச்சாலைகளின் மேன்மைகளை அறியும் வாய்ப்பு எனக்கானது. இந்த வகையில் யாழ்ப்பாணம் புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகாவித்தியாலயம் பவளவிழாக்காணும் இவ்வேளை பெறுமதியானது.

எங்களது கல்வி - அரசியல் பண்பாட்டு வரலாற்றில் முதன்மைபெறும் ஆளுமையான, சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி அவர்களின் தீர்க்கதரிசனத்தில் உருப்பெற்றது இக்கல்விச்சாலை. அதன் வரலாற்று மேன்மைகளைப் பேசும் கமல மலர் இப்பிரதேசத்துப் பிள்ளைகளின் எதிர்கால மேம்பாட்டிற்கான சிந்தனைக் களமாக அமையும்.

தீவகத்தின் பண்பாட்டுப் பெருமைகளைப் பேசுகின்ற அதேவேளையில், யதார்த்த நிலையில் அதிகரித்துவரும் பாடசாலை இடைவிலகல், வளப்பற்றாக்குறை, போக்குவரத்து முதலாய கல்விசார் - சூழமைவுசார் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் காண்பதில் ஆர்வம்கொண்ட அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம். குறிப்பாக; இப்பிரதேசத்தின் மண்ணின் மைந்தர்களாகச் சமூக முதன்மைபெறும் ஆளுமைகள், கொண்டாட்டங்களுக்காக மட்டும் கூடிக்கலையாமல் மக்களுடன் வாழ்ந்து பங்கேற்பு முறையில் அவர்களின் வாழ்வியல் நலன்களுக்காக உழைத்தல் இன்றியமையாதது.

இந்த வகையில் இவ் வித்தியாலயத்தின் பவளவிழாச் சபையின் இயக்குனர்களாக மட்டுமன்றி, இவ் அறிவுச்சாலையின் ஸ்தாபகரின் வாரிசுகள் என்ற பெருமிதத்துடனும், அர்ப்பணிப்புடன் உழைக்கும் பவளவிழா நிறைவேற்றுச் சபைத் தலைவர் டாக்டர் பேரின்பநாதன், விழாக்குழுவினர், வித்தியாலய அதிபர் திரு. நா. நாகராசா மற்றும் ஆசிரியர்கள் வித்தியாலயச் சமூகத்தினர் அனைவருக்கும் எல்லையில்லாத எனது அன்பு வாழ்த்துக்கள்.

துணைவேந்தர் அலுவலகம்,
திருநெல்வேலி.
2011.03.22

**பேராசிரியர் என். சண்முகலிங்கன்,**
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

வாழ்நாட் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



யா/புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகா வித்தியாலயம் தனது 75ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாடத்துடன் வெளிவர இருக்கும் சிறப்பு "கமல மலருக்கு" வாழ்த்துச்செய்தி எழுதுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இப்பாடசாலை பெரும் தியாகத்துடனும், அர்ப்பணிப்புடன் திருவாளர்கள் நீ.ஆறுமுகம் நீ.சேதுபதி ஆகியோரால் தல்லைப்பற்று ஆலயக்காணியில் சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமியின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலைக்கு திரு.ஆறுமுகத்தின் மகளின் பெயரான கமலாம்பிகை என்னும் பெயர் சூட்டப்பட்டது. தீவுப்பகுதியில் இந்துபோட் பாடசாலைகள் யாவும் சேர்.வை.துரைசுவாமியின் முயற்சியால் நிறுவப்பட்டவை.

மேலும் தீவுப்பகுதியிலுள்ள சுகாதார நிலையங்கள் யாவும் அவர் காலத்திலேயே நிறுவப்பட்டன. அல்லது நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டவையாகும். இதேபோல மகாதேவா தாம்போதி, வேலணை - புங்குடுதீவு பாலம், அராலிப்பாலம் ஆகியன கட்டுவதற்கு இவர்காலத்தில் நிதி ஒதுக்கப்பட்டு 1950, 1960 களில் நிறைவேற்றப்பட்டன. புங்குடுதீவில் பிள்ளைகள் சைவப்பாரம்பரியத்தில் கல்விகற்க பாடசாலைகள் குறைவாக இருந்தநிலையில், இப்பாடசாலையின் அமைவு குறிப்பாக மடத்துவெளி பிள்ளைகளின் கல்விச் செயற்பாட்டுக்கு பெரிதும் உறுதுணையாக அமைந்தது. கடந்த 75 வருடங்களாக பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் இங்கு கல்விகற்று வெளியேறியுள்ளனர். சிறு பாடசாலையாக இருப்பினும் இங்கு கல்விகற்றவர்கள் பலர் சிறந்த வர்த்தகர்களாகவும், நல்ல பதவிகள் வகிப்பவர்களாகவும் இருந்துவருகின்றனர்.

கமலாம்பிகை வித்தியாலயம் கடந்த 75 வருடங்களாக பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்காற்றியுள்ளது. 1962இல் இப்பாடசாலையை இந்துபோட் நிறுவனத்தில் இருந்து அரசாங்கம் பொறுப்பேற்றது. 1991-1996இற்கு இடைப்பட்ட காலத்தில் இப்பாடசாலை இடம்பெயர்ந்த நிலையில் பல நெருக்கடிகளையும், நெருக்குவாரங்களையும் சந்தித்தபொழுது தனது கல்விப்பணியை நிறுத்தவில்லை. 1991-1995 வரைக்கும் ஆனைப்பந்தியில் இயங்கி, 1995இல் தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்து, பின்னர் 1996இல் மீள குடியமர்தல் செயற்பாட்டுடன் புங்குடுதீவில் தனது சொந்த இடத்தில் இயங்குகின்றது. இன்னமும் 1991இற்கு முன்னர் இருந்த மாணவர் எண்ணிக்கையை அடைய முடியாவிட்டாலும் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த.சா.த பரீட்சைகளில் கடந்த சில வருடங்களாக நல்ல பெறுபேறுகளைப் பெற்று வருவது சிறந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. காலத்திற்குக்காலம் பல்வேறு சோதனைகள் வேதனைகளைச் சந்தித்தபோதும் தனது கல்விப்பணியில் தளராமலும் நிறுவனர்களின் இலட்சியங்களை நிறைவு செய்வதிலும் வெற்றிகளைப் பெற்றுள்ளது.

21ஆம் நூற்றாண்டு கல்வித்தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய வகையில் இக்கல்வி நிறுவனத்தின் மேம்பாடு முன்னெடுக்கப்படுமாயின் இப்பாடசாலைக்கு நல்ல எதிர்காலம் உண்டு. பாடசாலை சமூகம் இத்தருணத்தில் தூரநோக்குடன் இணைந்து செயற்படுமாயின் இலக்குகளை இலகுவாக அடையமுடியும்.

இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு முன்னின்றுழைத்த முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், இன்னாள் அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச்சபை, பாடசாலைச்சமூகம் பாராட்டிற்குரியவர்கள். "கமலாம்பிகை கனிஷ்ட மகா வித்தியாலயத்தின் கல்விப்பணி மேலும் மேலும் வளரட்டும் பணிகள் சிறக்கட்டும்.

**பேராசிரியர், பொ.பாலசுந்தரம்பிள்ளை,**
முன்னாள் துணைவேந்தர், வாழ்நாள் பேராசிரியர், யாழ். பல்கலைக்கழகம்.

பேராசிரியர் க. குகபாலன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்டமகாவித்தியாலயம் ஆரம்பித்து 75 ஆண்டுகளாக அளப்பரிய சேவையினை ஆற்றிவருவதைக் கௌரவிக்கும் பொருட்டு பவளவிழாக் கொண்டாடி மகிழும் நிகழ்வானது, ஒரு வரலாற்றுப் பதிவாகும். 1936ஆம் ஆண்டு இப்பாடசாலையினை நிறுவுவதற்கு அரும்பாடு பட்டவர்களை நினைவு கூரும் நிகழ்வானது வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டிய விடயமாகும். 1936ம் ஆண்டு இப்பாடசாலையினை இந்துபோட் சார்பில் நிறுவியவர் அமரர் நீ. சேதுபதி அதிபராவார். இப்பாடாலையை நிறுவுவதற்கு காணியை தர்மசாசனம் செய்தவர்கள் தல்லையப்பற்று முருகமூர்த்தி ஆலய அப்போதைய தர்மகர்த்தாக்களான நீ. சேதுபதி அவர்களும் அவர் சகோதரர் நீ. ஆறுமுகம் அவர்களும் ஆகும். இப்பாடாசலையின் முதல் அதிபர் திரு. வைத்திலிங்கம் கந்தையா ஆகும். அவர் தந்தையார் திரு. அ. வைத்திலிங்கம் அவர்களும் இதன் தோற்றத்திற்கு உந்து சக்தியாக விளங்கினார். இப்பாடசாலை மடத்துவெளி, ஊரைதீவுவாழ் மக்களின் கல்வி மேம்பாட்டிற்கு அளப்பரிய சேவையாற்றி வருகின்றது. இதற்கு தன்னலம் கருதாது உழைத்த அதிபர்கள், ஆசிரியர்களின் விடாமுயற்சியின் பயனாக உள்நாட்டிலும், சர்வதேசங்களிலும் இங்கு கல்விகற்ற மாணவர்கள் செழிப்புடன் வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த மூன்று தசாப்த காலமாக இடம்பெற்ற யுத்தசூழலில் நாம் இழந்த பலவற்றிற் கல்விச் செல்வமும் ஒன்றாகும். குறிப்பாக இக்கிராமத்தில் வாழ்ந்த கல்விப் பாரம்பரிம் தொடாந்து தக்க வைத்துக்கொண்டவர்களின் இடப்பெயர்வானது இக்கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் சவாலாக அமைந்துவிட்டது. வறுமை தொழில் வாய்ப்பின்மை, கல்வியில் அக்கறை கொள்வதில் சிரமப்படல் போன்ற பல காரணிகள் கடந்த கால இரண்டு தசாப்தக்காலமாக தொடர்கின்றன. தற்போதைய நிலையில் அது துளிர்விடுவதைக் காணமுடிகின்றது. அவற்றினைக் கருகவிடாது வளர்த்தெடுத்தல் இக் கிராம மக்களின தும் புலம் பெயர்ந்த எமது உறவுகளினம் ஒத்துழைப்புடனேயேசாதிக்க முடியும். அவற்றிற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு எம்மைத் தயார்படுத்திக் கொள்வது காலத்தின் கடமையாகும். இக்கல்விச்சாலை பல நூறுஆண்டுகள் இக்கிராம மக்களின் கல்விச் செயற்பாட்டிற்கு பெரும் பங்காற்றிய எம் சமூகத்தினர் மேன்மையடைய எல்லாம் வல்ல பாலசுப்பிரமணியப் பெருமானை வேண்டுகிறேன்.

**பேராசிரியர் கா. குகபாலன்**
புவியியற் போராசிரியர்,
யாழ். பல்கலைக்கழகம்.

கொழும்பு – வெள்ளவத்தை இந்துமகளிர் கல்லூரி முகாமையாளரும்,
சைவமங்கையர் கழக தலைவியுமான

**திருமதி. சிவானந்தினி துரைசுவாமி அவர்களின்**

# ஆசிச் செய்தி



யாழ். புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகாவித்தியாலயம் தனது எழுபத்தைந்தாவது அகவையை நிறைவு செய்து பவளவிழாக் கொண்டாடுவதுடன் "கமலமலர்" என்ற சஞ்சிகையையும் வெளியிடுகிறது. இந்நிகழ்வு சிறப்புற நான் இறையருள் வேண்டிப் பிரார்த்திப்பதுடன் இவ் வித்தியாலயத்தை உருவாக்குவதற்கு ஊற்றுக் கண்ணாக விளங்கிய சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி அவர்களின் குடும்ப உறுப்பினர் என்ற வகையிலும் இறைஆசி கலந்த வாழ்த்துச் செய்தி வழங்குவதிற் பெருமையடைகின்றேன்.

"அன்னசத்திரம் ஆயிரம் நாட்டல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்ற பாரதியின் கூற்றுக்கு ஏற்ப ஒரு வித்தியாலயத்தை உருவாக்கி மக்களுக்கு அறிவொளி பரப்புவது என்பது தலையாயக் அறப்பணியாகக் கருதப்படுகிறது. கல்வி என்பது தமிழ் மக்கள் விரும்பி வரித்துக்கொண்ட விலைமதிக்க முடியாத பொக்கிஷம். அதை எம் மண்ணிற் பெற்ற காரணத்தால் தான் இக்கட்டான சூழ்நிலையில் இன்றுபலர் திரைகடல் கடந்து திரவியம் தேடுகிறார்கள். தலைசிறந்த ஆசிரியர்களின் புனிதப்பணிதான் சிறந்த சமூக விற்பன்னர்களையும் உருவாக்குகிறது. அதை நினைவுறுத்தி, நிலைநிறுத்துவதற்காகவே "அறிவே ஒளி" என்ற மகுட வாசகத்தையும் இவ்வித்தியாலயம் தாங்கி நிற்கிறது.

பாடசாலை இவ்விழாவைக் கொண்டாடி நிற்கும் இவ்வேளையில் இக்கல்லூரியை உருவாக்குவதில் முன்னின்று உழைத்த பெருமகனையும் இச்சந்தர்ப்பத்தில் நாம் நினைவில் நிறுத்தித் தலைவணங்குவது தலையாய கடமையாகும்.

சேர் துரைசுவாமி சிவயோகர் மாசீடர்
பார் புரக்கு மன்றப் பழந் தலைவர் - நேர்மை மிகு
சைவத் தமிழர் சனநாயக முதல்வர்
உய்வைப் புகழும் உலகு.

என்று பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களால் பெருமைப்படுத்தப் பட்ட சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி அவர்களே இப்பாடசாலையின் உருவாக்கத்திற்குக் காரணகர்த்தாவாக விளங்கியவர்.

இலங்கையில் என்றும், எல்லோராலும் விரும்பப்பட்ட தலைவர்களுள் அவர் ஒருவர், தமிழ் மரபும், சைவமரபும் சிறந்து விளங்கிய குடும்பத்தில் தோன்றியவர், செந்தமிழ் அன்பும், சிவநேயமும் அதிகமாகக் கொண்டவர். யோகர் சுவாமியின் அருளும் அவருக்கு இருந்தது. வழக்கறிஞராகத் திகழ்ந்த அவர் அரசசபையில் சபாநாயகர் பதவியைச் சிறப்போடும், தகுதியோடும், நடுநிலையோடும் வகித்தவர். தேசாபிமானியாக விளங்கியவர். அறிவும், திருவும், உருவும் அமைந்தமையினாற் செயற்கரிய செயல்கள் செய்த பெருந்தலைவராக விளங்கியவர்.

அரசியற் சேவையுடன் இவரது பணி முற்றுப்பெறவில்லை. சைவவிருத்திச் சங்கத்திலும், இந்துக்கல்லூரிகள் சபையிலும் தலைவராக அமர்ந்து தொண்டு செய்தவர். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முதலிய கலாசாலைகளின் பொது முகாமையாளராகவும், தமிழ்ப்பல்கலைக்கழக இயக்கத்திலே தலைவராகவும் இருந்து சேவை செய்தவர்.

“கல்வித் தந்தை” எனப் போற்றப்படுகின்ற இவரின் சிந்தனையிற் புங்குடுதீவில் உருவாக்கப்பட்ட பத்துப் பாடசாலைகளில் இப்பாடசாலையும் ஒன்றாகும். இது இவரால் 1936இல் இது ஆரம்பிக்கப்பட்டது. இவரது பணிகளுக்கு வலதுகரமாக நின்று உதவியவர் பல்துறை வித்தகரான திரு. நி. சேதுபதி அவர்கள். இவரும் எமது வணக்கத்துக்குரியவர்.

இவர்களை நினைவு கூருவதுடன் இப்பாடசாலையின் வரலாற்று வளர்ச்சிக்கு பங்களித்த சகலருக்கும் நான் அஞ்சலி செலுத்துவதுடன், பங்களிப்பு வழங்கி வருகின்ற சகல நன்நெஞ்சங்களிற்கும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

ஆன்மீக அடிப்படையில் அறிவுக்கதிர் பரப்பி அனைவரையும் வாழவைக்கும் அறிவு விருட்சமாகிய இக்கல்லூரி புங்குடுதீவில் எஞ்ஞான்றும் நிலைத்து நிற்க எண் குணத்தான் என்றுந் துணைபுரிய வேண்டி நிற்பதுடன் வெளியிடப்படும் “கமல மலரானது” கல்லூரிச் சமூகத்திடையே புது உத்வேகத்தை உருவாக்கும் என்பதும் எனது திடமான நம்பிக்கையுமாகும். இவ்வித்தியாலயத்தை நாடிவரும் அனைத்து மாணவர்களுக்கும் தரமான கல்வியை வழங்கி, சான்றோர் பலரை உருவாக்கும் இக்கல்லூரித் தாயின் இலட்சியம் இன்னும் சிறக்க மீண்டும் இறையருள் கலந்த ஆசிகளை வழங்கி வாழ்த்துகிறேன்.

திருமதி. சிவானந்தினி துரைசுவாமி
கொழும்பு – வெள்ளவத்தை இந்துமகளிர்
வித்தியாலய முகாமையாளரும்,
சைவமங்கையர் கழக தலைவியும்.

வேலணை

வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களின்

# ஆசிச்செய்தி



இலங்கையின் சப்த தீவுகளில் ஒன்றாக விளங்கும் புங்குடுதீவில், கடந்த 75 ஆண்டுகளாகக் கல்விப் பணியிலும், சமயப்பணியிலும் சிறந்து விளங்கும் புங்குடுதீவு, கமலாம்பிகை வித்தியாலயம் தனது 75வது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடுகின்ற 75ஆவது கமலமலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதிற் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நாட்டில் ஏற்பட்ட பல்வேறு சூழ்நிலைகள் காரணமாக, புங்குடுதீவிற் கல்விப்பணியை வழங்கிவந்த 16 பாடசாலைகளில் தொடர்ந்தும் கல்விப் பணியை வழங்கிவரும் 7 பாடசாலைகளிற் புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயமும் ஒன்றாகும். 1923ஆம் ஆண்டிலிருந்து இந்துபோட்டினதும், இந்துக் கல்லூரிகள் சபையினதும் தலைவராய் இருந்த, இலங்கை அரசுசபையினதும் மந்திரிசபையினதும் தலைவராயும், முதற் சபாநாயகராயமர்ந்து புங்குடுதீவு தாய் மண்ணிற்குப் பெருமை சேர்த்த, சேர். வைத்திங்கம் துரைசுவாமி அவர்களின் பங்களிப்பில் இருந்தும் உருவான 10 பாடசாலைகளில் இப்பாடசாலையும் ஒன்று. இப்பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையினாற் சிறந்த கல்விப் பெறுபேறுகளை வழங்கி வருவதையிட்டு மன நிறைவடைகின்றேன். பன்னெடுங்காலம் இப்பாடசாலை கல்வித் தொண்டாற்ற எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் இறையருளையும் வேண்டுகின்றேன்.

**வ. இராதாகிருஷ்ணன்**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
தீவக வலயம்.

கோட்டக்கல்விப் பணிப்பாளர், வேலணை

**கு. சரவணபவானந்தன் ஜே.பி. அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி

75ஆவது ஆண்டில் கால்பதிக்கும் புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்தின் சேவையைப் பாராட்டுகிறேன். கிறிஸ்தவ மிஷனரிமாரின் காலத்தில் கல்வியின் பெயரால் கட்டாய மதமாற்றம் நிகழ்ந்த காலத்தில் கல்வியில் பெயரால் கட்டாய மதமாற்றம் நிகழ்ந்த வேளையில் இந்துப்போட் பாடசாலைகள் ஆரம்பமாகின. அதன் தலைவராக சபாநாயகர் சேர். வைத்திலிங்கம் சுவாமி விளங்கினார். அவர்களின் குடும்ப ஆலயமான தல்லையப்பற்று முருகன் ஆலய காணியில் அதன் தர்ம கர்த்தாக்களான அதிபர் நீ. சேதுபதியவர்களும் ஆசிரியர் நீ. ஆறுமுகம் அவர்களினாலும் இப்பாடசாலை 1936 ஆரம்பிக்கப்பட்டது.


இப்பாடசாலை புங்குடுதீவு வாழ் மக்களின் அறிவார்ந்த சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்புவதில் பெரும் பங்காற்றியுள்ளது. இப்பாட சாலையில் கல்விகற்ற பலரும் கல்விமான்களாகவும், வர்த்தகப்பிர முகர்களாகவும் நாட்டின் பல பாகங்களிலும் பரவியுள்ளனர். மேலும் இப்பாடசலையின் பழைய மாணவர்கள் பலர் இன்று புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்ற போதிலும் தமது பாடசாலையின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாயிருந்து செயற்படுகின்றனர். புங்குடுதீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர்கள் பலரும் இணைந்து பாடசாலைகளின் விழாக்கள், கட்டிடத்தேவைகள் கணணி அன்பளிப் புக்கள் என பல்வேறு உதவிகளையும் வழங்கி வருகின்றனர். இப்பாட சாலைக்கும் தேவையான போதெல்லாம் உதவி ஒத்தாசைகள் புரிவதில் பழைய மாணவர்கள் சங்கம் முனைப்புடன் செயற்படுகிறது. உள்ளூரிலுள்ள பழைய மாணவர்கள் , மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் , நலன் விரும்பிகள் ஆகியோரது பங்களிப்பும் பணியும் பராட்டத்தக்கது.

பவளவிழாவினைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்து இதனை ஒரு வரலாற்றுப் பதிவாக வெளியிடுவதில் அதிபர் ,ஆசிரியர்கள், பழையமாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், நலன் விரும்பிகள் அனைவரையும் பாராட்டி பவள விழாச்சிறக்கவும், கமல மலர் விரிந்து மணம் பரப்பவும் வாழ்த்தி மகிழ்கிறேன்.

கு. சரவணபவானந்தன் ஜே .பி,
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
வேலணை.

**சிவநெறிப்புரவலர் நா. ஜெயக்குமார் [பாபு] அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி



எமது வித்தியாலயமானது 75ஆவது பவளவிழா நடைபெறுவதையிட்டு நான் பெருமகிழ்வு அடைகின்றேன். காலத்திற்குக் காலம் பல விழாக்கள் நடைபெற்ற எமது மண்ணில், மீண்டும் எமது மனங்களை மகிழவைக்கும் இவ்விழா சிறப்புற எல்லாம்வல்ல பாணாவிடை சிவனை வேண்டுகிறேன். பல கல்விமான்களை உருவாக்கிய கமலாம்பிகை வித்தியாலயம் இவ் நவீனயுகத்தில் மேலும் பல சாதனைகளையுருவாக்கி வரலாற்றில் இடம்பிடிக்க வேண்டுமென்பதே எம்மவர்கள் ஆசை. இவ் ஆர்வம் வெற்றியளிக்கும்மென்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு.


எமது மண்ணும் அந்த மண்ணில் வாழ்ந்துகொண்டு இருக்கின்ற மக்களும் சுபீட்சமாக வாழவேண்டும். அத்தோடு நற்கல்வியைப்பெற வேண்டும். அதற்கான உதவிகளை உங்கள் உறவுகள் உதவுவார்கள்.

கடந்த காலத்திலும் தங்களால் இயலுமான அளவு உதவியுள்ளார்கள் எனக் குறிப்பிட்டு இப் பவள விழா சிறப்புற வாழ்த்துகிறேன்.

**இங்ஙனம்**
**ஜெயக்குமார் [பாபு]**
**சுவிஸ்.**

**எம் மண்ணின் மைந்தனும்,**
**சுமைதாங்கியும் சுவிஸ் ஒன்றியச் செயலாளருமான**
**அரியபுத்திரன் நிமலன் அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி



கமலாம்பிகை வித்தியாலய பவள விழாவிற்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன். அப்பாடசாலையின் பழைய மாணவனில் ஒருவனாகவும் அப்பாடசாலையில் கல்வி கற்கின்ற பெரும் பான்மையான மாணவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற புங்குடுதீவு இளந்தமிழர் மன்றத்தின் சுவிற்சர்லாந்து கிளை. கமலாம்பிகை வித்தியாலய பழைய மணவர் சங்கச் சுவிற்சர்லாந்து பிரிவு. மற்றும் வித்தியாலயம் அமைந்துள்ள கிராமத்து மக்களின் புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியம் ஆகியவற்றின் சார்பாக அடியேன் இச்செய்தியை வரைகின்றேன்.

காலத்தில் எக்கடனை முடிப்பினும் கல்விகற்ற கடனை முடிப்பதென்பது முடியாத காரியமாகும். ஆம் நாம் பட்ட கடன் தொட்ட கடனென ஆயிரமுண்டு. அப்பணி தொடர வேண்டுமென நாம் எம் மக்களிடம் சென்ற பொழுதெல்லாம் தமது கல்விச்சாலைக்கென வாரிவழங்கும் எமது புலம்பெயர் உறவுகளை நன்றியோடு நினைவில் நிறுத்தி, காலம் காலமாய் எந்த எதிர்பார்ப்புமின்றி எமக்கு அறிவூட்டிய ஆசிரிய மணிகளை எண்ணிப்பார்க்கின்றேன். அவர்களில் பலர் அமரத்துவம் அடைந்த செய்தியையேனும் அறியமுடியாத துர்பாக்கிய நிலை எமக்கு. அவர்கள் ஊட்டிய அறிவும் எம் மண்ணின் சேவைமான்களது சேவையும் நமக்கு பின் புலமாய் எம்மை வழி நடத்துகின்றன.

இயற்கையழிவு செயற்கையழிவு இவையோடு போராடிய எமது வித்தியாலயத்தின் இருப்பை நிலைநிறுத்திக்கொண்டிருக்கின்ற எமது உறவுகள் செயல்திறன் மிக்க சேவையாளர்கள். அடியவர் மனங்களில் அழியாப்புகழ் கொண்ட ஆசிரிய பெருந்தகைகள், அரச உதவி கிடைக்காதுவிட்டாலும் அடிவயிற்றுக்கு இல்லாது போனாலும் அள்ளி வழங்கும் பெற்றோர்கள், மாணவர்கள் அனைவரது ஒன்றிணைவால் எமது கிராமத்தில் பாடசாலைகள் பல இருப்பினும் சில பாடசாலைகளாவது இக்கட்டான நிலையிலும் இயங்கிக் கொண்டிருப்பது பெருமகிழ்வைத் தருகின்றது. ஏனைய பாடசாலைகளும் மீண்டும் கல்விப் பணியை தொடர வேண்டுமென்பதே புலம்பெயர் உறவுகளது பெரும் அவா. அதற்கான உதவிகளைச் செய்வதற்கு இங்குள்ள எமது கிராமத்தின் பற்றாளர்கள் ஆர்வத்துடன் உள்ளார்கள். உரிமையுடன் தொடர்புகொள்ளுமாறு இத்தால் வேண்டுகின்றோம்.

எமது கிராம வித்தியாலயங்கள் பொது வைத்தியசாலை ஆலயங்கள் மற்றும் தண்ணீர் பிரச்சனை போன்றவற்றிற்கு பல்வேறு வழிகளில் அதாவது பொது அமைப்புக்களூடாகவும் தனிமனிதர்கள் மூலமும் பணத்தை அனுப்பியருந்தோம். நாம் எதிர்பார்த்ததைவிட சிறப்பாக அத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியிருந்தீர்கள். அப்பணியை வெற்றிகரமாக முடித்தமைக்காக நன்றிகள் ஆயிரம்.

இவ்வாண்டில் பொது நிலையங்கள் அனைத்தையும் புனரமைக்க உதவலாம் என நாம் உத்தேசித்துள்ளோம். குறிப்பாக இளந்தமிழர் மன்றம், மடத்துவெளி சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கான உறுப்பினர் களுடன் அணுகியுள்ளோம். அவர்கள் உதவுவதாக உறுதியளித்துள்ளார்கள். அதே போன்று புங்குடுதீவில் உள்ள ஏனைய மன்றங்களையும் மீள்நிலைக்கு கொண்டுவர புங்குடுதீவு மக்கள் விழிப்புணர் ஒன்றியம் அந்த நிலைய உறுப்பினர்களுடன் தொடர்பில்உள்ளது. அவ்வாறு உதவிகள் கிடைக்காத பொது நிலையங்களுக்கு ஒன்றியம் உதவிகளை வழங்கும். ஒவ்வொரு மன்றங்களிலும் இருந்தும் விபரங்களை எதிர்பார்க்கின்றோம்.

புங்குடுதீவின் தலைவாசலாய் தலைநிமிர்ந்து நிற்கின்ற ஊரைதீவு, மடத்துவெளி வல்லன் வரதீவு, கேரதீவு போன்ற கிராமங்களும் தான்தோன்றியாய் விளங்கும் பாணாவிடை சிவனும், வரவேற்பு பைரவரும் புகுபவர் வினையறுக்கும் விநாயகர் ஆலயமும் வயல்வெளி முருகனும் அருள்பாலிக்க நடுநாயகமாய் விளங்குவதும் ஐந்து கிராம மக்களும் அவர்கள் தம் பிள்ளைகளும் சங்கமிக்கும் சமுத்திரமாய் எம் அறிவுப் பசியைத் தீர்த்த கமலாம்பிகை கனிஷ்ட மகாவித்தியாலயம் 75ஆவது வருடத்தை நிறைவு செய்வதையிட்டு நாம் பெரு மகிழ்வு அடைகின்றோம்.

பல அறிஞர்களையும், மேதாவிகளையும், பெருவிருதுகளைப்பெற்ற பல எழுத்தாளர்களையும், பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்களையும், அரசியல்வாதிகளையும், பல இராஜதந்திரிகளையும், எண்ணற்ற தொழிலதிபர்களையும், என்றும் வாரிவழங்கும் கொடைவள்ளல்களையும் தன்னிகரில்லா சேவைமான்களையும், பொறுப்பு மிக்க பெற்றோர்களையும் அதீதிய திறமைமிக்க மாணவர்களையும் உருவாக்கிய உன்னத பாடசாலையான கமலாம்பிகை வித்தியாலயத்தினது விழாவை சிறப்பாக நடத்த வேண்டுமென அவா கொண்ட அதிபர். ஆசிரியர்கள் முடியாது என்பதை முடிக்கும் ஆற்றல்மிகு விழாக்குழுத்தலைவரும் பெரும் சேவைக்குரிய பெருமகனாருமான வைத்திய கலாநிதி ஆ. பேரின்பநாதன் மற்றும் அன்புத் தம்பிமார்கள் எப்பணிக்கும் அன்றிருந்து இன்றுவரை எம்மோடு தோளோடு தோள்நிற்கும் அருமை உறவுகள் அனைவருக்கும் தொப்புள் கொடியுறவாய் உலகத்தில் பலபாகங்களிலிருந்தும் உணர்வால்' என்றும் ஒருமித்திருக்கின்றோம். தங்கள் பணிக்கு எங்கள் சிரம் தாழ்த்தி நன்றிகளை உரித்தாக்குகின்றோம்.

ஆறுமுகநாவலர் காலத்தின்பின் இந்துப்போட்டினதும், இந்துக் கல்லூரிகள் சபையினதும் தலைவராயிருந்து இப்பாடசாலை உட்பட இருநூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளையும் இந்துக்கல்லூரிகளையும் உருவாக்கியும் தமிழ்பல்கலைக்கழகத்தின் தோற்றத்திற்கும் உதவிய கல்வித் தந்தை சபாநாயகர் சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி அவர்களின் பங்களிப்பு ஓர் வரலாற்றுப் பதிவாகும். அவரது குடும்ப ஆலயமான தல்லையப்பற்று முருகனாலயச் 1.5 ஏக்கர் காணியில் அவர் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட பாடாசலையே இதுவாகும். மேலும் பெரும் சமய பணியையும், புங்குடுதீவு வேலணை பாலமும், பூநகரி மகாதேவா பாலமும், அராலிப் பாலமும், சேர். வைத்திலிங்கம் துரைசாமி அவர்கள் சபாநாயகராக இருந்த காலத்தில் அவரால் முன்மொழியப்பட்டு அரச அங்கீகராம் பெற்று நிதி ஒதுக்கப்பட்ட மூன்று

பாலங்களாகும். இதன்செயல் வேகம் மந்தகதியில் இருந்தபடியினால் பெரியவாணர் அரசாங்கசபை உறுப்பினர் சிலர் உதவியுடன் வேலணை பாலத்துக்கு முன்னுரிமைபெற்று அதனை நிறைவுசெய்து உதவியுள்ளார். சின்னவாணர் அவர்களுடன் இணைந்து பலர் சமூகப்பணியையும், தந்தை செல்வா தளபதி அமிர்தலிங்கம் காலத்தில் கொடைவள்ளல் பொ. நாகேசும் இறுப்பிட்டியை பிறப்பிடமாகக் கொண்டவரும் ஊரை தீவின் பெரு உறவுக்காரனுமான வர்த்தகர் அருமையவர்களும், பொருளாதாரரீதியில் தமிழர் விடுதலைக்கூட்டணி பெருமுதவி வழங்கினர். அதே காலத்தில் அரசியல் ஆசான் சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரன் தலைமையில் பலர் அரசியல் முழக்கமிட விவசாய அலுவலர் அண்ணர் சண்முகநாதன், அதிபர் தர்மபாலன், ஆசிரியர் தனபாலன் போன்ற இன்னும் பலர் பல சமூகப்புரட்சியையும், விடுதலைப் போராட்ட காலத்தில் பல இளைஞர்கள் அணிதிரண்டு பல சமூகத் தொண்டுகளையும் ஆற்றினார்கள். இவ்வாறு போற்றுதற்குரிய பெரும் பணிகளைச் செய்த அன்பர்களைத் தந்தது. ஐந்து கிராமமாக இருந்தாலும் அவர்களை உயர்த்திய பெருமை இந்த வித்தியாலயத்தையே சாரும். இவ்வாறு காலத்திற்கு காலம் அறிவாளிகளையம் சேவையாளர்களையும் தந்தது போன்று தற்காலத்திலும் பலர் உள்ளார்கள் என அறிகின்ற பொழுது மிக மிகழ்வாக இருக்கின்றது. கடந்த வருடம் எமது கிராமத்தில் அதிவிசேட சித்திகளை பெற்ற மாணவர்கள் இவ்வித்தியாலயத்தைச் சேர்ந்தவர் எனக் கேள்வியுற்று பெருமகிழ்ச்சியடைந்தோம். இவ்வெற்றிகளுக்கெல்லாம் அடி நாதமாய் அரும்பணியாற்றுகின்ற அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றிகளை மீண்டும் தெரிவிக்கின்றோம். இவ்விடத்தில் இவர்களையும் குறிப்பிட்டாலே என்மனம் மகிழும் ஆசிரியமணிகளும் சேவைமான்களும் ஆகிய சொக்கலிங்கம் ஐயாத்துரை, பாலசிங்கம், தியாகராசா, குலசேகரம், பூலோகராசா, இராசதுரை போன்ற இன்னும் பல ஆசிரியர்களையும் சபாரத்தினம் ஏ.ஓ. தபாலதிபர் சுப்பிரமணியம். இவ்வாறு பலதரப்பட்டவர்களை இந்த பாடசாலை உருவாக்கியிருக்கின்றது. அதேபோன்று அவர்களும் இந்த பாடசாலைக்கு அளப்பரிய சேவைகள் புரிந்துள்ளார்கள். சில ஆண்டுகளுக்கு முன் மகாவித்தியால அதிபராக தர்மபாலன், கணேச மகாவித்தியாலய அதிபராக சண்முகலிங்கம், கமலாம்பிகை வித்தியாலய அதிபராக இராசதுரை, சண்முகநாதன் வித்தியாலய ஆசிரியர் பஞ்சலிங்கம் போன்றோர் கடமையாற்றினார்கள். இவர்களனைவரும் ஒரே காலத்தில் எமது கிராமத்தின் முக்கிய பாடசாலைகளில் அதிபர்களாக, ஆசிரியர்களாகக் கடமையாற்றினார்கள். இத்தலைமக்கள் கமலாம்பிகை வித்தியாலயத்தினது பழைய மாணவர்கள் அல்லது அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது மிக பெருமகிழ்வு கொள்ள வேண்டியவிடயமும், பொன் எழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டியவையும் ஆகும்.

வித்தியாலயங்களின் ஆரம்பத்திற்குமுன் ஊரைதீவில் மூன்று திண்ணைப்பாடசாலைகள் இருந்ததாக வாய்மொழித் தகவல்கள் உண்டு. அவைதான் பின்பு திருநாவுக்கரசு வித்தியாலயசாலை யெனவும், கமலாம்பிகை வித்தியாசாலை எனவும் இந்துப்போட் பாடசாலைகளாகின.

இவ்வாறு பல துறைசார் அறிஞர் பெருமக்களைத் தந்த கமலாம்பிகை வித்தியாலயம் மேலும் பல வல்லுனர்களை உருவாக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. உங்கள் பணி தொடரவேண்டும். தற்பொழுது கடமையாற்றுகின்ற அதிபரது விடாமுயற்சியும், அனைவருடனும் இணைந்து பணியாற்றும் பக்குவம் கொண்டவராக

இருப்பதையறிந்து பெருமகிழ்வடைகின்றோம். புங்குடுதீவிலுள்ள அனைத்துப் பாடசாலைகளது அதிபர், ஆசிரியர் மற்றும் பொது நிர்வாகங்களுடன் இணைந்து பணியாற்ற புங். ம. வி. ஒன்றியத்தினர் ஆவலுடன் இருக்கின்றார்கள். 12 வட்டாரங்களுக்கு மாக 24 பாடசாலைகளமைய வேண்டும்மென்பது எமது முன்னோர்களது விருப்பமாகும். ஆனால் புங்குடுதீவில் முன்பு இயங்கிக்கொண்டிருந்த பாடசாலைகள் 15. இடப்பெயர்வின் பின் இன்று இயங்கும் பாடசாலை 7 ஆகும். பூட்டப்பட்டிருக்கும் பாடசாலைகளை மீண்டும் திறந்து கல்வி பணியாற்றுவதற்கு எம்ஒன்றிய மக்கள் என்றும் தயாராக உள்ளனர் எனக்கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். அத்துடன் கமலாம்பிகை வித்தியாசாலையின் அதிபர் அதன் வளர்ச்சிப்பணி பற்றி எம்முடன் நெருங்கிய தொடர்பு கொண்டு இருப்பதை மனமாரப் பாராட்டுகின்றோம்.

(இதில் என் நினைவில் இருந்த ஒரு சிலரை குறிப்பிட்டுள்ளேன். இதைப்போன்று பலர் வாழையடிவாழையாக இருப்பார்கள். வரலாற்றில் அவர் பெயர் பதிந்திருக்கும் என்பதில் சந்கேகமில்லை)

வாழ்க வித்தியாலயம் வளர்க மாணவச்செல்வங்கள் தொடர்க ஆசிரியர்கள் பணி.

பவள விழா சிறப்புற இறைவனைப் பிரார்த்திக்கும் ஆயிரம் புலத்து உறவுகளுடன் கைகோர்த்து,

**என்றும் அன்புடன்**
**அரியபுத்திரன் நிமலன்**

### பழையமாணவர் (ஜேர்மனி)

## சு. கந்தசாமி அவர்களின்

# ஆசிச்செய்தி


எங்கள் பாடசாலையின் 75ஆவது நினைவு விழா பிரமிப்பாக உள்ளது. மடத்துவெளியில் முருகப் பெருமான் அருளால் தன் கல்வித்தொண்டை சிறப்புறச் செய்துகொண்டிருக்கும் எங்கள் கமலாம்பிகை கனிஷ்ட மகாவித்தியாலயம் தொடங்கி 75 வருடங்கள். இந்த 75 ஆண்டுகளில் எவ்வளவு பெரிய அரிய பங்களிப்பைச் செய்துள்ளது. சுற்றியுள்ள அனைத்துக் கிராமங்களின் கல்வி வளர்சிக்கும் பெரும் பங்காற்றி நிமிர்ந்து நிற்கிறது. இது எங்கள் பாடசாலை என எண்ணும் போது பேருவகை கொள்கிறேன். இங்கு கல்வி கற்றவர்களில் நானும் ஒருவன் என்பதில் அகமகிழ்கிறேன். மடத்துவெளி முருகனின் அருளோடு மென்மேலும் கல்வித் தொண்டில் சிறப்புற மனமார வாழ்த்துகிறேன்.

**சு. கந்தசாமி**
ஜேர்மனி.

தல்லையப்பற்று சங்கர முருகமூர்த்தி இந்து அறநெறிப் பாடசாலை அதிபர்

**செல்வி. க. மணிமேகலை அவர்களின்**

# ஆசிச்செய்தி



பண்ணும் பரதமும் கல்வியும் நிறைவுறப் பெற்று பவள விழாக்காணும் எம்து கமலாம்பிகை வித்தியாலயத்தின் கல்விப்பணி காலத்தால் அழியாப் புகழ்பெற்ற ஓவியமாகும். மேற்படி கல்லூரியில் கற்பித்த ஆசிரியர்கள் பலரும், அதிபராகவும் பணியாற்றியவர்களும் சிறந்த சைவத்தமிழ் பேரறிஞர்களாவர். சமகால யுத்த சூழ்நிலையில் மக்கள் புலம் பெயர்வுற்றதனால் யாழ். மாவட்ட மாணவர்களும் புலம்பெயர்வு காரணமாகப் பெரிதும் பாதிப்புற்றனர். இவ்வேளையில் இந்தக் கல்விச்சாலையில் மாணவர்களுக்குக் கல்வி புகட்டுவதற்குரிய ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருந்தது. சமய சமூகப் பணியில் ஆர்வம் மிக்க என்னையும் கமலாம்பிகை வித்தியாலய அதிபர் கல்விப் பணிக்காக இப்பாடசாலையில் இணைத்தார். அபிவிருத்திப் பணியாக இவ்வித்தியாலயத்தில் ஏழு ஆண்டுகள் கல்விச் சேவையாற்றியமையிட்டு யானும் மகிழ்ச்சி அடைகின்றேன். கல்விச் சேவையின்போது கமலாம்பிகை வித்தியாலய அதிபர் ஆசிரியர் மாணவர்களின் நன்மதிப்பையும் பெற்று இறும்பூதெய்தினேன். இவ்வேளையில் காலத்தினால் புகழ்பூத்த எமது கமலாம்பிகை வித்தியாலயம் பவள விழாக் கண்டு இன்புற்று மென்மேலும் எழுச்சிபெற்று நூற்றாண்டு விழா கொண்டாட வேண்டுமென முத்தமிழை வளர்த்த வயலூர் முருகப் பெருமானை வாழ்த்தி வணங்குகின்றேன்.

**செல்வி. க. மணிமேகலை,**
பொறுப்பாசிரியர்,
தல்லையப்பற்று சங்கரமுருகமூர்த்தி
இந்து அறநெறிப்பாடசாலை,
புங்குடுதீவு - 12.

எம் மண்ணின் உதவும் கரமான சுவிஸ் தொழிலதிபர்

**இராசமாணிக்கம் இரவீந்திரன்**

## வாழ்த்துமடல்

எண்ணும் எழுத்தும் ......
தமிழர்க்கு இரு கண்ணே - என்ற
தமிழ் சொல்லதனை - எம்முன்னோர்
தம் - இருகண்ணெனக் கொள்ளவே
கமலாம்பிகை கல்விக் கூடமதனை
எழுப்பினர் எம் புங்குடுதீவு மண்தனிலே ....

கள்வர் கொள்ளினும் கொள்ளார்
கடல் கொள்ளினும் கொள்ள முடியா
எவர் கொள்ளினும் கொள்ள முடியாதது
எம்தமிழ்க் கல்வி எனக் காட்டுமே - எம்
எழுபத்தைந்தாம் ஆண்டு விழா ..!

பாலறா வாய்ச்சிறார் பல்லாயிரம்
பஞ்சடிப் பாதம் தினம்பதித்த தலம் !
வல்லபல ஆசிரியர் தினம்
அறிவுக்கடல் முத்தெடுத்து ...
மாணவர் தனை மிளிர வைத்து
வரலாறு படைத்த தலமாய்க் காணும்
வாலைக் குமரியாம் கமலாம்பிகை .... !

கவினுறு காட்சியாய்க் கமலாம்பிகை
வளம்பெறச் செய்த வல்ல தமிழ்ப்
பெருங்குடி வாழ் புங்குடுதீவு வாழ்க !
ஏற்றம் பெற உழைத்திட்ட சீர்மிகு
உள்ளம் கொண்டோர் வாழ்க ! - எங்கள்
கமலாம்பிகை என்றும் வாழிய ! வாழியவே !

இலங்கை மனித உரிமைக் குழு முன்னாள் பிராந்திய இணைப்பாளர்,

**அருட்செல்வர் துரைராஜா சுவேந்திரராஜா**

# வாழ்த்துரை

கல்விப் புகழ்பெற்ற யாழ். மண்ணில், சப்த தீவுகளில் ஒன்றான புங்குடுதீவிலே அமைந்துள்ள யாழ். புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகாவித்தியாலயத்தின் 75ஆவது ஆண்டு நிறைவு இதழுக்கு வாழ்த்துரை தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இந்த மண்ணிலே பிறந்த எனக்கு இந்தக் கல்வித் தாயிடமிருந்து அறிவின் ஒளிமூலம் என்ற மகுடவாசகத்திற்கு அமைய எனது அறிவுக்கண்ணைத் திறந்து பல பட்டங்களைப் பெறுவதற்கும் எனது வாழ்நாளில் இன்றுவரை அதிக நாட்களைக் கல்வியினூடாக அறிவு ஒளியைத் தந்துகொண்டிருக்கும் கல்வித் தாய்க்காக, எனது வாழ்க்கையின் இறுதிவரை உதவுவேன் எனக் கூறிக்கொள்வதுடன் பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவராக இருக்கின்ற இக்காலப் பகுதியில் 75ஆவது நிறைவுவிழா நடைபெறுவதையிட்டுப் பெருமையடைவதுடன் யாருக்கும் கிடைக்காத பாக்கியத்தை இந்தக் கல்வித்தாயிடம் நான் பெற்றேன். அதாவது பாடசாலையில் இரண்டு வருடங்கள் தொடர்ச்சியாக மாணவத் தலைவராக இருப்பதற்கான வாய்ப்பை நான் பெற்றேன். 1990ம் ஆண்டு, 1991ம் ஆண்டு காலப்பகுதியிலும் இப்பாடசாலையில் மாணவத்தலைவனாக இருப்பதற்கான அரியவாய்ப்பினை இக் கல்வித்தாய் வழங்கினாள். நான் பட்டப்படிப்பினைத் தொடர்ந்த காலப்பகுதியில் எனது பாடசாலையில் கல்விகற்ற பல மாணவர்கள் பல்கலைக்கழகத்திற் கல்வி பயின்று கொண்டிருந்தனர். இதேபோல் உலகில் பல பாகங்களிலும் எமது பாடசாலை மாணவர்கள் வாழ்ந்து கொண்டிருப்பதுடன், பல சாதனைகளை நிறைவேற்றிக் கொண்டிருக் கிறார்கள். இக்கல்வித்தாயின் பெருமையை உலகமெங்கும் வாழும் எமது பழைய மாணவர்களுடன் இணைந்து எனது பாடசாலையின் மூலம் எமது பிரதேச மாணவர்களுக்குத் தரமான கல்வியை அவர்களது அறிவுக்கண்ணைத் திறந்து ஒளிபுகட்டச் சகலரும் ஒன்றுபட்டுச் செயற்படுவோம் என . இந்நிகழ்வில் முடிவெடுப்பதுடன் எதிர்காலத்தில் யாழ். புங்குடுதீவு இந்துக்கல்லூரியாக வளர்ந்துவர வேண்டுமென இறையாசியுடன் வாழ்த்துகிறேன். அத்தோடு மனிதன் தன் சிறப்பை உணர்ந்து; மனித தோற்றங்களாகவும்; இயற்கை வளங்களாகவும் உள்ள இறைநிலை தனிமனிதனாக என்னை வாழ்விக்கின்றது என்ற உண்மையை விளங்கி, யாருக்கும் துன்பம் அளிக்காமலும், துன்பம் கண்ட இடத்தில் உரிய முறையில் உதவி, அத் துன்பத்தை முடிக்கவேண்டுமென்றும் அவ் உணர்வடைவதையிட்டு மனித வாழ்வு அமைதிபெற வாழ்க்கை முறையை எளிமையாக்கி எமது சமுதாயம் புதிய உத்வேகத்துடன் அமையவேண்டும் என கேட்டுக்கொண்டு இவ் வாழ்த்துக்குச் சந்தர்ப்பம் தந்தவர்களுக்கு உளமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

" வாழ்க வையகம் வாழ்க வளமுடன் "

அருட்செல்வர் துரைராஜா சுவேந்திரராஜா<br>(பழைய மாணவர் சங்க உப தலைவர்)<br>முன்னாள் பிராந்திய இணைப்பாளர்,<br>இலங்கை மனித உரிமை ஆணைக்குழு, யாழ்ப்பாணம்.

கமலாம்பிகை வித்தியாலய அபிவிருத்தியின்
மூலவேரும், உதவும் கரங்களுமான

**சுவிஸ் நாட்டின் மைந்தர் திரு. சி. சண்முகநாதன் அவர்களின்**

# ஆசிச்செய்தி



"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனிசிறந்தனவே என்ற பாரதியார் பாடலுக்கு அமைவாக இந்துமா சமுத்திரத்தின் சிவபூமித்தீவினில், பொன்கொடு தீவு இன்று மருவி புங்குடுதீவு என்னும் பெயருடன் இயற்கையான செல்வவளமும், கோயில்களும், கல்விச்சாலைகளும் வளம் பெருக்கிடும் புனித பூமியாகும். அப்பூமியில் என்னை ஆளாக்கிய அன்னையர்கள் இருவர். அதாவது பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்து ஊனுணவு ஊட்டிய அன்னையுடன், அறிவுப்பசி போக்கி ஆற்றலும், விவேகமும் தந்திட்ட கமலாம்பிகை அன்னையையும் மறக்கமுடியாது. நானிலம் சிறக்கவைத்த உத்தமித்தாய் கமலாம்பிகை அன்னை இன்று எழுபத்தைந்தாவது அகவையிலே பவளமாகக் காட்சி தருகின்றாள். "நீறணிபவளக் குன்றமே..." என்பதுபோல், புங்குடுதீவின் பவளக்குன்றமாயும், கமலத்துநாயகியாம் சரஸ்வதி அன்னை வடிவுடையவளாகவும், ஒளிவீசிடும் நிலைகண்டு உள்ளம் பூரித்துக்கசிந்துருகிப் போற்றுகிறேன். அம்மா!

பெரியோர் எடுத்துவைத்த ஒவ்வொரு அடிகளையும் பிள்ளைகள் அவதானித்து அதன்வழி நல்வழி நடக்கத் தாய்மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு, சமயம் அனைத்தையும் அறிவுச்சுடராய் ஒளிவிட்டுப் பிரகாசிக்கச் செய்த நிலையிற் கமலாம்பிகை பவளவிழாக்காணுகிறோம்.

கல்லூரியின் முதல்வர் (அதிபர்), ஆசிரியர் குழாம், மாணவச் செல்வங்கள் கூடியே நற்பெறுபேறுகள் பெற்றுக் கமலத்து உதித்த செல்வங்களாப் போற்றுகின்றனர். "சங்கநிதி பதுமநிதி" என்பது போன்று பவளவிழா பதுமநிதி பரப்பப்பட்டார்கள், அவர்களையும் வாழ்த்துகிறேன். தரணியில் வாழும் நம்மவர்கள் அனைவரையும் கண்ணுடையவர்களாய் வாழவைத்த அன்னையே கமலாம்பிகை நாயகி.

"கண்ணுடையர் என்பர் கற்றோர் முகத்து இரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்" (திருக்குறள்)

என்பதற்குஅமைய கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதற்கு அமைவாக என்னையும் வெளியூரில் வாழவைத்தாலும், அன்னையின் வளர்ச்சியிலும், முதுமையிலும், பவளநாயகியாய் உலகத்துச் சாதனைகள் பலபடைத்தும் வாழுகின்ற உத்தமித்தாயே; புங்குடுதீவின் முதன்மைநாயகியாய் விளங்கிடும் அன்னையே! வளமுற வாழ . அவைசார் கல்வி அறிஞர்கள், குருமார்கள் அனைவரையும் பவளமாய் மிளிர வாழ்த்துகிறேன். வணங்குகிறேன்.

"நன்றி"

அன்புடன்,
சு. சண்முகநாதன்

## மலரில் இதழ்களாக.....


| | | |
|---|---|---|
| 1) | உங்களுடன் (ஆசிரியர்) | 01 |
| 2) | எங்கள் குருநாதர் - யோகர் சுவாமிகள் | 03 |
| 3) | எமது வித்தியாலயம் | 05 |
| 4) | கல்விச் சிந்தனைகள் | 09 |
| 5) | புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகாவித்தியாலய வரலாறு | 13 |
| 6) | புங்குடுதீவு - மீள்குடியேற்றமும், அபிவிருத்திச் சவால்களும் | 19 |
| 7) | இயல்பூக்கங்களும் மாணவர் கல்வியும் | 28 |
| 8) | மாணவர் கல்வியில் மன, உடலாரோக்கியத்தின் அவசியம் | 31 |
| 9) | மாணவர் நடத்தையில் மனவெழுச்சிப்பங்கு | 39 |
| 10) | மாணவர்களின் குறிக்கோள் திறன் | 42 |
| 11) | மாணவர் உளநலம் | 44 |
| 12) | கல்விச் செயல்முறையில் ஆசிரியரின் பங்கு | 47 |
| 13) | சமாதானக் கல்வியும், ஆசிரியரும் | 50 |
| 14) | எந்தக்குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே... | 52 |
| 15) | வறுமை கல்விக்குத் தடையல்ல | 55 |
| 16) | பாடசாலைகளிற் பாலியற் கல்வியின் தேவையும் கலவன் பாடசாலைகளின் அவசியமும் | 58 |
| 17) | மாணவர் பரீட்சையிற் சித்தியடைவது எப்படி? | 62 |
| 18) | மாணவரின் கட்டிளமைக் காலப் பிரச்சினைகள் | 66 |
| 19) | பிள்ளைகள் பொய் சொல்லுவது - திருடுவது ஏன்? | 73 |
| 20) | எம் மண்ணின் மாமனிதன் சட்டத்தரணி எஸ்.கே.மகேந்திரன் | 76 |
| 21) | தீவகம் ஒரு வரலாற்று நோக்கு | 80 |
| 22) | நான் கண்ட கமலாம்பிகை வித்தியாலயம் | 91 |
| 23) | ஏழு பிறவியும் ஒரு துறவியும் | 93 |
| 24) | அன்னையைப் போல் ஒரு தெய்வமுண்டா | 96 |
| 25) | எம் சூழலைப் பாதுகாப்போம் | 98 |
| 26) | புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களிடையே நடத்தப்பட்ட ஆய்வு | 101 |
| 27) | புங்குடுதீவு நாடகக் கலை | 106 |
| 28) | புங்குடுதீவு ஈழத்து இராமேஸ்வரப் பெருமான் மீது பாடப்பட்ட ஐந்திணை சூழ்பதி | 116 |
| 29) | தூர தேச்த்திலிருந்து ஒரு பாடல் | 118 |
| 30) | கல்வி | 119 |
| 31) | உழவர் பாடல் | 120 |

# உங்களுடன் [ஆசிரியர்]



"வேறுஉள குழுவையெல் லாம் மானிடம் வென்ற தம்மா" என்பான் கம்பன். எல்லா உயிரினங்களும் இயற்கையுடன் ஒன்றியே வாழ்கின்றன. ஆனால், கம்பன் காட்டும் மானிடன் மட்டும் ஆறாம் அறிவான பகுத்தறிவு என்ற கொடையினால் இயற்கையை வென்று வாழ்கிறான். இதனால் இன்றைய யுகத்தை விஞ்ஞானயுகம் என்கின்றோம் மனச்சாட்சி உடையவன் என்பதனாலே மனிதன் என அழைக்கப்படுகிறான். இவனிடம் நெடுநாள் வாழவேண்டும் என்ற ஆசையும் மகிழ்ச்சியுடன் வாழவேண்டும் என்ற விருப்பமும் தினமும் புதிதாக எதையும் அறிந்துகொள்ளவேண்டும் என்ற ஆர்வமும் இயல்பாக அமைந்துள்ளது. அவனிடம் உள்ள புதியன அறியவேண்டும் என்ற ஆர்வமே கற்றல் நடவடிக்கைகளுக்குக் காரணம். அறிவை கற்றல்மூலமாக கல்விக் கூடங்களில் இருந்து பெறமுடியும். "உண்மையான கல்வியானது குழந்தைகளின் சமூகத்தேவைகளை நிறைவுசெய்ய அதன் திறமைகளைத் தூண்டுவதனால் ஏற்படும் பயனாகும்." என்பார் ஜாண்டுயி. மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு உதவும் குறியீடு HATE ஆகும். அதாவது பரம்பரைத்திறன் (H), அடுத்து வயது (A), அடுத்து பாடசாலை பயிற்சி (T), அடுத்து மாணவர்களின் உட்சுரப்பிகளின் தொழிற்பாடு (E) இன்நான்கில் ஏதாவது ஒன்றில் ஏற்படும் குறைபாடுகளே மாணவரின் கல்விக்குத் தடையாக அமைகிறது. இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்ற வரிகளால் பாடசாலைக்கல்வி வலியுறுத்தப்படுகின்றது. அன்றைய குருகுலக்கல்வியானது ஆசிரியர்களை முதன்மையாகக் கொண்டது. அது பிற்காலத்தில் விரிவடைந்து பொருள் அறிவை (Knowledge) முதன்மையாகவும் கொண்டது. இன்றைய தற்காலக் கல்வி மாணவர்களை முதற்பொருளாகக் கொண்ட எல்லோருக்குமான கல்வியாகும். புதியன புகுதலும், பழையன கழிதலும் வழுவலகால வகையினாலே என்ற கோட்பாட்டிற்கு அமைய எம் கல்விச் சீர்திருத்தம் அமைய வேண்டும். எம் கல்விக்கொள்கையானது அப்பன் வெட்டிய கிணறு என்பதற்காக உப்புநீரைப் பருக வேண்டும் என்ற கல்விமுறையில் இருந்து விடுபடவேண்டும். அது இன்றைய காலதேச வர்த்தமானங்களுக்கும் இலத்திரனியல் சாதனங்களின் வசதிகளுக்கேற்பவும் உலகமயமாதலுக்கு ஏற்பவும் நவீனதொழில் நுட்பங்களுடன் இணைந்த பாடத்தினை கொண்ட கல்விமுறை எம் கல்விக்கொள்கையாக மாறவேண்டும் என்பது என் முன்மொழிவாகும்.

எல்லோருக்கும் கல்வி என்ற இலக்குடன், ஆன்மீக நெறிகளை கொண்ட மானிட விழுமியங்களை உள்ளடக்கிய கல்வியினை வழங்குவதற்கு உழைத்தவர் ஐம்பது தசாப்த தங்களுக்கு மேலாக எம் தீவகத்தின் மைந்தர் சபாநாயகர் சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி. ஒரு பிரபுத்துவ குடும்பத்தில் பிறந்த ஒருவர் வழமையாக தன் தலைமுறையில் மூதாதையர் சொத்தில் ஒரு சைவரயே கழிப்பது வழக்கம். ஆனால் சபாநாயகர் துரைசுவாமி அவர்கள் அவர் முதாதையர் தனிநாயகம் முதலி அவர்கள் சொத்தில் பொது மக்கள் பணிக்காக பத்து சைபரை பகிர்ந்து கொடுத்துச் சென்றுள்ளார். அதன் ஒரு

அங்கமே அவரது குடும்ப ஆலயத்தின் சொத்தில் இக்கமலாம்பிகை வித்தியாலய அமைத்த நிகழ்வு.

இப்பாடசாலை பற்றிய நிகழ்வும் என் தந்தையின் பெற்றோர், பிள்ளைகள் கல்விப் பணிக்கு முன்னுதாரணமான நிகழ்வும் என் நெஞ்சம் நீங்காதவை. அது 1950ஆம் ஆண்டு. எனக்கு வயது ஐந்து. தாயார் நோய் வாய்ப்பட்டமையால் யானும் எனது ஐந்து சகோதரர்களும் ஊரை தீவிலிருந்த எனது தந்தைவீட்டிற்கு இடம்மாறி வாழ்ந்தோம். அன்று தைப்பூசத்திருநாள். எமது வீட்டில் ஊரே கூடியிருந்தது. மங்களவாத்தியங்கள் இசையொலித்துக்கொண்டிருந்தது. ஓலையில் எழுதிய ஏட்டினைக்கொண்டு வந்த குரு எனது காதில் எதோ கூறி ஏட்டைத் தொடக்கி வைக்கிறார். இப்பாடசாலையில் இருந்து 1.5மைல் தொலைவில் எனது வீட்டிலிருந்து மேளதாள சகிதம் நான் ஊர்க்கோலமாக இப்பாடசாலைக்கு அழைத்துச்செல்லப்பட்டேன். தந்தை என்னை அதிபரிடம் அறிமுகம் செய்து பாடசாலையில் சேர்க்கப்பட்டேன். இங்கு அரிவரி வகுப்பை முடித்துக்கொண்ட நான் தாயார் நலமடையவே கிழக்கு ஊரிலிருந்த எனது தாயார் வீட்டிற்கு மீண்டு, கணேச வித்தியாசாலையில் என் கல்வியைத் தொடர்தேன். இன்நிகழ்வை எண்ணிப் பார்க்கும் பொழுது என்கண்கள் பனிக்கின்றனது. காரணம் என் கல்வியில் தந்தை கொண்டிருந்த ஆர்வமும் அவர் நடவடிக்கைகள் எதிர்கால பெற்றோருக்கு உதாரணமாகமைமையுமாகும்.

இப்படியாக என் தந்தை தந்த அறிவு உங்களுக்கு இவ்வறிவுக் கருவூலமான, கட்டுரை மலர்களால் கோர்க்கப்பட்ட இக் கமலமலரை எதிர்கால மாணவர் கல்வி நலம் கருதித் தங்கள்முன் சமர்ப்பிப்பிக்க வாய்ப்பளித்ததில் மகிழ்ச்சியடைகிறேன்.

இப்பவளவிழா ஒழுங்கைத் தலைமையேற்று நடத்தும் பொறுப்பையும் இம் மலராக்கத்தின் பொறுப்பையும் என்னிடம் வழங்கிய அதிபருக்கும், பாடசாலை சமூகத்திற்கும், நலன்விரும்பிகளான என் உறவுகளுக்கும் இம்மலருக்கு மணம் சேர்த்த கட்டுரையாளர்களுக்கும் யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் இருவருக்கும் பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கும், வாழ்த்துரை தந்த புத்திஜீவிகளுக்கும் என் அழைப்பை ஏற்று இங்கு வருகைதந்து விழாவைச் சிறப்பித்துக்கொண்டிருக்கும் அனைத்துப் பெருமக்களுக்கும் என்து இதயம் கனிந்த நன்றியறிதலை இத்தால் உரித்தாக்குகிறேன்.

அன்புடன்,
**வைத்தியகலாநிதி ஆ.பேரின்பநாதன்,**
பிரதம ஆசிரியரும்.
பவளவிழா நிறைவேற்றுக் குழுத்தலைவரும்.



# எங்கள் குருநாதர்

வைத்தியகலாநிதி ஆ. பேரின்பநாதன்

அலைபாயும் மனதினை அதன் வழிச்செல்லவிட்டு, வாழ்வாங்கு வாழ வேண்டிய நெறிமுறைகளை அறவே புறந்தள்ளி, ஆன்மீக நாட்டம் சற்றுமின்றி- உலகியல் என்ற சகதிக்குள் அகப்பட்டு அமிழ்ந்து அல்லற்படும் மக்களை அவ்விருளிலிருந்து மீட்கவும், மெய்ப்பொருளை உணர்த்தி உய்யும் வழி காட்டவும், ஞானிகள் அருளாளர்கள். அனுபூதி மான்கள், அவதார புருஷர்கள் என்போர் அவ்வப்போது தோன்றுவது உலக வரலாற்றில் இடம்பெறும் நிகழ்வாகும். இத்தகைய அனுபூதிமான்கள் "புண்ணிய பூமி" எனப் போற்றப்படும் பாரத நாட்டிலேயும் "சிவபூமி" எனப்போற்றப்படும் ஈழத்திரு நாட்டிலும் அவ்வப்போது தோன்றி மனுக்குலம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ நல்வழி காட்டுகின்றனர். கடையிற்சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோகர்சுவாமிகள், மார்க்கண்டு சுவாமிகள் என அந்த ஞான பரம்பரை நீண்டு செல்லும். இவர்களிற் சதாசிவன், யோகநாதன் ஜோன், யோகர், யோகர் சுவாமிகள் எனப்பல பெயர்களாலும் அழைக்கப்பட்ட சிவயோக சுவாமிகள் என்ற செந்தமிழ் ஞானி 1872-1964 காலப்பகுதியில் மக்களோடு மக்களாக வாழ்ந்து, மக்கள் வையகத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய ஒரு ஒப்பற்ற மகா ஞானியாவார். மாவிட்டபுரத்திற் பிறந்து, யாழ். நகரிற் கிறிஸ்தவச் சூழலிற் கல்விகற்று கிளிநொச்சியில் ஆங்கில அதிகாரியின்கீழ் அரச பதவி வகித்து, உலகியலுடன் ஊடாடிய யோகநாதன் என்ற பக்குவப்பட்ட ஆன்மா; நல்லூர்த் தேரடியில் செல்லப்பர் என்ற ஞானதேசிகரின் அருட்பார்வைக்கு ஆளானதிலிருந்து ஆன்மீகப் பயணத்திற் பல தடைகள் ,சிரமங்களைப் படிப்படியாகக் கடந்து ஞான முதிர்ச்சி பெற்ற மறை ஞானியாக உயர்ந்தார்.

ஈழத்துச் சைவ மக்களுக்கும், தமிழகம், மலேசியா, சிங்கப்பூர்; ஏன் மேற்குலகநாடுகளில் வாழும் அன்பர்களுக்கும் ஒளிவிளக்காக விளங்கி உய்தி நெறி காட்டினார்.

நிறைமொழி மாந்தரான சுவாமிகளின் நாவிலிருந்து அவ்வப்போது வேத சாரம்போல் வெளிவந்த கவிதைகள், "நற்சிந்தனைகள்" என்ற பெயரிலும் நூலுருப் பெற்றுள்ளதுடன், அவ்வருள் ஞானப்பனுவல்களைத் தமிழ்தெரியாத ஞானநாட்டமுடையோரும் படித்துப் பயன்பெறும் நோக்குடன் words of the Master என ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

ஈழத்திற் சைவசமய மறுமலர்ச்சியினை ஏற்படுத்த நாவலர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் ஒன்றான சைவசமய உண்மைகளை எடுத்துக்கூறும் புராணபடன மரபு பெருவழக்காகவிருந்த யாழ்ப்பாண சமூகத்தில் ஞானமழை பொழியத் தோன்றிய சுவாமிகளும் அதனை ஊக்குவித்தார். "துன்ப துயரங்களின்போது கந்தபுராணத்தைப் படியுங்கள். வேதனை விலகியோடும்" என அடிக்கடி கூறுவார். நாவலருக்குப்பின் சற்றுத் தொய்வடைந்திருந்த புராண படன மரபு மீண்டும் புத்துயிர்பெற்று மிகக்கிரமமாக

இடம்பெற்று வருவதற்குச் சுவாமிகளின் வழிகாட்டல்களே உந்து சக்தியாக அமைந்தன.

சிவ சிந்தனையினை மக்கள் மனங்களில் ஆழப்பதியுமாறு செய்வதற்குச் சுவாமிகள் "சிவதொண்டன்" என்னும் முத்திங்கள் ஏட்டினை ஆரம்பித்தார். "எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்"என்ற தாரக மந்திரத்தைத் தாங்கி 1935இலிருந்தது வெளிவரும் இவ்வேடு, சுவாமிகளின் நற்சிந்தனைகள், மகாவாக்கியங்கள், அருளுபதேசங்கள் ஆகியன உள்ளடங்கலாக அவை பற்றிய விளக்கங்களையும்; சைவஇலக்கியங்கள், சைவ சித்தாந்தம் சார்ந்த பல ஆன்மீக விடயங்களையும் தாங்கி வெளிவருகின்ற கனதியான சமய சஞ்சிகையாகத் திகழ்கின்றது.

சுவாமிகள் தனக்குப் பின்னரும் இச் சிவப்பணி தொடரவும், ஞான விளக்கு ஓங்கி ஒளிர்ந்து பிரகாசிக்க வேண்டுமென்பதற்காகவும் ஒரு ஞான பரம்பரையினரையே உருவாக்கி அளித்துள்ளார். இந்நாட்டைச் சேர்ந்தவர்களும், வெளிநாட்டவர்களும் இந்த ஞான பரம்பரையில் அடங்குவர். பிரித்தானியரான பிரபு வம்சத்தைச் சேர்ந்த யேம்ஸ் ரம்ஸ்போதம் (James Ramsbotha) அமெரிக்கரான றொபேட் ஹன்சன் (Robert Hansan) ஆகிய சிவயோக சுவாமிகள் என்ற அந்த ஞான சொரூபத்தின் மங்கள தரிசனத்தை அவரால் அருளப்பட்ட நற்சிந்தனைகள், அருளுபதேசங்கள், திருமுகங்கள் என்ற அருள்ஞானப் பனுவல்கள் ஊடாகப் பார்த்து உணர்ந்து உய்வோமாக.

"ஆலமர் பெருந்தகை! பரமாசாரியன்! அந்தத் தலைமையிலே வாழும் பெருவாழ்வு. இன்பவாழ்வு வேண்டும். தீயது செய்யாத உடற்றூய்மை, தீங்கு புரியாத கவலையறியாத மனத்தூய்மை, பொய்யுணராத அறிவுத்தூய்மை, பக்தி நீங்காத உயிர்த்தூய்மை வேண்டும். தன்மை, ஈரமுடைமை, உயிர்களிடத்து இரக்கமுடைமை, கஷ்டத்தால் வாடாத தழைவுள்ளம் வேண்டும். நல்லறிவாளரால் நல்லனென்று குறித்துணரப்படுகின்ற புகமொழி, மெய்யறிவு, இறைவனையன்றி அறியாத அறிவொளி சூழவிருப்பார்க்கு வழிகாட்டும் தெய்வ ஒளி வேண்டும். அந்தத் தவ முதல்வன் தக்ஷணாமூர்த்தியின் தாள்நிழலிலே வீற்றிருக்கும் பெருவாழ்வு, சிவவாழ்வு வேண்டும்.

- சுவாமி விபுலானந்தர்

# எமது அதிபர்



திரு. நா. நாகராசா

## பவளவிழா நிறைவேற்றுக்குழு



இடமிருந்து வலம்

இருப்பவர்கள் : என்.நாகராசா (அதிபர்), டாக்டர் ஆ.பேரின்பநாதன், என்.கே.சதீபன், எஸ்.சிவலிங்கம்

நிற்பவர்கள் : ரி.தயாபரன், என்.ஜெயக்குமார் (பாபு), எஸ். சண்முகநாதன்

## பவளவிழாக் குழுவினர்



இடமிருந்து வலம்

இருப்பவர்கள் : என்.ஜெயக்குமார், எஸ்.சண்முகநாதன், டாக்டர் பேரின்பநாதன் (தலைவர்), என்.நாகராசா (அதிபர்), எஸ்.சிவலிங்கம் (போஷகர்)

நிற்பவர்கள் : ரி.தயாபரன், பி.வரதராசா, என்.கோணேஸ்வரன், ஆர்.குகநாதன், எஸ்.கே.சதீபன் (செயலாளர்)

## பவளவிழாக் குழுவினர் பாடசாலை முகப்பில்




**இடமிருந்து வலம் :**

**என்.கோணேஸ்வரன், எஸ்.கே.சதீபன், ரி.தயாபரன், எஸ்.சிவலிங்கம், என்.நாகராசா (அதிபர்), டாக்டர் ஏ.பேரின்பநாதன், என். ஜெயக்குமார், எஸ்.சண்முகநாதன், பி.வரதராசா, ஆர்.குகநாதன்.**



பாடசாலை முகப்புத் தோற்றம்...



பாடசாலை இருமாடிக் கட்டிடம்...



அதிபர் அலுவலகமும், சிரேஷ்ட இடைநிலை வகுப்புக்களும்...



கனிஷ்ட இடைநிலை வகுப்புக்கள்...

# விஞ்ஞானகூட செயற்பாட்டில்
# ஆசிரியர்களும், மாணவர்களும்...





## வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள்



**இடமிருந்து வலம்**

**நிற்பவர்கள்** : பி.சுஜீதா, டி.சத்தியா, எஸ்.லதா, எம்.கீர்த்தீபா, எஸ்.தேன்மொழி, பி.ஜானகி.

**இருப்பவர்கள்** : பி. சித்ரா (உபஅதிபர்), ஜி. அமல்ராஜ், என்.நாகராசா (அதிபர்), ரி.தயாபரன்



மாணவர் தலைவர்களுடன் முகாமைத்துவக்குழு

**இடமிருந்து வலம்**

**நிற்பவர்கள்** : எஸ்.இலக்ஷன், ஜி.கிஷானந், எஸ்.கர்ஜன், வி.கோபிநாத், ரி.கோபிதர்சன்

**இருப்பவர்கள்** : எஸ்.சுகனியா (சிரேஷ்ட மாணவ தலைவி), பி.சித்திரா (உப அதிபர்), என்.நாகராசா (அதிபர்), ரி.தயாபரன் (ஆசிரியர்), கே.சுதர்மன் ( சிரேஷ்ட மாணவ தலைவன்)

**கீழ்இருப்பவர்கள்:** பி.கௌசிகா, எஸ்.நாககீர்த்திகா, எஸ்.மோனிஷா, எம்.கேயந்தினி, பி.கோகிலவானி, எஸ்.மிதுஷா



**வலைப்பந்தாட்ட அணி**

**இடமிருந்து வலம்**

**நிற்பவர்கள்** : எஸ்.சிந்துஷா, பி. கோகிலவாணி, எஸ்.மிதுஷா, எஸ்.சுகனியா, பி.கௌசிகா, ரி.நிரோஜா, எஸ்.விஜிதா

**இருப்பவர்கள்** : பி.சித்திரா (உபஅதிபர்), என்.நாகராசா (அதிபர்), ரி.தயாபரன் (விளையாட்டுப்பொறுப்பாசிரியர்), ஜி.அமல்ராஜ் (ஆசிரியர்)

**கீழ் இருப்பவர்கள்** : வி.வோவி, எம்.நிதர்சினி, எஸ்.நர்மதா, கே.இராசினி, எஸ்.சஜாளினி



**உதைப்பந்தாட்ட அணி**

**இடமிருந்து வலம்**

**நிற்பவர்கள்** : எம்.டிசாந்தன், என்.திவேதன், ரி.கோபிதர்சன், பி.அனுசன், எம்.கஜீந்திரன், எஸ்.குகசீலன், ஜி.கிஸானந், வி. கோபிநாத்

**இருப்பவர்கள்** : ஜி.அமல்ராஜ் (ஆசிரியர்), என்.நாகராசா (அதிபர்), ரி.தயாபரன் (விளையாட்டுப் பொறுப்பாசிரியர்)

**கீழ்இருப்பவர்கள்:** எஸ்.சுவேந்திரன், எஸ்.கர்ஜன், வி.நிரோத், எஸ்.கிருஸ்ணன், எஸ்.இலக்ஷன்




**இடமிருந்து வலம்**

**நிற்பவர்கள்** : எஸ்.சிந்துஷா, வி.நிரோத், வி.கோபிநாத், ரி.கோபிதர்சன், எம்.டிசாந், என்.திவேதன், பி.கோகிலவாணி.

**இருப்பவர்கள்** : பி.சித்திரா (உபஅதிபர்), என்.நாகராசா (அதிபர்), பி.சுஜீதா (பொறுப்பாசிரியர்), எஸ்.தேன்மொழி (பொறுப்பாசிரியர்)

**கீழ் இருப்பவர்கள்** : எஸ்.சஜாளினி, எஸ்.பபிஷா, கே.நிதர்சினி




**இடமிருந்து வலம்**

**நிற்பவர்கள்** : கே.கேயந்தினி, வி.கோபிநாத், எஸ்.இலக்ஷன், எம்.கஜீந்திரன், எம்.டிசாந்தன், ரி. நிரோஜா

**இருப்பவர்கள்** : ஜி.அமல்ராஜ் (பொறுப்பாசிரியர்), என்.நாகராசா (அதிபர்), டி.சத்தியா (பொறுப்பாசிரியர்), எஸ்.தேன்மொழி (பொறுப்பாசிரியர்)

**கீழ்இருப்பவர்கள்** : எஸ்.கர்ஜன், வி.ரஜிதா, வி. ஜனுஷா, ஆர்.ரஜிதா, என்.சுதன்




**இடமிருந்து வலம்**

**நிற்பவர்கள்** : வி.கோபிநாத், ஜி.கிஷானந், எஸ்.குகசீலன், எம்.டிசாந், பி.அனுஷன், ரி.கோபிதர்சன், எம்.கஜீந்திரன்

**இருப்பவர்கள்** : பி.ஜானகி (பொறுப்பாசிரியர்), பி.சித்திரா (உபஅதிபர்), என்.நாகராசா (அதிபர்), ரி.தயாபாரன் (பொறுப்பாசிரியர்)

**கீழ் இருப்பவர்கள்** : வி.வோலி, எஸ்.விஜிதா, கே.இராசினி, எஸ்.சுகனியா, பி.கௌசிகா




**இடமிருந்து வலம்**

**நிற்பவர்கள்** : எஸ்.விஜிதா, எஸ்.சுவேந்திரன், வி.நிரோத், ரி.கோபிதர்சன், எஸ்.இலக்ஷன், வி.கோபிநாத், எஸ். நர்மதா.

**இருப்பவர்கள்** : பி.அனுசன், பி.சித்திரா (உபஅதிபர்), என்.நாகராசா (அதிபர்), எஸ்.லதா (பொறுப்பாசிரியர்), எஸ்.சுகனியா

**கீழ்இருப்பவர்கள்** : ஆர்.ரஜிதா, எஸ்.கர்ஜன், கே.கேயந்தினி



அழகியல் மன்றம்

**இடமிருந்து வலம்**

**நிற்பவர்கள்** : பி.கோகிலவாணி, ரி.நிரோஜா, எஸ்.மிதுஷா, எம். கஜீந்திரன், எஸ்.சுகனியா, பி.கௌசிகா, ஜி.கிஷானந்

**இருப்பவர்கள்** : பி.சித்திரா (உபஅதிபர்), என்.நாகராசா (அதிபர்), பி.ஜானகி (பொறுப்பாசிரியர்)

**கீழ் இருப்பவர்கள்** : கே.நிதர்சினி, எஸ்.இலக்ஷனா, எஸ்.பபிஷா, கே.நிதர்சினி, வி.ரஜிதா



இந்துமாமன்றம்

**இடமிருந்து வலம்**

**நிற்பவர்கள்** : எஸ்.இலக்ஷன், வி.நிரோத், எஸ்.சுவேந்திரன், ரி.கோபிதர்சன், என்.நிவேதன், எம்.டிசாந், எஸ்.குகசீலன்

**இருப்பவர்கள்** : எம்.கீர்த்தீபா (பொறுப்பாசிரியர்), பி.சித்திரா (உபஅதிபர்), என்.நாகராசா (அதிபர்), ரி.தயாபரன் (பொறுப்பாசிரியர்)

**கீழ்இருப்பவர்கள்** : ரி.நிரோஜா, எஸ்.மிதுஷா, எஸ்.நர்மதா, பி.கோகிலவாணி

## பழைய மாணவர் சங்கம்



**இடமிருந்து வலம்**

**நிற்பவர்கள் :** பா.வரதராசா, இ.குகநாதன் (உபசெயலாளர்), எஸ்.சண்முகநாதன் (பழைய மாணவர் பிரதிநிதி, சுவிஸ்)

**இருப்பவர்கள் :** எஸ்.கே.சதீபன் (செயலாளர்), என்.நாகராசா (அதிபர்), என்.கோணேஸ்வரன் (பொருளாளர்), என். ஜெயக்குமார் (பழைய மாணவர், சுவிஸ்)

## பாடசாலைச் சிற்றூழியர்களுடன் அதிபர்



# எமது வித்தியாலயம்

திரு. நா. நாகராசா, வித்தியாலய அதிபர்.

புங்குடுதீவுக் கிராமத்தில் சைவமும் தமிழும் வளர வேண்டும் என்ற நோக்கில் எமது கிராமத்துச் சேவையாளர்கள் யாழ்ப்பாணம் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் உதவியுடன் 16.09.1936ஆம் ஆண்டு இவ்வித்தியாலயத்தை ஆரம்பித்தனர். அதன் முதல் தலைமை ஆசிரியராக அமரர் திரு. வை. கந்தையா அவர்கள் கடமையாற்றினார். அதனைத் தொடர்ந்து 18 அதிபர்கள் கடமையாற்றினார்கள். ஒவ்வொரு அதிபரின் காலமும் வித்தியாலயத்திற்குப் பெருமை சேர்த்துக் கொடுத்தது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக 1991ஆம் ஆண்டு நடைபெற்ற நவராத்திரிப் பூசைத் தினத்தன்று மக்கள் அனைவரும் இராணுவ நடவடிக்கை காரணமாக யாழ்ப்பாணத்திற்கு இடம்பெயர வேண்டி ஏற்பட்டது.

அதன்பின் யாழ்ப்பாணத்திற் பல்வேறு இடங்களில் இப்பாடசாலை இயங்கியது. புங்குடுதீவின் சூழல் நிலை ஓரளவிற்குச் சாதாரண நிலையடைந்து மக்கள் மீளவும் புங்குடுதீவிற் குடியமர ஆரம்பித்தனர். 1996இல் அதேவேளை முன்னாள் அதிபர் திரு. ந. இராசதுரை அவர்களும் நானும் இப்பாடசாலைக்குச் சென்று பார்வையிட்டு, கல்வித் திணைக்கள ஆலோசனையின்படி 1996ஆம் ஆண்டு மீண்டும் இப்பாடசாலையை ஆரம்பித்தோம். அப்போது இப்பாடசாலை 15 மாணவர்களுடன் இயங்கிவந்தது. தற்பொழுது 175 மாணவர்களையும் 13 ஆசிரியர்களையும் கொண்டு இயங்கி வருகின்றது. இக்காலத்தில் இருந்து எமது பாடசாலையிற் க. பொ. த. சாதாரண தரப்பரீட்சையில் வருடா வருடம் பல மாணவர்கள் சித்தியடைந்து உயர்கல்வி கற்று வருகின்றனர். 2000ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலை மெய்வல்லுனர் போட்டி; பெற்றோரினதும், பழைய மாணவர்களினதும் உதவியுடன் வருடா வருடம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அத்துடன் இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் தமிழ்த்தினப் போட்டி, மெய்வல்லுநர் போட்டி என்பவற்றிற் பங்குபற்றி, கோட்டமட்டம், வலயமட்டம், மாவட்ட மட்டம் ஆகியவற்றில் சான்றிதழ்களையும் பெற்றுள்ளனர்.

இன்று எமது வித்தியாலயத்திற் பழைய மாணவர்களும், பெற்றோர்களும் சேர்ந்து வெகுசிறப்பாக எனது நிர்வாக காலத்திற் பவளவிழாவைக் கொண்டாடுவது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது. இவ்விழாவிற்கு என்றும் உறுதுணையாக இருக்கின்ற விழாக்குழுத்தலைவர். டாக்டர் ஆ. பேரின்பநாதன், திரு. N. ஜெயக்குமார் (பாபு) - சுவிஸ், திரு. S. சண்முகநாதன் (சுவிஸ்), திரு. அ. நிமலன் (சுவிஸ்), திரு. S.K. சதீபன் (செயலாளர்) திரு. ந. கோணேஸ்வரன், திரு. பா. வரதராசா ஆகியோரை இவ்வேளை என்னால் நன்றியுடன் பாராட்ட வேண்டியுள்ளது. அத்துடன் இவ்விழா சிறக்க நிதியுதவி செய்யும் அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.

எமது பாடசாலைக்குச் சுவிஸ் நாட்டில் வாழும் பாடசாலையின் பழைய மாணவன் திரு. மாணிக்கம் - ரவி, அவர்கள் பாடசாலைப் பெயர்வளைவு செய்து தந்துள்ளார். அத்துடன் அவர் எமது பாடசாலைக்கு 20 பிளாஸ்றிக் கதிரைகள் அன்பளிப்புச் செய்துள்ளார். அத்தோடு எமது மாணவர்களின் குடிநீர்ப்பிரச்சனையைத்

தீர்ப்பதற்காகப் பவுசர்மூலம் குடிநீர் பெறுவதற்காக மாதம் 2000/= வழங்கி வருகின்றார். திரு.நா. ஜெயக்குமார் (பாபு, சுவிஸ்) அவர்கள் 2009ஆம் ஆண்டு க.பொ.த.சா.தர பரீட்சையின் சித்தியடைந்த 6 மாணவர்களுக்கு தலா 5000/= வீதம் அவர்களது பெயருக்கு வங்கியில் வைப்புச் செய்துள்ளார். சுப்பிரமணியம் சண்முகநாதன் அவாகள் (சண்முகம், சுவிஸ்) பாடசாலை மாணவர்கள் 10 பேருக்கு துவிச்சக்கரவண்டி அன்பளிப்புச் செய்துள்ளார். அத்தோடு புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தில் வசிக்கும் பிள்ளைநாயகம் சதீஸ் என்பவர் எமது பாடசாலையில் 2010ஆம் ஆண்டு க. பொ. த. சா / தரப் பரீட்சையில் சித்தியடைந்த ஆறு மாணவர்களுக்கும் ஒருவருக்கு 5000/= வீதம் வங்கியில் அவர்களது கணக்கில் வைப்புச் செய்துள்ளார். எனவே, இவர்கள் அனைவருக்கும் இச் சந்தர்ப்பத்திலே எனது நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். தொலைபேசி அன்பளிப்பு திருமதி. சியாமளா தியாகராசா, புங்குடுதீவு - 8

**மகுட வாசகம்** (Motto)

அறிவே ஒளி

**தூரநோக்கு**

- நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமை மிக்க நற்பிரஜையைகளை உருவாக்குதல்.
- அவர்களை உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகம் கொடுக்கத்தக்கவராக்குதல்.
- நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே வாழ்வதற்குரிய மனப் பாங்கையும் திறன்களையும் வளர்த்தல்.
- மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கைக் கோலத்தை மேம்படுத்தல்.
- சமூக நீதியும், ஜனநாயக வாழ்க்கை முறை நியமங்களும் உள்ளடக்கிய சுற்றாடலை உருவாக்குதல்.
- மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு என்பவற்றை மேம்படுத் தல்.

**பாடசாலையின் தகவல் சுருக்கம்**

| | | |
|---|---|---|
| பெயர் | :- | யா / புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகாவித்தியாலயம். |
| ஸ்தாபிக்கப்பட்ட ஆண்டு | :- | 16.09.1936 |
| ஸ்தாபகர் | :- | இந்துபோட் |
| முகவரி | :- | 8ஆம் வட்டாரம், புங்குடுதீவு. |
| மாவட்டம் | :- | யாழ்ப்பாணம் |
| மாகாணம் | :- | வடக்கு |
| பிரதேச செயலகம் | :- | தீவுப்பகுதி தெற்கு (வேலணை) |
| பிரதேச சபை | :- | வேலணை உப அலுவலகம், புங்குடுதீவு. |
| கிராமம் | :- | புங்குடுதீவு. |
| கிராம அலுவலர் பிரிவு | :- | புங்குடுதீவு கிழக்கு J / 23 |
| கல்விக் கோட்டம் | :- | வேலணை |
| கல்வி வலயம் | :- | தீவகம் |
| குறியீட்டு இலக்கம் | :- | 1014007 |
| பரீட்சை இலக்கம் | :- | 11281 |
| தொகை மதிப்பு இலக்கம் | :- | 09009 |

| | | |
|---|---|---|
| பாடசாலைத்தரம் | :- | Type II |
| பாடசாலை வகை | :- | கலவன் |
| இதுவரை அதிபர்கள் | :- | 18 |
| தற்போது மாணவர்கள் தொகை | :- | 175 |
| ஆசிரியர் தொகை | :- | 13 |
| தற்போதைய அதிபர் | :- | திரு. நா. நாகராசா |

**பாடசாலை முகாமைத்துவக் குழு**

1. திரு. நா. நாகராசா (அதிபர்)
2. செல்வி ப. சித்திராதேவி
3. திரு. த. தயாபரன்
4. திருமதி ப. சுஜித்தா
5. திருமதி பா. ஜானகி

**இவ்வித்தியாலயத்தில் கடமையாற்றிய அதிபர்கள்**

1. அமரர் V. கந்தையா (முதல் தலைமை ஆசிரியர்)
2. அமரர் S. மாணிக்கம்
3. அமரர் V. நாகமுத்து
4. அமரர் V. கணபதிப்பிள்ளை
5. அமரர் N. பசுபதிப்பிள்ளை
6. அமரர் K. இளையதம்பி
7. அமரர் R. துரையப்பா
8. அமரர் S. சொக்கலிங்கம்
9. அமரர் T. பொன்னையா
10. அமரர் N. பசுபதிப்பிள்ளை
11. திரு. த. சிவகுரு
12. திரு. த. துரைசிங்கம்
13. அமரர் தியாகராசா
14. அமரர் பரமானந்தம்
15. அமரர் த. சண்முகலிங்கம்
16. திரு. மு. மகேந்திரன்
17. திரு. ந. இராசதுரை
18. திரு. நா. நாகராசா (10.09.2008 முதல் இன்றுவரை)

**பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. நா. நாகராசா (பாடசாலை அதிபர்) |
| செயலாளர் | : | திரு. பா. வரதராசா |
| பொருளாளர் | : | திரு. த. தயாபரன் (ஆசிரியர்) |
| உபதலைவர் | : | செல்வி ப. சித்திராதேவி (ஆசிரியை) |
| உபசெயலாளர் | : | செல்வி ம. கீர்த்திகா (ஆசிரியை) |

## நிர்வாகக்குழு உறுப்பினர்கள்

1. திரு. ந. சிவராசா
2. திரு. இ. குகாநந்தன்
3. திரு. க. சதீபன்
4. திரு. ந. சசிதரன்

## இவ்வித்தியாலயத்தில் உள்ள மன்றங்கள்

1. விஞ்ஞான - கணித மன்றம்
2. கவின்கலை மன்றம்
3. இந்து மா மன்றம்
4. தமிழ் மன்றம்
5. சுகாதாரக் கழகம்
6. விளையாட்டுக் கழகம்
7. ஆங்கில மன்றம்

## க. பொ. த. சா / தர பெறுபேறு

| | 2009 | 2010 |
|---|---|---|
| க.பொ.த. சாதாரண தரம் தோற்றியோர் | 9 | 7 |
| க.பொ. த. உயர்தரம் தகுதி பெற்றோர் | 5 | 6 |

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

பாடசாலை வளர்ச்சிப் போக்கிற் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பலவழிகளிலும் தன் பங்கை நல்கிவருகின்றது. இவ்வகையிற் கல்வி, பௌதிகவள நடவடிக்கைச் செயற்பாடுகள் விதந்து குறிப்பிடக் கூடியன. பாடசாலைச் சிறு திருத்த வேலைகள் சமையல் அறை அமைத்தல் வேலை போன்றவற்றை இச் சங்கம் மேற்கொண்டு பாடசாலையைப் புதுப்பொலிவுடன் திகழச் செய்துள்ளது. வருங்காலத்திலும் இச்சங்கத்தின் சேவையையும் ஆலோசனைகளையும் வழங்குவது பாடசாலை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என நம்புவதுடன், சங்கத்தின் செயலாளர் திரு. பா. வரதராசா அவர்களதும், சங்க உறுப்பினர்களதும் சேவையையும் நன்றியுடன் நினைவு கூர்ந்து இவர்களின் பணி மென்மேலும் தொடர வாழ்த்துகின்றேன்.

## பழைய மாணவர் சங்கம்

வித்தியாலய பழைய மாணவர் சங்கமானது பாடசாலையின் வளர்ச்சிக்கு சுவிஸ், கனடா பழைய மாணவர் சங்கங்களின் உதவியுடன் பாடசாலை நிர்வாகத்திற்குப் பக்கபலமாக இருந்து செயற்பட்டு வருகின்றது. மேலும் பாடசாலையின் சிறு திருத்த வேலைகள் செய்யப்பட்டு, பாடசாலை புதுப்பொலிவுடன் திகழச் செய்துள்ளது. எனவே, இச்சங்க உறுப்பினர்களது பங்களிப்பினைப் பாராட்டுவதுடன் இச்சங்கத்தின் பணி தொடரவும், மேலும் வளரவும் வாழ்த்துகின்றேன்.



### “கல்வித் தந்தை” சபாநாயகர் சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி அவர்களின்

# கல்விச் சிந்தனைகள்

திருமதி V. பேரின்பநாதன், அதிபர். யாழ். இந்து மகளிர் கல்லூரி.

1300ஆம் ஆண்டுகளில் வட புலத்தில் அரசு வீற்றிருந்த இருமரபும் தூய தனிநாயகம் முதலி வழிவந்த தலைமகன் வைத்திலிங்கம் துரைசுவாமி அவர்கள் ஆயிரத்து எண்ணூற்று எழுபத்து நான்காம் ஆண்டு ஆனி மாதம் எட்டாம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்தில் சைவமும் தமிழும் சிறப்புற விளங்கும் வேலணைத் தீவகத்திலே நிலப்பிரவுத்துவ குடும்பத்தில் கல்வியும், செல்வமும், சீரான ஆளுமை விருத்தியும் நிர்வாக ஆற்றலும் உள்ள குடும்பத்திற் பிறந்தார்.

அன்னார் தமது ஆரம்பக் கல்வியை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும், மெற்றிக்குலேசன் கல்வியை யாழ்ப்பாண்ம் மத்தியகல்லூரியிலும், பட்டப் படிப்பினைக் கல்கத்தா பல்கலைக்கழகத்திலும்கற்று, B.Sc (Hon.) பட்டமும், கணித பாடத்தில் இரட்டை விசேட பட்டமும் பெற்றார். அங்கு விஞ்ஞானி ஜெகதீஸ் சந்திரபோஸ் அவர்கள் இவருடைய பேராசிரியர் ஆவார். விசேடமானி பட்டம் பெற்றமையால் இவர் அப்பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக பணிபுரிந்தார். “தந்தை சொல் மிக்க மந்திரமில்லை” எனும் கூற்றுக்கு இணங்க, தந்தையின் கட்டளைப்படி பிறந்த நாட்டுக்கு மீண்டும் வந்து சுயமான தொழிலில் ஈடுபட வேண்டும் எனும் பெரு நோக்கோடு கொழும்பிற் சட்டக் கல்லூரியிற் சட்டம் பயின்று சட்ட வல்லுனராக (Advocate) திகழ்ந்ததோடு மட்டுமல்லாது, சட்டச் சங்கம் ஒன்றை உருவாக்கி, தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்கு முன்னோடி யாகவும் விளங்கினார். நெற்றியிற் பொட்டும், தலைப்பாகையும், முகத்தில் தெளிந்த நீரோடை போன்று ஒளி வீசும் அறிவும் உள்ள இவரது தோற்றப் பொலிவும், இவர் வகித்த பதவிகளும் சிங்களத்தலைவர்களே போற்றும் அளவுக்குச் சிறப்புமிக்கது. இலங்கை மக்கள் வாக்குரிமையினை 1920ஆம் ஆண்டு பெற்றிருந்தனர். அரசசபைக்கு அப்பொழுது 9 மாகாணத்திற்கு 9 அங்கத்தவர்கள் தெரிவானார்கள். அத்தேர்தலில் திரு. கனகரத்தினம் அவர்களுடன் போட்டியிட்டு அதிகப்படியான வாக்குகளால் துரைசுவாமி அவர்கள் வடமாகாணத்தின் அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டார். அதன்பின் வலிகாமம் மேற்கு உட்பட்ட தீவுத்தொகுதியின் சட்ட சபை அங்கத்தவராக 1936இலிருந்து 1947 வரை மக்களால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இக்காலத்தில இவர் மந்திரிசபையின் தலைவராகவும் சட்ட சபையின் சபாநாயகராகவும் தெரிவு செய்யப் பட்டார்.

தமிழ் தலைவர்களில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட சட்டசபை அங்கத்தவர் இவர் என்ற பெருமை இவருக்கு முப்பது ஆண்டுகளுக்கு மேல் இருந்தது. இதனால் இச்செல்வாக்குடன் அன்றுள்ள அரசியல் நிலைமைகளில் சுதேசிகளின் கல்வியில் மிசனறிமாரின் கல்வி முறையால் ஏற்பட்ட பராபட்சமானது சமய, கலாச்சாரப் பண்பாட்டைப் பேணாத கல்வி முறையும், சுதேச மொழியின் புறக்கணிப்பும் அருகிக்

காணப்பட்ட, வசதிகள் குறைந்த சுயமொழிப் பாடசாலைகளின் கல்வித்தரக் குறைவும் இவரது கல்விச் சிந்தனைக்குக் கருவூலமாக அமைந்தன. இதனால், சைவ பண்பாட்டுச் சூழலிற் கல்வி வழங்க வேண்டும் எனும் நோக்கிற் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் உறுப்பினராகவும், சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் காலத்தில் அதன் செயலாளராகவும், 1923இலிருந்து 1962வரை அதன் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். இக்காலப்பகுதியில் இருநூற்றுக்கு மேற்பட்ட இந்துபோட் பாடசாலையின் உருவாக் கத்திற்கு இவர் துணைநின்றதுடன் கல்வி அமைச்சின் அனுமதியையும் பெற்றிருந்தார். சமகாலத்தில் இந்துக்கல்லூரிகள் சபையின் தலைவராகவும், அவற்றின் முகாமையா ளராகவும் இருந்து யாழ். இந்துமகளிர் கல்லூரியின் ஆரம்பகர்த்தராகவும் முகாமை யாளராகவும் இருந்ததுடன் வடபுலத்திலுள்ள அனைத்து இந்துகல்லூரியின் தோற்றத்திற் கும் வளர்ச்சிக்கும் மூலவேரானார். அத்துடன் தமிழ் பல்கலைக்கழகத்தின் ஆரம்பத்திற்கு இவரே ஊற்றுக்கண்ணாவார். இவரது கல்விச் சிந்தனை எல்லோரும் கல்வி என்ற கருத்தினை மையமாகக்கொண்டிருந்தது. கல்லூரிகளைப் பரவலாக்குவதுடன் சுயமொழிக் கல்வி வளர்ச்சிக்கும், பெண் கல்வி வளர்ச்சிக்கும் பணியாற்றி, சிறந்த சமூக சேவையாளராக விளங்கினார்.

இவரது கல்விச்சிந்தனை அன்றுள்ள அரசியல் நிலைமைகளில் ஆங்கிலக்கல்வியை வழங்கும் பாடசாலைகள் யாவும் மிசனறியின் கீழ் இயங்கியபோது; சிங்களவர், தமிழர் கல்வியில் அவர்களின் சமயம், பண்பாடு, கலாச்சாரம் என்பன பேணி வளர்க்கப்படா மையைக் கண்டு அரசியலில் உயர்பதவி வகித்தாலும் அவர்களின் போக்குக்கு இசை யாமல் இக்குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அவ்வவப்போதே மிசனறிப் பாடசாலை களுக்குக் கிடைக்கும் நிதி உதவிகள், சலுகை கள், வசதி வாய்ப்புகள் யாவும் அனைத்து இன, மத மக்களுக்கும் கிடைக்கவேண்டும். கல்வி சகலருக்கும் உரியது. அது மனித அடிப்படை உரிமைகளில் முக்கியமானது என்பதனை உணர்த்தி, கல்வியிற் சம சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்கும் வகையில் முன்நின்று உழைத்தவராவர்.

குறிப்பாக, இந்து மதக்கல்வியின் வளர்ச்சி குன்றியும், அவர்களுக்கு வசதி வாய்ப்புகள் எட்டாதும் இருந்ததால் கல்விக் காக மக்கள் இந்து மதத்திலிருந்து கிறிஸ்தவ மத்திற்கு மாறி மேற்படிப்பைத் தொடர்ந்த போது சைவத்தையும், தமிழையும் வளர்க்க நாவலர் பெருமான் அவ்வப்போது சைவப் பிள்ளைகளுக்காகப் பல திண்ணைப் பள்ளி களை உருவாக்கி நடாத்தி வந்தார். அவரது பணியாற் கவரப்பட்ட சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி அவர்களும், அவரது பணியைத் தொடர்ந்து ஆற்றுவதற்குக் கடமைப்பட்டு நாவலரின் ஊக்கத்தாலும், படித்த சிலரின் ஊக்கத்தாலும் உருவாக்கப்பட்ட இந்துக் கல்லூரிகள் சபையின் தலைவராய் இருந்து அந்த நிறுவனத்தின் முகாமையாளராகவும் இருந்து முதலில் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் கீழ் மேலும் பல இடங்களில் இந்துக்கல்லூரிகளை நிறுவுவதற்கு முன்னின்று உழைத்தார். இக்கல்லூரிகளை அரசினால் அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களாகவும், அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களின் வேதனங்களை வழங்கவும் அரசசபையில் வலியுறுத்திப் பெற்றுக் கொடுக்க முழுமூச்சாக நின்று வெற்றி கண்டவர்.

எத்தனையோ நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுப் பொருளாதாரப் பற்றாக் குறையால் தொடர்ந்து இயங்கமுடியாத நிலையில் இருந்தபோது கல்விகற்ற மக்களால்

உருவாக்கப்பட்ட இந்துபோட்டை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாக்கி வேண்டிய நிதி உதவிகளையும், பெற்றுக்கொடுத்ததோடு, அதற்குப் பொறுப்பாகப் பொருத்தமான ஒரு தலைவராக சேர். பொன். இராமநாதனை நியமிப்பதில் முன்நின்றார். 1943இல் இலவசக்கல்வி பற்றிய சிந்தனையில், பெண் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டபோது இவர் இந்து போட் தலைவராக இருந்த காலப்பகுதியில் இந்துக்கல்லூரியின் முகாமைத்துவத்தின்கீழ் உருவாக்கப்பட்ட ஒரேஒரு பெண்கள் பள்ளிக்கூடம் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயமாகும். 1945இல் இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் ஒரு வீட்டில் தனியான சிறிய திண்ணைப் பள்ளியை நிறுவி, அதற்குப் பெண் ஆசிரியரையும் தானே நியமித்து இந்துக்கல்லூரியிற் கல்வி கற்ற பெண்களை அங்கு இடம்மாற்றி அவர் களுக்குக் கல்வி அளிக்கப்பட்டது. பெண் கல்வியில் இவர்காட்டிய ஊக்கத்தாற் கூடி யளவு பெண்கள் பள்ளி செல்லத் தொடங்கி னர்.

இட நெருக்கடி காரணமாக அதே ஆண்டில் வண்ணார்பண்ணையிற் சைவப்பெருமாட்டி விஷாலாட்சி சிவகுரு நாதர் அம்மையாரின் நன்கொடை நிலத்திற் பாடசாலை அமைத்து, அதே ஆண்டிலே அரச அங்கீகாரத்தையும் அப்பாடசாலைக்குப் பெற்றுக்கொடுத்து, பாடசாலையின் பௌதிக வளங்கைளயும் அதிகரிக்க அரச உதவியைப் பெற்றுக்கொடுத்த பெருமைக்குரியவர். இன்று இப்பாடசாலை யாழ். இந்து மகளிர் கல்லூரி எனும் பெயருடன் யாழ். நகரிலே தலைசிறந்த பெண்கள் பாடசாலையாகத் திகழ்கின்றது.

1945ஆம் ஆண்டு சீ.டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா அவர்கள் கல்வி மந்திரி யாக இருந்த காலப்பகுதியிற் சபாநாயகராக இருந்த சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி அவர்கள், கல்வி வாய்ப்பு வசதிகள் அற்ற, போக்குவரத்து வசதிகள் குறைவான ஏழை மக்களைக் கொண்ட தீவுப்பகுதி மக்களைக் கருத்திற்கொண்டு தீவுப்பகுதிக்கும், மத்திய பாடசாலையின் அவசியம் பற்றி பாராளு மன்றத்தில் வலியுறுத்தி நின்று, தீவுப் பகுதி யில் ஒரு மத்திய கல்லூரியை உருவாக்கும் நோக்குடன் கல்வி மந்திரியை வேலணைத் தீவுக்கு அழைத்துவந்து பாடசாலை அமைவ தற்குப் பொருத்தமான இடத்தினை வகுத்துக் கொடுத்து அதனை விரைவாக நிறைவேற்ற வேண்டிய உதவியைப் பெற்றுக்கொடுத்தமை, இவர் தீவுப்பகுதி மக்களுக்குச் செய்த பெரும் கைங்கரியமாகும். இன்று எத்தனையோ கல்விமான்களையும், அறிஞர்களையும் உருவாக்கித்தந்த இக்கல்லூரியின் தந்தையான சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி அவர்களை நினைவுகூரும் கடமைப்பாட்டு டன் அப்பாடசாலையின் பெயரை மாற்றி இவரது பெயரைச் சூட்டவேண்டும் எனும் விருப்பத்தினாற் சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயம் என்ற பெயர் சூட்டப்பட்டு தீவுப் பகுதியிலே இன்று முன்னணிப் பாடசாலையாக விளங்குகின்றது. மேலும், தீவுப்பகுதிகளில் நயினாதீவு, புங்குடுதீவு ஆகிய பகுதிகளிற் போக்குவரத்து, பொருளாதார, கஷ்டம் நிறைந்த நெடுந்தீவுப் பகுதியிலும் ஆரம்பப் பாடசாலைகளை நிறுவுவதில் முன்னின்றார். அத்தோடு வேலணையில் சைவச்சூழல் மிகுந்த இடத்தில் ஒரு புதிய சைவத்தமிழ் பாடசாலையை தாயார்காணியில் 1927இல் நிறுவி வேலணை சரஸ்வதி வித்தியாசாலை எனும் பெயருடன் வளர்ச்சியுற வைத்தார்.

அன்னாரது கல்விச் சிந்தனைகள் ஆரம்ப, இடைநிலைகளில் மட்டும் செயலூன்றாது உயர் கல்வியிலும் அக்கறை கொண்டுள்ளமையை அறிய முடிகின்றது. எமது நாட்டு மாணவர்கள் உயர்கல்வியை எமது நாட்டிலேயே பெறவேண்டும் எனும் பெரு நோக்குடன் பல்கலைக்கழகப் பிரே ரணையால் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழக விசாரணைச்சபையின் உறுப்பினராக இருந்து செயற்பட்டார். இவரது கல்விச்சிந்தனை கள்தான் எந்தப்பகுதிக்கு அரசசபை உறுப்பின ராக தெரிவு செய்யப்பட்டா அப்பகுதி மக்களுக்கு மட்டுமன்றி நாட்டின் சகல இன,

மத மக்களும் பயன்பெறும் வகையிற் செயற்பட்டார்.

இவர் கல்விப்பணியுடன், சமூகப் பணியிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டமை யையும் அறிய முடிகின்றது. எமது நாடு உணவுக்காக வேறு நாடுகளில் தங்கியிருக்கும் நிலையை இல்லாமற்செய்து உணவில் தன்னிறைவு பெறவேண்டும் எனும் நோக்கிற் சட்ட நிரூபண சபையில் வாதாடினார். தேவையான உணவு உற்பத்தியைப் பெருக்க, விவசாயம் செய்வதற்குத் தேவையான நீரைப் பெறுவதற்குக் குளங்கள், நீர்த்தேக்கங்களைத் திருத்தம் செய்வதிலும், கிராமங்களிலுள்ள காடுகளை அழித்து விவசாயம் செய்வதிலும், கிராமப்புற நீர் விநியோகம் சரியாக நடை பெறவும் சட்டசபையில் வலியுறுத்தி ஏழை மக்களின் வாழ்வில் அக்கறை காட்டியமையை அறியமுடிகிறது. மதுவினால் ஒழுக்கங் கெட்டுச் சமூகச்சீர்கேடுகளை மக்கள் விளைவிப்பதற்கும் சட்டசபையிற் காலம்கால மாக விவாதித்தமையை அறியமுடிகிறது. அத்துடன் புங்குடுதீவிலிருந்து மக்கள்; கல்வி, வைத்திய வசதிக்காக யாழ். நகரை வரவேண் டிய நிலையில் இருந்தமையால் இந்த கஷ்டங் களைக் கண்ணுற்ற துரைசுவாமி அவர்கள் சட்டசபையில் விவாதித்து பூநகரி மகாதேவா பாலம், புங்குடுதீவு வேலணைப்பாலம், அராலி பாலம் என்பவற்றிற்கு அங்கீகாரம் பெற்றதுடன் அவற்றின் தொடக்கத்திற்கான நிதியினையும் ஒதுக்கியிருந்தார். அவற்றில் புங்குடுதீவுப் பாலமானது பெரியவ்ாணர் அவர்களால் 1950களில் பாலத்தினை அமைத்து ஏழை மக்களின் அபிமானத்தைப் பெற்றார். அத்துடன் அவர் இன ஒற்றுமை யை ஏற்படுத்து வதிலும் வெற்றிகண்டுள்ளார். இவரது சமூகப்பணியிலே விருந்தோம்பும் பணியும் சிறப்புற்று இருந்தமையைக் காண முடிகிறது. 1927ஆம் ஆண்டு மகாத்மாகாந்தி அவர்கள் சபாநாயகரின் அழைப்பை ஏற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தபோது ஊர்காவற்றுறையில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு பேசினார். அப்பொழுது மகாத்மாகாந்தி அவர்கள் இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைக்கும்போது இலங்கைக்கும் சுதந்திரம் கிடைக்கும் என்றார். அது பின்னர் நிதர்சனமானது. துரைசுவாமி அவர்கள் சூரியஅஸ்தமிக்காக நாட்டினைக் கட்டி யாண்ட இங்கிலாந்தில் முடிக்குரிய அரசர் ஜோர்ஜ் மன்னரின் முடிசூட்டுவிழாவில் இலங் கையின் பிரதிநிதியாக கலந்துகொண்டார். அப்பொழுது சபாநாயகர் அவர்கள் அரச சபைக் கலைஞர் "சேக்ஷ்பியர்" அவர்கள் சபாநாயகரை பின்வருமாறு கூறி வரவேற்றார். "நெடுந்தீவு ராஜதானியின் மன்னர் வருகின் றார். அவர் தலையிலே தலைப்பாகை அணிந்திருக்கிறார். மார்பிலே மார்பு பட்டி அணிந்திருக்கிறார். லண்டன் மாநகர வீதியில் பவனிவந்துகொண்டிருக்கிறார்...." என்ற வரிகள் மூலம் அவர் ஒரு அரசராகவே வரவேற்கப்பட்டார். இலங்கை சபாநாயகர் என ஒருவரிகூட அவர் பயன்படுத்தவில்லை. இவை எம் தமிழர் அரசாட்சிக்கு சான்றாகும். அரசரிடமிருந்தே சேர்பட்டதையும் பெற்றார்.

இவ்வாறாக சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி அவர்கள் பணி பல்துறைப் பட்டனவாக இருந்தாலும், கல்விச்சிந்தனை யானதுதான் எந்தப் பகுதிக்கு அரசசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டாரோ அப்பகுதி மக்களுக்கு மட்டுமல்லாது, நாட்டின் சகல இன, மத மக்களும் பயன் பெறத்தக்க வகையிற் செயற்பட்டு எல்லோ ருக்கும் கல்வி வசதி கிடைக்கவேண்டும் என்ற கருத்துக்கு அமைய இலவசக்கல்வி நாட்டில் எல்லா இடமும் கிடைக்கத்தக்க வகையிற் கல்வி மந்திரியின் மதிப்பைப் பெற்றுச் செயற்பட்டார். கூடுதலாக பாடசாலைகளை அமைத்துக் கொடுப்பதிலும், அங்கீகாரம் பெற்றுக் கொடுப்பதிலும், வசதிகளை ஏற் படுத்தி வளர்த்தெடுப்பதிலும் முழுமுயற்சி யாக ஈடு பட்டுள்ளமையை நாம் வெளிப்படை யாகக் காணமுடிகிறது.



## புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகாவித்தியாலய

# வரலாறு

பேராசிரியர் கா. குகபாலன்,
புவியியற் போராசிரியர் புவியியற்றுறை,யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

ஒரு பிரதேசத்தின் சமூக, பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சியின் அடிநாதமாகத் திகழ்வது அப்பிரதேசத்தில் காணப்படக் கூடிய கல்வி நிறுவனங்களாகும். அத்தகைய நிறுவனங்கள் அப்பிரதேசத்திலுள்ள மாணவர்களின் கல்விமேம்பாடு, அவர்கள் தம் ஆளுமை விருத்தி, போன்றவற்றைக் கட்டியெழுப்புவதன் மூலமாக அவர்களை சமூகத்திற்கு நற்பிரசைகளாக்குவது மட்டுமல்லாது, அதனூடாக தாம் கைக்கொள்ளும் தொழில் வாய்ப்புக்களுக்கு உந்து சக்தியாகவும் அமைகின்றது. அத்தோடு தத்தம் குடும்பங்களின் மேன்மைக்கும் ஊன்றுகோலாக அமைகின்றது. தீவக மக்களின் கல்வி வளர்ச்சிக்கு பல கல்வி நிறுவனங்கள் அதாவது பாடசாலைகள் பெரும் பங்காற்றியுள்ளதை நாம் அறிவோம். அந்த வகையில் புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகாவித்தியாலயம் கடந்த எழுபதைந்து ஆண்டுகளாக தன்னைச் சூழவுள்ள சமூகத்தினரின் மேம்பாட்டுக்கு பெரும் பங்காற்றி நூற்றாண்டை நோக்கி நகர்ந்து செல்கின்றது.

பொதுவாக ஐரோப்பியர் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் முறைசாராத கல்வி முறையே பெருமளவில் காணப்பட்டிருந்தது. கோவில்பள்ளி, நிலாப்பள்ளி, திண்ணைப்பள்ளி, குருகுலக்கல்வி போன்றவற்றினூடாக சமய விழுமியங்களைக் கைக்கொள்ளல். இலக்கியங்களைக் கற்றல் மற்றும் அறிவினைத் தேடல் என்பன சிறப்படைந்திருந்தன எனக்கொள்ளலாம். இதற்கு புங்குடுதீவுக் கிராமமும் விதிவிலக்கல்ல. ஐரோப்பியர் வரவினைத் தொடர்ந்து முறைசார்ந்த கல்வி முறையானது தத்தமது தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது. இருப்பினும் காலப் போக்கில் நல்ல அறுவடையினைப் பெற்றுள்ளது என்றே கூறல் வேண்டும்.

புங்குடுதீவுக் கிராமத்தின் முறைசார் கல்வி வளர்ச்சியில் முதன்முதலாக 250 ஆண்டுகளுக்கு முன்னர் கத்தோலிக்க மிசனறிமாரினால் றோமன் கத்தோலிக்க பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அமெரிக்க மிசனறிமாரினால் மடத்துவெளி, பெருங்காடு, சின்ன இறுப்பிட்டி ஆகிய இடங்களில் 1850 - 1890ஆம் ஆண்டுகளிடையில் மூன்று பாடசாலைகளை நிர்மாணித்து மாணவர்களின் கல்விச் 'செயற்பாட்டிற்கு பேருதவி புரிந்துள்ளனர்.

இக்காலப்பகுதியில் சைவப்பிள்ளைகளின் கல்வி மேம் பாட்டில் அக்கறை கொண்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் அவரைத் தொடர்ந்து சேர். பொன் இராமநாதன், சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி, திரு. எஸ். இராசரத்தினம் போன்ற பலரும் சைவப் பாடசாலைகளை நிறுவுவதில் ஆர்வம் கொண்டுழைத்தனர். அவற்றில் சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் (Hindu Board) பணி மகத்தானது. நாட்டில் தமிழர்கள் பரந்து வாழும் பகுதிகளில் சைவப்பாடசாலைகளை நிறுவுவதில் இவ்வமைப்பு மிகப்பெரிய பங்களிப்பினைச் செய்துள்ளது. இந்த

வகையில் 1910ஆம் ஆண்டு புங்குடுதீவு ஸ்ரீகணேச மகாவித்தியாலயத்தினை உள்ளூர்ப் பிரமுகர்களின் விடாமுயற்சியினால், சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்டது. இதனையடுத்து அதே ஆண்டு குறிகாட்டுவானில் ஸ்ரீபராசக்தி வித்தியாலயம் நிறுவப்பட்டது. இவ்விரு பாடசாலைகளும் நூற்றாண்டினைக் கடந்து விட்டபோதிலும் கணேச மகாவித்தியாலயம் 2010ஆம் ஆண்டு நூற்றாண்டினைச் சிறப்பாக கொண்டாடியது. பராசக்தி வித்தியாலயம் தற்போது இயங்காத நிலையில் உள்ளது. ஸ்ரீசித்திவிநாயகர் கனிஷ்ட மகாவித்தியாலயம் 1913ஆம் ஆண்டு விஜயதசமித்திருநாளில் கால்கோள் விழா நடைபெற்றதாக பெரியபுலம் வீரகத்திவிநாயகப் பெருமானின் வரலாற்றினைக் கூறும் கச்சேரி குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம், திருநாவுக்கரசு கனிஷ்ட வித்தியாலயம், கமலாம்பிகை கனிஷ்ட மகாவித்தியாலயம், சண்முகநாதன் கனிஷ்ட மகாவித்தியாலயம், இராஜராஜேஸ்வரி கனிஷ்ட வித்தியாலயம், சேர். துரைசுவாமி கனிஷ்ட வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் உள்ளூர் பிரமுகர்களின் அயராத உழைப்பின் விளைவாக நிறுவப்பட்டு சைவவித்தியா விருத்திச் சங்கத்தினரால் பரிபாலிக்கப்பட்டு வந்துள்ளது. இத்தகையோரில் திரு.வ.பசுபதிப் பிள்ளை, சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி, மா. நாகலிங்கம், நீ. சேதுபதி, நீ. ஆறுமுகம், நீ. அம்பலவாணர், அ. வைத்திலிங்கம், வே. விஸ்வலிங்கம், மருதப்புசுவாமி, ஆ.மாணிக்கம் சி. நல்லதம்பி போன்றோர் இச்சைவப் பாடசாலைகளை உள்ளூர் பிரமுகர்களுடன் இணைந்து நிறுவுவதற்கு பேருதவி புரிந்துள்ளனர்.

உயர்திரு. C.W.W. கன்னங்கராவின் கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைவாக புங்குடுதீவு மகாவித்தியாயலம், 1945ஆம் ஆண்டும், அரியநாயகன்புலம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை 1948ஆம் ஆண்டும், குறிகாட்டுவான் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, 1957ஆம் ஆண்டும் நிறுவப்பட்டது. இதனைத்தொடர்ந்து புங்குடுதீவுக் கிராமத்தில் 16 பாடசாலைகள் இயங்கி வந்துள்ளன. எனினும் கமலாம்பிகை கனிஷ்ட மகாவித்தியாலயம் நிறுவப்பட்ட போது, அருகில்இருந்த அமெரிக்கன்மிஷன் ஆரம்பப் பாடசாலை ஒன்றாக இணைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

18.10.1991ஆம் ஆண்டு புங்குடுதீவுக் கிராமத்தில் இராணுவத்தினர் முன்னேறி வந்ததன் விளைவாக மக்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு பெரும் எடுப்பிலான இடப்பெயர்வின் விளைவாக பாடசாலைகளும் செயலிழந்தன. இக்கிராமத்தில் இயங்கிய பாடசாலைகள் யாழ்ப்பாணத்தில் ஆங்காங்கே இயங்கிவந்துள்ளன். 1995ஆம் ஆண்டு ஒக்டோபர் 30ஆம் திகதி வலிகாமத்தில் சூரியபிரகாசப் படையெடுப்பின் விளைவாக தென்மராட்சி, வடமராட்சி, வன்னி மற்றும் தென்னிலங்கை நோக்கி மக்கள் இடப்பெயர்வினை மேற்கொள்ளவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எனினும் பாடசாலைகளும் ஆசிரியர், மாணவர்களுடன் இடம் பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சியில் இயங்கின எனலாம். 1991 - 1996ஆம் ஆண்டு காலங்களில் புங்குடுதீவுக் கிராமத்தில் மகாவித்தியாலயம் மட்டுமே இயங்கிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 1996ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மீண்டும் மீள்இடப்பெயர்வுக்கு உட்பட்ட நிலையில் தீவுப்பகுதிக்கான போக்குவரத்துத் தடை தளர்த்தப்பட்டதன் விளைவாக மீண்டும் மக்களும், பாடசாலைகளும் தத்தம் கிராமங்களுக்கு நகர்த்தப்பட்டனர். ஆனால் மிகக்குறைந்தளவிலான மக்களே மீள்குடியேற்றத்திற்குட்பட்டிருந்தனர். இதன் விளைவாக புங்குடுதீவுக் கிராமத்தில் ஏற்கனவே செயற்பட்டுவந்த மகாவித்தியால

யத்துடன் கணேச கனிஷ்ட மகாவித்தியால யம், கமலாம்பிகை கனிஷ்ட மகாவித்தியால யம், சுப்பிரமணிய மகளிர் கனிஷ்ட மகாவித்தியாலயம், சித்திவிநாயகர் கனிஷ்ட மகாவித்தியாலயம் ஆகியவற்றையும் கல்வித்திணைக்களத்தினர் இயங்கவைத்தனர். ஏனைய பாடசாலைகளை இயங்கவைப்பதற்கு போதிய மாணவர்கள் இல்லாததால் அவை செயலிழந்தன. 2009ஆம் ஆண்டு வன்னியில் நடந்த யுத்தம் நிறைவுக்குவரவே அங்கு வாழ்ந்த இக்கிராமத்து மக்களின் மீள் இடப்பெயர்வின் விளைவாக 2010ஆம் ஆண்டு சேர். துரைசுவாமி கனிஷ்ட மகாவித்தியாலயமும், ரோமன் கத்தோலிக்க மகாவித்தியாலயமும், கல்விச் செய்றபாட்டிற் காக மீளவும் திறக்கப்பட்டன. எனவே, 1990இற்கு முன்னர் இயங்கிய 15 பாடசாலை களில் எட்டுப்பாடசாலைகள் இன்றுவரை இயங்கத் தொடங்கவில்லை என்பது குறிப்பி டத்தக்கது.

### கமலாம்பிகை கனிஷ்ட மகாவித்தியாலயம்

புங்குடுதீவில் நிறுவப்பட்ட சைவப் பாடசாலைகளில் அமைவிடத்தில் எழுந்தருளி யிருக்கும் கடவுளரின் திருநாமத்தை அடிப் படையாகக்கொண்டே நிறுவப்பட்டுள்ளது. ஆனால், கமலாம்பிகை கனிஷ்ட மகாவித்தி யாலயம், சண்முகநாதன் கனிஷ்ட வித்தியால யம், துரைசுவாமி கனிஷ்ட வித்தியாலயம் ஆகியன பாடசாலை நிறுவினரோடு தொடர் புபடுத்தப்பட்டே அதற்குப் பெயர் சூட்டப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

புங்குடுதீவிலுள்ள குக்கிராமங்களில் மடத்துவெளி, ஊரைதீவு என்பன சமூக, பொருளாதார, பண்பாட்டு ரீதியில் மிகவும் இறுக்கமான பிணைப்பினைக்கொண்ட கிராமங்களாகும். ஊரைதீவில் 1930ஆம் ஆண்டு இராமலிங்கேஸ்வரர் கோவில் கந்தர்மடத்தில் திருநாவுக்கரசு வித்தியாசாலை ஆரம்பிக்கப்பட்டது. (வி.சிவகாமி) இதனைத் தொடர்ந்து மடத்துவெளியைச் சேர்ந்த இந்துப்பொதுமக்கள் தமக்கும் ஒரு சைவப் பாடசாலை வேண்டும் என குரல்கொடுக்கவே திரு. நீ. சேதுபதி, திரு. நீ. ஆறுமுகம் சகோதர ரர்கள் அமெரிக்கன்மிசன் பாடசாலைக்கு அருகில் அவர்களது தல்லையப்பற்று முருகன் ஆலயத்திற்கு சொந்தமான காணியை ஒரு பாடசாலையை நிறுவித்தருமாறு அவர்களின் உறவினரான சைவவித்தியாவிருத்திச் சங்கத் தின் தலைவராகவிருந்த சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி (1923 - 1962) அவர்களைநாடி விண்ணப்பித்தனர். அதற்கு அனுமதி கிடைத்ததும் பாடசாலையை நீ. சேதுபதி ஆசிரியச் சகோதரர்கள் 1936ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 16ஆம் திகதி நன்னாளில் இப்பாடசாலையை ஆரம்பித்தார். இப்பாட சாலைக்கு அவர்கள் கமலாம்பிகை வித்தியா சாலை எனப் பெயர் சூட்டினர். இந்நிகழ்வில் இதன் முதல் தலைமையாசிரியரான திரு. வை. கந்தையா அவர்களும், அவரின் தந்தையார் அ. வைத்திலிங்கம் அவர்களும் வா. பசுபதிப்பி ள்ளை அவர்களும் வருகைதந்திருந்தனர். இப்பாடசாலை மேற்குறித்த திகதியில் ஆரம்பிக்கப்பட்டதற்கான சான்றுகள் பாட சாலையில் 1990கள் வரையிருந்துள்ளன. அதாவது ஆரம்பத்தில் கட்டப்பட்ட கட்டி டத்தின் முகப்பில் இரண்டு யானைக்குட்டி யுடன், ஆரம்பித்த திகதியான 16.09.1936 எனப் பொறிக்கப்பட்டிருந்ததாகவும், பழைய கட்டிடங்கள் அகற்றி புதிய கட்டிடத்தினை நிர்மாணித்தபோது அவை உடைக்கப்பட்டு விட்டதாகவும், அக்கால அதிபராகவிருந்த திரு. ந. இராசதுரை அவர்களும் இக்கால அதிபராகவிருக்கும் திரு. நா. நாகராசா அவர்களும் உறுதிப்படுத்துகின்றனர். கமலாம் பிகை வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்ட போது ஐந்துபிள்ளைகளுடனும் இரண்டு ஆசிரியர்களுடனும் ஆரம்பிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கமலாம்பிகை வித்தியாசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இதனருகே புங்குடுதீவு வடக்கு மடத்துவெளி அமெரிக்கன் மிசன் பாடசாலை ஒன்று செயற்பட்டு வந்தது. பாடசாலைகளை தேசியமயமாக்கும் 908ஆம் இலக்க சுவீகரிப்புச்சட்டத்தின் பிரகாரம் 01.04.1962ஆம் திகதி கமலாம்பிகை வித்தியாசாலை அரசுடைமையாக்கப்பட்டது. இப்பாடசாலையின் அருகேயிருந்த அமெரிக்கன்மிசன் பாடசாலையும் 1318ஆம் இலக்க சுவீகரிப்புச் சட்டத்தின் பிரகாரம் 15.06.1962ஆம் ஆண்டு அரசுடைமையாக்கப்பட்டது. 01.09.1962ஆம் திகதி முதல் இவ்விரு பாடசாலைகளும் ஒன்றாக இணைக்கப்பட்டு கமலாம்பிகை வித்தியாசாலையாக இயங்கிவருகின்றது. திரு. என். பசுபதிப்பிள்ளை அவர்கள் அதிபராகவிருந்த காலத்தில்தான் இவ்விணைப்பு நிகழ்ந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வித்தியாலயம் நிறுவப்பட்ட காலத்திலிருந்து கல்விச் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக வீறுநடைபோட்டு வருகின்றது. ஆரம்பகாலங்களில் ஆரம்பக்கல்வியினை போதித்துவந்த போதிலும் 1970களைத் தொடர்ந்து க.பொ.த. சாதாரணதர வகுப்பு வரை கற்பித்தல் செயற்பாட்டினை விரிவுபடுத்தி பல மாணவர்கள் உயர்கல்வி வாய்ப்பினைப் பெறுவதற்கும், பல்கலைக்கழகங்களில் நுழைவதற்கும் உயர்பதவி வகிப்பதற்கும் இப்பாடசாலை ஒரு படிக்கல்லாக இருந்து வருகின்றமை போற்றப்படத்தக்கது. சமூக விழிப்புணர்வு பெற்ற சமூகமாக இக்கிராமம் மிளிர்வதற்கு இப்பாடசாலை வழங்கிவந்த பங்களிப்பினை மறக்கமுடியாது. இவற்றிற்கு இப்பாடசாலையினை நிர்வகித்த அதிபர்கள், ஆசிரியர்களின் பங்களிப்பானது அளப்பரியது. அதிபர்களின் பெயர் விபரம் பின்வருமாறு.

**புங்குடுதீவு வடக்கு அமெரிக்கமிசன் பாடசாலை அதிபர்கள் :**

திரு. A. நல்லதம்பி
திரு. M. R. இராமநாதன்
திரு. N. I. நவரத்தினம்
திரு. A. D. தம்பையா
திரு. T. பொன்னையா
திரு. R. கந்தையா
திரு. V. கதிர்காமு (செல்லத்தம்பி)
திரு. R. J. நவரத்தினம்

இவர்கள் எவ்வெவ்காலங்களில் அதிபர்களாகவிருந்தனர் என்பது பற்றி பெற்றுக்கொள்ள முடியவில்லை.

**கமலாம்பிகை வித்தியாலய அதிபர்கள் :**

| | |
|---|---|
| திரு. V. கந்தையா | 16.09.1936 |
| திரு. S. மாணிக்கம் | |
| திரு. V. நாகமுத்து | |
| திரு. V. கணபதிப்பிள்ளை | |
| திரு. N. பசுபதிப்பிள்ளை | |
| திரு. K. இளையதம்பி | |
| திரு. R. துரையப்பா | |
| திரு. S. சொக்கலிங்கம் | |
| திரு. T. பொன்னையா | |
| திரு. ந. பசுபதிப்பிள்ளை | 11.03.1981 வரை |
| திரு.த. சிவகுரு | 12.03.1981 |
| | 18.03.1982 வரை |
| திரு. த. துரைசிங்கம் | 19.03.1982 |
| | 01.09.1982 வரை |
| திரு. க. தியாகராசா | 02.09.1982 |
| | 21.03.1983 வரை |
| (பதில் அதிபர் கடமை) | |
| திரு. க. பத்மநாதன் | 22.03.1983 |
| | 17.06.1985 வரை |
| திரு. த. சண்முகலிங்கம் | 18.06.1985 |
| | 01.09.1991 வரை |

| | |
|---|---|
| திரு. எம். மகேந்திரன் | 02.09.1991 |
| | 31.03.1996 வரை |
| திரு. ந. இராசதுரை | 01.04.1996 |
| | 09.09.2008 வரை |
| திரு. நா. நாகராசா | 10.09.2008 |

இலிருந்து கடமையாற்றி வருகின்றார்.

☛ ஆரம்பகாலங்களில் அதிபர்களாகக் கடமையாற்றியவர்கள் கடமைக் காலத்தினைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

**மாணவர் நிலை :**

16.09.1936ஆம் ஆண்டு இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டபோது 5 மாணவர்களும் இரண்டு ஆசிரியர்களுமே இருந்துள்ளனர். அதிபர் மற்றும் பெற்றோரின் விடாமுயற்சியின் விளைவாக 1975 ஆம் ஆண்டு 299மாணவர்களையும் 9 ஆசிரியர்களையும் கொண்டதாக வளர்ச்சி பெற்றிருந்தது. பாடசாலை இடம்பெயர்ந்த நிலையில் யாழ்ப்பாண ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் இயங்கியபோது 428 மாணவர்கள் கல்வி பயின்றதாக யாழ்ப்பாணக் கல்வித் திணைக்கள நிர்வாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்த வேறுபாடசாலை மாணர்களும் இணைக்கப்பட்டிருக்க வாய்ப்புண்டு. எனினும் 1993ஆம் ஆண்டு 142 மாணவர்களும் எட்டு ஆசிரியர்களும் கடமையாற்றியுள்ளனர் என் பாடசாலைக் குறிப்பேட்டில் குறித்துரைக்கப்பட்டுள்ளது. 1996ஆம் ஆண்டு மீண்டும் சொந்த இடத்தில் பாடசாலையை செயற்படுத்த ஆரம்பிக்கப்பட்ட போது 03.06.1996ஆம் திகதி 15 மாணவர்களே சமுகமளித்திருந்தனர். இது படிப்படியாக அதிகரித்து 01.07.1997ஆம் திகதியன்று 72 மாணவர்களையும் ஆறு ஆசிரியர்களையும் கொண்டதாக அதிகரிப்புத் தொடர்கின்றது. 26.09.1997ஆம் திகதியன்று 135 மாணவர்களையும் நான்கு ஆசிரியர்களையும் கொண்ட பாடசாலையாக அதிகரித்துள்ளது. இதனைத்தொடர்ந்து,

| | | | |
|---|---|---|---|
| 20.05.1999 - | 168 | மாணவர்கள் | - 7 ஆசிரியர்கள் |
| 27.04.2000 - | 162 | மாணவர்கள் | - 10 ஆசிரியர்கள் |
| 05.04.2001 - | 172 | மாணவர்கள் | - 9 ஆசிரியர்கள் |
| 10.01.2002 - | 161 | மாணவர்கள் | - 9 ஆசிரியர்கள் |
| 27.02.2003 - | 183 | மாணவர்கள் | - 5 ஆசிரியர்கள் |
| 10.02.2004 - | 177 | மாணவர்கள் | - 12 ஆசிரியர்கள் |

எனப் பாடசாலைக் குறிப்பேட்டில் (Log Book) தெரிவிக்கப்பட்டுள்ளது. 2009ஆம் ஆண்டு மே மாதம் வன்னிப்பிராந்தியத்தில் நிகழ்ந்த யுத்தம் முடிவுக்குவரவே இக்கிராமத்தைச் சார்ந்தவர்களின் உள்வரவின் விளைவாக மாணவர்கள் அதிகரித்திருந்தனர். 2011ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இப்பாடசாலையில் 175 மாணவர்களும் 13 ஆசிரியர்களும் கல்விச் செயற்பாட்டுடன் இணைந்திருந்தனர் என அதிபரால் தெரிவிக்கப்பட்டுள்ளது,

**பாடசாலையின் வளவாய்ப்புக்கள்.**

புங்குடுதீவுக் கிராமத்தின் நுழைவாயிலில் காமாட்சி அம்மனும் பாலசுப்பிரமணியமும் புடைசூழ்ந்து எழுந்தருளியிருக்கும் ஆலயத்தின் முன்னால் அமைந்திருக்கின்ற கமலாம்பிகை வித்தியாலயம் ஆரம்பத்தில் 1.5 ஏக்கர் காணியில் கட்டப்பட்டுள்ளது. இக்காணி தல்லைப்பற்று முருகன் ஆலயத்திற்குச் சொந்தமானது. ஆரம்பத்தில் கிடுகினால் வேயப்பட்ட கொட்டகையில் இயங்கியபோதிலும் காலப்போக்கில் உள்ளூர் பிரமுகர்களின் முயற்சியினாலும் அரசின் நிதி ஒதுக்கீட்டினாலும் நிரந்தரக்கட்டிடங்கள் அமைக்கப்பட்டு கல்விச் செயற்பாடு சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

1991ஆம் ஆண்டு புங்குடுதீவு மக்களும் கல்விச்சாலைகளும் இடம்பெயர வேண்டிய நிலையில் ஏறத்தாழ 5 ஆண்டுகள் பராமரிக்கப்படாத நிலையிலும் அழிவுற்ற அல்லது அப்புறப்படுத்தப்பட்ட நிலையில்

தளபாடங்கள், ஆவணங்கள் இருந்ததால் பாடசாலையின் வரலாற்று ஆவணங்களைத் தொலைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 02.06.1996ஆம் ஆண்டு பாடசாலையினை மீள ஆரம்பிக்கும் நோக்குடன் அதிபர் திரு. ந. இராதுரையும், திரு. நா. நாகராசாவும் வருகைதந்தபோது ஆவணங்கள், கோவைகள் இருக்கவில்லை எனவும், தளபாடங்களில் பெரும்பாலானவை அகற்றப்பட்ட நிலையில் காட்சியளித்தன எனவும் பாடசாலைக் குறிப்பேட்டில் குறித்து வைத்திருக்கின்றனர். எனவே பாடசாலையினை மீள ஆரம்பிப்பதில் பெரும் இடர்பாடுகள் காணப்பட்டன எனவும் காலப்போக்கில் படிப்படியாக அவை நிவர்த்தி செய்யப்பட்டன எனவும் தெரிவிக் கப்படுகின்றது.

பாடசாலையில் இடநெருக்கடி, விளையாட்டு மைதானம் இல்லாக்குறை, தொடர்ந்தவண்ணமிருந்த நிலையில் மடத்துவெளி பாலசுப்பிரமணிய தேவஸ்தான அறங்காவலர் வினாசித்தம்பி இராமநாதன் (VMR) என்பவர் பாடசாலைக்கு 66 பரப்புக் காணியினை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இந்நற்கருமத்தின் பெறுபேறாக பாடசாலை யின் வளவாய்ப்புக்கள் அதிகரிக்க வாய்ப் புள்ளது மட்டுமல்லாது சிறந்த விளையாட்டு மைதானமும் அமைய வாய்ப்புண்டு. அது மட்டுமல்லாது புங்குடுதீவில் இயங்கும் பாடசாலைகளில் பெரிய நிலப்பரப்பில் இயங்கும் பாடசாலை என்ற பெருமையும் இப்பாடசாலைக்குண்டு.

தற்போதைய நிலையில் புங்குடு தீவுக் கிராமத்தில் வாழ்ந்து வந்த வசதிபடைத் தவர்களின் வெளியிடப்பெயர்வினைத் தொடர்ந்து தற்போது வறுமைக்கோட்டுக் குக்கீழ் வாழும் மக்களின் பங்கு அதிகரித் துள்ளது. எனவே, இத்தகையவர்களின் குழந்தைகளின் கல்விச் செயற்பாட்டிற்கு புலம்பெயர்ந்தவர்களின் பங்களிப்பு அதிகம் தேவைப்படுகின்றது. இவற்றினை மனத்திலி ருத்தி இப்பாடசாலையின் வளவாய்ப்பினை மேம்படுத்துவதற்கும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்ந்துவரும் மக்களின் குழந்தைகளின் கல்வி முன்னேற்றத்திற்கான விழிப்புணர் வினையும் செயற்றிட்டங்களையும் முன்னெ டுக்கவேண்டிய கடமை புலம்பெயர்ந்தவர் களையும் சார்ந்தது என்பதை மனத்திலிருத்திச் செயற்படுவார்களாயின் புங்குதீவுக் கிராமத் தின் கல்விப்பாரம்பரியத்தை தக்கவைக்க முடியும் என நம்புகின்றேன்.



# புங்குடுதீவு - மீள்குடியேற்றமும், அபிவிருத்திச் சவால்களும்

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை,
வாழ்நாள் பேராசிரியர், முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணக்குடாநாடு 27இற்கு மேற்பட்ட குறுசிறு நடுத்தர நிலத்திணிவுகளால் உருவாக்கப்பட்டது. புங்குடுதீவு - பெருங்காட்டு - குறிச்சிக்காடு நிலப்பகுதி ஊரைதீவு, வரதீவு, கேரதீவு, நடுத்துருத்தி, குறிகட்டுவான், பல்லதீவு ஆகிய நிலத்துண்டுகளை உள்ளடக்கியதாகும். மாரி காலத்தில் அல்லது கடற்பெருக்குக் காலத்தில் மேற்குறிப்பிட்ட நிலத்திணிவுகள் தண்ணீரால் ஒன்றிலிருந்தொன்று பிரிக்கப்பட்டு தனித்தனி நிலத்திணிவுகளாகக் காட்சிதரும். கோடையில் நீர்வற்றி மேற்குறிப்பிட்ட நிலத்திணிவுகள் யாவும் ஒரு நிலத்திணிவாகக் காட்சி தரும். இதனால் மேலும் புங்குடுதீவு கடற்பரப்பில் கண்ணாப்பிட்டி, கண்ணாத்தீவு என குடியிருப்பற்ற இரு சிறு தீவுகள் இருக்கின்றன. இதனால் புங்குடுதீவு பல நிலத்திணிவுகளைக் கொண்டதொரு தீவாகும். இத்தீவின் மொத்த நிலப்பரப்பு 11.2 சதுர மைலாகும்.

இத்தீவின் தரைத்தோற்றம் பொதுவாக ஒரு சமதரையாக இருப்பினும் நுண்மட்டத்தில் சிறு உயர வேறுபாடுகளை இனங்காணலாம். இத்தீவின் கிழக்கு, தெற்கு, மேற்கு கரையோரப்பகுதிகள் உயரமான பகுதிகளாக உள்ளன. தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள வீராமலை 13 அடி உயரமுடையது. இதுவே இத்தீவின் மிகக்கூடிய உயரமான இடமாகும். இத்தீவின் நடுப்பகுதி நீர்தேங்கும் பள்ள நிலமாகவும் வடக்கு, வடமேற்குப்பகுதி ஒப்பீட்டளவில் உயரம் குறைந்த பகுதிகளாகவும் காணப்படுகின்றன.

இத்தீவின் வடிகாலமைப்பினை நோக்கின் தென்கிழக்கு உயர் நிலப்பகுதியிலிருந்து பருவகால சிற்றருவியான கள்ளியாறு வடமேற்காகச் சென்று கடல்நீரேரியை அடைகின்றது. கிழக்கு, மேற்கு, தெற்கு உயர் நிலங்களிலிருந்து மையப்பள்ளப் பிரதேசத்திற்கு வெள்ளநீர் வடிந்து கடனீரேரி நிறைந்ததும் மேலதிக நீர் மூன்று வழிகளால் வேலணைக்கடலை அடைகின்றது. நீர் செல்லும் மூன்று வாய்க்கால்கள் பின்வருமாறு: மடத்துவெளி - ஊரைதீவினைப் பிரிக்கும் மின்னியன் வாய்க்கால், ஊரைதீவு - கேரைதீவைப் பிரிக்கும் வாய்க்கால் (சோளகன்னோடை)? கேரைதீவு - இறுப்பிட்டியைப் பிரிக்கும் வாய்க்கால் (கள்ளியாறு). தற்பொழுது மடத்துவெளியிலிருந்து இறுப்பிட்டிவரை தடுப்பணை அமைக்கப்பட்டுள்ளதால் மழைநீர் மையப்பகுதியில் அமைந்துள்ள நீர்நிலையின் கொள்ளளவு அதிகரித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் காலவோட்டத்தில் தரைக்கீழ் நீரின் உவர்தன்மை குறைய வாய்ப்புண்டு. மேலும் வெட்டுக்குளம், தல்லமிக்குளம், நாவற்குளம், திகலைக்குளம், அடைகாத்த குளம், ஆம்பைக்குளம், நுணுக்கல் ஆகியன முக்கிய குளங்களாக இருக்கின்றன. கடனீரேரியிலும் குளங்களிலும் சேமிக்கப்படும் நீர்கால் நடைகளின் கோடைகால நீர்த்தேவையினைப் பூர்த்திசெய்யக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

புங்குடுதீவு சுண்ணாம்புக் கற்களினாலான பாறை அமைப்புக்களைக் கொண்டது. 1950களிற்கு முன்னர் மேட்டு நிலப்பரப்புக்களில் சுண்ணக்கற்கள் மேலரும்பிக் காணப்பட்டதுடன் நிலத்தில் பரவலாக கண்டக்கற்கள் காணப்படுகின்றன. சேர். வை.துரைசுவாமி நதி ஒதுக்கீட்டில் வேலணை - புங்குடுதீவு கடலூடாகப் பாதை அமைக்கப்பட்டபொழுது இப்பாதை அமைப்புக்குத்

தேவையான கற்களின் மிகக்கூடிய பங்கு புங்குடுதீவிலேயே பெறப்பட்டது. இதனால் மேலரும்பி இருந்த பாறைகளும் கற்களும் பரவிக்கிடந்த கண்டக்கற்களும் பாதை அமைப்பதற்கு எடுக்கப்பட்டது. இதனால் மேட்டுநிலங்கள் கற்களற்ற பூமியாக மாறின. அன்று, இன்று போல கல் ஒரு வளமாக மக்களால் கருதப்படவில்லை. வளவுகளில் காணப்பட்ட கற்களை வெளியில் எடுத்துக் கொண்டு போனால் போதும் என்றே கருதப் பட்டது. கற்களின் இருப்பு விஷஜந்துகளின் உள்ளார்ந்த இருப்பைக் காட்டி நின்றன. அன்று இத்தீவில் சுருட்டைப்பாம்புக் கடிக்கு உள்ளாவோர் தொகை அதிகமாக இருந்தது என்பது குறிப்பிடத் தக்கது. கல்வளம் தவிர கண்ணகை அம்மன் கோவிற் சூழல் மணல் வளம் கொண்ட பகுதியாக உள்ளது. எனினும் இதன் வளம் மிகவும் மட்டுப் படுத்தப் பட்டது.

இத்தீவில் சகல இடங்களிலும் தரைக் கீழ் நீர் மேலாக இருந்தாலும் இதன் உவர்த்தன்மை உயர்வாக இருக்கின்றது. இங்கு கோடை காலத்தில் கிணற்று நீரைப் பயன்படுத்தி ஆடைகளைக்கூடச் சிறப்பாகத் துவைக்க முடியாது. நீரின் உவர்த்தன்மை கூடுதலாக இருப்பதால் இந்நீரில் சவர்க்காரம் கரையாதளவிற்கு உப்புத்தன்மை காணப்படு கின்றது. நன்னீர், பெருங்காடு, கண்ணகை அம்மன் கோவிற்பகுதி மற்றும் குறிப்பிட்ட சில வயல்கள், கோயில்களை அண்டியும் காணப்படுகின்றன. புங்குடுதீவு மக்களின் குடிநீர்த்தேவையின் பெரும்பகுதி சாட்டியி லிருந்து பௌசர் மூலம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பெறப்படுகின்றது.

இத்தீவின் வானிலை, காலநிலை யாழ்ப்பாணக் குடாநாட்டுக் காலநிலையை ஓரளவு ஒத்திருக்கின்ற பொழுதும் பல வானிலைக் கூறுகளின் சாதகத்தன்மை குறைந்ததாகவே இருக்கின்றது. வெப்பநிலை உயர்வாகவும், மழைவீழ்ச்சி சற்றுக் குறை வாகவும், காற்று குறிப்பாக சோளக்காற்றின் தாக்கம் அதிகமாகவும் இருப்பதுடன் மடத்துவெளி, ஊரைதீவு, கேரைதீவு போன்ற பகுதிகள் ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் புழுதிப்புயலாலும் பாதிப்புக்குள்ளாகின்றன. மேலும் நெருக்கமான தாவரப் போர்வை இன்மை வரட்சிக்காலநிலைத் தன்மையை அதிகரிக்கின்றது. இங்கு நிலவும் காலநிலை யால் மக்கள் கடும் காய்வனவுக்குள்ளா கின்றனர். உயர்வெப்பத்தால், சோளகக் கடற் காற்றுக்களால் மக்கள் வியர்வை சிந்துவது அதிகமாகவும், காய்ந்து களைத்துப்போன வர்களாகவும் காட்சி தருகின்றனர். புங்குடு தீவில் வறள்நில வளரித்தாவரமும் சதுப்புநிலத் தாவரமும் முக்கியம் பெறுகின்றன. மேட்டு நிலங்களில் பனை, தென்னை முக்கிய மரங் களாகும். கடந்த மூன்று, நான்கு தசாப்தங் களாக மக்கள் முயற்சியினால் வேம்பு, மா, தென்னை மற்றும் பெரிய மரங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன. திறந்த காணிகளில் மெலிஞ்சி, ஈஞ்சு, இக்கிரி, பாக்கு வெட்டி, கற்றாளை, போன்றன முக்கிய செடிகொடிகளாகும்.

இத்தீவு நீண்ட கடற்கரையைக் கொண் டது. இதனது மேற்குக் கடற்கரை கற்பாறை களைக் கொண்ட ஆழமான கடற்கரையாகும். கழுதைப்பிட்டி, இறுப்பிட்டி, குறிகட்டுவான் துறைகள், இங்கேயே உள்ளன. தெற்குக் கடற்கரை மணற் பாங்காக குறிப்பாக கண்ணகை அம்மன் கோவிற் பகுதி மிகவும் வெள்ளை மணற் பாங்கான அழகான கடற் கரையாக இருக்கின்றது. கிழக்குக் கடற்கரை சிறு பாறைகளைக் கொண்டிருப்பதுடன் கடலும் ஆழம் குறைந்தது. வடக்குக் கடற் கரை சதுப்புக் கடற்கரையாக இருக்கின்றது. புங்குடுதீவின் சுற்றுப்புறக் கடல் சுமாரான மீன்வளம் கொண்டது. இங்கு ஏனைய தீவுகளில் இருப்பது போல் பாரம்பரிய பெரிய மீன்பிடிக் குடியிருப்புக்கள் இல்லை. ஒரு சில குடும்பங்களே அண்மைக்காலம் வரை மீன்பிடியில் ஈடுபட்டிருந்தன. இவர்கள் வேல ணையிலிருந்தோ அல்லது நயினாதீவி லிருந்தோ இடம்பெயர்ந்து இத்தொழிலில் ஈடுபட்டிருக்கலாம்.

இப்பிரதேசத்தின் குடித்தொகையை நோக்கும் போது *1981* ஆம் ஆண்டு கடைசியாக எடுத்த தேசிய குடிசனக் கணக்கெடுப் பின்படி *14622* மக்கள் வாழ்ந்தனர். *1991* ஆம் ஆண்டு முழுமையான இடப்பெயர்வுக்கு முன்னர் இங்கு *16500* மக்கள் இருந்திருக்கலாம் . இத்தொகையே புங்குடுதீவு வரலாற்றில் கூடுதலான மக்கள் தொகை எனலாம். *1991* ஆம் ஆண்டு முழுமையான இடப்பெயர்வு ஏற்பட்டபொழுதும் ஒருசில குடும்பங்கள் இடம்பெயராமல் நின்றமை குறிப்பிடத்தக் கது. *1996* ஏப்ரலில் இருந்து மீள்குடியேற்றம் படிப்படியாக ஏற்பட்டு இன்று இத்தீவில் *5000* மக்கள் வரை இருக்கின்றனர். எனினும் *15* வருட கால மீள்குடியேற்ற செயற்பாட்டிற்கு இத்தொகை சிறிதாகவே உள்ளது. *1981* ஆம் ஆண்டு இருந்த மக்கள் தொகைக்கு இன்று இருக்கும் தொகை அதனின் மூன்றிலொன் றாகும். அட்டவணை *1* புங்குடுதீவின் குடிசனத்தொகை வளர்ச்சியைக் காட்டுகின் றது.

| ஆண்டு | குடித் தொகை | இடைப்பட்ட மாற்றம் எண்ணிக்கையில் | இடைப்பட்ட மாற்றம் விகிதத்தில் |
|---|---|---|---|
| 1824 | 1802 | | |
| 1871 | 3966 | +2164 | +12.0 |
| 1891 | 4098 | +132 | +3.3 |
| 1901 | 5201 | +1103 | +26.6 |
| 1911 | 5188 | -13 | - 0.2 |
| 1921 | 5888 | +700 | + 13.5 |
| 1946 | 9149 | +3261 | + 55.4 |
| 1953 | 9773 | +624 | + 6.8 |
| 1963 | 12028 | +2255 | + 23.0 |
| 1971 | 13766 | +1738 | + 14.4 |
| 1981 | 14622 | +856 | + 6.2 |
| 1991 | 16500 | +1878 | 12.8 |
| 2001 | 2500 | -14000 | - 84.8 |
| 2011 | 5000 | +2500 | + 100 |

மூலம் : குடிசனக் கணிப்புக்கள்

* பிரதேச செயலகத்தரவுகளிலிருந்து

அண்ணளவாகக் கணிக்கப்பட்டது.

இத்தீவில் மேற்கொள்ளப்பட்ட எல் லாக் குடிசனக்கணிப்புக்களிலும் பெண்கள் ஆண்களிலும் பார்க்க அதிகமாக இருந்துள்ள னர். உதாரணமாக *1963* இல் *5430* ஆண்களும் *6598* பெண்களும் இருந்துள்ளனர். இதே போல் *1971* இல் *6085* ஆண்களும் *7673* பெண் களும் இருந்துள்ளனர். தற்பொழுதும் பெண் களே ஆண்களிலும் பார்க்கக் கூடுதலாக இருக்கின்றனர். ஆண்கள் தொழில் நிமித்தம் பிற இடங்களில் இருப்பது இவ்வேறு பாட்டை அதிகமாகக் காட்டுகின்றது.

*1991* இல் ஏற்பட்ட இடப்பெயர்வின் மூலம் புங்குடுதீவு மக்கள் தொகையை இழந்ததுடன் அதன் பின்னர் ஏற்பட்ட பல் வேறு சமூக - பொருளாதார மாற்றங்களால் இடம்பெயர்ந்தவர்களில் பெரும் பகுதியினர் புங்குடுதீவில் மீளக்குடியமரவில்லை. இடப் பெயர்வுக்காலம் (*1991-1996*) *5* வருடங் களிற்கு மேலாக இருந்ததனால், பலர் புதிய வாழ்வை அமைத்துக்கொண்டனர். இடப் பெயர்வுக் காலம் நீடித்ததன் காரணமாக மீளவும் குடியேறலாமா என்ற ஐயப்பாட்டி னால் புதிய இடங்களில் குடியேற முனைந்த னர். மக்கள் மத்தியில் சர்வதேச ரீதியாக ஏற்பட்ட இடப்பெயர்வு மிகவும் காத்திரமா னது. வெளிநாடு சென்றோர் தங்கள் உற்றார், உறவினர்களின் அவல நிலையைத் தீர்ப்பதற் கும் அவர்களைத் தங்களது இடங்களுக்கு வரவழைப்பதற்கும் மிகவும் காத்திரமான உதவிகளைச் செய்தனர். *1980*களிலும் சர்வதேச இடப்பெயர்வுச் செயற்பாடுகளில் இன்றைய கடின போக்குக்களும் இறுக்கங் களும் இருக்கவில்லை என்பது கவனிக்கத் தக்கது. பிரயாண முகவர்களின் செயற்பாடு கள் வெற்றிகரமாகவும் குறைந்த செலவில் செல்லக்கூடியதாகவும் இருந்ததால் புங்குடு தீவு மக்கள் மாத்திரமல்லாது ஏனைய பிரதேசத் தமிழ் மக்களும் மேற்கு நாடுகளுக் குச் சென்றுள்ளனர். புங்குடுதீவு மக்களில் ஒரு தொகுதியினர் மிகவும் வறிய அடிமட்ட மக்கள் மாத்திரமே வன்னிப்பகுதியில்

குடியேறி 2009 இல் மீளவும் புங்குடுதீவுக்கு வந்து, அதிலும் ஒரு பகுதியினர் அண்மையில் மீளவும் வன்னிக்குச் சென்றுள்ளனர் என அறியக்கிடக்கின்றது.

இத்தீவைப் பிறப்பிடமாக அல்லது தந்தை அல்லது பேரனை அல்லது பூட்டன் தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட மக்கள் தொகை இன்று உலகில் அண்ணளவாக 25000 பேர் வரை இருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இன்று இவர்களுள் அண்ணளவாக 5000 பேர் புங்குடுதீவிலும் 5000 பேர் பெரிய யாழ்ப்பாணத்திலும், குடாநாட்டிலும் 5000 பேர் வன்னி, வவுனியா, கொழும்பிலும், 5000 பேர் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் 5000 பேர் கனடா, ஐக்கிய அமெரிக்காவிலும் வாழ்வதாக அறியக்கிடக்கின்றது. இதனால் புங்குடுதீவு மக்கள் இன்று தேசிய, சர்வதேசக் குடிகளாக மாறிவிட்டார்கள். இவர்கள் பல் வேறு நாடுகளிற்கு இடம்பெயர்ந்து போனாலும் இவர்களிடையே காணப்படும் இறுக்கமான ஊர்ப்பற்று, ஒற்றுமை, விவாக உறவுகள் ஆகியன புங்குடுதீவின் மண்வாசனையையும் தனித்துவத்தையும் தக்க வைத்துள்ளன. மேலும் வெளிநாடு வாழ் புங்குடுதீவு மக்கள், புங்குடுதீவுக் கிராமத்தினதும் மக்களினதும் மேம்பாட்டிற்குப் பற்பல உதவிகளைச் செய்து வருகின்றனர்.

இக் கிராமம் 1960 களிற்கு முன்னர் கிழக்கு மேற்கு என இரு கிராமப் பிரிவுகளாகவும் 1980களில் கிழக்கு, மேற்கு, மத்தி என மூன்று கிராமசேவகர் பிரிவுகளாகவும் இன்று 12 கிராம அதிகாரிகள் பிரிவுகளாகவும் இருக்கின்றன. இத்தீவு மேலெழுந்தவாரியாக ஒரு தீவாக இருந்தாலும் இத்தீவிற்குள் 26 குடியிருப்புக்கள் இனங்காணப் பட்டுள்ளன. இக்குடியிருப்புக்கள் நுண் மட்டத்தில் சமூக பொருளாதார பௌதிக நிலைகளில் தனித்துவம் மிக்கதாகவும் அவைகளுக்கேயுரிய சிறப்பையும் பிரச்சினைகளையும் கொண்டனவாகவும் உள்ளன. உதாரணமாக ஊரைதீவு, வல்லவன், பெருங்காடு, இறுபிட்டி, மடத்து வெளி, நடுவுதுருத்தி, குறிகட்டுவான் போன்ற குடியிருப்புக்களை நோக்கின் இவை புங்குடு தீவின் ஒரு பகுதியாக இருப்பினும் நுண் மட்டத்தில் இவற்றுக்கிடையே வேறுபாடுகள் இருப்பதை அறிய முடியும். இதனால் ஒரு பக்கத்தில் புங்குடுதீவுக்கென அபிவிருத்தித் திட்டமும், இன்னொரு பக்கத்தில் 26 குடியிருப்புக்களின் மேம்பாட்டுக்கென அபிவிருத்தித்திட்டமும் இங்கு தேவைப்படுகின்றன.

இப்பிரதேசத்தின் பொருளாதார வரலாற்றை மூன்று காலமாகப் பிரித்து நோக்கலாம்.

1. 1954 இல் வேலணை - புங்குடுதீவு கடல்வழிப்பாதை அமைப்பதற்கு முந்திய காலப் பொருளாதாரப் பண்பு.
2. 1954 - 1994 இற்கிடைப்பட்ட காலப் பொருளாதாரப் பண்பு.
3. 1996 மீள்குடியேற்றத்திற்குப் பின்னைய காலப் பொருளாதாரப் பண்பு.

1954இற்கு முன்பு இத்தீவின் பொருளாதாரம் நலிந்த விவசாயச் செய்கையிலும், சிறிதளவு வர்த்தகச் செயற்பாட்டிலுமே தங்கியிருந்தது. மக்கள் மத்தியில் வறுமை நிலை உயர்வாகவும், வாழ்க்கைத்தரம் மிகவும் குறைவாகவும் இருந்தது. மேலும் உணவுப் பாதுகாப்பு நிலை நெருக்கடியாகவும், ஊட்டச்சத்து நிலை மிகவும் குறைவாகவே இருந்ததெனலாம். தாழ்நிலப் பகுதிகளில் நெற்செய்கையும் மேட்டு நிலங்களில் சாமை, குரக்கன் மற்றும் பல்வேறு வகையான சிறு தானியங்களும் உழுந்தும் பயரிடப்பட்டன. சிறுபரப்பில் புகையிலைச் செய்கையும் காய்கறிச் செய்கையும் இடம்பெற்றன. 1940 களுக்கு முன்னர் பனைசார் உணவுப பொருட்கள் இக்கிராமத்தின் உணவில் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன. புங்குடுதீவில் பாரம்பரிய மீன்பிடிக்கிராமங்கள் இல்லாது இருந்தபொழுதும் கரையோரப்பகுதியில்

வாழ்ந்த மக்கள் சிறு மீன்பிடி நுட்பங்களைப் பயன்படுத்தி சூள், தூண்டில், கரப்பு, மற்றும் வார் வாளி மற்றும் எளிமையான பாரம்பரிய முறைகள் மீன்பிடித்துத் தங்கள் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்துள்ளனர். உள்ளூரில் முடிந்தளவு பல்வகையான உணவு உற்பத்தியைச் செய்யவேண்டிய நிலைக்குள் இருந்தனர். 1942 ஆம் ஆண்டு நாடு தழுவிய ரீதியில் கூப்பன் அரிசி பொது விநியோகத் திட்ட மூலம் கொடுக்கப்பட்ட பொழுது மக்கள் தங்களுடைய உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யக்கூடியதான நிலை ஏற்பட்டது. 1942 இற்கு பின்னர் உள்ளூர் உணவு உற்பத்தி படிப்படியாக புதிய நிலைப்பாட்டால் குறையத் தொடங்கியது. 1950களிற்கு முன்னர் புங்குடுதீவு மக்களில் ஒரு சிறு தொகையினர் தென்னிலங்கையிலும் மற்றும் யாழ்ப்பாண நகரிலும் வர்த்தகச் செயற்பாட்டில் சிறப்புற்றிருந்தனர். இதேபோல ஒரு குறிப்பிடத்தக்க கல்விகற்ற சில குடும்பங்கள் இலங்கையிலும் மலேசியாவிலும் அரச, தனியார் நிறுவனங்களில் உயர் சேவைத் தொழில்களில் ஈடுபட்டனர். எண்ணிக்கையில் பின்னைய இரண்டு பிரிவினர்கள், குறைவாக இருப்பினும் உழைப்பு அடிப்படையில் இக் கிராமத்தின் பொருளாதாரச் செயற்பாட்டிற்கு இவர்களின் பங்களிப்பு காத்திரமாக இருந்தது. இவர்களாலேயே புங்குடுதீவில் பல ஆலயங்கள், பாடசாலைகள் நிறுவப்பட்டன.

1954 இல் புங்குடுதீவு - வேலணை கடலூடானப்பாதை நிறைவுபெற்றதுடன் 1961இல் பண்ணைக் கடலூடான பாதை பூர்த்திசெய்யப்பட்டதனால், புங்குடுதீவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு தரைப்பாதை வழியாக ஒரு மணித்தியாலயத்திற்குள்ளேயே பயணிக்கும் வசதி ஏற்பட்டது. போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட துரித முன்னேற்றம் பொருளாதார சமூக முன்னேற்றத்தை வேகப்படுத்தியது. இதனால் சமூக நிமித்தம் பிற ஊர்களிற்குச் செல்லும் போக்கும் அதிகரித்தது. இதனால் இலங்கையின் பல்வேறு நகர்களில் தங்களது வர்த்தக நடிவடிக்கைகளை விரிவுபடுத்தலாயினர். குறிப்பாக உணவு வியாபாரத்தில் (சோற்றுக்கடை) ஈடுபடலாயினர். உணவு வியாபாரம் மிகக்குறைந்த முதலுடன் ஆரம்பிக்கக்கூடிய ஒன்றாகும். மேலும் குறுகிய காலத்தில் இலாபத்தைப் பெறக்கூடியதாக இருந்ததால் புங்குடுதீவைச் சேர்ந்த பலர் இத்தொழிலில் ஈடுபடலாயினர். ஏற்கனவே வர்த்தகர்களாக இருந்தவர்கள் தங்களது வியாபாரத்தை மேலும் விஸ்தரிக்கலாயினர். தென்னிலங்கை புங்குடுதீவு வியாபாரிகளை இவர்களின் பெயருடன் அவர்கள் தொழில் செய்யும் இடத்தின் பெயரை முன்வைத்து அழைப்பதுண்டு. உதாரணமாக பொரளை நாகலிங்கம், மகோ சின்னத்தம்பி, கொழும்பு குளியாப்பிட்டி அப்பாக்குட்டி, பதுளை வைத்திலிங்கம் இவ்வாறு பல வியாபாரிகள் சிங்கள ஊர்களுடன் தொடர்புபடுத்தப்பட்டு அழைக்கலாயினர். 1950-1970 களின் ஆரம்பத்தில் சிறு வர்த்தக முயற்சி தொடங்கிப் பின் பெரிய வர்த்தகர்களாக வளர்ச்சி கண்டனர். எனினும் 1977, 1983 களில் நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரங்களால் தென்னிலங்கை புங்குடுதீவு வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டும் தொடர்ந்தும் வர்த்தக செயற்பாட்டைப் முன்னெடுப்பதற்கு தகுந்த பாதுகாப்பு சூழ்நிலை இல்லாததால் தங்களது வர்த்தகச் செயற்பாட்டைப் பொதுவாக வடக்கு மாகாணத்திற்கும், கொழும்பிற்குள்ளும் மட்டுப்படுத்தினர். மேலும் வியாபார முயற்சிகளிலிருந்து விலகித் தங்களது பிள்ளைகளை வெளிநாடுகளிற்கு அனுப்பத் தொடங்கினர். இதனால் புங்குடுதீவு மக்களின் நீண்ட வியாபாரப் பாரம்பரியம் இலங்கையில் படிப்படியாகக் குறையத் தொடங்கியது. புங்குடுதீவில் மரவேலையில் குறிப்பாக பனைமர வேலையில் பெரியதொரு சமூகம் ஈடுபட்டுள்ளது. இவர்கள் இங்கு மாத்திரமல்லாமல் ஏனைய தீவுகளிலும் யாழ்ப்பாணப் பகுதிகளிலும் பனைமரவேலைத்தொழிலில் ஈடுபட்டு வருமானத்தைத் தேடினார். இதேபோல் யாழ்ப்பாண நகரில் பல்வேறு

சேவைத்தொழில்களில் புங்குடுதீவைச் சேர்ந்தவர்கள் பெரும் எண்ணிக்கையில் ஈடுபட்டு இருந்தனர். இவர்கள் மூலம் இக்கிராமம் குறப்பிடத்தக்க வருவாயைப் பெற்றது.

1960 களில் புங்குடுதீவுப் பிள்ளைகள் கல்வித்தேடலில் குறிப்பிடத்தக்க விழிப் புணர்வு பெற்று கல்வியில் ஈடுபாடு காட்டத்தொடங்கினர். குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான புங்குடுதீவுப் பிள்ளைகள் யாழ்ப்பாணப் பிரபல பாடசாலைகளிலும், வேலணை மத்திய கல்லூரிகளிலும் இணைந்து கல்வி கற்றனர். புங்குடுதீவு மகாவித்தியாலயம், சுப்பிரமணியம் மகளிர் வித்தியாலயம் ஆகியன சிறந்த கல்விப்பணி ஆற்றத் தொடங்கின. இத்தகைய கல்வி வளர்ச்சியால் குறிப்பிடத்தக்க மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்கும் தெரிவாகினர். மேலும் அரச சேவையிலும் எழுதுவினைஞர்களாக, ஆசிரியர்களாக குறிப்பிடத்தக்க எண்ணிக் கையில் இணைந்தனர். இச்செயற்பாடுகளால் 1970, 1980 களில் புங்குடுதீவில் ஒரு சிறு மத்தியதர வகுப்பினர் உருவாக்கம் பெற்றனர். இந்த மத்தியதர உருவாக்கம் கிராமத்தின் சமூக பொருளாதாரத்தை முன்னெடுப்பதுடன் உள்ளூர்த் தலைமைத்துவப் பண்புகளையும் முன்னெடுத்தது. கிராமத்தின் பொருளாதாரம் வர்த்தகத்தாலும், சேவைத்தொழில்களாலும் வலுப்பெறலாயிற்று. எனினும் 1950 களிற்கும் முன்னர் முக்கியத்துவம் பெற்றிருந்த விவசாயப் பொருளாதாரம் பல்வேறு சமூக, பொருளாதாரக் காரணிகளால் மிகவும் நலிவுற்று கிராமப் பொருளாதாரத்தில் இதன் பங்களிப்பு வேலைவாய்ப்பிலோ அல்லது வருமானம் ஈட்டலிலோ மிகவும் குறை வாகியது. எனினும் மனைப்பொருளாதாரம் மூலம் பனை தென்னை மற்றும் வீட்டுத் தோட்டங்களால் கிடைக்கும் வருமானம் அதிகரித்தது. காரணம் 1970, 1980 களில் ஓலை வீடுகள் கல்வீடாக மாறியதுடன் வளவுகள் கொங்கிறீற் மதில்களைக் கொண்டும் அறுக்கையாக்கப்பட்டும் பல வகையான வான்பயிர்கள் நடப்பட்டன. 1970, 1980களில் இக்கிராம மக்கள் மத்தியில் சமூக - பொருளாதார நிலைகளில் மேம்பட வேண்டும் என்ற புதிய உத்வேகம் காணப் பட்டது. இதற்குக் குறிப்பாகத் தமிழாசிரியர் சமூகம் காத்திரமான பங்களிப்பை நல்கியது. உணவுக் கூப்பன் மூலம் வேலையாளுக்கு கிழமைக்கு 2 கொத்து அரிசியும், சாதாரண மக்களுக்கு கிழமைக்கு 1 1/2 கொத்து அரிசியும், பிள்ளைகளுக்கு கிழமைக்கு 1 கொத்து அரிசியும், குழந்தைகளுக்கு கிழ மைக்கு 1/2 கொத்து அரிசியும் வழங்கப் பட்டது. புங்குடுதீவு வளர்ச்சியில் வட இலங்கை சர்வோதயத்தின் பங்களிப்புகளும் குறிப்பிடத் தக்கது. இதுபோல் உலக உணவுத் திட்டத்தின் கீழ் சில வேலைகள் முன்னெடுக் கப்பட்டன.

1991 ஆம் ஆண்டு யுத்தத்தினால் இக்கிராமத் திலிருந்து, மக்கள் யாவரும் இடம்பெயர்ந்து 5 வருடங்களின் பின்பே கிராமத்திற்கு மீளவும் திரும்பியபொழுது கிராமம் பல்துறைகளிலும் முழுமையான அழிவு நிலைக்கு வந்துவிட்டது. வயதில் குறைந்த பெரும் எண்ணிக்கையான வீடுகள் உடைந்தும் இழந்தும் பாழடிக்கப்பட்டும், வளவுகள் காடு பற்றியும் காணப்பட்டன. இவ்வீடுகளுக்குச் சொந்தமான மத்திய மேல் வகுப்பு மக்களே பெரும்பகுதியினர் வெளி நாடுகளுக்குச் சென்றுள்ளனர். இன்னொரு பகுதியினர் கொழும்பிலும் யாழ்ப்பாணத்தி லும் புது வாழ்க்கையை அமைத்துவிட்டனர். இச்சூழ்நிலையில் மிகவும் வறிய மக்கள் மற்றும் ஒரு சில அதீத ஊர்ப்பற்று, பொருட் பற்று மிக்கவர்களே ஊர் திரும்பினர். கிராமத் தின் பௌதிக உட்கட்டமைப்புக்கள் சமூக பொருளாதாரக் கட்டமைப்புக்கள் யாவும் செயலிழந்த நிலையில் காணப்பட்டன. இதனால் வறிய மக்கள் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியை நாடவேண்டிய

தாயிற்று. மக்களின் வாழ்வு நிவாரணத்தை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப் பட்டது. மக்கள் - வாழ்வாதாரங்களை விருத்தி செய்வதில் பெரும் அக்கறை காட்ட வில்லை. ஏற்கனவே பாதிப்பிற்குள்ளான கிராமக்கட்டமைப்பை மேலும் பலவீனப் படுத்தும் முயற்சியில் சமூக விரோத சக்திகள் வேகமாக செயற்பட்டன. மக்கள் இல்லாத வளவுகளில் தேங்காய், விறகு மற்றும் கதவு, நிலை, ஓடு போன்றவற்றை கழற்றி விற்றுப் பணம் தேடலாயினர். யுத்தத்தால் அழிந்த வீடுகளிலும் பார்க்க சமூகவிரோதிகளால் அழிக்கப்பட்ட வீடுகள் மற்றும் பௌதிக உட்கட்டமைப்புக்கள் அதிகம் எனலாம்.

1996 இலிருந்து மீள்குடியேற்றம் சிறிதுசிறிதாக அதிகரிக்க அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் வாழ்வாதார நுண்திட்டங்கள் பல முன்னெடுக்கப்பட் டுள்ளன. உள்ளூர் வளங்கள் சிறிதளவு விருத்தி செய்யப்பட்டுள்ளன. இன்று சிறு தொழில் முயற்சிகள், விவசாயம், பனைசார் தொழில் கள் சிறிதளவில் இடம்பெற்று வருகின்றன. மீன்பிடித்தொழில் 1996 இற்குப் பின்னர் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்று வருகிறது. உள்ளூர் மீனவர்களும், வெளியூர் மீனவர்களும் புங்குடுதீவுக் கடலில் தொழில் புரிவது கவனிக்கத்தக்கது. மேலும் புங்குடு தீவிலிருந்து யாழ்நகரில் சேவைத்தொழில் களில் ஈடுபடுவோர் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கின்றது. இவை புங்குடுதீவு பொருளாதாரச் செயற்பாட்டை இயக்குவ தற்கு உதவியாக அமைகின்றது.

புங்குடுதீவின் எதிர்கால வளர்ச்சிக்குப் பின்வரும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். இத்திட்டங்கள் இக்கிராமத்தின் இயற்கைவளம், பௌதிக வளம், மனிதவளம், நிதிவளம், சமூகவளத்தை ஆதாரமாகக் கொண்டதாக அமையவேண்டும்.

1. புங்குடுதீவில் உள்ள வீட்டு வளம் மேலும் அழிக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும். இவ்வீடுகளின் எண்ணிக்கை யில் கூடிய விகிதம் 1970களின் பின்னர் கட்டப்பட்டவை. இதனால் இவ்வீடுகள் இன்னும் பல ஆண்டுகள் பாவிக்க முடியும். இன்றைய கட்டிடப்பொருட் கள், கூலி விலையில் இவ்வீடுகள் எல்லாம் பல இலட்சம் பெறுமதியானவை. இத்தகைய பெறுமதியான வீடுகள் வீணே அழிவது ஒரு பெரிய தேசிய விரயமாகும். இதனால் உரிமையாளர்கள் வீடுகளைத் திருத்தவேண்டும் அல்லது அவர்கள் அதைப் பிறருக்கு வாடகைக்குக் கொடுக் கலாம் அல்லது விற்கலாம். அல்லது திருத்தி ஓய்வு வாசஸ்தலமாக மாற்றலாம். சம்பந்தப்பட்ட அரச, சிவில் சமூகப் பிரமுகர்கள், புங்குடுதீவு வீட்டு வளத்தை காப்பாற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதேபோல் தனியார் வளவு கள் வேலி அடைத்து பாதுகாக்கப்பட வேண்டும்.
2. புங்குடுதீவு முழுவதும் ஒருங்கிணைந்த குழாய் மூலம் ஒவ்வொரு வீட்டுக்கும் நன்னீர் கிடைக்க வழி செய்யப்பட வேண்டும். இதனை இரணைமடுத் திட்டத்தின் மூலமோ அல்லது சாட்டிநீர் திட்டத்தின் மூலமோ நிறைவு செய்ய லாம். மக்களுக்கு போதியளவு நன்னீர் கிடைக்கச் செய்வது அபிவிருத்திக்கு முன் நிபந்தனையாகும். இது போல் சகல குடியிருப்புகளுக்கு முழுநேர மின்சாரம் கிடைக்க வழிசமைக்க வேண்டும்.
3. கள்ளியாறு நுண்வடிகால் பிரதேசத்தின் நீர்வளம் நிலவளம் ஒருங்கிணைந்த முறையில் விருத்தி செய்யப்பட வேண்டும்.
4. புங்குடுதீவில் தாவரப்போர்வையை அதிகரித்துப் பயன்தரும் வீட்டுத் தோட்டத்தின் மூலம் வருமானத்தைப் பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பனை, தென்னை, வேம்பு மற்றும் பழம் தரும் மரங்கள் அல்லது மரப்பலகை பெறக்கூடிய தேக்கு போன்ற மரங்கள்

நாட்டப்பட வேண்டும்.

5. புங்குடுதீவின் விவசாயத்தைக் குறிப்பாக கைவிடப்பட்டுள்ள நெற்பயிர்ச் செய்கையை விஞ்ஞான ரீதியில் மீள்விருத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6. இத்தீவின் பனைவளம் இன்னும் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. பனைவளம் மூலம் செல்வம், தொழில் பெருக்க கவர்ச்சிகரமான அபிவிருத்தித் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

7. புங்குடுதீவின் மீன்பிடிச் செயற்பாட்டை விருத்திசெய்வதுடன் தெற்குக் கடற்கரையில் மீன்பிடித்துறைமுகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

8. புங்குடுதீவு மக்கள் மத்தியில் சமூக மூலதனப் பண்புகள் உயர்வாக இருப்பினும், இன்று புங்குடுதீவில் வாழும் மக்களின் சமூக மூலதனப் பண்புகள் மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

9. புங்குடுதீவில் பெண்களை அபிவிருத்தியில் துடிப்பாகப் பங்குபற்ற வைக்கவும், உள்ளார்ந்த ஆற்றலை வெளிக்கொணரவும் சிறப்பான வலுவூட்டற் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

10. பெருங்காட்டுச் சந்தியை சிறுநகரமாக விருத்திசெய்யப்பட வேண்டும். இங்கு புங்குடுதீவுக்கான பிரதேச செயலகம் மற்றும் தேவையான அரச காரியாலயங்கள் வங்கிகள், வர்த்தக நிறுவனங்கள் அமைய வழிசமைக்க வேண்டும். இந் நகரின் வளர்ச்சி இத்தீவின் வளர்ச்சிக்கு உந்து சக்தியாக மாற்ற வேண்டும்.

11. புங்குடுதீவில் இயங்கிய 15 பாடசாலைகளும் மீளவும் இயங்க வைப்பதுடன் மகாவித்தியாலயம், கமலாம்பிகை கனிஷ்ட மகா வித்தியாலயம், சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம், சித்தி விநாயகர் வித்தியாலயம் ஆகியவற்றை இன்றைய கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் விருத்தி செய்யப்படவேண்டும். இன்று புங்குடு தீவில் கல்வியில் காணப்படும் தொய்வு நிலையை நீக்க நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். இதுபோல் சுகாதாரத்துறையும் மேம்படுத்தப்பட வேண்டும். வைத்தியசாலையும் முழுமையாக இயங்க வேண்டும்.

12. யாழ்ப்பாணம் குறிகட்டுவான் பாதை அகலமாக்கப்பட்டு காப்பெற் பாதையாக மாற்றப்படவேண்டும். இதன் மூலம் புங்குடுதீவிலிருந்து யாழ்ப்பாண நகருக்கு அரை மணித்தியாலத்திற்குள் பயணிக்க முடியும். இதன் மூலம் தூரத்திலிருக்கின்றோம் என்ற உணர்வு குறைந்து நகரில் வேலைசெய்தாலும் புங்குடுதீவில் வாழலாம் என்ற நிலை ஏற்படும்.

13. உள்ளூரில் வேலை வாய்ப்பைப் பெருக்கக் கூடிய குறு சிறு நடுத்தர முயற்சிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். இதன் மூலம் வாழ்வாதாரத்தைப் பெருக்குவதுடன் தற்சார்பு நிலையை மேம்படுத்தலாம்.

14. குறிகட்டுவான் இறுபிட்டி ஆகிய இரண்டு இடங்களுக்கும் யாழ் நகரிலிருந்து தனித்தனியான இ.போ.ச., தனியார் பஸ் சேவைகள் இடம்பெற வேண்டும். இதனால் இறுப்பிட்டி மக்கள் பெரும் நன்மை பெறுவர்.

15. புங்குடுதீவு சுற்றுலாத்துறை வளர்ச்சிக்குப் பல சாதகமான பௌதிக சூழ்நிலைகளைக் கொண்டுள்ளது. இன்று சுற்றுலாத்துறைக்கு அல்லது ஹொட்டேல்களுக்குப் போத்தல் நீரே பயன்படுத்துவதால் முன்னர் போல் பெருமளவு குடிநீர் உள்ளூரிலிருந்து பெறவேண்டியதில்லை. ஏனைய தேவைகளுக்கு உள்ளூர் நீர் பயன்படுத்த முடியும்.

16. புங்குடுதீவில் புகழ்பெற்ற சைவத் தலங்கள், திருவிழா நடைபெறும் பெரிய கோயில்கள் சிறு கோவில்கள் பல இருக்கின்றன. இக்கோயில்களின் சிறந்த செயற்பாட்டை இன்று புங்குடுதீவில்

வாழும் மக்களால் மாத்திரம் சரியாக முன்னெடுக்க முடியாது. இக்கோயில் களின் திருப்பணி வேலைகளையும் மற்றும் நாளாந்த செலவுகளையும், பிற நாடுகளிலும், கொழும்பில் யாழ்ப்பாணத் தில் வாழும் புங்குடுதீவு மக்களாலேயே கவனிக்க முடியும். இதனால் ஆலயங் களின் சிறந்த செயற்பாட்டுக்குப் பிறநாடு களில் வாழும் புங்குடுதீவு மக்களை கோயில் முகாமைத்துவத்துக்குள் நல்ல முறையில் உள்வாங்கப்படவேண்டும்.

ஒரு கிராமத்தில் அல்லது ஒரு பிரதேசத்தில் மக்கள் வாழ்வதற்கு இரு துறைகளில் அபிவிருத்தி காணப்படவேண்டும்.

1. வாழ்வதற்கான வாய்ப்பு வசதிகள் (Habitability)
2. நல்ல சமுதாயக் கூட்டமைப்பு - (Good Community Setup)

இதனால் புங்குடுதீவை விருத்தியாக்க வேண்டின், அங்கு மக்கள் வாழ்வதற்கான வாய்ப்பு வசதிகளையும் உருவாக்கி மற்றும் நல்ல சமுதாயக் கூட்டமைப்பை வளர்த் தெடுப்பின் மக்கள் துரிதமாக மீள் குடியேறு வர். நல்லதூரநோக்கு, நற்பணி, பொருத்த மான அபிவிருத்தித் தந்திரோபாயங்களைக் கடைப்பிடித்தால் நாம் விரும்பும் இலக்கு களை குறுகிய காலத்தில் அடைய முடியும். இதற்கு அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட வர்கள் எல்லோருடைய ஒத்துழைப்பும் மக்களின் ஒற்றுமையும் கடின உழைப்புமே முக்கியமாகத் தேவைப்படும் விடயங்களா

இறைவனுடைய திருவடிகளிலே தோய்ந்தின்புறுகிற ஒன்றேயல்லாமல் வேறெதுவும் வேண்டா. இந்த உலகப் பொருள்களுள் ஒன்றை நல்லதென்று எடுப்போமானால், அதனிலும் சிறந்த ஒன்றை இழந்துவிடவோ பெறாது கழியவோ வேண்டி வரலாம். அல்லது நாம் தெரிந்தெடுத்த பொருளே நமக்குத் தீமையும் தரலாம். எதை வேண்டாமென்கிறோமோ அஃதொன்றே நமக்குத் துன்பம் தராதது; நன்மை தருவது; பெருமுயற்சியின்றிக் கிடைப்பது; அல்லது தானே கிடைப்பதாகலாம். ஆயின் எதை வேண்டாமெனலாம்? நிலையற்ற பொருள்களில் தேவை காண்பது பயனற்றது.

- சுவாமி விபுலானந்தர்

# இயல்பூக்கங்களும் மாணவர் கல்வியும்

செல்வி வி. துஷாயினி, கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்.

இயல்பூக்கங்கள் இயற்கையாகவே மனிதனுக்குத் தரப் பட்டுள்ளவை. இவை ஹார்மி (Horme) எனப்படும். உயிர் உந்தலின் பல பிரிவுகளாகும். இதனால் ஏற்படும் நன்மையும் தீமையும் அவன் எப்படி வளர்க்கப்படுகிறான் என்பதில் தங்கியுள்ளது.

சிக்கல் மிகுந்த இயற்கையான நடத்தைக் கோலங்களை "இயல்பூக்கங்கள்" (Instincts) என்று மக்டூக்கல் போன்ற மனவியல் அறிஞர்கள் கருதுகின்றனர். இயல்பூக்கங்களின் வழியேதான் மனிதனின் சக்தி செயற்படுகிறது. மனிதனின் ஒழுக்கம், ஆளுமை ஆகியவற்றின் அடிப்படையும் இவையே. எனினும், மனிதனுடைய அறிவு, அனுபவம் பிறரிடமிருந்து கற்கும் திறன் என்பன அவனுடைய இயல்பூக்கச் செயற் பாட்டினை மாற்றியமைக்கின்றன. இயல் பூக்கச் செயல்களை அவனது நுண்ணறிவை நெறிப்படுத்துவதுடன் தீய செய்வினையைத் தரும் இயல்பூக்கங்களைத் தடை செய்கின்றன. இயல்பூக்கச் செயல் ஒவ்வொன்றும் மூன்று கூறுகளைக் கொண்டது.

1. முதற்கூறு அறிவுசார் கூறு (Cognitive Elimination) எதிரில் இருக்கும் ஒன்றை அறியும் நிலையே இதன் முதல் நிலை.
2. இந்த அறிவு குறிப்பிட்ட ஒரு மனவெழுச் சியை உண்டாக்குகின்றது. இதுவே அவ்வியல்பூக்கத்தின் மூலம் (Core).
3. முயற்சிசார் கூறு: இது ஒருவனைக் குறிப்பிட்ட வகையில் செயற்பட உதவுகிறது. இயல்பூக்கங்கள் சிலசமயம் செயல் வடிவம் பெறாதும் போகலாம். ஆனால், அந்த மனநிலை உள்ள வரை அவன் அதனால் உந்தப்படுவதாகவே நினைக்க வேண்டும்.

## இயல்பூக்கங்களின் எண்ணிக்கை

14 வகை இயல்பூக்கங்கள் மனிதனிடம் உள்ளதாக மக்டூக்கல் கூறுகிறார். இவை முறையே

1. மாவூக்கம் (Parentalinstinct)
2. பேரூக்கம் (Pugnacity)
3. ஆராய்வூக்கம் (Curiosity)
4. உணவு தேடூக்கம் (Food Seeing)
5. அருவருப்பூக்கம் (Repulsiom)
6. ஒதுங்கூக்கம் (Escape)
7. குழுவூக்கம் அல்லது கூடி வாழ்வூக் கம் (Gregarious Instinct)
8. தன்னெடுப்பூக்கம் - ஆதிக்கவூக்கம் அல்லது முதன்மையூக்கம் (Self Assertion)
9. தன்னடக்கவூக்கம் அல்லது பணிவூக் கம் (Self Abesement)
10. திரட்டூக்கம் (Acquisition),
11. ஆக்கவூக்கம் அல்லது கட்டூக்கம் (Construction)
12. முறையீட்டூக்கம் (Appeal)
13. பாலூக்கம் (Mating)
14. சிரிப்பூக்கம் (Laughter) என்பனவாகும். இதில் சிரிப்பூக்கம் மனித இனத்திற் குரிய ஒரு சிறப்பு இயல்பூக்கமாகும். இவ்வியல் பூக்கங்கள் யாவும் ஒன்றோ டொன்று தொடர்புடையவை மட்டு

மன்றி ஒன்றைஒன்று தூண்டக்கூடியவை.

Eg: பேருக்கமும், உணவு தேடும் ஊக்கமும் ஒன்றுக்கொன்று உதவுபவை. இப் பதினான்கு வகை இயல்பூக்கங்களையும் மூன்று பரந்த தலைப்புக்களின் கீழ்க்கொண்டு வரலாம்.

1. ஆராய்வூக்கம், உணவு தேடும் ஊக்கம் என்பவற்றைத் தனியானவூக்கம் எனலாம். குழுவூக்கம், தன்னெடுப்பூக்கம், பணிவூக்கம் போன்றவற்றைக் கூட்டூக்கம் என்றும், பாலூக்கம், தன்னெடுப்பூக்கம், மகவூக்கம் போன்றவற்றைப் பால் தொடர் ஊக்கங்களில் அடக்கலாம்.

## இயல்பூக்கங்களும் மாணவர் கல்வியும்

பிள்ளைகளின் இயல்பூக்கங்கள் வளர்ச்சிப்படிகளில் இருப்பின் அவற்றை மடை மாற்றம் செய்யமுடியும். ஒடுக்கப்பட்ட, பண்படாத ஊக்கங்கள் வெற்றிகிட்டாது நசுக்கப்பட்ட மன எழுச்சிகள் இயல்பூக்கங்களான நனவிலி மனத்தில் (Unconcious Mind) என்பன நெறிபிறழ் நடத்தைகளைப் பதிவு பெற்றிருந்து விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தும். எனவே, இயல்பூக்கங்களை மடை மாற்ற ஒரே வழி "புனித வழிப்படுத்தல்" அல்லது "தூய்மை செய்தல்" ஆகும். (Sublimation) இது மனித சமூகத்திற்குப் பயன்படும் வகையில் அவ்வியல்பூக்கத்தை மாற்றுவதாகும். இவற்றை ஆசிரியர் நன்கு பயன்படுத்த வேண்டும். மாணவர் வளர்ச்சியில் மரபு, வயது, பயிற்சி உடலின் அகச் சுரப்பிகள் முக்கிய பங்காற்றுகிறது.

இயல்பூக்கங்கள்: மாணவர் அறிவு, வளர்ச்சி, நடத்தை, ஒழுக்கம் என்பவற்றின் மையமாகும். இது இயற்கை மனித இனத்திற்குத் தந்த ஊக்கியாகும். சிறுவர், சிறுமியர் நடத்தையானது இந்த இயல்பூக்கங்களின் தூண்டல்களே. (Natural Motive) ஆராய்வூக்கம் ஒரு புதுமையானது. இது நமக்குத் தெரியாத பொருள்களைக் காணும் போது ஏற்படும் வியப்பு மனவெழுச்சியாகும். இதில் நாம் பார்க்கும் பொருள் புதுமையுடன் பழமை கலந்திருக்கவேண்டும் அப்பொருளைப் பார்த்ததும் இது தெரிந்தும் தெரியாதது மாதிரியுள்ளதே என ஆராய முற்படுகிறோம். இது வளரும் பிள்ளைகளிடம் நிறைய உண்டு. இதனால் சூழ்நிலையை ஆராய்கின்றனர். அறிவியல், கலை, தத்துவம் போன்றன இவ்வியல்பூக்கத்தினால் மனித குலம் பெற்ற பலன்களாகும். ஆராய்வூக்கம் பொருள் பற்றியோ, கருத்துப்பற்றியோ இருக்கலாம். இப்படிப் பயன் தரும் இயல்பூக்கங்கள் சில சமயம் அருவருப்பூட்டும். இவ்வாறான போக்கைத் தடுப்பது ஆசிரியர் பணியாகும். மூன்று வயது அடையும்போது குழந்தைகள் ஆராய்வூக்கம் விஞ்சி நிற்கும். கேள்விகளைக் கேட்டுத் துளைத்துக் கொண்டிருப்பர். இதனைப் பொறுமையுடன் கேட்டுத் தக்கபதில் கொடுக்கவேண்டும். பாடசாலைகளில் புத்தக அறிவுக்கும், குருட்டு மனப் பாடத்திற்கும் அனுமதிக்கக் கூடாது. முன்னுரையுடன் ஆசிரியர் புதுப்பாடத்தை ஆரம்பிக்கவேண்டும். அத்துடன் முன் பெற்ற பாட அறிவுடன் அதைப் பொருத்தப்பாடு செய்ய வேண்டும். மாணவர் ஆக்கத்திறனுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் மாணாக்கர் இயல்பூக்கங்களை மழுங்கடிக்கக்கூடாது. சமூகத்துக்குப் பயனளிக்கும் வகையில் மாணாக்கரது ஆளுமையை வளர்த்தலே கல்வியின் இறுதி இலக்காகும். விளையாட்டுப் போன்றன மாணவர்களின் உளச் சிக்கல்களை நீக்கிக் குழந்தைகளின மன நலத்திற்கு உதவுகிறது. பிரபல விஞ்ஞானி அல்பட் ஐயன்ஸ்ரையின்கூட மாணவர் கல்வி

வளர்ச்சியில் விளையாட்டின் பங்கை வலியுறுத்துகிறார். மனிதத் தேவைகள் மனித நடத்தைக்குப்பின் அமையும் ஊக்கியாகும். இத் தேவைகள் உடல் தேவைகள், மனத் தேவைகள், சமூகத் தேவைகளாகும். மாணவர் மனப் போராட்டம், மகிழ்ச்சியின்மை, மனவிறைப்பு நிலை (Tension) என்பவற்றை உருவாக்கும். இதைத் தவிர்ப்பது அறிவும், மாணவர் மன உறுதிப்பாடுமே.

வேதாந்தக் கோட்பாடுகள் மாறாதவை. ஏன்? ஏனெனில் அவை மனிதனிலும் இயற்கையிலும் உள்ள மாறாத உண்மைகளின் அடிப்படையில் எழுப்பப்பட்டுள்ளவை. அவை ஒருபோதும் மாறாது. ஆன்மா பற்றிய உண்மைகள் மற்றும் சொர்க்கத்திற்குப் போவது போன்ற கருத்துக்கள் எப்போதுமே மாறமுடியாது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் அவை இருந்தது போலவே இன்றும் உள்ளன; லட்சக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகும் இப்படியேதான் இருக்கும். ஆனால் சமுதாயநிலைகள், பரஸ்பரத் தொடர்பு ஆகியவற்றின் அடிப்படையிலேயே முற்றிலும் அமைவதான சமயப் பழக்கவழக்கங்கள் சமுதாயம் மாறும் போது மாறியே தீரும். எனவே குறிப்பிட்ட ஒரு காலத்திற்குத்தான் நல்லவையாகவும் பொருத்தமானவையாகவும் அவை இருக்கும்; மற்ற காலங்களுக்கு ஏற்புடையவையாக இருக்காது. ஒரு குறிப்பிட்ட உணவு ஒரு காலத்தில் உண்பதற்கு அனுமதிக்கப்பட்டது. அடுத்த காலகட்டத்தில் அனுமதிக்கப்படவில்லை. ஏனெனில் அந்தக் காலத்தில் அந்த உணவு பொருந்தவில்லை. காலநிலையும் மாற்றச் சூழல்களும் மாறியது. வேறு பல சூழல்களையும் எதிர்கொள்ள நேர்ந்தது. எனவே பிற்கால ஸ்மிருதிகள் உணவையும், பிறவற்றையும் மாற்றிவிட்டன. இவ்வாறே காலத்திற்குக் காலம் மாறுதல்கள் ஏற்பட்டன. இன்றைய நமது சமுதாயம் ஏதாவது மாற்றங்களை விரும்பினால் அவற்றையும் செய்தாக வேண்டும். மகான்கள் தோன்றி அதனை எப்படிச் செய்வது என்பதைக் காட்டுவார்கள். ஆனால் நமது மதத்தின் கோட்பாடுகள் ஒரு துளிகூட மாறாது; அவை அப்படியே இருக்கும்.

சுவாமிஜீ விவேகானந்தர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில்
1897ஆம் ஆண்டு ஆற்றிய சொற்பொழிவிலிருந்து....



# மாணவர் கல்வியில் மன, உடலாரோக்கியத்தின் அவசியம்

டாக்டர் ஆ. பேரின்பநாதன்

மனம் என்பது பிரபஞ்ச சக்தி எமது உயிர் சக்திகளின் தொகுப்பாகவும், அவற்றின் நின்றும் எழும் அனுபவங்களின் களமாகவும் உள்ளது. இது மூன்று படிநிலைகளைக் கொண்டது. மனம் என்பது காந்த அலைகளை உடையது.

1. உடனே முற்றிலும் உணரக்கூடிய, அறியக்கூடிய அனுபவங்கள், மனச் செயல்கள் "நினைவு நிலை" "Concious Mind" எனப்படும். இது மற்றைய நிலைகளை விடச் சிறந்தது.
2. "இடை மனநிலை" (Sub concious mind) இந் நிலையில் எண்ணங்கள், நினைவுகளை அறியமுடியும்.
3. இந்நிலை "நனவிலி நிலை" ஆகும் (Unconcious Mind). நமது பண்படாத மனவெழுச்சிகளும், முயற்சிகளும் இங்கு குடி வாழ்கின்றன. இவை நமது மனத்தின் மூன்று செயற்பாட்டு நிலைகளாகும். இளம் பருவத்தினர் தாம் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை, தம் மனப் போராட்டங்களை எதிர்கொள்ள முடியாத நிலையில் நனவிலி மனத்திடம் நசுக்கி விடுகின்றனர். (Repressiont) இது அவர்களுக்குத் தெரியாது நிகழ்வது. இவைதான் பிற்காலத்தில் அவர்களிடம் நெறி பிறழ் நடத்தைகள் எழுவதற்குக் காரணமாகின்றது. "நெறி பிறழ் நடத்தையின் மூலவேர் நனவிலி மனமாகும்"
4. ஆழ்மனம் (Deep Concious) இது பீனையில் சுரப்பியுடனும் ஆன்மீகத்துடனும் சம்பந்தப்பட்டது.

எனவே, மனித நல்வாழ்விற்கு உடல் நலத்துடன் மன நலமும் இன்றியமையாதது. இவை இரண்டும் கல்வியின் இறுதிக் குறிக்கோளாகும். மனநலம் என்பதை "மனநிறைவு", "மனவெழுச்சி முதிர்ச்சி" என உளவியலாளர் அழைப்பர். ஒருவனது வாழ்வின் வெற்றியில் அவனது நுண்ணறிவு, பொருளறிவு, திறன்கள் போன்றவற்றுடன், அவனது உடல் - உள ஆரோக்கியமும் முக்கியமாகும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். மனிதர்களிடம் காணப்படும் நலக் குறைவில் மூன்றிலொரு பங்கினர் மனநலக் குறைவுடன் உள்ளனர். இது மாணவரிடத்தும் பொருந்தும். மனநலம் என்பது மனநல மின்மை மட்டுமன்றி, தனக்கும் பிறருக்கும் மகிழ்ச்சியும்; பயனுமுள்ள வகையிற் சூழ்நிலை மாற்றங்களுக்கு ஏற்பப் பொருத்தப் பாட்டுடன் செயற்படுவது. மேலும், கல்வியின் இறுதி நோக்கம் மாணவர்களின் மனவெழுச்சிகளை, நடத்தைகளைப் பயன்படுத்தி அவர்களை மனநலமுடை யோராக்கலாகும். மனநலம் என்பது வாழ்க்கையில் தோன்றும் மாற்றமுடியாத உண்மை நிலைகளை ஏற்றுக கொள்ளும் மனப்பான்மையும், வாழ்வில் எதிர்ப்படும். பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துத் தீர்த்தலுமாகும். இப்படியாக மனவெழுச்சி சமனிலை பெற்றவனைப் பொருத்தப் பாட்டைப் பெற்றவன் என உளவியலாளர் அழைக்கின்றனர். இவன் வாழ்வில் அமைதியும்; ஆனந்தமும் பெற்று வாழ்கிறான். வாழ்க்கைத் தத்துவத்தை அமைத்துக் குறிக்கோளுடன் செயற்படுகிறான். மாணவர்கள்

பொருத்தப்பாடின்மையை அடையாது பாதுகாப்பது பெற்றோரதும், ஆசிரியர்களதும் தலையாய கடமையாகும். பொருத்தப்பாடற்ற நடத்தைகள், பழக்கங்களுக்கு, சூழ்நிலையும் காரணமாகும். முக்கியமாக: குடும்பம், பாடசாலை, சமுதாயச் சூழ்நிலை ஆகியவற்றால் ஏற்படும் மனமுறிவுகளும், மனப் போராட்டங்களும் பொருத்தப்பாடின்மையைப் பிள்ளைகளிடம் ஏற்படுத்துகிறது. தேவையற்ற கட்டுப்பாடுகளை நீக்கல், அடிப்படை வசதிகளை அளித்தல், குடும்பக் குறைபாடுகளை நீக்கல், வசதி குறைந்தோருக்குப் பாதுகாப்பு, தனியார் வேற்றுமைகளைக் கருத்திற் கொள்தல், பயனுள்ள கல்வி ஏற்பாடு, கவர்ச்சியான கற்பித்தல் முறைகள், ஆசிரிய மாணவர் நல்லுறவு, தேர்வுமுறைச் சீர்திருத்தம், ஆன்மீக அறிவு ஆகியன மாணவர் மனநலவளர்ச்சிக்கு உதவும். வீட்டிற் பெற்றோரது காப்புணர்வு, ஆசிரியரது ஆளுமைப் பண்புகள், மனப்பான்மைகள், வகுப்பறைச் சூழல் ஜனநாயகப் போக்குடைய பாடசாலை நிர்வாகம், மாணவரின் மனநலச் சமனிலைக்கும் பெரிதும் உதவுகின்றது. இன்றைய கல்வி முறை மாணவர்களுக்குத் தேவையான அறிவுரைகளை வழங்கல்; வழிகாட்டுதலும் ஆசிரியரது பணியாகும் என்கிறது. மாணாக்கரது ஆளுமை முழுவளர்ச்சியைப் பெற்ற வாய்ப்புக்களை அமைத்து தருவதே இன்றைய பாடசாலைக் கல்வியின் இறுதி நோக்கமாகும். மாணவர்கள் இறுதியாண்டுகளிலேனும் பிற்கால வாழ்க்கைக்குரிய தொழிற்றிறன்களை மாணவர்களிடம் உருவாக்கவேண்டிய தேவை பெற்றோருக்கும், பாடசாலைச் சமூகத்திற்கும் உள்ளது. இதனால், மாணவர்களே தம் பிற்கால வாய்ப்புக்களுக்கேற்பப் பாடநெறிகளைத் தெரிவு செய்யவும் அனுமதிக்கப்படுவது மாணவருக்கு மனநிறைவை அளிக்கும். கல்வியின் நோக்கம் விரிவடைந்து மாணவர்களின் ஆளுமை முழு வளர்ச்சியெனக் கொள்ளப்பட்டுள்ளது. மாறிவரும் சூழ்நிலையுடன் உயர்நிலைப்பட்ட பொருத்தப்பாடினைப் பெற இன்றைய கல்வி முறை மாணவர்க்கு உதவ வேண்டும். மேலும் மாணவரது தனிப்பிரச்சினைகள், போட்டி, மன முறிவு, தாழ்வு மனப்பான்மை, கவலை போன்றன மாணவர் கல்வி வளர்ச்சியைப் பாதிக்கும்.

**மனித நடத்தைக்கு ஆதாரமான உடலியற் கருத்துக்கள்**

மனிதன் என்பவன்: உடல், மனம் என்ற இரு பகுதிகளும் இடைவினையாற்றும் ஓர் உயிரி. மனித உடலில் ஏற்படும் மாற்றங்கள் மனச் செயலைப் பாதிக்கிறது. உடற் சோர்வானது; தெளிவற்ற சிந்தனையைத் தருகிறது. அதேபோன்றே மனநிலையில் ஏற்படும் பாதிப்பானது பல உடல் நோய்களை நாமறியாதே ஏற்படுத்துகின்றது. ஆஸ்த்மா, எக்சிமா, இதயநோய் என்பன மன உடல்சார் (Psychosomatric) நோய்களாகும். எனவேதான் உலக சுகாதார ஸ்தாபனம்; உடல் ஆரோக்கியம் என்பது உடலுள ஆரோக்கியமென வரையறை செய்துள்ளது. சிந்தித்தல், மன வெழுச்சிகள், முயன்று செயற்படல் மனதின் செயல்களாகும். உளவியற் கோட்பாட்டினைப் புரிந்துகொள்ள நரம்புத் தொகுதி, புலன்கள், தசைகள், சுரப்பிகள் போன்ற வற்றின் உடற்றொழில் இயல்பற்றி நாம் அறிந்திருத்தல் வேண்டும் என வலியுறுத்துகின்றது.


**நமது உடலிற் பல்வேறு பகுதிகளும், உடலுறுப்புக்களும்**

எமது உடலில் 206 எலும்புகளும், 800 தசைகளும் உள்ளன. இவை இணைந்து இயங்க உதவுவது உடல் முழுவதும் பரவிக் கிடக்கும் நரம்புத் தொகுதியாகும். குழந்தை பிறந்து 3-4வயதிடையே போஷாக்கின்மையாற் பாதிக்கப்படின் பிள்ளையின் நரம்புத்

தொகுதியும், அதன் வளர்ச்சியும் பாதிப் படையும். நரம்புத் தொகுதியை, மனச் செயல்களின் உடலியல் அடிப்படை என்று கருதப் பல சான்றுகள் உள்ளன. நரம்பு மண்டலத்தின் முக்கிய பகுதியான பெருமூளை (Cerebram) யின் அளவு பெருகப் பெருக மனவாற்றலும் பெருகுவதைக் காண்கிறோம். மற்ற விலங்கினங்களைவிடப் பெருமூளையின் அளவு மனிதனுக்கே பெரிதாகும். அத்துடன் மனிதனுக்கே மனவாற்றலும் அதிகம். எனவே, நரம்புத் தொகுதியும், அதன் பகுதிகளும் மனிதனது அறிவு, மனவெழுச்சி, செயல்திறன் ஆகியவற்றின் உடலியல் அடிப்படை என நாம் நடத்தைபற்றிய முழு உண்மைகளையும் அறிய; நரம்புத் தொகுதி பற்றிய முழு அறிவும் எமக்கு வேண்டியபோதும் கற்றல் போன்று சிக்கலான மனச் செயல்கள் பற்றித் தெளிவாக அறிய அந்த அறிவு போதாது உள்ளது.

**நரம்புத் தொகுதி :**

1. மைய நரம்புத் தொகுதி (Central Nervous System)
2. வெளிநரம்புத் தொகுதி (Peripitral Nervous System)
3. தானியங்கு நரம்புத் தொகுதி (Auto Nomous Nervous System)




**மனித மூளையின் பகுதிகள்**

*முன், நடு, பின் மூளைப் பகுதிகளை இணைக்கும் வலை போன்ற நரம்புத் தொகுதி(RAS) யும் உண்டு.*

**மைய நரம்புத் தொகுதி**

மூளை (Brain), தண்டு வடம் (Spinal Coard) மைய நரம்புத் தொகுதி எனப்படும். இது உடலின் பல தரப்பட்ட இயக்கங்களை பிணைத்து ஒன்று சேர்க்கின்றது. நமது உடலின் பல்வேறு பகுதிகள் ஒன்றோடு ஒன்று நேரடியாக இணைக்கப்பட்டிருக்கவில்லை. மைய நரம்புத் தொகுதி வழியேதான் இணைக்கப்பட்டுள்ளன. உயிரிகளின் நரம்பு மண்டல வளர்ச்சியில் முதல் எழுந்த பகுதி தண்டுவடமே. அதன் தொழில்கள் எளியவை. இதற்கு அடுத்து எழுந்த பகுதி நடு மூளையும், சிறு மூளையும் ஆகும். கடைசியாகத் தோன்றியவை பெரு மூளையாகும். பெரு மூளைப்பகுதி, காலத்தால் முன்தோன்றிய பகுதிகளின் செயற்பாடுகளில் தலையிடுவதில்லை. ஆனால், தேவை ஏற்படும்போது முன் தோன்றியவற்றின் தொழிற்பாட்டினைக் கட்டுப்படுத்தவும் ஓரளவு மாற்றவும் முடியும். தண்டுவடமானது முகுளத்தின் நின்றும் தொடங்கி முதுகெலும்பின் உட்பகுதியூடாகக் கீழ்நோக்கிச் செல்கிறது. தண்டுவடம் விளிம்பில் வெண்மையாகவும், உட்பகுதி சாம்பலான (Grey) நிறமாகவும் உள்ளது. தண்டுவடம் இரு பணிகளைப் புரிகிறது. ஒன்று நரம்புகளையும் (Sensory Nerves), இயக்க நரம்புகளையும் (Motor Nerves) நேரிடையாக இணைப்பதாகும். இப்படியான நேரிடைத் தொடர்புகள் அடிப்படையாகும். தண்டுவடத்தில் 31 சோடி புலன் நரம்புகள் இணைந்துள்ளன. மேலும், தண்டுவடத்தின் வழியே நரம்புத் துடிப்புகள் (Nerve Imppulses) செல்லப்படுகின்றன. இதனாற்றான் மனிதனின் செயல்களில் மூளையின் பங்களிப்புச் சாத்தியமாகிறது. நமது உடல் ; தசைகளது இயக்கத்திற்கும், தண்டு வடத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. தண்டு வடத்திற்குப் பாதிப்பு நேரின் தசையின் இயக்கம் தடைப் படும்.

## மூளை (Brain)

இது நரம்பு மண்டலத்திலேயே முக்கியமாக, கவர்ச்சியுள்ள பகுதியாகும். இது மண்டையோட்டினால் மிக்க பாதுகாப்பாக மூடப்பட்டுள்ளது. மூளை: நரம்பு மண்டலத்தில் மிக முக்கிய பகுதியாகும். மற்றைய பகுதிகளை இணைத்து அடக்கிச் செயற்படுத்துவது மூளையேயாகும். இதன் உட்புறம் வெள்ளை நிறமாகவும், வெளிப்புறம் நரைநிறப் பொருளாலும் (Greymatter) ஆக்கப்பட்டிருக்கிறது. மூளை முக்கியமாக நான்கு பாகங்களாகப் பகுக்கப்பட்டிருக்கிறது.

1. பெருமூளை (Cerebrum)
2. சிறுமூளை (Cerebellum)
3. முகுளம் (Medulla Oblaongata)
4. நடு மூளை அல்லது தலமஸ் (Thalamus) என்பனவாகும்.

### சிறு மூளை

- இது மூளையின் கீழ்ப்பாகமாகும். ஒருவனது இயக்கச் சமனிலைக்கு இது பயன்படுகிறது. இப்பகுதிக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படின் ஒருவரால் நிமிர்ந்து நிற்கவோ - நடக்கவோ முடியாது.
- இது இடம் (Space), திசை, தூரம் முதலியவற்றை அறிய உதவுகிறது.

  முகுளம் : மிகச் சிறிய பகுதியான முகுளம் தண்டு வடத்தின் மேல் பகுதியாய்த் தோன்றினாலும், அதனின்றும் அமைப்பில் மாறுபட்டது.

  இது மூச்சுவிடுதல், இதயத் துடிப்பு, இரத்தச் சுற்றோட்டம் போன்றன உயிர் வாழ முக்கியமானவைகளை இது கட்டுப்படுத்தப்படுகின்றது.

  தலமஸ்: பெருமூளைக்கும் சிறு மூளைக்கும் நடுவிற் சிறிது உட்புறமாக இது மூளையின் மையத்தில் இரு முட்டை வடிவாக இது அமைந்துள்ளது.
- இது புலன்களில் இருந்து கிடைக்கும் தூண்டல்களை, அவற்றிற் குரிய பெருமூளையில் உள்ள மையங்களுடன் இணைக்கின்றது.

  கைப்போ தலமஸ் Hypothalamus) தலம்ஸ்ஸின் அருகில் இச்சிறிய பகுதி உள்ளது.
- இது மனவெழுச்சிகளுடன் தொடர்புடையது. மனவெழுச்சியுடன் தொடர்புடைய உடல் மாற்றங்களும், அனுபவங்களும் இதனது கட்டுப்பாட்டில் உள்ளது. மனவெழுச்சியின் புறச் சின்னங்களான உடல் நடுக்கம், அழுகை போன்ற வற்றை இப்பகுதியே தோற்றுவிக்கிறது. இவ்வாறு அளவுக்கதிகமாக வளர்ச்சி பெற்றுள்ளவர்களே தீவிரமானவெழுச்சிக்கு உட்படுபவர்களாகும். இதன் செயற்பாடுகள் பற்றி முதலில் விளக்கியவர்கள் கேனன் (Canan) என்பவரும், நாட் (Nard) என்பவருமாகும். இது எமது உடல் வெப்பநிலையை 98.4°F இல் வைத்துக் கொள்ள உதவுகிறது.

### பெரு மூளை (Cerebrum)

- இதன் செயல்கள்: உயர் செயற்பாடுகள் என நாம் கருதும்
  1. சிந்தனை
  2. தீர்மானம் எடுத்தல்
  3. நினைவு கூர்தல்

  என்பன பெருமூளையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இச்செயற்பாடுகளுக்குப் பெருமூளையின் புறணி (CERABARAL CORTEX) பொறுப்பாகவுள்ளது.
- புலனுணர்ச்சிகளின் இந்தப் புறணி (CORTEX)யினாலேயே உணரப்படுகிறது.

☞ நமது இச்சைக்குட்பட்ட உடலியக்கங் களையும் புறணியே கட்டுப்படுத் துகிறது.

☞ புலன் உணர்ச்சிகளின் சுவடுகள் (TRACES) சேமித்து வைக்கும் பகுதியாகவும், எமது எண்ணங்கள், கருத்துக்கள் போன்ற வற்றின் உடலியல் அடிப்படையாகவும் பெரு மூளைப் புறணி செயற்படுகிறது.

☞ பெருமூளைப் புறணியில் மூன்று மடல்கள் உள்ளன. இதன் அடித்தளம் பிறப்பிலேயே 80 வீத வளர்ச்சியைப் பெற்றிருக்கும். இது மன வினைகளைக் கட்டுப்படுத்தும் தொழிலைச் செய்கிறது.

☞ புறணியின் மையத்தளம் பிறப்பிலேயே 75 வீதம் வளர்ச்சியைப் பெற்றிருக்கும். இது புலன் உணர்ச்சிகளுடன் செயல் களோடு தொடர்புடையது.

### மனிதப் பெருமூளையின் பிரிவுகள்




### மனிதப் பெருமூளை

D.O. Hebb (ஹெப்) என்பவர் பெருமூளை யின் ஒருங்கிணைந்த இயக்கத் தன்மையினை ஆராய்ந்து கற்றலுக்குரிய அடிப்படையில் இன்று ஒரு புது விளக்கத்தைக் தந்துள்ளார். பெருமூளையானது முன்புறம் குறுகியும், பின்புறம் அகன்றும் காணப்படும். பெரு மூளையை வலது, இடது என இரு பகுதி களாகப் பிரிக்கலாம். அல்லது அரை உருண்டைகளாகப் பிரிக்கலாம். இந்த அரை உருண்டைப்பகுதிகளை, பின்புறத்தில் உள்ள கார்ப்பஸ்கலோசம் (Corpus Callosm) இணைக்கின்றது. இதனை

1. முன்மடல் (Fnontal Lobe)
2. பக்க மடல் (Pareital Lobe)
3. பிடரி மடல் (Occipital Lobe)
3. பொட்டு மடல் (Temparal Lobe)

என நான்கு பிரிவாகப் பிரிக்கப்பட் டுள்ளது. இப்பிரிவுகளிடையே பெருமூளைப் பிளவுகள் (Cerenral Fissure) உள்ளது. இப்பிரிவுகள் அடிப்பாகத்தில் இணைக்கப்பட் டுள்ளது. இப்பிரிவுகள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் தொழிற்பாட்டிற்குப் பொறுப்பாக உள்ளன.

☞ பிடரி மடலின் முக்கிய தொழில் : கட்புலக் காட்சி சம்பந்தமானது.

☞ உடலியக்கம் முன்மடலின் கட்டுப் பாட்டில் உள்ளது.

☞ காதால் கேட்டறிதற் பொட்டு மடலின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதன் ஒரு பகுதியிலேயே பழைய அனுபவங்கள் சேகரிக்கப்பட்டுள்ளது.

☞ மணம், சுவை : பொட்டுப் பிரிவின் கீழ்ப்பகுதியில் உள்ளது.

☞ ஆனால், கற்றல் செயற்பாட்டிற்குப் பெருமூளையின் முழுப்பகுதியும்.

☞ பெருமூளை தன்னியல்பான செயல் பாட்டினை உடையது (Spontameous Activity). இதனை மூளை அலைகளை (Brain Wares). E.E.G, கருவிமூலம் அளக்கலாம். மூளை அலைகளே மனப் பதிவிற்கு உதவுகிறது. சாதாரண வேக அலையிற் பதிவான செய்தியை பரீட் சைக்காலத்தில் மாணவர்கள் இடையே ஏற்படும் பய மனயெழுச்சியால் மூளைச் சுற்று வேகம் அதிகரிக்கின்றது. சாதாரண மூளைச்சுற்று வேகத்தில் பதிவான கல்விப் பதிவுகளை மூளைச்சுற்று வேகம்

அதிகரிக்கும்போது மீளப்பெற முடியாது மறந்துவிடுகின்றனர். இதனால் தான் மாணவர்கள் பரீட்சையில் தோல்வியடைகின்றனர்.

- நுண்ணறிவுத் திறனுக்குப் பெருமூளையின் பெருப்பம் காரணமல்ல. பருமனைக் காட்டிலும் அதன் உள்ளமைப்பின் தன்மை, சுரக்கப்படும் பொருள்களைப் பொறுத்ததாகும்.
- பெருமூளையின் வலைப்பின்னல் நரம்புத் தொகுதியே அதன் பகுதிகளை இணைக்கின்றது. இத் தொகுதியை Ras என அழைப்பர். இது முக்கியமான செய்திகளுடன் நரம்புத்துடிப்புக்கள் வரும் போது புறணிக்கு அதைத் தெரிவித்து, அதைப் புறணி ஆராய ஆயத்தப்படுத்துகிறது. சமகாலத்தில் வரும் இரு செய்திகளில் எதற்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும் என்பதை இவ்வலை அமைப்பே தீர்மானிக்கிறது. இவ்வலையமைப்புச் சேதப்படின் தூக்கம் ஏற்படும். மேலும், ஆளுமைக் கோளங்களான அகமுகி, புறமுகியாகியோரது மூளை அலைகளிடையேயும் வேறுபாடு காணப்படுகிறது.

### வெளிநரம்புத் தொகுதி

- இவை மூளையுடன் அல்லது தண்டுவடத்துடன் தொடர்புபட்டிருக்கும். நாமறிந்த தூண்டலால் ஏற்படும் நடத்தைகளுக்கு இதுவே பொறுப்பாகவுள்ளது. மூளையுடன் இணைந்தவை 12 சோடி நரம்புகளும் தண்டுவடத்துடன் (Spinal Nerves) இணைந்த 31 சோடி நரம்புகளும் இதிலடங்குகின்றன. தூண்டல்களை மூளைக்கும், தண்டுவடத்திற்கும் எடுத்துச் செல்பவை புலன் நரம்புகளாகும் (Sensory Nerves). மைய நரம்பு மண்டலத்திலிருந்து தசைகளுக்கும், சுரப்பிகளுக்கும் செய்திகளை எடுத்துச் செல்பவை இயக்க நரம்புகள் (Motor Nerves). இவ்விரு நரம்புத் தொகுதியையும் தம்மகத்துக்கொண்ட வெளிநரம்புத் தொகுதியானது மனித நடத்தைகளுக்குப் பொறுப்பானது. புலன் நரம்புத் தொகுதி வேரானது (Roots) மைய நரம்பின் பின் பகுதியுடனும், மைய நரம்பின் வேரானது புலன் நரம்பின் முன் பகுதியுடனும் பிணைக்கப்பட்டுள்ளது.

### தானியங்கும் நரம்புப் பகுதி

- இதனை, சிம்பதரிக் பகுதி (Sympathatic Part), பரசிம்பதரிக் பகுதி (Parasympathatic Part) என இரு பிரிவாகப் பிரிக்கலாம். இது நரம்பு மண்டலத்தின் ஆரம்ப, பழைய பகுதியாகும். இது எமது மன விருப்பத்திற்குக் கட்டுப்பட்டதல்ல. மைய நரம்புப் பகுதியுடன் தொடர்புபட்டு அதன் செல்வாக்கினாற் பாதிக்கப் பட்டிருப்பினும் பெரும்பாலும் இத் தொகுதி சுதந்திரமாகவே இயங்குகிறது. இந் நரம்புகள் இயக்க, புலன் நரம்பு உயிர் அணுக்களைக் கொண்டு முதுகெலும்புக்கு வெளியேயும் இந் நரம்புத் தொகுதி உள்ளது.
- இதன் தொழிற்பாடானது நமது மனக்கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதன்று. மூச்சுவிடல், இரத்தச் சுற்றோட்டம் உணவு சமிபாடடைய உதவல்.
- இவ்விருவகை நரம்புகளும் உடலுறுப்புக்களுடன் தொடர்பு கொண்டு எதிர் எதிரான பணிகளை உடலிற் செய்கின்றன.
- பரசிம்பதற்றிக் பிரிவு ஒருவன் அமைதியாகவுள்ளபோது அவன் உயிர்வாழ்விற்கு உதவுகின்ற செயல்களில் ஈடுபடுகின்றது.

- சிம்பதற்றிக் பிரிவோ ஒருவர் ஆபத்தான போதோ, தீவிர மனவெழுச்சிகளின் போதோ அவற்றைக் கட்டுப்படுத்த உதவுகிறது.

### புகுவாய்களும் - இயக்குவாய்களும்

மனித நடத்தையானது தூண்டல்களி னின்றும் எழுகின்றது. இத்தூண்டல்கள் வெளியிலிருந்தோ, உடலின் உள்ளிருந்தோ தொடங்கி மனிதனைச் செயற்படுத்துகின்றது. இத்தூண்டல்களை மனிதன் உணர வேண்டும். அதனால் அவன் பாதிப்படைய வேண்டும். அப்பொழுது தான் துலங்கல் (Responses) நிகழும். பல தூண்டல்களின் தொகுப்பை நிலைமை (Situation) என்கிறோம். இத்தூண்டலை மனிதன் அறியப்புலன்கள் உதவுகின்றன. கண், செவி, சுவையுணர் நா, மணமுணரும் மூக்கு, தசை இயக்கப் புலன் போன்றவை புகுவாய்கள் (Receptor) என்கி றோம்.

### தூண்டல்கள் நான்கு வகை:

1. ஒளி (கண்)
2. அசைவு அல்லது இயக்கம் (செவி, தோல்)
3. இரசாயனத் தூண்டல் (மணம், சுவை)
4. வெப்பம் மேற்றோல் என்பவையாகும்.

ஆனால், எமது அறிவு வளர்ச்சியிற் கண்ணும் செவியுமே முக்கிய பங்காளிகள். இத்தூண்டல்கள் உடலில்உள்ள தசைகளை யும், சுரப்பிகளையும் இயக்குபவைகள் உடலின் உறுப்புக்களை இயக்குபவை தசை களாகும். இவை விரிந்து சுருங்கக் கூடிய உயிரணுக்களால் ஆனவை. தசையினுட் காணப்படும் சக்தியானது தூண்டப்படும் போது செயற்பட்டு அதைச் சுருக்குகிறது. தூண்கள் விலகியதும் பழைய நிலையை அடைகிறது. தசைகள் மூன்று வகை.

1. வரையுடைய தசைகள்
2. வரையில்லாத் தசைகள்
3. இதயத் தசைகள்

வரையுடைய தசைகளில் பெரும் பாலனவை எலும்புகளுடன் இறுக்கப்பட்டு நமது உடலை வெளி உலகுக்கு நகர்த்துகி ன்றன. நமது இச்சைப்படி இத்தசை இயங்கும். ஆனால், வரையில் தசைகளை நமது மனவிருப்பப்படி கட்டுப்படுத்த முடியாது. இவற்றின் இயக்கம் நமது அறிவு, மன நிலைக்கு அப்பாற்பட்டது. மூச்சுவிடல், உணவு செரித்தல் என்பனவற்றுக்கு இத்தசை உதவுகிறது. மூன்றாவதான இதயத்தசையின் (Cardiac Muscles) வரிகள் மங்கலானவை இவை இதயத்தில் மட்டும் காணப்படுபவை.

### சுரப்பிகள்

இவை இரசாயனப் பொருட்களை உற்பத்தி செய்து விநியோகிக்கின்றன. இவை நாளம் உள்ளவை, நாளம் அற்றவை என இரு வகைப்படும். நாளமுள்ள சுரப்பிதான் சுரப்பு களை உடலின் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கும் செலுத்துகிறது. நாளச் சுரப்பிகளாவன உமிழ்நீர், கணையம், கண்ணீர், வியர்வைச் சுரப்பிகளாகும். நாளமில் சுரப்பிகளின் சுரப் பானது சுரக்கப்பட்டு அவற்றைச் சுற்றியுள்ள சவ்வுகளின் (Membrance) ஊடாக வெளிப் பட்டு இரத்தத்துடன் கலக்கிறது. இச்சுரப்பு களின் 'சத்தைக் கார்மோன்கள் (Hormone) என்பர். எனவே, இச்சுரப்பிகளின் சுரப்புக்களா னது' ஒரு மனிதனின் உடல் - உளச் செய்கை களைப் பாதிக்கின்றன. நாளமில் சுரப்பிகள் ஒரு தொகுதியாகவே செயற்படுகின்றன. ஒரு மனிதனது உடல் - உள வளர்ச்சியானது. இந் நாளமில் சுரப்பிகளின் சமநிலையைப் பொறுத்ததாகும். சமநிலையிருப்பின் மட்டுமே இயல்புநிலை, ஆளுமை (Normal Pcrsonality) ஏற்படும். இச்சுரப்பி மிகினும், குறையினும் ஆளுமை வளர்ச்சியிற் பிறழ்வு ஏற்படும். எனவே, மாணாக்கரது ஆளுமை வளர்ச்சியில் நாளமில் சுரப்பிகளின் சுரப்புச்

சமநிலை முக்கியமானது. இச்சுரப்பிகளில் முக்கியமானவை தைரொயிட் சுரப்பி, பராதைரொயிட் சுரப்பி, அற்றினலின் சுரப்பி, பிட்யூட்டறிச் சுரப்பி, பாலுட் சுரப்பிகள், (Gonads or sexglands) பீனியல் சுரப்பி, தைமஸ் சுரப்பி என்பன அகச் சுரப்பிகளாகும். மனித உடலின் இரசாயனச் செயலை உயிர்பொருள் மாற்றம் (Metabolism) என்பர். உயிர் பொருள் மாற்றத்தில் உயிர் பொருத்தாக்கம் (Anabolism), உயிர் பொருள் சிதைவு (Catabolism) இச் செயல் வினைக்கு தைரொயிட் சுரப்பே உதவுகிறது. இதன்சுரப்பு தைரொக்சின் இக்குறைவால் மிக்சோடீமா என்னும் நோய் ஏற்பட்டு உடல் பருத்து; குழந்தையின் நுண்ணறிவு, மன ஆற்றல் குறையும் இவர்கள் பெரியவரா கும்போது கூழமை நிலையை (Cretnism) அடைவர். தைரொட்சின் கூட சுரப்பின் வளர்ச்சி புரள்வடையும். பராதைரொயிட் சுரப்புக் குறையின் வலிப்பு ஏற்படும். அட்றீனலின் சுரப்பியில் 28 வகைக் கார்மோன்கள் உள்ளது.

அட்றீனலின் தீவிர மனவெழுச்சியை ஏற்படுத்தும். அத்துடன் இதயத் துடிப்பை, இரத்த அழுத்தத்தை ஏற்படுத்தும். உட்புற பிட்யூட்ரிச் சுரப்பி 25 வகையான கார்மோன்களைச் சுரக்கிறது. இது உடல் வளர்ச்சிக்கு உதவுகிறது. இது சுரப்பிகளின் எஜமான் என்றும் அழைப்பர். பாலூட் சுரப்பிகள் பல கார்மோன்களைச் சுரக்கிறது. பெண்களிடம் ஈஸ்ரொஜினையும், ஆண்களிடம் ரெஸ்ரிஸ்ரரோனையும் சுரக்கச் செய்கிறது. தைமஸ் சுரப்பியின் சுரப்பானது பூப்படைய உதவுகிறது. பால்தொடர்பான பண்புகளுக்கு இதுவே காரணமாகும். பீனைல் சுரப்பி குழந்தைப் பருவத்தில் உட்சுரப்பியாகச் செயற்படுகிறது. இச்சுரப்பியே உடலும், ஆன்மாவும் தொடர்புகொள்ளுமிடம் ஆகும். மனிதனது உடல், உள வளர்ச்சியானது, இந் நாளமில் சுரப்பிகளின் பராமரிப்பிலேயே உள்ளது. எனவே, இச்சுரப்பிகள் மிகினும் குறையினும் மனித நடத்தை பாதிக்கப் படுகிறது.

**உட்போக்குக்கள் (Physiologilal Drives)**

மனிதனது நடத்தைகள் எழுவதற்கு ஊக்கிகள் (Motives) தேவைப் படுகிறது. இந்த ஊக்கிகளிற் சில வெளியுலகத் தொடர்புடையன. வேறு சில உடலுக்குள்ளிருந்து எழுபவை. (internal drives) இவற்றுட் பசி, தாகம், தூக்கம், ஓய்வு, உடல் செயற்படத் தேவையான வெப்பம், எதிர் பால் வேட்கை என்பன மனிதனின் இயல்பான தேவையாகும். (Human Needs) இவை உயிர் வாழ்தலுக்கும், மனித இனப் பெருக்கத்திற்கும் உதவுவன.

மனச் செயல்களுக்கு அடிப்படையாக உடலின் பகுதிகள் அமைந்துள்ளன என்பதை இதுவரை நாம் செய்த ஆய்வுகள் நமக்குத் தெளிவாக்குகின்றன.

எனவே, மாணவர் மனச்செயல் வளர்ச்சியில் நாட்டம் கொண்டுள்ள ஆசிரியர், உடல் வளர்ச்சியிலும் அக்கறை கொள்ள வேண்டும். ஏனெனில், உரம்பெற்ற உடலில் தான் உயர் இலட்சிய வாழ்விற்கான கட்டிடத்தை அமைக்கமுடியும். விளையாட்டு, சத்துணவு, தவறாத மருத்துவப் பரிசோதனை மாணவரை வலுவுள்ளவராக்கும். நடத்தையடிப்படையில் அமையும் மாணவர்; களைப்பு, சலிப்பும் மாணவருக்கு ஏற்படாது ஆசிரியர் பார்த்துக் கொள்வதுடன், பாட அட்டவணை தயாரிக்கும்போது கடினமான பாடங்களான கணிதம், பிறமொழி போன்றவற்றை மாணவரது உற்சாக காலமான காலை வேளையிலும், தாய்மொழி, சூழல் போன்றவற்றை மாலைவேளையிலும் கற்பிக்கக் கூடியதாய் திட்டமிடல் வேண்டும்.



# மாணவர் நடத்தையில் மனவெழுச்சியின் பங்கு

செல்வி எஸ். தேன்மொழி, வித்தியாலய ஆசிரியை.

மனவெழுச்சியென்பது உணர்ச்சிகள் மேலோங்கி நிற்கும் நனவு நிலையாகும். நாம் வாழ்க்கையிற் காணும் வெற்றியின் அளவு; நம் அறிவுத் திறனைக் காட்டிலும், நம் மனவெழுச்சி முதிர்ச்சிகளின் சமநிலை ஆகியவற்றில் தங்கியுள்ளது. மனிதன் பரந்த மனவெழுச்சிக் கடலில் மிதக்கும் ஒரு அறிவுத் துரும்பாகும் என்னும் ஆங்கிலக்கூற்று இங்கு கவனிக்கத்தக்கது.

மனவெழுச்சி மூன்று பரிமாணத் தைக் கொண்டவை. இவை இரு முனைகளைக் கொண்டவை.

1. மகிழ்ச்சி - மகிழ்ச்சியின்மை
2. கவனித்தல் - புறக்கணித்தல்
3. செயலுறு நிலை - செயலற்ற நிலை

இவற்றில் ஆதாரமானவையும்

1) இலக்கு நோக்கிச் செயற்படும் மன வெழுச்சிகள் :
   1. சினம்
   2. மகிழ்ச்சி
   3. அச்சம் (பயம்)
   4. துயரம்

2) புலனுணர்ச்சிகளால் தூண்டப்படும் மன உணர்ச்சிகள் :
   1. வலி
   2. அருவருப்பு
   3. உற்சாகம்

3) தமது தற்கருத்து அவாநிலை (Aspiration) ஆகியவற்றுடன் இணைந்தவை.
   1. பெருமிதம்
   2. அவமானம்
   3. குற்ற உணர்வு

4) பிறரைச் சார்ந்து எழும் மனவெழுச்சிகள் :
   1. அன்பு
   2. பொறாமை
   3. பரிதாபம்

5.) பாராட்டுத் தொடர்பானவை
   1. மரியாதை
   2. ஆச்சரியம்

## மனவெழுச்சியும், கற்றலும்

வகுப்பறையில் நிகழும் ஒவ்வொரு செயலும் அவ் வகுப்பறையில் உள்ள பல்வேறு உறுப்பினர்களது மனவெழுச்சிகளுடன் ஓரளவேனும் தொடர்புடையதாகும். ஆசிரியர், மாணவர்கள் உட்பட யாவரும் தமது உணர்ச்சிகளை வகுப்பறைக்குத் தம்முடன் கொண்டு வருகின்றனர். கற்றற்செயல் மகிழ்ச்சியைத் தோற்றுவிக்கும் வகையில் அமைந்தால் அதுவே மேலும் கற்க மாணவர்களை ஊக்குவிக்கும். கற்றவற்றை வலுப்படுத்தியும் (Reinforcing), கற்றலுக்கேற்ற மனநிலையை (Mental Set) உருவாக்கியும் உதவும். மாணவர்களின் சமூகத் தொடர்புகளிலும், மனவெழுச்சிகளின் பங்கு காணப்படுகிறது. இது மகிழ்ச்சி அடிப்படையில் அமையின், மாணவரது கற்றற் சாதனையை அதிகரிக்கும். அத்துடன் ஆசிரியர்கள் இதனாற் பணிமன நிறைவின் (Job Satisfaction) அளவிலும் பங்குகொள்கிறது. இதனாற்தான் பயனுள்ள வகுப்பறைச் சூழ்நிலையை ஏற்படுத்துவதிற் கல்வியாளர்கள் அக்கறை கொண்டுள்ளனர். குடியாட்சிப்

பண்புள்ள (Democratic) ஆசிரியத் தலைமை பயனுள்ள வகுப்பறைச் சூழ்நிலையை ஏற்படுத்தும். இதனால், மாணவரது வீண் பதட்ட நிலையும், மன வேதனைப்படும் நிலையும் குறையும். கட்டிளமைப் பருவத்தினர் மனவெழுச்சிக்கு உட்பட்டவர்களாய்ச் சிறிது பதற்றத்துடன் பாடசாலைக்கு வருகின்றனர். இது தீவிரமடையாது அமையப் பெற மக்களாட்சி ஆசிரியத் தலைமை உதவுகிறது.

**மனவெழுச்சியின் பொது இயல்புகள்.**

1. இவை ஒருவரது நடத்தையின் இலக்குகளாகவும் (Goals) செயற்படுகிறது.
2. இது மகிழ்ச்சியின் இன்ப உணர்ச்சியினையும்; சினம், அச்சம் போன்றவற்றில் வெறுப்புணர்ச்சியையும் தரும்.
3. முகத் தோற்றத்தை மட்டும் வைத்துக கொண்டு மனவுணர்ச்சி பற்றி அனுமானிக்க முடியாது.
4. மனவெழுச்சி தீவிரமானதாயும் தீவிரமற்றதாயும், இருக்கும்.
   உ-ம் : தீவிர நிலையோ பெருங்கோபம் (Rage)
5. மனவெழுச்சி தோன்றக் காரணமான நிலை மறைந்தும் சிலகாலம் அந்நிலை நீடிக்கும். அற்ப காரணங்களுக்காகவே கோபப் படுவார்கள். பெரும்பாலும் உடலின் அகச்சுரப்பிகளின் மிகைச் சுரப்புக்களால் அவதிப்படுவதாக நம்பப்படுகிறது.
6. ஆழ்ந்து சிந்திக்கும் திறனை மனவெழுச்சிகள் குறைக்கும்.
7. இதனை ஆக்க நிலையுறச் செய்யலாம்.
8. மனவெழுச்சிகளால் உடல் பாதிப்படையும். மனப்பயம், சினம், தன்னியக்கம்; பாயும் நரம்புத் தொகுதியைத் தூண்டவே, அட்றினலின் சுரப்பு இரத்தத்தில் அதிகமாகவே, இரத்த அழுத்தம் அதிகரிக்கும். இந்நிலையைத் தியானத்தாற் குறைக்கலாம். கட்டிளமைப் பருவத்தினருக்குத் தியானம் பெரிதும் உதவுகிறது. தீவிர மனவெழுச்சி மன நலனைப் பாதிக்கும்.

## மனவெழுச்சியின் பயன்கள்

இவை மூன்று வகைப் பயனை அளிக்கிறது.

1. மனவெழுச்சி மனிதச்செயல்களின் ஊக்கத்தை உந்துதல், தீவிரமாகச் செயற்பாட்டு வலுவை அளிக்கிறது.
2. தனிமனிதனது நடத்தையைக் கட்டுப் படுத்த உதவுகிறது.

## மாணவரின் மனவெழுச்சிகளைப் பயன்படுத்துதல்

இது தற்காலக் கல்வியின் நோக்கங்களில் ஒன்று. வாழ்க்கையிற் சலிப்புத் தட்டாது சுவையூட்டுபவை மனவெழுச்சிகளே. நமது முடிவுகளிலும், செயல்களிலும் மனவெழுச்சி முக்கிய பங்காற்றுகிறது. மகிழ்ச்சிநிலை மனவெழுச்சியே நம்மைத் துணிவுடன் செயற்பட உதவுவதுடன்; அழகுணர்ச்சி, கலைப்பொருள் இரசனை என்பவற்றிற்கும் உதவுகிறது. வாழ்வின் வெற்றிக்கு மன்வெழுச்சியின் முதிர்ச்சி இன்றியமையாதது. மாணவர்களின் தீவிர மனவெழுச்சிகளை அடக்கியாளவும், அதிற் சமநிலை பெறவும், பாடசாலையில் வாய்ப்பளிக்க வேண்டும். மனவெழுச்சியைக் கட்டுப்படுத்த நான்கு வழிகளைப் பின்பற்றலாம்.

1. அச்சம், சினம் போன்ற எதிர்மறை மனவெழுச்சி தோன்றும் நிலைகளைத் தவிர்த்தல்.
2. பிறர் மன வெழுச்சிக்கு ஈடாக நாமும் செயற்படக் கூடாது.
3. மகிழ்ச்சியுடன் தொடர்புடைய சூழலை ஏற்படுத்தல்.
4. புதிய கவர்ச்சிகள், நல்ல பொழுது போக்குத் திறன்களை உருவாக்கல், மன வெழுச்சி முதிர்வின் அடையாளங்கள்.

எந்த நெருக்கடி நிலையிலும் அமைதியுடன் நடந்து கொள்வான். பிறரின் நலன்களில் அக்கறையும், அன்பும், பரிவும் காட்டுவான். பிறருக்கு உதவுவான். மனவெழுச்சி தோன்றலை ஒத்திப் போடுவான். இவனிடம் வீண்கவலை, அச்சம் இராது. தன் குடும்பம், பாடசாலை, சமுதாயம் ஆகியவற்றின் முன்னேற்றத்திற்குத் தன்னால் ஆனதைச் செய்வான். தம் பிழைகளை ஒப்புக் கொண்டு திருந்துவான். மனவெழுச்சியின் வெளித்தோற்றத்தைக் கட்டுப் படுத்த சிறுவர்களுக்குப் பயிற்சி அவசியம். எனவே, பெற்றோரும், ஆசிரியரும் மனவெழுச்சிச் சமநிலைப் பண்புகளுக்குத் தாமே முன்னுதாரணமாக வேண்டும். அடக்க வேண்டிய மனவெழுச்சிகள்:

1. அச்சம்
2. சினம்
3. பொறாமை
4. கவலை என்பனவாகும். ஊக்கப் படுத்த வேண்டியவை மகிழ்ச்சியாகும். இது அன்பு, உற்சாகத்துடன் இணைந்த மனவெழுச்சியாகும். சிரிப்புணர்ச்சி, மகிழ்ச்சியுடன் தொடர்பானது. இதனாற்றான் வாய் விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும் என்பார்கள்.

---

வேதாந்தக் கோட்பாடுகள் மாறாதவை. ஏன்? ஏனெனில் அவை மனிதனிலும் இயற்கையிலும் உள்ள மாறாத உண்மைகளின் அடிப்படையில் எழுப்பப்பட்டுள்ளவை. அவை ஒருபோதும் மாறாது. ஆன்மா பற்றிய உண்மைகள் மற்றும் சொர்க்கத்திற்குப் போவது போன்ற கருத்துக்கள் எப்போதுமே மாறமுடியாது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குமுன் அவை இருந்தது போலவே இன்றும் உள்ளன; லட்சக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகும் இப்படியேதான் இருக்கும். ஆனால் சமுதாயநிலைகள், பரஸ்பரத் தொடர்பு ஆகியவற்றின் அடிப்படையிலேயே முற்றிலும் அமைவதான சமயப் பழக்கவழக்கங்கள் சமுதாயம் மாறும் போது மாறியே தீரும். எனவே குறிப்பிட்ட ஒரு காலத்திற்குத்தான் நல்லவையாகவும் பொருத்தமானவையாகவும் அவை இருக்கும். மற்ற காலங்களுக்கு ஏற்புடையவையாக இருக்காது. ஒரு குறிப்பிட்ட உணவு ஒரு காலத்தில் உண்பதற்கு அனுமதிக்கப்பட்டது. அடுத்த காலகட்டத்தில் அனுமதிக்கப்படவில்லை. ஏனெனில் அந்தக் காலத்தில் அந்த உணவு பொருந்தவில்லை. காலநிலையும் மற்றச் சூழல்களும் மாறியது. வேறு பல சூழல்களையும் எதிர்கொள்ள நேர்ந்தது. எனவே பிற்கால ஸ்மிருதிகள் உணவையும், பிறவற்றையும் மாற்றிவிட்டன. இவ்வாறே காலத்திற்குக் காலம் மாறுதல்கள் ஏற்பட்டன. இன்றைய நமது சமுதாயம் ஏதாவது மாற்றங்களை விரும்பினால் அவற்றையும் செய்தாக வேண்டும். மகான்கள் தோன்றி அதனை எப்படிச் செய்வது என்பதைக் காட்டுவார்கள். ஆனால் நமது மதத்தின் கோட்பாடுகள் ஒரு துளிகூட மாறாது: அவை அப்படியே இருக்கும்.

சுவாமிஜீ விவேகானந்தர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் 1897ஆம் ஆண்டு ஆற்றிய சொற்பொழிவிலிருந்து....



# மாணவர்களின் குறிக்கோள் திறன்
## (Goal Setting Skill)

பா.வரதராசா, ஓய்வுபெற்ற தபாலதிபர், புங்குடுதீவு, பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர்.

உடலியக்கமும் உயிரியக்கமும் இணைந்த சிறப்பியக்கமே ஜீவன். உடலோடு உயிரானது சுழன்றியங்கும்போது அவ்வுயிரின் சிறப்பாற்றலாக எழும் விளைவுகளே உணர்ச்சிகள். உணர்ச்சிகள் ஊடாகக் கற்றும், கேட்டும் அறிந்துகொள்வதே "அறிவு". முன்மூளை, நடுமூளை, அடிமூளை ஆகிய நம் மூளையின் முப்பிரிவுகளின் தொழிற்பாட்டில் புத்தி, அறிவு என்பனவற்றின் வளர்ச்சி மையமாகவும், நினைவாற்றலின் இருப்பிடமாகவும் உள்ளது முன்மூளையாகும். ஐம்பொறிகளின் செயற்பாடுகள் யாவும் இதன் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இந்த மூளையை இயக்குவது மனம். மூளையின் நினைவாற்றல், செயல்திறன் யாவும் மூளை, மனத்திடமிருந்தே பெறுகிறது. மனத்தில் இருந்தே எமது எண்ணங்கள் தோன்றுகிறது. எமது எண்ணங்களே புலனுணர்வுகளான மனவெழுச்சிக்கும், இயல்பூக்கங்களுக்கும் பொறுப்பானது. எனவே, கல்வியின் இலக்கை எட்ட சிக்மன் பிரயிட்டின் கருதுகோளான பாலுணர்வை, கல்வியின் பக்கம் திசை திருப்பி, எண்ணம் ஒருமுகப்படும்போது, மனம் வலிமை பெறுவதுடன் மின்னேற்றம் பெறுகிறது. இம் மின்னேற்றலைத் தாம் விரும்பும் திசையிற் செலுத்தும்போது வாழ்வில் அவன் சாதிக்கமுடியாதது எதுவுமில்லை. எனவே, மாணவர்கள் தம் குறிக்கோள் இலக்கை எட்ட எண்ணங்களை ஒருமுகப்படுத்தி மனவொடுக்கத்தைப் பெறவேண்டும். மனவொடுக்கத்திற்குத் தியானம் உதவுகிறது.

மாணவர்களே! உங்கள் வளர்ச்சியில் என்றும் ஈடுபாடு கொண்ட மனிதர் ஒருவர் இருக்கிறார் என்றால். அது நீங்கள் மட்டுமே. உங்களை உருவாக்கிக் கொள்ளும் சக்தியும் உங்களின் நல்ல குறிக்கோளிலிருந்தே பிறக்கிறது. உங்கள் குறிக்கோள்தான் செயலாற்றச் செய்கின்றது. அச்செயலுக்குச் சக்தியளிப்பதே உங்களின் குறிக்கோள் தான். நினைப்பது நடப்பதும், கேட்டது கிடைப்பதும் உங்கள் குறிக்கோளிற்றான் உள்ளது.

### குறிக்கோள் - ஆசை - விருப்பம்

எமது குறிக்கோளுக்கும், ஆசை, விருப்பம் என்பவற்றிற்கும் இடையிலான வேறுபாட்டினை நாம் அறிந்திருத்தல் அவசியம். குறிக்கோள் என்பது உடல், பொருள், ஆவியாற் காத்து வளர்க்கப்பட்டது நிமிடத்திற்கு நிமிடம் தோன்றி மறைவது "ஆசை" துன்பத்தைக் கண்டதும் ஓடி மறைவது. "விருப்பம்" இவை மூன்றில் மாணவர்களுக்கு அவர் வாழ்வை முன்னேற்ற இன்றியமையாதது குறிக்கோளே. நான் என் மனத்திடத்தால் "உலக வரலாற்றில் எனது பெயரைப்பதிய வைப்பேன்" என்ற முசோலினியின் குறிக்கோளின் பற்றுறுதியே அவரை ஓர் சுதந்திர வீரனாக்கியது. ஏழ்மையில் வாடி, விறகு வெட்டிப் பிழைத்து, இரவிற் புத்தகத்தை அவ்விறகு எரித்த ஒளியிலும் படித்து, சட்ட மேதையாகி, அமெரிக்காவின் ஜனாதிபதியானவர் ஆபிரகாம் லிங்கன். இதற்கு உதவியது அவரது குறிக்கோளும், அது நோக்கிய கடின உழைப்புமே.

### வெற்றி எண்ணத்தைப் பொறுத்தது.

எதற்கும் உன்னதமான இலட்சியம் அல்லது குறிக்கோள் அல்லது நோக்கம் எமது

மனதிற் குடிபுக வேண்டும். அப்படியான குறிக்கோள் ஒவ்வொரு மாணவரிடத்தும் குடிகொண்டால் நீங்கள் இன்று கண்ட கனவு நாளை நனவாகும். நாடு கடத்தப்பட்டு, நாட்டுக்கு நாடு ஓடி மறைந்து வாழ்ந்த லெனினின் குறிக்கோள்தான் பூமிப்பந்தில் ருஷ்ய நாட்டைப் பொறித்தது. உரிய குறிக்கோளையடைய விடாமுயற்சியுடன் தொடர்ந்து செயற்படுங்கள். முயற்சி மெய் வருந்தக்கூலி தரும். மூளையும் முயற்சியுமிருந் தால் முடியாதது எதுவுமில்லை. உங்களது சிந்தனையிற்றான் வெற்றி நிலைக்கிறது. உடலுக்கு உணவளிப்பது போன்று, உள்ளத் திற்கும் சிந்தனைமூலம் உலகமறிந்து குறிக் கோளை எட்டுங்கள். குறிக்கோள் உள்ளவன்; பசி நோக்குவதில்லை, கண் துஞ்சுவதில்லை. பிறர் ஏளனத்தைப் பொருட்படுத்தாது கருமமே கண்ணாய் நடந்து செல்கிறான். மாணவர்களே, கல்வியின் நோக்கம் வாழ்க் கைக்கு ஆயத்தம் செய்தலே.

பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையில் நடைபெறும் தொடரியக்கமே "வாழ்வு" . இந்த வாழ்வு குறிக்கோளற்றதானால், முயல் விட்டுக் காக்கை பின் சென்ற கதையாகி விடும். திசையறிகருவியற்ற படகாய் நீங்கள் எந்தக் கரையினையும் அடையாது தத்தளிக்க நேரும். எனவே, நீங்கள் இலக்குகளைத் தீர்மானித்துத் திட்டமிட்டுச் செயற்படுங்கள். வாழ்வில் வெற்றி பெறுவீர்கள். இலக்கு என்பது எவ்வாறு அமைய வேண்டும் என்பதை "Smart" என்ற எழுத்துக்களால் விபரிக்க முடியும்.

S - Specific -தெளிவானதாய் இருத்தல் வேண்டும்.

M - Measurable -அது அளவிடக் கூடியதாக இருக்க வேண்டும்.

A - Attainable -அது அடையக் கூடியதாய் இருக்க வேண்டும்.

R - Realistic - அது யதார்த்தமானதாய் இருத்தல் வேண்டும்.

T - Time Boound-அது கால எல்லையுடையதாக இருக்க வேண்டும்.

## இலக்குகளின் வகைகள்

அவை :

1. குறுகிய கால இலக்கு
2. நீண்ட கால இலக்கு
3. உடனடி இலக்கு

இந்த உடனடியான இலக்குமையம் குறுகியகால இலக்கிற்கும், குறுகிய கால இலக்குமையம், நீண்ட கால இலக்கிற்கும் இட்டுச் செல்கிறது. இலக்குகளை மாணவர் எட்டும்போது மகிழ்ச்சியடைகின்றனர். மனம் விரும்பும், மகிழ்ச்சிதரும் பாட விதானங் களையே மாணவர் பெற்றோரினதோ, ஆசிரியரினதோ செல்வாக்கிற்கு அடிமையா காது தெரிவுசெய்து கற்கவேண்டும். மனம் விரும்பும் பாடங்களிலேயே மாணவர் சித்தி யடைகின்றனர். அத்துடன், திட்டமிட்ட ஒரு செயற்பாட்டை நிறைவு செய்வது; வேறு கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. வாழ்க்கையின் வெற்றியில் நேர முகாமைத்து வம் மிக மிக அவசியம். உயர் வகுப்பு மாணவர் கள் பரீட்சையிற் சித்திபெற வகுப்பறைக் கல்வியைக் கடினமாக்கி ஆசிரியரிடமும், சக மாணவரிடமும் வினவி, சந்தேகங்களை நீக்கிக் கொள்ளவேண்டும். அத்துடன் குழுக் களாக இணைந்து கற்கலாம். மீட்டலின் போது ஒருவர் மற்றவருக்குக் கற்றுக்கொடுக் கும் பாணியிற் குழுக்களுடன் மீட்டலில் ஈடுபட வேண்டும். நல்ல நண்பரின் கூட்டும் இங்கு அவசியம். எந்த ஒரு காரியமும் இலக்கில்லாது ஆர்வமில்லாது சாதிக்க முடியாது.



# மாணவர் உளநலம்

திருமதி சிவப்பிரியா சோதிலிங்கம், B.A. கனடா.

பிள்ளைப்பருவம் 5 வயது தொடக்கம் 12 வயது வரையானது பிள்ளைகளின் உளநலம். மேம்பாடாகக் காணப்படுமிடத்தில் அவர்களின் தேக உளச் செயற்பாடுகளும் சிறப்பாக அமையும். இதன் காரணமாக அவர்கள் ஆரோக்கியமான வளர்ச்சியையும், நிலையையும் அடைவர். "உளநலம் என்றால் என்ன?" என நோக்கில் உணர்ச்சிகள், அறிவாற்றல், நடத்தைக்கோலங்கள் என்பன ஒருவரிடத்தில் ஆரோக்கியமாக இருக்கும் தன்மையே உளநலம் எனப்படுகின்றது. பிள்ளைகளின் உணர்ச்சிகள், அறிவாற்றல், நடத்தைகளில் ஆரோக்கியமான தன்மையிற் காணப்படுவார்களாயின் அப்பிள்ளைகள் உளநலத்துடன் இருக்கின்றார்கள் எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. உளநலம் உள்ள பிள்ளைகள் அவர்களின் வயதிற்கு ஏற்றதாகவும், சம்பவங்களுக்கு ஏற்றதாகவும் துலக்கங்களை வெளிப்படுத்துவர். சிறந்த உளநலம் உள்ள பிள்ளைகள் தமது நாளாந்த வாழ்க்கைச் செயற்பாடுகளைச் சிறப்பாகச் செய்யக்கூடியதாக இருப்பதோடு, இயல்பு வாழ்க்கை வாழக்கூடியவர்களாகவும் விளங்குவர்.

பிள்ளைகளின் உளநல ஆரோக்கியத் தன்மையானது எவ்வாறு இருக்கின்றது என்பதனை அவர்களது செயற்பாடுகள்மூலம் அறிந்து கொள்ளலாம். பிள்ளைகள் சமவயதுக் குழந்தைகளுடனான செயற்பாடுகள்மூலம் வெளிப்படுத்தும் பிரதிபலிப்புக்கள், உணர்ச்சிகளை வெளிக்காட்டும் தன்மை, உற்சாகம், அக்கறையுடன் தொழிற்படுதல். நம்பிக்கைக்குரியவராக இருத்தல், அவர்கள் குடும்ப மட்டத்திற் செயற்படும் பாங்கின் தன்மைகள், தமது வயதுக்கு ஏற்ப நடத்தைகளை வெளிப்படுத்தும் தன்மைகள், சமூகத்தோடு இசைந்து நடக்கின்றதன்மைகள் என்பவற்றின்மூலம் தெளிவாக அறிந்துகொள்ளலாம். மேற்குறித்த காரணிகள் சிறப்பாகக்காணப்படுமிடத்தில் அப்பிள்ளைகள் சிறந்த ஆரோக்கியமான உளநலத்தினைப் பெற்றுள்ளவர்கள் எனக் கருதப்படுவர். மேலும் பிள்ளைகள் வாழ்வில் மகிழ்ச்சி, துக்கம், கோபம், இழப்பு, பயம், விரக்தி, கசப்பு போன்ற உணர்வுகள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். இவ்வாறான நிலைகளில் அச்சந்தர்ப்பங்களுக்கு ஏற்பச் சரியான முறையில் துலக்கங்களைப் பிள்ளைகள் வெளிப்படுத்துவார்களாயின், அதுவும் பிள்ளைகளின் சிறந்த ஆரோக்கியமான உளநலத்தையே வெளிப்படுத்தி நிற்கும்.

சிறந்த உளநலமுடைய பிள்ளைகள் விளையாடுதல், கற்றல், நாளாந்தக் கருமங்களை ஆற்றுதல், வீடு, பாடசாலை, ஆலயம் போன்றவற்றில் தமது கடமைகளைச் செய்தல் ஆகியவற்றில் அக்கறையுடன் செயற்படுவார்கள். சாதாரணமாக நல்ல உளநலம் உள்ள பிள்ளைகள் தமது சகபாடிக் குழுக்களுக்கு முன்மாதிரியானவர்களாகவும், சகபாடிக் குழுக்களால் மதிக்கப்படுவர்களாகவும் இருப்பர். இவற்றைவிடச் சிறந்த உளநலமுள்ளவர்கள் குடும்பத்துடனும், வகுப்பறைச் சூழலிலும், பாடசாலைச் செயற்பாடுகளுடனும், சமூகத்தோடும் ஒத்திசைந்து நடக்கக் கூடியவர்களாக இருப்பர். இவ்வாறான

பரந்துபட்ட ஈடுபாடுகளும், செயற்பாடுகளும் பிள்ளைகளது ஆளுமையை வளர்க்க உதவுகின்றது. வயதுக்கு ஏற்ற ஆளுமை வளர்ச்சியைப் பெற்றபிள்ளை ஆரோக்கியமான உளநலத்தன்மை யுடையவராக விளங்குவது சுலபமானதாக அமையும் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

உளநலக்குறைபாடுடைய பிள்ளைகளை அவர்களது நடத்தைக் கோலங்கள் மூலமும், உயர்ச்சிகளை வெளிப்படுத்துகின்ற தன்மைகளிலும், அறிவாற்றல் தன்மைகளிலும், அறிவாற்றல் தன்மையை வெளிப்படுத்துகின்ற தன்மைகளிலிருந்தும் இனம் கண்டுகொள்ளமுடியும். சரியான காரணமில்லாது அடிக்கடி அல்லது எந்நேரமும் அழுதல், நித்திரை குறைவாக இருத்தல் அல்லது நித்திரை குழம்புதல். பயங்கரமான கனவுகளைக் காணுதல். அளவுக்குமிஞ்சிய நித்திரை, அளவுக்கு மிஞ்சிய பயத்தினால் நடுங்குதல். உணவில் அக்கறை கொள்ளாது இருத்தல், படுக்கையை நனைத்தல், முரட்டுத்தனம் காண்பபடுதல், மூர்க்கமான சுபாவத்தை வெளிப்படுத்துவராக இருத்தல், தேவை எதுவுமின்றி உரத்துக் கத்துதல், காரணமின்றித் தலையிடி, முதுகுவலி, வயிற்றுக் கோளாறு, கண்குத்து போன்ற செயற்பாட்டு அறிகுறிகள் காணப்படுதல். அதிகளவில் ஒதுங்கியிருத்தல், தம்மிலும் பிறரிலும் நம்பிக்கையீனம் கொண்டிருத்தல். சேர்ந்து விளையாட முடியாத நிலை காணப்படுதல், ஞாபகக்குறைவு ஏற்படுதல், அமைதியின்றி அந்தரப்படுதல், வேலை செய்து முடிக்க இயலாமல் இருத்தல், எதிர்காலம் பற்றி எதிர் மறைவான எண்ணம் இருத்தல், ஒழுங்கற்ற பாடசாலை வரவு காணப்படுதல், பிறழ் நடத்தைக் கோலங்களை வெளிப்படுத்தல் போன்ற நடத்தைப் பாங்குகளை வெளிப்படுத்தும் பிள்ளைகள் உளநலக் குறைபாடுடைய பிள்ளைகளாகக் கருதப்படுவர்.

பிள்ளைகளின் உளநலத் திற் செல்வாக்குச் செலுத்துகின்ற காரணிகளை இரண்டு வகையாக இனம் கண்டுகொள்ளலாம்.

1. பரம்பரைக் காரணிகள்
2. சூழற் காரணிகள்

பரம்பரைக் காரணிகள் பெற்றோர்களிடமிருந்து பிள்ளை சந்ததி சந்ததியாகப் பெற்றுக்கொள்ளுகின்ற இயல்புகளுக்கான காரணிகளாக அமைகின்றது. இப்பரம்பரைக்குரிய காரணிகள் பிள்ளையின் தந்தையினுடைய அல்லது தாயினுடைய இயல்புகளாகவோ அல்லது அவர்களது மூன்று அல்லது நான்கு தலைமுறையினருக்கு முற்பட்ட இயல்புகள்கூடப் பரம்பரை ரீதியாகப் பெறப்பட்டதாக அமையலாம். தோலின் நிறம், சிகையின் நிறம், அதன் தன்மை, கண்மணியின் நிறம் போன்றவை மட்டுமல்லாது; ஒருவரது உயரம், நிறை போன்ற உடலியல் தன்மைகளும், குணாதிசயங்கள், துலக்க முறைகள் போன்ற உளவியல் தன்மைகளும் பரம்பரைக் காரணிகளாக பங்குவகிக்கின்றன. சில சந்தர்ப்பங்களிற் சந்ததி சந்ததியாகக் கடத்தப்படுகின்ற அல்லது பிறப்பின்போது உருவாகின்ற சிலநோய்களும் மூளையைப் பாதித்து அதன்மூலம் உளநலத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பாடசாலைச்சூழலைப் பொறுத்தவரையிற் கல்வி கற்கும் பிள்ளைகள் அனைவருக்கும் ஒரே விதமான தூண்டல்கள் கிடைக்கின்ற பொழுது அவர்கள் எல்லோரும் ஒரே வகையான துலங்கல்களை வெளிப்படுத்துபவர்களாகக் காணப்படுவதில்லை. இதற்குப் பல்வகையான காரணிகள் காரணமாக

அமைகின்றன. அவற்றில் ஒன்றாக அமைவது பரம்பரைக் காரணிகள் என்பதும் நோக்கத் தக்கது. பிள்ளைகளின் நலத்திலே பரம்பரைக காரணிகள் செல்வாக்குச் செலுத்துவதுபோற் சூழற் காரணிகளும் ஆதிக்கம் செலுத்து கின்றன. பிள்ளைகள் பாரம்பரியமான இயல்புகளோடு பிறந்தாலும், அவர்களின் இயல்புகளை வளர்த்தெடுத்தல். அவ்வியல் புகளை ஒடுக்குதல், பதிய இயல்புகளை உருவாக்கி வளர்த்தெடுத்தல். ஏற்கனவே சூழலால் உருவாக்கப்பட்ட இயல்புகளைப் பின்னர் மாற்றியமைத்தல் எனப் பலவழி களிலும் சூழற்காரணிகள் சிறுவர்களின் உளநலத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன. பிள்ளைகளின் உளநலத்தினை மேம்படுத்த வேண்டுமாயின் சூழற் காரணிகள் பற்றி அறிந்திருத்தல் அவசியமாகும். சூழற்காரணி களை உயிரியற் சூழற் காரணி பௌதிகச் சூழற்காரணி என மேலும் இருவகையாகப் பிரிக்கலாம் உயிரியற் காரணிகள் என்னும் பொழுது பெற்றோர், சகோதரர்கள், உறவினர் கள், அயலவர்கள், நண்பர்கள், பாடசாலைச் சமூகத்தினர், சகபாடிக் குழுக்கள் மற்றும் சமூக அங்கத்தவர்கள், செல்லப் பிராணிகள் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன். பௌதிகச் சூழற்காரணிகள் என்னும் பொழுது வீடு, விளையாட்டிடம், விளையாட்டுப் பொருள்கள், வகுப்பறை, பாடசாலைச்சூழல் போன்ற பொருள்சார்ந்த இயற்கைச் சூழல், செயற்கைச் சூழல் என்பன யாவும் இதனுள் அடங்குகின்றன.

ஆகவே, பிள்ளைகளின் உளநலத்திற் செல்வாக்குச் செலுத்துகின்ற அடிப்படைக் காரணிகளாகப் பரம்பரைக் காரணிகளும், சூழற் காரணிகளும் ஆதிக்கம் செலுத்து கின்றன. பிள்ளைகளின் உளநலம் அவர்களின் கற்றல் நடவடிக்கைகளிலும் செயற்பாட் டாற்றல் தன்மைகளிலும் பெரிதும் ஆதிக்கம் செலுத்துகின்றன. உளநல ஆரோக்கியமுள்ள பிள்ளைகள் கற்றல் நடவடிக்கைகளிலும், செயற்பாட்டாற்றல் தன்மைகளிலும் சிறப்பான துலக்கங்களை வெளிப்படுத்துவர். மாறாக அமையும் பட்சத்தில் அவர்களின் நடவடிக்கைகள் எதிர்மறையானவையாகக் காணப்படும். உளநலத் தேவைகள் தேவைப் படும் பிள்ளைகளுக்கு அவற்றை உருவாக்கிக் கொடுத்தல் அவசியமான கடமையாகும். அத்தகைய தேவையுள்ளோருக்குப் பின்வரும் செயற்பாடுகளை வழங்கல் வேண்டும்.

- குடும்பச் சூழலில் அன்பானதாகவும், ஆதரவு கொடுப்பதாகவும், ஒற்றுமை யானதாகவும் இருக்க வகை செய்தல்
- பிள்ளைகளுக்கான பாதுகாப்புச் சூழலை உருவாக்கிக் கொடுத்தல்
- பிள்ளைகள் பின்பற்றக்கூடிய முன் மாதிரியான விடயங்களை முன்வைத்தல்
- மாற்றத்துக்குள்ளாகாத நிலையான சூழல் கிடைக்கக்கூடிய தன்மைகளை ஏற்படுத்தல்
- பிள்ளைகளுக்கு நம்பிக்கைகளை ஏற்படுத்தக்கூடிய வழிவகைகளைச் செய்தல்

# கல்விச் செயல் முறையில் ஆசிரியரின் பங்கு

திருமதி கலா.பாஸ்கரன்,
முன்னாள் ஆசிரியை, புங்குடுதீவு மகாவித்தியாலயம், கனடா.

மனித வாழ்க்கை வளம்பெற இன்றியமையாத அடிப்படைகள் இரண்டு, ஒன்று தனி மனிதன் ஆற்றல்களையும், சிறப்புத் திறமைகளையும் முழுமையாக வளர்த்துக் கொண்டு செயலாற்றுதல். மற்றது சமூக முன்னேற்றத்திற்கு உதவுதல். இவை இரண்டுமே மனித மேம்பாட்டில் இணைந்த இலக்குகள். இவ்விரு இலக்குகளையும் அடையத் திட்டமிடப்பட்ட கல்விமுறை அவசியம். கல்வி என்பதன் பொருள். "உயர்த்துதல்" வெளிக் கொணர்தல் எனக் கொள்ளலாம். பிள்ளைகளிடம் உள்ளார்ந்து கிடக்கும் ஆற்றல்களை வளர்ச்சிபெற்ற செயற்திறன்களாக மாற்றம் பெற உதவுதலே "கல்வி" என்பதன் பொருளாகும். உண்மையான கல்வி குழந்தைகளின் சமூகத் தேவைகளை நிறைவு செய்ய அவர்களின் திறமைகளைத் தூண்டுவதனால் ஏற்படும் பயனாகும் என்பர். கல்வியியலாளர் ஜான்டூயினது கோட்பாடுகளுக்கு அமையவே வாழ்க்கைக்கு உதவக் கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது. பண்டைய கல்வி முறையைத் தவிர்த்து பரந்த பொருளிற் கல்வி என்பது நடத்தையைப் பாதிக்கும் எல்லாச் செல்வாக்குகளையும் உள்ளடக்கிய பிறப்பு முதல் இறப்பு வரை நீடிப்பதாகும். இதனையே ஆன்றோர் "பாடை ஏறினும் ஏடது கைவிடேல்" என்றனர். குறுகிய பார்வையில் இன்று கல்வி திட்டமிட்டு முறையாக அமையும். (Formal Education) செயல்களையே குறிக்கும். சமூகப் பண்பாடு, மரபு போன்றவற்றை விளக்கு வனவாக இன்று பாடசாலைகள் விளங்குகின்றன. இது மனிதன் தோன்றிய காலத்திலிருந்து வரும் அறிவு வளர்ச்சி, செயற்றிறன்கள் பழக்கங்கள், நடத்தை முறைகள், இலக்கியங்கள், நுண்கலைப் படைப்புக்கள், மனப் பான்மைகள், வாழ்க்கை மதிப்புக்கள் போன்றவற்றையும் உள்ளடக்கியது. இவற்றை சிதையாது காத்து இளம் தலை முறையினர்க்கு அறிமுகப்படுத்துவது கல்வியின் நோக்கமாகும். அத்துடன் புதிய பண்பாட்டுக் கூறுகளை கால நீரோட்டத்திற்கு ஏற்ப உருவாக்கலும் கல்வியின் பங்காகும். எல்லை கடந்ததாகக் கல்விக்கொள்கை மாறவேண்டும். அதாவது பாரம்பரிய முறைகளுக்கு அப்பாற் சென்று உலகமயமாக்கலின் தேவைகளுக்கு ஏற்ப வகுப்பறை இலக்கைவிட்டுப் பாடசாலைக் கல்வி முறையில் தொழில் நுட்பத்தை உபயோகிக்க வேண்டிய தேவை உள்ளது. இதனைக் கல்விக் கொள்கை வகுப்பாளர்கள் எதிர்காலத்திற் கருத்திற் கொள்ள வேண்டும்.

## ஆசிரியர்கள் பங்கு

ஆசிரியர்கள் உயர் தொழிற் (Profession) குழுவினர். இதனை அரசும், சமூகமும் ஏற்றுள்ளது. ஆதிகாலக் கல்வி முறை குருவை முதன்மையாகக் கொண்டிருந்தது. இடைக் கால கல்வி பொருளறிவையே முதன்மையாகக் கொண்டிருந்தது. ஆனால், இன்றைய கல்வி முறை மாணவர்களை முதன்மையாகக் கொண்டது என்பதை ஒவ்வொரு ஆசிரியரும் மனத்திற் கொள்தல் நன்று. இன்றைய பாடசாலைக் கல்வியின் இலக்கு தனியாள், சமூக மாற்ற இலக்கினைக் கொண்டுள்ளது. இது பலதிறப்பட்ட பாடத்திட்டங்களையும்,

செயல்களையும் கொண்ட விரிவான கல்வி ஏற்பாடாகும். இதனால் இன்றைய கல்வித் திட்டத்தில் ஆசிரியர்கள் உயர்தொழில்நிலை பெற்றதன்மூலம் ஏற்பட்டுள்ள பொறுப்புக்கள்.

- ஒவ்வொரு மாணவர் நிலை பற்றியும் அறிந்திருத்தல், அதாவது மாணவர்களின் உடற்றேவைகள், குடும்பச் சூழ்நிலை, மனவெழுச்சி என்பவை பற்றி முழுமையாக அறிந்திருத்தல்.
- அன்றாட வகுப்பறைச் செயல்களில் மேலாண்மை.
- பொருள்கள், கருத்துக்கள் என்பனவற்றுடன் அவர்களைத் தொடர்புபடுத்தி அவற்றின் நின்றும் அவர்கள் தேவையானவற்றைக் கற்க உதவும் செயல்கள்.
- தேவைப்படும்போது விளக்கம் கொடுத்தல், விவரித்தல், செய்துகாட்டல் போன்ற செயல்களுடன் இணைந்த பொறுப்புக்கள்.
- கற்றலில் மாணவர்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளைக் கண்டறிந்து அவற்றைக் களைய உதவுதல்.
- ஏற்பட்ட கல்வி இலக்குகளை நோக்கி ஒவ்வொரு மாணவனும் எந்த அளவு முன்னேறியுள்ளான் என்பதை மதிப்பிடல்.
- மாணாக்கனுக்கும், அவன் வாழும் சமூகமாகிய இருவருக்கும் கல்வி பயன்பட உதவுதல்.
- பின்பற்றலின் வழிதான் மாணவர்கள் கற்கின்றனர். எனவே, மாணவர்கள் என்ற கொடியானது பெற்றோரையும் ஆசிரியர்களையும் முன்மாதிரியாகக் கொண்டு படரும் கொடி என்பதை ஆசிரியர்கள் மனத்திருத்தி அவர்களின் எதிர்காலப் பயன்பாட்டிற்கான சகல நடத்தைகளுக்கும் முன்மாதிரியாக அவர்கள் நடை, உடை, பாவனை, ஒழுக்கம் என்பவற்றைக் கொண்டிருக்க வேண்டும். மாணவர் கற்பது 35 வீதம், ஆசிரியரது கட்புல உடல் அசைவு மூலம் கற்பது 65 வீதம், உடல் அசைவு மொழிகளாலுமே. நேரடியான வாய்ச் சொல்லாற் கற்பது ஆக 7 வீதமே. இவற்றைவிட உயிர்ப்பூட்டும் (Impiria-tion) பொறுப்புக்களும், அறிவுரை வழங்கும் பொறுப்புக்களும் உள்ளது. கற்பிக்கும்போது ஆசிரியர் அப்பொருளில் முழுமையாக இலகுவான வழிகளூடாகப் பிள்ளைகளைக் களைப்படையாதும், சோர்வடையாதும் அழைத்துச் செல்ல வேண்டும்.
- ஒவ்வொரு பிள்ளையும் சிறப்பாகக் கல்வி பயிலக் கூடிய வகுப்பறைச் சூழ்நிலை; போதிய காற்றோட்டம், வெளிச்சம், மகிழ்ச்சியான, அமைதியான சூழ்நிலைகளைக் கொண்டிருக்க வேண்டும். கற்றற் சூழ்நிலைகளில் ஆசிரியரின் ஆளுமையும் தம் குறைகளைத் தாமே ஆராய்ந்து திருத்தி முன்மாதிரியாகத் திகழ வேண்டும்.

## ஆசிரியர்களுக்குத் தேவையான திறன்கள்

- கல்வியின் முக்கிய நோக்கம் மாணவரிடம் கற்றலைத் தோற்றுவித்தலாகும். இத்திறனுக்கு ஆசிரியர்கள் தம்மைத் தகுதியுடையவர்களாக்கிக் கொள்ள வேண்டும். அத்தகுதியுள்ளவர்களாலேயே கற்றலின் பயனான மாணவர் நடத்தை மாற்றத்தை ஆசிரியரால் ஏற்படுத்தமுடியும். கற்றலுக்கு அடிப்படை: கற்போன் தானே செயலாற்றுதலாகும் (Self Acturity). இவை உடல், உளத்தைச் சார்ந்திருக்கும். எனவே, அவர்களின் கற்றல் ஆர்வத்தை தூண்டும்

வகையில் ஆசிரியர் திறன் இருத்தல் வேண்டும்.

- எதனைக் கற்பது, எவ்வாறு கற்பது, எப்போது கற்பது, கற்பதற்கு மாணாக் கர்களுக்கு எச்செயலும் பொருளும் உதவும் என்பதன் அடிப்படையில் ஆசிரியர் ஊக்குவிப்பு அமையவேண்டும்.
- மாணவர்களுக்குத் தாம் கற்பிக்கவுள்ள பொருளறிவு பற்றி முதலில் விளங்கப் படுத்தி அவற்றை மாணவர் முன்னறி வுடன் (Appereception) தெளிவாகக் கற்பிக்க வேண்டும்.
- கற்பித்தலில் வினாக்களை நன்கு பயன் படுத்தும் திறன் தேவை. இதனால், கற்றலின் முன்னேற்றம் பற்றி மதிப்பிட முடியும்.
- மாணவர்களைச் சிறு சிறு குழுக்களாகப் பிரித்து அவர்களிடம் சமூகத்தன்மை, நட்பு, பரிவு, மகிழ்ச்சி என்ற பண்புகளை உருவாக்க, சமூகத் தலைமைப் பண்பை உருவாக்க வேண்டும்.
- மாணவரின் இந்த வினைத்திறன், ஆக்கத்திறன் ஆகியவற்றை வளர்க்க உதவுதல். பாடப் பொருள் பிரச்சினை களை அறிமுகம் செய்து அதற்கான தீர்வுகளை முயற்சிக்கும்போது, மாணவர் சிந்தனையாற்றல் பெருகும். புதிய வழிகளிற் சிந்தித்து, புதுமை படைக்க உதவல்.
- மதிப்பீடு. (Evaluation) இது கல்வியில் இன்றியமையாதது. இதைப் பாடசாலை யில் இறுதித் தேர்வுகளூடாக மட்டு மன்றி, மாணவர்களின் பிற ஆற்றல் களையும், பண்புகளையும் மதிப்பிட வேண்டும்.
- வழிகாட்டலும், அறிவுரை பகர்தலும் இது கல்வியில் இன்று முக்கிய அம்சமாக வுள்ளது.
- மற்றும் நிர்வாக மேலாண்மை, மனிதத் தொடர்பு (Human Relationship) போன்றவற்றுடன் இணைந்த திறன் களைக் கற்பித்தலாகும். இது ஒழுக்கம், கட்டுப்பாடு, பெற்றோர் சமுதாயத்துடன் நல்ல வகையான நல்லுறவை ஏற்படுத்த வும் உதவும்.



# சமாதானக் கல்வியும், ஆசிரியரும்

செல்வி வி. ப. சித்திராதேவி, பிரதி அதிபர்.

எமது இளைய தலைமுறை எதிர் காலத்தில் வன்முறையைச் சாராதிருக்கும் பொருட்டு, அவர்களைச் சமாதானத்தில் நாட்டம் கொண்ட பிரஜைகள், கூட்டத்தவ ராக ஆக்குவது ஆசிரியர்களது இன்றைய தலையாய பொறுப்பு ஆகும்.

இன்று, முன்னர் எக்காலத்தையும் விடப் பிள்ளைகளை வன்முறையில் ஊக்குவிக் கும் காரணிகளை நாம் பார்க்கின்றோம்; கேட்கின்றோம். அவர்கள் கேட்பனவற்றை யும், காண்பனவற்றையும் அறிந்தோ அறியா மலோ கற்கிறார்கள். சமூகத்திலே அதிகரித்து வரும் வன்முறை அலையின்பாற் சிறார்கள் ஈர்க்கப்பட இடமளித்து, கல்வியால் வெறு மனே பார்த்துக் கொண்டிருக்கவியலாது. சமாதானம் என்பது ஒரு நாட்டில் தானாகவே தோன்றுவதல்ல. அது அங்குள்ள பிரஜை களாற் கற்கப்பட வேண்டிய நடத்தைக் கோலங்கள் ஆகும். பிள்ளைகளுக்குச் சமா தானம் கற்பிக்கப்பட வேண்டிய அவசியம் இன்று பல நாடுகளால் உணரப்பட்டுள் ளமையை அந்நாடுகளின் கல்விச் சீர்திருத்தங் களாற் புலனாகின்றது. சமாதானக் கல்வி பல்வேறு நாடுகளில் பலவாறான முறைகளால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இது மானிடவாதக் கல்வி, உலகளாவிய கல்வி, விழுமியக்கல்வி, பிணக்குகளுக்குத் தீர்வு காணல் ஆகிய பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

சமாதானக் கல்வியின் அபிலாஷை யானது சிறார்கள் வன்முறையின்பாற் சார்வதைத் தவிர்த்து, அவர்கள் அமைதியான, உற்சாகமான நல்ல மனிதர்களாக வளர்ச்சி பெற வழிகாட்டலே ஆகும். பிள்ளைகளைச் சிறந்த நபர்களாக்குவதன் பொருட்டு அவர் களிடையே தன்மானத்தை உருவாக்குவதற் காகத் தம்மையும், ஏனையோரையும் உள்ளார்ந்து நோக்கவும், சுய விளக்கத்தின் வாயிலாக ஆழ்ந்த விவேகத்தை வெளிக் கொணரவும், மனோவமைதியை ஏற்படுத்திக் கொள்ளவும் சமாதானக் கல்வி வழி காட்டும்.

இவ்வாறாக நோக்குகையில் உண்மை யாகவே சமாதானக் கல்வி அறிவுசார்ந்த பாடம் என்பதைவிடக் "கல்வி நுழைவு" ஒன்றெனக் குறிப்பிடுதல் நியாயமானது எனலாம். அதன் சிறப்பு அங்கு மேற்கொள்ளப் படும் கல்வி முறையிலேதான் தங்கியுள்ளது. சமாதானக் கல்விக்காகக் கையாளத்தக்க விடயங்களை எந்தவொரு பாடத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறே எந்த வொரு பாடத்தையும் சமாதானக் கல்வி நுழைவினாற் கற்பிக்கவும் இயலும். பாட சாலைகளிற் கால அட்டவணையிற் சமாதானக்கல்வி என வாரத்தில் ஒரு பாட வேளையை உருவாக்கிக் கற்பிக்கலாம். பாடசாலை நேரத்தின் பின்னர் வார இறுதி யில் அல்லது விடுமுறை நாட்களில் மேலதிக

விசேட பாடமாக ஒழுங்கு செய்யலாம். அன்றி ஒய்வுப் பாட வேளைகளின் போது வகுப்புகளுக்குச் செல்லும் ஆசிரியர்கள் வாயிலாகக் கற்பிக்கலாம். ஏனைய பாடங்களோடு தொடர்புபட்ட பொருத்தமான விடயங்களோடும் சேர்த்துக் கற்பிக்கலாம்.

ஒருவர் சமாதானத்தைக் கற்பிப்பதாயின் அவர் தம் தோற்றத்தாலும், அன்றாடப் பிரச்சினைகளில் அவர் செயற்படும் விதத்தாலும் அது புலனாக வேண்டும். ஆசிரியரது நடத்தை வாயிலாக வெளியிடப்படும் சமாதான முன்மாதிரி உண்மையாகவே உறுதியான கற்றல் அடிப்படைகள் எனலாம்.

சமாதானத்தைக் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரில் மிளிரவேண்டிய நடத்தைப் பண்புகளாவன:

- அவர் கற்பிப்பவரைவிடக் கற்றலுக்கு உதவுபவர்
- அவர் ஜனநாயகவாதி ஆவார்
- அவர் பிள்ளைகளது கற்றற்றிறன்களை நம்பிக்கையோடு நோக்குபவர்.
- அவர் உலகளாவிய கண்ணோட்டத்துடன் மாணிடப் பிரச்சினைகளை நோக்குபவர்.
- அவர் தனிநபர் அபிவிருத்தியாளர்

மேற்கூறப்பட்டவற்றின் ஊடாக, சமாதானக் கல்வி எனும் பதம் நாட்டினுடைய அத்திவாரத்துக்கு எவ்வாறு உறுதுணையாக உள்ளது என்பது கண்கூடு. ஒரு நாட்டினுடைய பொருளாதார அபிவிருத்தி ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு இனங்களிடையே ஏற்படுகின்ற ஒற்றுமை, சமூக கலாச்சார பண்பாடுகளிடையே காணப்படுகின்ற இணக்கப்பாடு என்பன பிரதானபங்கைப் பெறுகின்றன. ஆகவேதான் சமாதானக் கல்வி எனும் பதம் பெறுமானம் அடைகின்றது. இவற்றினுடைய பெறுமதிக்கு ஏற்ப ஆசிரியர் செயற்பாடு அமைகின்ற பொழுது, நீண்டதொரு வெற்றியை ஒரு நாடு பெற்றுவிடுகின்றது. சமாதானக் கல்வி முன்மாதிரியான ஒரு ஆசிரியரினால் முன்னெடுத்துச் செல்கின்றபொழுது எதிர்பார்க்கின்ற இலக்கை வென்றுவிட முடியும் என்பதே இக்கட்டுரையின் சாராம்சமாகும்.

பெருமை மிக்க இந்த ஆன்மாவில் நாம் நம்பிக்கை கொள்ளவேண்டும். அதிலிருந்து ஆற்றல் வரும். எதை நினைக்கிறீர்களோ, அதுவாக ஆவீர்கள். நீங்கள் உங்களைப் பலவீனர்கள் என்று நினைத்தால், பலவீனர்கள் ஆவீர்கள்; வலிமையானவர்களாக நினைத்தால் வலிமைமிக்கவர்கள் ஆவீர்கள். தூய்மையற்றவர்களாக எண்ணினால் தூய்மையற்றவர் ஆவீர்கள். தூய்மையானவர்களாக எண்ணினால் தூயவர் ஆவீர்கள்.

சுவாமிஜீ விவேகானந்தர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் 1897ஆம் ஆண்டு ஆற்றிய சொற்பொழிவிலிருந்து....



# எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே.......

எஸ்.கே.சதீபன், (பத்திரிகையாளர்)
செயலாளர், பளவிளா நிறைவேற்றுச்சபை, பழைய மாணவர் சங்கம்.

நல்லவராவதும், தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே, மனிதன் ஒரு சமூகப்பிராணி, சமுதாயத்தில் ஓர் அங்கம், உலகில் உள்ள ஒவ்வொன்றும் தன்னளவில் நல்லவையுமல்லத் தீயவையுமல்ல. மழை பெய்கிறது. அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது மனிதனின் கடமை. மழை பெய்யும் வேளையில் அதைத் தேக்கியும், மடை மாற்றியும், பயிர் செய்யப் பயன்படுத்தவில்லையெனில் அறுவடையை எதிர்பார்க்க முடியாது. வாய்ப்பை நழுவவிட்டு மழையைக் குறை சொல்வது எப்படி நியாயம்? குளிருக்கு இதம் தரும் நெருப்பு, உணவைச் சமைக்க உதவுகின்றது. ஆனால், ஒரு தீப் பொறி அவன் வீட்டையே சுடுகாடாக்கி விடுகிறது. எனவே, எந்தப் பொருளையும் நல்லது அல்லது கெட்டது என்று முத்திரை குத்திவிட முடியாது.

பிறக்கின்ற குழந்தைகள் எல்லாம் இதே போன்றவையே. அவர்கள் பிறக்கும் போதே நல்லவர்களாகவே பிறக்கின்றனர். அவர்கள் பெற்றோரால், ஆசிரியரால், சமூகத்தால் ஆற்றுப்படுத்தத் தவறுவதால் கெட்டவராகின்றனர். இதனாற்றான் தீர்க்கதரிசனமான திரைப்படப்பாடலில் நல்லவராவதும் கெட்டவராவதும் அன்னை வளர்ப்பினில் என்றான். குழந்தைக்குப் பள்ளிக்கல்வி மட்டும் போதாது. வாழ்க்கைக் கல்வியும் தேவை. கல்வியென்பதில் வாழ்வுக்கு ஆயத்தம் செய்து சில பாடசாலைகளும், வீடுகளும் இணைந்து செயற்படு மிடங்களிலேயே சிறந்த மாணவர்கள், சிந்தனையாளர்கள் உருவாகின்றனர். அப்படியானவர்களாலேயே வீடும் நாடும் பெருமையடைகிறது.

பிறந்தது முதல் ஒரு குழந்தை பார்ப்பதையும், கேட்டதையும் நன்றாகக் கவனிக்கின்றான். கற்றலுக்குக் கட்புல, செவிப்புலனுமே நுழைவாயில். குழந்தை பெற்றோர் பேசுவதையும், வார்த்தைகளை உச்சரிப்பதையும், காரியங்களைச் செய்வதையும் கூர்ந்து கவனித்துக் கொள்கிறது. குழந்தைகளுக்கு இது நல்லது, இது கெட்டது என்று ஆரம்பகாலத்தில் தெரியாது. அதுபற்றிய பாகுபாடும் கிடையாது. அவர்கள் அடிக்கடி பார்க்கின்ற செயலை அது ஆவலோடு கற்றுக் கொள்கிறது. தானும் அவ்வாறு செய்கிறது. பால்மா கம்பனியிற் பணியாற்றும் தாய், தினமும் பால்மா பைக்கற்றுக் கொண்டுவருவதைப் பார்த்த அவரது குழந்தை அடுத்த வீட்டிலுள்ள பொருட்களை எடுத்து வருகிறது. இத்தவறுக்கு யார் பொறுப்பு? குழந்தைகளுக்கு நல்ல செயல்களைக் கற்றுக்கொடுக்க வேண்டுமானால் பெற்றோர் நல்லவற்றையே செய்யவேண்டும். ஏன்? பிள்ளை படிக்க வேண்டு மானால் பெற்றோர் வீட்டிற் படிக்க வேண்டும். அதை அவதானித்தே பிள்ளை படிக்கிறது.

குழந்தைகளுக்கு மூன்று வயதாகும் போது, அதன் கற்றுக் கொள்ளும் திறன் உச்சத்திலிருக்கும். இப்பருவத்தில் பிள்ளையின் பெற்றோரும், குடும்ப உறுப்பினரும் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். தமது குழந்தையின் எதிர்காலம் எப்படி இருக்கவேண்டும் என்பதை ஒவ்வோர் பெற்றோரும் தீர்மானிக்கின்றனர். அதற்கு ஏற்ப குழந்தைகளுக்குப் பயிற்சியளிக்கவும், வாழ்க்கைக்குத் தேவையான நற்பழக்க வழக்கங்களையும், பாடல்களையும் கற்றுக் கொடுப்பதற்கு முதல் ஐந்து வருடங்கள்

மிகவும் முக்கியமானவை. இதனாற்றான் ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையா தென்றனர் ஆன்றோர். பாடசாலைக்குச் செல்லும்முன் வாழ்க்கைக்குத் தேவையான பாடங்களைத் தான் பிறந்த குடும்பத்தினரிடம் தான் கற்றுக்கொள்கிறது. இதனாற்றான், மாதா, பிதா, குரு என்று தாயை முன் வைத்தனர்.

வாழ்க்கைக் கல்வியில் முதலில் ஒரு குழந்தைக்குத் தன்னம்பிக்கையூட்ட வேண்டும். "உன்னால் இது முடியும். முன்பைவிட இப்பொழுது இதை மிகச் சிறப்பாய் செய்கி றாய்" எனக்கூறி, குழந்தையைப் பெற்றோர் அடிக்கடி ஊக்கமூட்ட வேண்டும். இப்படி யான ஊக்க வார்த்தைகள் அவர்கள் மனத்திற் பதிந்து தன்னம்பிக்கையினையும், மன உறுதிப்பாட்டையும் ஏற்படுத்தித்தந்து, அறிவை வளர்க்கிறது. அத்துடன் குழந்தை சரியாகச் செய்யும் புதிய செயல்களைக் கைதட்டி மனப்பக்குவமாய்ப் பாராட்ட வேண்டுவதுடன் சிறு சிறு பரிசுப் பொருட் களையும் கொடுக்கவேண்டும். பிள்ளையின் கல்வியில் அக்கறை காட்டாத பெற்றோர், பிள்ளைகள் தாமே முயன்று பேச்சுப்போட்டி யில் முதல் பரிசு பெற்றுவந்து பெற்றோரிடம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள முயற்சிக்கும் போது பெற்றோர் ஆகா இந்த பிளாஸ்ரிக் தான் உமக்குக் கிடைத்த பரிசா? வீட்டில் இதைப்போல் எத்தனை கிடக்கிறதென்று பிள்ளையை மனமுடையச்செய்து மட்டம் தட்டும் பெற்றோரும் எம்மிடமுண்டு. இப்படி யான எதிர்மறை நோக்குடைய பெற்றோர் செயற்பாடு, பிள்ளையின் கண்ணுக்கு எப்படியான எதிர்காலத்தை உருவாக்கும். மேலும், குழந்தைகளுக்கு உடல் உபாதைகள் பற்றிய சரியான சொற்களை அதாவது பசிக்கிறது, வயிறு வலிக்கிறது போன்ற விடயங்களைச் சரியாகச் சொல்லக் கற்றுக்கொடுப்பதாற் பிள்ளையின் உடல்நலம் குறித்து வீண் பயங்களில் இருந்து குடும்பம் விடுபடும்.

குழந்தை சமுதாயத்தின் ஒரு அங்கம் என்பதை அவர்களுக்கு உணர்த்துவதுடன், சமுதாயத்துடன் இணைக்க உறவை ஏற்படுத் தக் கற்றுக் கொடுக்கவேண்டும். பிறரை மதிப்பிட்டு அவர்களது உணர்வுகளை அக்கறையோடு கேட்பது, மற்றையோர் மனம் புண்படாமற் பேசுவது, முடிந்தளவு உதவி களைப் பிறருக்குச் செய்வது, மற்றவர் நலன் களில் அக்கறை காட்டுவது போன்ற உயர் பண்புகளைப் பெற்றோர் கற்றுக்கொடுக்க வேண்டும்.

வயதிற்கு ஏற்ற உடல் வளர்ச்சியைப் பிள்ளை வீட்டிற்கு வெளியே சென்று விளையாடுவதாலேயே பெறமுடியும். இப்படி விளையாடும்போது பிள்ளைகள் சேர்ந்து வாழவும், விட்டுக் கொடுக்கவும், வெற்றி தோல்வியைச் சமாளிப்பது போன்றவற்றை யும் பிள்ளைகள் போதியளவு கற்றுக்கொள் கின்றதுடன், தலைமைத்துவப் பண்பையும், உடல் உறுதியையும் பெற்றுக்கொள்கிறது. சில பெற்றோர், தமது பிள்ளைகளை மற்றையோருடன் சேரவோ, விளையாடவோ விடாது பயமூட்டி வைக்கின்றனர். இதனால் பிள்ளை மகிழ்ச்சியைத் தொலைத்து விடுகிறது. மகிழ்ச்சியான சூழலே பிள்ளையின் கல்வி விளைநிலம். குழந்தைகளின் திறமை யினை ஊக்குவிக்கும் முயற்சியிற் பெற்றோர் ஈடுபடவேண்டும். கலை, ஓவியம், பாட்டு, நடனம், வீரவிளையாட்டுக்கள், தற்காப்பு முறைகள் பற்றிய அறிவு பெறவும், அவற்றில் ஆர்வம் ஏற்படவும் வசதி செய்யவேண்டும்.

குழந்தைகளின் படிக்கும் ஆர்வத்தைக் கண்ட பெற்றோர் முதலில் வாசிப்புப் பழக்கம் உடையோராக இருத்தல் வேண்டும். அதன் மேற் பிள்ளையைப் புத்தகங்களை நேசிக்கப் பழக்கவேண்டும். வாசிப்பதனாலேயே ஒரு வன் பூரணஅறிவைப் பெறுகிறான். ஒவ் வொருவரது நல்ல நண்பன் என்றால் சிறந்த நூல்களே. எனவே, குழந்தையின் வாழ்வில் விலை உயர்ந்த பரிசு சிறந்த நூல்களே,

அவர்களின் எல்லாவகையான தன்மைக்கும் அடிப்படையாக அமையும்.

பெற்றோரும் ஆசிரியரும், பிள்ளைகளுக்கு வெற்றிதோல்வியை சமநோக்குடன் ஜீரணிக்கக் கற்றுக்கொடுக்க வேண்டும். வெற்றியைக் கொண்டாடும் நாம் தோல்வியை ஏற்க மறுக்கின்றோம். பரீட்சைப் பெறுபேறு வெளியானதும் மாணவர் துவண்டு விடுகிறார்கள். எனவே, தோல்வியை வெற்றியின் முதற்படி என்பதை உறுதிப்படுத்தி மாற்றுப் பாதையில் முன்னேற வழிகாட்ட வேண்டும்.

கற்றுக்கொடுக்கும் மகிழ்ச்சியான பொழுதுகள்; குழந்தைகள் சிறப்பு, பெற்றோரில் அடங்கியுள்ளது. பெற்றோர் பிள்ளைகளுக்கு வாய்ப்புக் கிடைக்கும் பொழுதெல்லாம், பிள்ளைகளின் நண்பர்களாக மாறிக் கற்றுக்கொடுக்க வேண்டும். பிள்ளை பெற்றோரிடம் எதிர்பார்ப்பது அவர்களின் தூய அன்பையும், அரவணைப்பையுமே. ஒரு பிள்ளையை நாடு போற்றும் நல்லவனாக ஆக்கும் பொறுப்பு, பெற்றோரதும் ஆசிரியரதுமே. பெற்றோர் தம் பிள்ளைமீது காட்டும் அன்பு அவனிடம் மிகப்பெரிய மாறுதலை ஏற்படுத்தும். இரும்பைப் பொன்னாக மாற்றும் ஆற்றல் "ஸ்பரிது வேதி" என்ற கல்லுக்கு உண்டு. அதேபோல் மந்தமாக இருக்கின்ற குழந்தையை மகானாக உருவாக்கும் ஆற்றல் பெற்றோரின் அன்புக்கு உண்டு. அன்பு ஒரு பொழுதும் குறை காண்பதில்லை. எனவே. பெற்றோர் இதனை வய்ப்புள்ள போது தமது குழந்தைகளை அருகில் உள்ள ஆலயங் களுக்கு அழைத்துச்சென்று, "நாம் செயலுக்கு மட்டும் பொறுப்பானவர்கள்; கடவுளின்றி எதுவும் நடப்பதில்லை. எனவே, விளைவுக்கு வேறொருவர் பொறுப்பாக உள்ள அவர் எல்லாவற்றையும் கடந்தவர் என்பதால் கடவுள் எனப்படுகின்றார்." என்பதையும், அவர்மீது நம்பிக்கையையும், பக்தியையும், மனவொழுக்கத்தையும், மற்றவருடன் சேர்ந்து பழகுவதையும் கற்றுக் கொடுப்பதால், மனவுறுதி, தூய அறிவு நினைவுகள், தீயவற்றிற்கு அஞ்சுதல், நல்லாரிணக்கம் போன்றவற்றினைப் பெறுகிறது.

பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டுமொன்றாக இன்றைய உலக மயமாக்கலுடன் இணைந்து ஆற்றல் பெறக்கூடிய கணினிக்கல்வி இணையத்தள கற்றல், ஆசிரியரில்லாதே கற்கும் சாதனைகள் என்ற நவீன கல்வி அறிவு பற்றி அறிவைப் புகட்ட முடியும்.

நாம் வாழும் சூழலில் இருந்து பிள்ளைகளுக்கு நிறைய உதாரணம்காட்டி அவர்களின் அறிவை வளர்க்கலாம். மழை பெய்யும் போது அந்த மழைத்துளி விளை நிலத்தில் விழுந்தாற் புனிதமாகவும், சாக்கடையில் விழுந்தால் அசுத்த நீராகவும் வெறுக்கப் படுவதாகக் கூறி நல்ல நண்பர்களைத் தெரிவு செய்ய ஆலோசனைகளாகவும், வீட்டினிற்கும் பயன்படும்படி உதவுவதுபற்றி விளக்கலாம். கோயில், நூலகம், கல்வி - பண்பாட்டுச் சுற்றுலா, கல்வி, தொழில்நுட்பக் கண்காட்சி, கல்வி - பண்பாட்டு கலைவிழாக்களுக்குக் கூட்டிச் செல்லாம். சமய, சமூக, இன, பண்பாட்டு நெறிகளையும், விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் உலக மயமாக்கலையும் பற்றி விளக்கலாம்.

இப்படியாக, கலைகள் சேமமாகவும், புதுக் காட்சிகள்மூலம் பார்க்கவும், பெற்றோர் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுப்பதற்கும், அவர்கள் சொல்வதை, மொழியாக்கத்தை விரிவடையச் செய்யவும், பெற்றோர் மனம் கொள்ளவேண்டும். பிள்ளைகளுக்கும், பெற்றோர் கல்வியுடன், ஒழுக்க நெறிகளையும், மானிட விழுமியங்களையும் கற்றுக் கொடுப்பது உத்தமமே. முன் உதாரணமாக விளக்கவேண்டும். இன்றைய சிறார்கள் நாளைய தலைவர்களே!

# வறுமை கல்விக்குத் தடையல்ல

செல்வி நாகமுத்து கேதீஸ்வரி,
பிரதி அதிபர், ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்

"முயற்சி திருவினையாக்கும் முயற் றின்மை இன்மை புகுத்தி விடும்" தமிழ்மறை நோக்கில் முயற்சியில்லாத சோம்பேறியிடமே வறுமை குடிபுகுவதாக வள்ளுவர் காண்பார். எனவே, மெய்வருந்தினாற் கூலி கிடைக்கும். வறுமை நீங்கும், இதனையே நம் முன்னோர் அனுபவ வாக்காய் "பத்துவிரலாற் பதறி யடித்தால் ஐந்துவிரலால் அள்ளிச் சாப்பிட லாம்" என்றனர். திருவள்ளுவர் ஞானி இதற்கும் ஒருபடி மேலேயும் சென்று " இலம் என்று அசையி இருப்பாரைக் காணின் நிலம் என்னும் நல்லாள் நகும்" என்பார். எனவே, பொருள் இல்லை என்று வறுமையால் சோம்பி இருப்பாரைக் கண்டால் அவனு டைய அறியாமையை நினைத்து நிலமகள் தன்னுள் சிரிப்பாளாம். கல்லினுள் தேரைக்கும் இயற்கை உணவளிக்கிறதல்லவா? இது இயற்கையின் கொடை, எனவே, சோம்பலே வறுமையின் மூலவேர். மூளையும் முயற்சியுமி ருந்தால் முடியாதது ஒன்றுமில்லை. உழைப் பினால் பெற்ற சொந்தப் பொருளுக்குள்ள மதிப்பு, கடன்பட்டுப் போட்டுள்ள முதலுக் குக் கிடையாது என்பார் ஹென்றிபோட். எனவே, உழைப்பதிற்றான் வாழ்வு வாழ்கின் றான். இன்பம்" உழைப்பு. வறுமையை மட்டும் விரட்டவில்லை. திறமைகளையும் அது விரட்டுகிறது. முயற்சியின்மைக்கு ஊக்க மளிப்பது இயல்பூக்கமான தாழ்வுணர்ச்சி யாகும்.

உங்களுக்குத் தெரிந்த சாதனையாளர் களைப் பற்றி ஒரு நிமிடம் நீங்கள் மீட்டுப் பாருங்கள். அவர்களிற் பெரும்பாலானோர் வறுமையூடாகவே தம் சாதனைகளைப் படைத்துள்ளனர். அவர்களின் பற்றுறுதியான இலட்சியம், தன்நம்பிக்கை, நல்லெண்ணம், உற்சாகம் நல்லது நடக்கும் என்ற எதிர் பார்ப்பு, சிந்தனை ஆற்றல் என்பவையே அவர்களின் சாதனைகளின் பின்னால் நின்றுள்ளது. சாதனையாளர் எடிசன் தன் உறுதிப்பாட்டைப் பின்வருமாறு வரைந்துள் ளார். "எக்காரணத்திலும் என் மனம் தளர நான் அனுமதிப்பதில்லை. எச் செயலைச் சாதிப் பதற்கும் குன்றா உழைப்பு, குறையா முயற்சி, கூரிய புத்தி ஆகிய மூன்றும் வேண்டற் பாலனவை என்பார்.

மாணவர்களாகிய நீங்கள் கல்வியிற் சாதனை படைக்க விரும்பினால் முதலிற் கல்வியை விரும்பவேண்டும். விருப்பமான பாடங்களிலேயே, மகிழ்ச்சியான சூழ்நிலை களிலேயே கல்வி சிறந்த பெறுபேற்றைத் தருகின்றது. எனவே, கல்வியிற் சாதனையீட்டு வதை உங்கள் இலக்காகக் கொண்டு கொஞ்சம் உழைக்கவேண்டும். கொஞ்சம் பொறுமை காக்க வேண்டும். திரும்பிப் பார்க்காமல் நம்பிக்கையுடன் நடக்கவேண்டும். ஸ்கொட் லாந்தின் மன்னன் றொபட்புரூஸ், இங்கி லாந்து யுத்தத்தில் தோல்வியுற்று தலைமறை வாகக் காட்டில் வாழ்ந்தான். மன்னனுக்கு "முயற்சி திருவினையாக்கும்" "தோல்வியே வெற்றியின் முதற்படி" யெனப் பாடம் கற்றுக்கொடுத்தது ஒருசிலந்திப் பூச்சி. நாட்டை மீட்டான் மன்னன். துரோணாச்சாரி யார் காட்டிய இலக்கில் துரியோதனன் அடர்ந்த மரத்திற் பசிய இலைகளைக்

கண்டான். அவனைத் தவிர்த்துவிட்டு அருச்சுனனிடம் இலக்கைக் காண்பித்தார். அவனுக்கு எதுவுமே தெரியவில்லை. பறவையின் கழுத்துமட்டுமே தெரிந்த தென்றான். துரோணாச்சாரியார் "பின்பு மேன் தாமதம்" என்றதும், அருச்சுனனது வில்லில் இருந்து புறப்பட்ட அம்பு பறவையுடன் கீழே விழுந்தது.

எனவே, மாணவருக்குக் கருமமே கண்ணான இலக்கு அவசியம். அமெரிக்க நாட்டின் ஜனநாயகக் கோட்பாட்டின் தந்தை அதன் ஜனாதிபதியாயிருந்த ஆபிரகாம் லிங்கன் அடிமை முறையை அங்கு ஒழிக்கத் தன் உயிரை அர்ப்பணித்தவர். அவருக்கு இளமையிற் பாடசாலை செல்லமுடியாத வறுமை. தந்தையின் தச்சுப் பட்டறையில் துணைபுரிவார். கடைகளிற் சாமான் சுற்றிக் கொடுக்கும் பழைய தாள்களில் இருந்த விடயங்களைப் படிப்பார். பல மைல்கள் தூரம் நடந்துசென்று புத்தகங்களைக் கடன் வாங்கி வந்து வீதி விளக்கின்கீழ் இருந்து படிப்பார். அவர்தான்; சட்டம் பயின்று, வழக்கறிஞராகி வரலாறு போற்றும் ஜனாதி பதியுமானார். எனவே லிங்கன் கல்விக்கு வறுமை தடையாகவிருக்கவில்லை. முயற்சி யே படிக்கட்டாயிருந்து உதவிற்று. உலகை யே தன் 37 நாடகங்களூடாக வசப்படுத்தியவர் வில்லியம் சேக்ஷ்பியர். வறுமையாற் சிறுவயதிற் குதிரை லாயத்திலும், நாடகக் கொட்டகையிலும் வேலைசெய்து பிழைத்த வர். அவர் தமது 52ஆவது வயதிற்றான் நாடகங்களை எழுதத் தொடங்கினார். உலகப் புகழ்பெற்றார். அவரது மறைவிற்குப்பின் ஒருநாள் அவரது வரலாற்று ஆசிரியரை பத்திரிகை நிருபர் ஒருவர் சந்தித்தார். "சேக்ஷ்பியர் பற்றி சுருக்கமாக ஏதும் சொல்லுங்கள்" என்றார். அதற்கு அவர் "ஷெக்ஸ்பியர் இளமையில் வறுமையில் வாடியபோது தன்னம்பிக்கை இழக்காதவர்; தன்னடக்கமானவர், நல்ல உழைப்பாளி ஒரு நிமிடத்தைக்கூட அவர் வீணாக்கியதில்லை. இரவில் அவர் தூங்குவது அதிக பட்சம் மூன்று மணி நேரமே. தனக்கிருந்த குறை கஷ்டங்கள் எதனையுயே அவர் என்றுமே நினைத்து வருந்தியதில்லை. அவர் எழுதிய நாடகங்கள்தான் மனித மேம்பாட்டிற்கான பாடங்கள் இல்லை. அவரது வாழ்க்கையே மற்றவர்களுக்குப் பாடங்கள்தான்" என்றார். ஆங்கில இலக்கியத்திற் சொர்க்கம் இழக்கப் பட்டால் (Paradise Lost) என்ற மாபெரும் காவியத்தை எழுதியவர், இரு கண்களும் குருடான மில்டன் என்பவர். இதைக் கேட்கும்போது வியப்பாகவிருக்கின்றதல் லவா? யாழ்ப்பாணத்தைப் பரிசாகப் பெற்ற யாழ்பாடியும் ஒரு குருடர். அவர் பாடிய பாட லில் மகிழ்ந்தே மன்னன் யாழ்ப்பாணத்தைப் பரிசாக அளித்தான். அதே போன்றே மில்டன் தன் பாடல்களைப் பாட அவரது இரு பிள்ளைகளும் அதைக் காவியமாக எழுதி முடித்தனர். எனவே, ஒருவரது வறுமைநிலை மட்டுமல்ல; உலகத்தையே பார்க்க முடியாத ஊனமுற்ற நிலைகூடக் காவியம் புடைக்கத் தடையாயிருக்கவில்லை. மில்டன் மனத்தளர் வின்மையே வெற்றியின் இரகசியம் என் பதைப் பின்வரும் வரிகளில் கூறியுள்ளார். "மனம் என்பது தன்னுரிமை பெற்ற இடம். அது மோட்சத்தை நரகமாகவும், நரகத்தை மோட்சமாகவும் ஆக்கவல்லது" என்றார். தையல் இயந்திரத்தைக் கண்டறிந்த ஒலியாஸ் ஹோவே துரும்பு போன்றவர். மெலிந்தவர். இளமையிலிருந்தே பஞ்சத்தாலும், வறுமையா லும் வாடியவர். வறுமை அவர் ஆய்விற்குத் தடையாகவிருக்கவில்லை. பார்வையற்றோர் படிக்கும் பிரெய்லி என்ற எழுத்துமுறையைக் கண்டறிந்தவர் பார்வையிழந்த லூயிஸ் பிரை யில் என்பவர். இதில் பார்வை இழந்தவரே பார்வை இழந்தவர்க்கு உதவியுள்ளார்.

எனவே, வாழ்வின் வெற்றிக்கு வறுமையோ ஊனமோ தடைகளல்ல என்பதை மேற்படி எனது ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. அப்படியானால் வாழ்வின் வெற்றிக்கான வழியினை விஞ்ஞானி அல்பட் ஐயன்ஸ்டீன் பார்வையில் நோக்குவோம். ஓர் அன்பர் ஒருமுறை ஐயன்ஸ்டீனை அணுகி "வாழ்க்கையில் வெற்றி பெறுவது எப்படி? என்று கேட்டார். அதற்கு அவர் 'A=x+Y+Z" என்று பதில் சொன்னார். 'A" என்பதை வாழ்க்கையின் வெற்றியாக எடுத்தால்; அதை அடையக் கடின உழைப்பென்ற Xயும் Yஎன்னும் ஆரோக்கியமான விளையாட்டையும் கொண்டிருக்க வேண்டும் எனக் கூறிவிட்டுக் கதையை நிறுத்திவிட்டார். கேள்வி எழுப்பியவர் Z என்பதற்கு விளக்கம் சொல்லவில்லையே" என்றார். "Z என்றால் வாயை மூடிக் கொண்டிருப்பது" என்றார். எனவே வெற்றிக்குத் தேவையான பண்புகளாவன: மிகத் தெளிவான இலட்சியம், மன உறுதி, நிலை குலையாத் தன்மை, தனது ஆற்றலைப் புரிந்துகொள்ளுதல், கால நேரமறிந்து செயற்படல், நற்குணங்கள், உதவும் மனப்பாங்கு, தனது ஆளுமையினைப் புரிந்து கொள்ளுதல், தளராத ஊக்கம், விரைந்து செயற்படல், ஆராய்ந்து அறிதல், ஈடுபாடு, விடாமுயற்சி, செய்ய முடியுமென்ற தாழ்வுணர்வற்ற சிந்தனை, தன் பலவீனத்தை அறிந்து செயற்படல், கருமமே கண்ணாயிருத்தல், நீங்கள் எப்படிப்பட்டவராக விரும்புகிறீர்களோ அப்படிப்பட்டவர்களுக்கான மனப்படத்தைக் காலை நித்திரைவிட்டு எழும்போதும், இரவு நித்திரைக்குப்போகும் அரை மயக்க நிலையின்போதும் மனதில் நினைப்பீர்களாயின், அது நனவலி மனத்தின் பதிவிற்குச் சேர்க்கப்பட்டு நடைமுறைக்கு உதவும். நாம் தீயவராவதும், நல்லவராவதும் நனவலிமனப் பதிவுகளாலேயே.

எனவே, இளமையில் வறுமை கொடியது என்பது உண்மைதான். இதற்கான பொறுப்பு, பெற்றோருடைய தாழ்வு நிலையே. எனவே, பெற்றோர்கள் அனைவரும் தீய பழக்கங்களிலிருந்து விடுபட்டுப் பிள்ளைகளை "அவயத்து முந்தியிருப்பவர்கள் ஆக்க வேண்டும்" என்பதில் உறுதிபூண வேண்டும். எமது கிராமப் புறச் சூழல் மாணவர்களின் கல்வி வளர்ச்சியிற் பெற்றோரின் ஊக்கமின்மை, பொறுப்புணர்வின்மையே தடையாகவுள்ளது. வறுமையென்பது எமது வாழ்வின் வளர்ச்சிக்கும், வெற்றிக்கும், மகிழ்ச்சிக்கும் குறுக்கே நிற்கும் ஒரு விதப்பகை. இப்பகையை வெற்றிகொள்ள முற்கூறிய இலட்சிய புருஷர்களின் வறுமையில் வாடிய வரலாற்று நாயகர்களின் வாழ்வியலை உதாரணம்ாக்கி, மாணவர்களே; துணிவுடன் நடந்து செல்லுங்கள். வாழ்வில் நீங்கள் நினைத்ததைப் பெறலாம். வறுமை கல்விக்கு என்றும் தடையல்ல. தாழ்வுணர்வும் முயற்சியின்மையுமே எமக்குத் தடையாகின்றது. "பதவி" என்ற நிலையை நீங்கள் எட்டவேண்டுமானால், அதாவது ப-என்ற பசித்திருத்தலையும் த- என்ற தனித்திருத்தலையும் '; வி-என்ற விழித்திருத்தலையும் நீங்கள் ஊன்றுகோலாகக் கொண்டு உழைக்க வேண்டும். கருமமே கண்ணாயிருக்க வேண்டும்.



# பாடசாலைகளிற் பாலியற் கல்வியின் தேவையும் கலவன் பாடசாலைகளின் அவசியமும்

நா. நாகராசா
அதிபர், புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்.

"உண்மையான கல்வி மாணவரின் சமூகத் தேவைகளை நிறைவுசெய்ய, அதன் திறமைகளைத் தூண்டுவதனால் ஏற்படும் பயனாகும்" உலகில் ஏற்படும் தவறுகள் யாவற்றிற்கும் அடிப்படைக் காரணம் அறியாமையும், அக்கறையின்மையுமே. அறியாமையினை அறிவைக் கற்றலினாலேயே அகற்ற முடியும். அறிவின்மை வறுமையைத் தரும். பிறந்தது முதல் 6 வயதுவரை பிள்ளை தாய் சொல்வதையே நம்புகிறது. 6-12 வயதுவரை பிள்ளை ஆசிரியர் சொல்வதையே நம்புகிறது. அதன்பின் திருமண பந்தம்வரை நண்பர்கள், நண்பிகள் சொல்வதையே நம்புகிறது. சமூக நோக்கில் ஒழுக்கம் உயிரை விட மேலாகப் போற்றப்பட வேண்டியது. பழையன கழிதலும் புதியன புகுதலும், உலக மயமாக்கலுக்கு ஏற்பக் கல்வீபெற வேண்டியதும் காலத்தின் கட்டளையும், நாகரிக மனிதனின் அடிப்படைத் தேவையுமாகும். நாகரிகமென்பது திருந்திய வாழ்க்கையாகும். பண்பாடென்பது திருந்திய ஒழுக்கமாகும். இவைதான் மானிடனை விலங்கினத்தின் நின்றும் வேறுபடுத்துபவை. ஆறாம் அறிவின் ஆதார சுருதிகள் இயல்பூக்கங்கள். பிள்ளைகளின் அறிவு வளர்ச்சி, நடத்தை, ஒழுக்கம் ஆகியவற்றின் கருப்பொருளாகும். ஒழுக்கம், ஒழுங்கு, தற்கருத்து என்பன சமூக வளர்ச்சியுடன் தொடர்புபட்டவை. நல்லொழுக்க வளர்ச்சி பெற்றோர், ஆசிரியர், சமூகப் பெரியோராகியோரின் கூட்டு முயற்சியால் எழ வேண்டியதாகும். இதில் மத நம்பிக்கைகள், மரபுப் பழக்க வழக்கங்கள் முக்கிய இடம் பெறுகின்றது. கிறிஸ்தவ மதபீடம் கருத்தடை முறைகளை அனுமதிப்பதில்லை. இதனால், பாலியல் நோய்ப் பரம்பலுக்கு வழியமைக்கப் படுகின்றது. பாலியல் என்பது மனித தேவைகளான பசி, தாகம் போன்ற உடலியல் தேவையாகும். இதை எவரும் புறக்கணிக்கத் தேவையில்லை. மனித ஆற்றல்கள் யாவும் மூலாதாரத்தில் உள்ள பாலுணர்வு (லிபிடோ) மையத்தினாலேயே ஆட்சி செய்யப்படுகின்றது.

இவ்வுணர்வை உரிய முறையில் நெறிப்படுத்தக் கற்றுக் கொண்டவனே வாழ்வில் வெற்றியீட்டியவன். அதில் தோல்வியடைந்தவர்களே பாலியல் நோய்களுக்கு ஆளாகியும், சமூகச் சீரழிவின் விருந்தாளியாகி இடைவயதில் இறக்கின்றனர்.

உலக மக்களை இன்று பேரழிவிற்கு இட்டுச்செல்லும் மருந்தறியப்படாத' கொடிய நோய் 75 வீதம் பாதுகாப்பற்ற பாலியல் நடத்தைகளால் பரவும் HIV எயிட்ஸ் நோய்; இது பூமிப் பந்தில் 47 நாடுகளில் தன் கோரப் பிடியைப் பதித்துள்ளது. கடந்த மூன்று தசாப்தத்திற்கிடையே இந்நோய் தன் கொலை வெறிக்கு மூன்று கோடி மக்களைத் தம்பசிக்கு இரையாக்கியும், நாலரைக்கோடி மக்களைத் தம்பசிக்கு உணவாக்கிக் கொண்டும் உள்ளது. வருடம் 20 இலட்சம் மக்கள் இந்நோயால் இறக்கின்றனர். இது போதாதென்று தினமும் இரண்டாயிரம் சிறார்களையும், ஆறாயிரம் பருவ வயதினரையும் தினசரி தமது உணவிற்காய் இணைத்துக் கொண்டுள்ளது. ஏன்? கடந்த 5 மாதங்களில் யாழ். போதனா வைத்தியசாலையில் 42 HIV தொற்றுடையவர் பதிவு பெற்றுள்ளனர். பாலியல் வல்லுறவின்

மூலம் பெண்கள் இத்தொற்றைப் பெற்றுள்ளனர். உலகில் ஆறாயிரம் தேசிய இனங்கள் உள்ளது. அவர்களுக்கெனத் தனியான மரபுப் பழக்கங்கள் உள்ளது. நேபாளத்தில் உள்ள பகடிஸ் இன மலைவாழ் மக்களில் தாய் தன் மகள் பூப்பெய்தியதுமே விழாவெடுத்து பாலியல் தொழிலுக்கு அறிமுகம் செய்யும் வழக்கு இன்னும் உள்ளது. ஆசியாவில் இத்தொற்று போதையுண்ணிகளாலேயே பரப்பப்படுகின்றது. எச்.ஐ.வி. வைரஸ் ஆனது மனித உடலில் நோய் எதிர்ப்புப் பொறிமுறையினை முழுமையாக அழிக்கின்றது. பூமிப் பந்தில் உயிர்வாழும் 650 கோடி மக்களில் 60 வீதமானவர்கள் ஆசியாவில் உள்ளனர். நமது அயல் நாடான இந்தியாவில் 85 இலட்சம் மக்கள் எச்.ஐ.வி. எயிட்ஸ் நோயுடன் உள்ளனர். தமிழ் நாட்டிலிருந்தே இத்தொற்றை எமது நாட்டு மக்கள் பெற்றுள்ளனர். மேலும், இருபாலார் முறையற்ற பாலுறவின்மூலம் மேகநோய், வெட்டை நோய் போன்ற பாலியல் நோய்கள் (S.T.P.S) பரவுகின்றது.

கல்வி என்பதன் பொருள் வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்தலாகும். உலக சுகாதார ஸ்தாபனத்தின் (WHO) வரைவுகளின்படி, ஒருவரது கல்வியானது உடலைப் பற்றியும் மனதைப் பற்றியும் ஆன்மீகத்திருப்தி பற்றியும்> அவன் வாழும் சமூக மேம்பாடு பற்றியும் அமைய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. உலக சுகாதார ஸ்தாபன முன்னாள் இயக்குநரான மருத்துவ நிபுணர் எமது எதிர்கால சந்ததி எயிட்ஸ் சந்ததியாக மாறி வருவதாய்க் கவலை தெரிவித்துள்ளார். இத் தொற்றைத் தடுப்பதற்கான வழி இதன் காரண வைரஸ் ஆன றொட்ரோ வைரசினை சுகதேகியின் உடலிற் புகாது பாதுகாப்பதே. சுகாதார அமைச்சின் பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் நோய்க் கட்டுப்பாட்டுப்பிரிவு அண்மையில் 15 வயதிற்கு மேற்பட்ட பாடசாலை மாணவ, மாணவியரிடையே ஆய்வொன்றினை நடத்தியுள்ளது. அதன்படி 29 வீதமான மாணவர்கள் ஆபாசப் படங்கள் பார்க்கின்றனர் எனவும், 72 வீதமானவர்கள் பாலுணர்வு உள்ளவர்களாக இருக்கின்றனர் எனவும், 43 வீதமானவர்கள் எதிர்பாலாருடன் உறவுகளில் ஈடுபடுகின்றனர் எனவும் 43 வீதமானவர்கள் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுகின்றனர் எனவும் சுகாதார அமைச்சின் ஆய்வுகள் கூறுகின்றது. அத்துடன் பாடசாலை மாணவர்கள் தம் கோலவுடைகளைக் கழற்றி வைத்துவிட்டு கலாசாரச் சீரழிவில் ஈடுபடுவதும், பாடசாலை மாணவியர் கர்ப்பந் தரிக்கும் வீதமும் அண்மைக் காலமாக அதிகரித்து வருவதையும், கருக்கலைப்பு அதிகரிப்பதையும் மருத்துவத்துறை அறிக்கைகள் உறுதி செய்கின்றன. சுகாதாரத்துறை அறிக்கைகளின்படி உலகில் 21 கோடி பெண்கள் ஆண்டுகளுக்குள் ஒரு கர்ப்பமடைவதாயும், அவர் களில் மூன்றிலொரு பகுதியினர் தகாத உறவுகள்மூலம் கர்ப்பம் தரிப்பதாயும், இதில் 3-4 கோடிப் பெண்கள் கருக்கலைப்புச் செய்வதாகவும், இவர்களில் 90 வீதமானவர்கள் எமது நாடுகள் போன்ற வளர்முக நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதும் அறிய முடிகின்றது. உலகில் உள்ள 100 கோடி பெண்களின் பாலியல் உறுப்புக்கள் முடமாக்கப்பட்டுள்ளது. கருக்கலைப்பால் வருடம் 80 ஆயிரம் பெண்கள் மரணமடைகின்றனர். 5 இலட்சம் பெண்கள் கருக்கலைப்பைத் தொடர்ந்து வேறுபல நோய்களுக்கு ஆளாகின்றனர். இக்கருக்கலைப்பு உலகில் 79 நாடுகளிற் சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது. ஆனால், வசதிபடைத்த வளர்முக நாடுகளில் கருக்கலைப்பு மிக மிகக் குறைவு. இலங்கையிற் கிட்டத்தட்ட வருடத்தில் 3 இலட்சம் வரையான சிசுமரணம் ஏற்படுகின்றது. இதற்குச் சட்ட விரோதக் கருக்கலைப்பு நிலையங்களே உதவுகின்றன. இதிற் பெரும்பாலான கருக்கலைப்புகளானது தவறான உறவால் ஏற்படுபவையாகும். இதற்கு இளம் சமூகத்தினரின் பாலியல் அனுபவமின்மை,

கருத்தடைச் சாதன பாவனை பற்றி அறிந்தி ராமை முக்கிய காரணமாகும். கருக்கலைப்புச் செய்வோரில் 35 வீத மாணவர்களுக்கு மீண்டும் கர்ப்பம் தரிக்கும் வாய்ப்புக்கள் இல்லை. எமது நாட்டில் மூவாயிரத்திற்கு மேற்பட்ட கருக்கலைப்பு நிலையங்கள் உள்ளது. இந்நிகழ்வுகள் மானிடத்தின் எதிர் காலம் பற்றி ஆழமாகச் சிந்திக்க வைக்கின்றன.

**அழிவடைந்து வருகின்ற எம் கலாசாரம்; இதனால் ஆக்கிரமித்துள்ளது உயிர்கொல்லி நோய்களான எயிட்ஸ் பாலியல் நோய்கள்.**

எமது பிரசேத்தில் திடீர் மாற்றங்கள் உருவாகியதன் விளைவானது மேற்கூறிய உயிர் கொல்லி நோய்களைத் தந்துள்ளது. இறுக்கமான கட்டமைப்பைக் கொண்டிருந்த தமிழரின் கலாசாரப் பின்புலமும், வாழ்வியல் விழுமியங்களும் இன்று கேள்விக்குறியாகி யுள்ளது. இந்தத் திறந்த பாலியற் கலாச்சாரம் எம் மக்களின் கலாச்சார இருப்பின் மூல வேரையே பிடுங்கிவிட்டது. எம் கலாச்சாரக் கட்டமைப்பு முற்றுமுழுதாகவே சிதைக்கப் பட்ட நிலை எமக்கு விரும்பியோ, விரும்பாம லோ ஏற்பட்டுள்ளது. எனவே, எமது எதிர்காலச் சந்ததியான எமது பிள்ளைகள் - மாணவர்களையாவது இவ் அழிவில் இருந்து காப்பாற்றுவதற்கான ஒரே தேர்வு மாணவரி டையே கைத்தொலைபேசிப் பாவனையை பாடசாலைகளில் முழுமையாகத் தடைசெய் தலுடன், பாடசாலைகளிற் பாலியற் கல்வியை அறிமுகம் செய்தலுடன் பாடசாலைகள் யாவும் கலவன் பாடசாலைகளாக்க வேண்டும்.

2011ஆம் ஆண்டின் யுனிசெப் அறிக்கையில் இளம்பருவத்தில் உள்ளவர்கள் 30 இலட்சத்திற்கு அதிக மாணவர்கள் உள்ளனர். இவர்களில் ஒவ்வொரு ஆயிரம் பேருக்கு 28 பேர் என்ற வகையில் 15-19 வயதிற்கு இடைப்பட்ட சிறுமியர்; குழந்தைகளைப் பெற்றெடுப்பதாக ஆய்வுகள் மூலம் அறியப்பட்டுள்ளது. இதனடிப்படை யில் 24 ஆயிரம் சிறுமியர் குழந்தைகளைப் பிரசவிக்கும் அதேவேளை, மூவாயிரம் கருக்கலைப்பு நிலையங்கள்மூலம் நாள் ஒன்றுக்கு 550 - 700 வரையானதும் வருடம் 3 இலட்சம் வரையான கருக்கலைப்புக்கள் இடம்பெறுகின்றது. இந்நிலையானது இன்று இலங்கையிற் பாலியற் கல்வியின் அவசியத் தைப் புத்திஜீவிகள் மட்டத்தில் உணர்த்தி யுள்ளது. எனவே, 12-18 வரையான கட்டி ளமைப் பருவத்தினரான எமது இளம் சந்ததியினரை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டுமானால் அவர்களின் பாடவிதானத் திற் பாலியற் கல்வியைச் சேர்த்துக் கொள்ளுதல் அவசியம் எனக் கொழும்புப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் திருமதி சாவித்திரி குணசேகரம் வலியுறுத்தியுள்ளார். பாலியற் கல்வியைப் புகட்டுவதன்மூலம் எமது சமூகத்தில் உள்ள காமுகர்களிடம் இருந்து எமது பிள்ளைச் செல்வங்களைப் பாதுகாக்க முடியும் என்றும்; இவ் அறிவைப் பெறுவதனாற் சிறுவர்கள் உணர்வுகளுக்கு இடமளிக்காது தங்களைக் காப்பாற்றிக்கொள்ள முடியும் எனவும், சிறுவர், சிறுமியருக்குப் பாலியல் தொடர் பான சரியான தகவல்களை எடுத்துரைப்பதன் அவசியம் என்ற நிலைப்பாட்டின்கீழ் அதற் கான சட்டங்கள் நடைமுறையில், உள்ளதென் பதையும், பேராசிரியர் சாவித்திரி அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார். பாலியல் பற்றிய அறியாமையின் விழிப்புணர்வின்மையே வேண்டாத கர்ப்பம் தரிப்பதற்குக் காரணம் என்பதை நிராகரித்துவிட முடியாது. சட்டத் தில் விரும்பியவாறு கருக்கலைக்க முடியாது. சட்டவிரோதக் கருக்கலைப்பு இடம்பெறு கின்றது. இப்பிரச்சினை இலங்கைக்கு மட்டு மல்ல; சகல வளர்முக நாடுகளதும் பிரச்சினை யாகும். சட்ட அனுமதி கிடைத்த நாடுகளிற் குறைந்த கருக்கலைப்பே இடம்பெறுகின்றது. ஐரோப்பாவில் ஆயிரம் பெண்களில் 12

பேரும், ஆபிரிக்காவில் ஆயிரம் பெண்களில் 36 பேரும் கருக்கலைப்பில் ஈடுபடும்வேளை, ஆசியாவில் வருடம் தோறும் 2கோடியே 60 இலட்சம் பெண்கள் கருக்கலைப்பில் ஈடுபடுகின்றனர். கருக்கலைப்பினால் மாணவிகள் உட்பட இளம் தளிர்கள் உயிரிழக்கின்றனர். கருத்தடைச் சாதன வசதி மிகப்பெருகியுள்ள இக்காலத்தில் இத்தனை கருக்கலைப்பும், மரணங்களும் அவசியம்தானா? இலங்கையில் மொட்டுக்களும், இளம் தளிர்களும் கருகுவதைத் தவிர்க்க வேண்டுமாயின் எமது பாடசாலைகளிற் பாலியற் கல்வியைப் பாடத்திட்டத்தில் உள்ளடக்குவது இன்றைய காலத்தின் கட்டாயமாகவுள்ளது. காமம் வெட்கம் அறியாதது. அத்துடன் கற்பனை உலகில் எதையும் அறியவேண்டும், ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்னும் கட்டிளமைக் கால வியப்பு இயல்பூக்கத்தினாலேயே குறிப்பாக ஆராய்வு ஊக்கத்தினாலேயே விளைவறியாது எமது மாணவ, மாணவிகள் சிக்கலில் மாட்டிக் கொள்கின்றனர். இது வளரும் பிள்ளைகளிடம் நிறைய உண்டு. இவற்றைத் தவிர்க்க ஒரே ஒரு வழி இருபாலாரும் கலவன் பாடசாலைகளில் கல்வி கற்பதாகும். இதனால் மாணவர்களிள் வீண் கற்பனை மனவெழுச்சியைத் தவிர்க முடியும். இன்றைய திறந்த கலாச்சாரத்திற்கு உந்துசக்தியாக இருப்பது கைபேசிகளாகும். இக்கைபேசிகளை 18 வயதுவரை சகல ஆண்களும் பெண்களும் பாவிக்ககூடாது என உத்தர பிரதேச மாநில அரசு கொணர்ந்து இருக்கும் சட்டம் போன்று இங்கும் சட்டம் கொணர்ந்து தடைசெய்வதினால் மாணவர்களின் கலாச்சாரச் சீரழிவினைத் தவிர்கமுடியும். இளமையாய் இருக்கும் போது றோசா மலர்கள் மீதுபடுத்தால் முதுமையாகும் போது முட்களில் மீது படுக்கவேண்டும் என்பதை மாணவர்கள் மறந்துவிடக்கூடாது.

ஆன்மா பால் வேற்றுமை இல்லாதது. அது ஆணா பெண்ணா என்று நம்மால் கூறமுடியாது. பால்வேற்றுமை உடலுக்கு மட்டுமே. உடலைப் பொறுத்தவரையில் ஆண், பெண் என்று பேசுவது சரி. ஆன்மாவை அவ்வாறு பாகுபடுத்துவது அறிவீனம். வயது விஷயத்திலும் அவ்வாறுதான். அதற்கு வயதாவதே இல்லை. பழமையான அது எப்போதும் மாறாததாகவே இருக்கிறது. அது எப்படி இந்த வாழ்க்கையில் கட்டுண்டது? இந்தக் கேள்விக்கு நமது சாஸ்திரங்களில் ஒரே ஒரு பதில் இருக்கிறது. அறியாமைதான் இந்தப் பந்தங்களுக்கெல்லாம் காரணம். அறியாமையினால்தான் நாம் கட்டுண்டோம். ஞானம் இந்தக் கட்டினை விலக்கி, நம்மை மறுகரைக்கு அழைத்துச் செல்லும். அந்த ஞானம் எப்படி வரும்? அன்பின்மூலம், பக்தியின் மூலம், கடவுளை வழிபடுவதன் மூலம், எல்லா உயிர்களையும் கடவுளின் கோயிலென்று அன்பு செலுத்துவதன் மூலம் ஏனெனில் எல்லோரிலும் கடவுள் இருக்கிறார். அந்தப் பேரன்பின் மூலம் ஞானம் வரும், அறியாமை மறைந்து போகும். பந்தங்கள் அறுந்து போகும். ஆன்மா சுதந்திரம் பெறும்.

சுவாமிஜீ விவேகானந்தர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில்
1897ஆம் ஆண்டு ஆற்றிய சொற்பொழிவிலிருந்து....



# மாணவர் பரீட்சையிற் சித்தியடைவது எப்படி?

நா. இராசதுரை,
முன்னாள் அதிபர், கமலாம்பிகை வித்தியாலயம், புங்குடுதீவு.

அறிவுடையாரே எல்லாம் உடையர். அறிவைக் கற்றலின் மூலமே பெறமுடியும். கல்லாதார் முகத்திரண்டு புண்ணுடையர். கண்ணுடையார் என்போர் கற்றோர். "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பன கல்வி பற்றிய மகுட வாக்குகள். இதனை இன்றைய மாணவர் சமூகம் செவிப்புலனாக்கிச் செயற்படின் நாம் யுத்த காலத்தில் இழந்த கல்வியை மீளப்பெற முடியும். அத்துடன் "அந்தஸ்து என்றும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்" என்ற அறிவுருவாக நாம் அவையத்தில் முந்தியிருக்க முடியும்.

உலக மயமாக்கலுக்கு முகம் கொடுக்க வேண்டிய இன்றைய இளைய தலைமுறை மாணவர்கள் அந்நீரோட்டத்திற்கு ஏற்ப, கல்வியையே பெறவேண்டியுள்ளது. கல்வியைப் பெற்றோரும், ஆசிரியரும், சமூகத்தினரும் தம்மீது சுமத்தும் சுமையாக மாணவர்கள் ஒருபொழுதும் கருதக்கூடாது. கல்வி தேடிப் பெறவேண்டிய சொத்து. அது வானத்திலிருந்து ஒரு பொழுதும் விழமாட்டாது. அதனை ஒவ்வொரு மாணவரும் தம் எதிர்கால வாழ்க்கைப் போராட்டத்தை எதிர்கொள்ள வேண்டிய ஆயுதமாகக் கொள்ளவேண்டும். மாணவர் விரும்பும், மகிழ்ச்சியான, மனம் விரும்பும், பசுமையான நினைவுகள் வாழ்நாள் பூராகவும் என்றும் எம் நினைவில் நிற்பது போன்று, கல்வி கற்றலை ஒவ்வொரு மாணவர்களும் தம் விருப்பமான செயலாக, மகிழ்ச்சியான நிகழ்வாக மனத்தில் வரித்துக் கொண்டால், கற்றல் இலகுவாகிவிடும். முதலில் மாணவர்கள் கற்றலை நேசிக்க வேண்டும். மனித இனத்தின் சாபக்கேடுகளில் ஒன்று எம் மனமானது பன்னாடையைப் போன்று கெட்ட செய்திகளை உடன் பற்றிக் கொள்ளும் இயற்கை இயல்பினது. எமது நல்ல எண்ணங்கள், எமது நல்ல சொற்கள், எமது நல்ல செயல்களால் தீய சிந்தனைகளின் பதிவை அகற்றிவிடலாம். இதனாற்றான் வள்ளுவர் "உள்ளுவதெல்லாம் உயர் உள்ளல்" என்றார். எமது நல்ல எண்ணங்களே எமது நல்வாழ்வு.

இயற்கை மனிதரில் மூன்று அடிப்படை விருப்பங்களை (Fundamental Desires) மூளையில் சொருகி வைத்துள்ளது. அவை நெடுநாள் வாழவேண்டும் என்ற ஆசை, மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்ற ஆசை, தினமும் புதிய செய்திகளை, உண்மைகளை அறியவேண்டும் என்ற ஆசை. இந்தப் புதியன அறியவேண்டும் என்ற ஆசை எம்மிடம் இயல்பாக அமைந்த இயல்பூக்கமே எம் கல்வித் தேடலுக்கான வித்து. கல்வியின் நோக்கம் பரீட்சையில் வெற்றி பெறுவதற்கு அல்ல. "வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெறுதலே."

ஒவ்வொருவருடைய வாழ்விலும் வரவில்லாது செலவுகள் செய்து மகிழ்ந்திருக்கும் பருவம் மாணவப் பருவம். இதனை கற்பனைக் காலம் என்றும்கூட கொள்ளலாம். மாணவர்கள் மகிழ்ச்சியுடன் தாம் விரும்பி மனத்தில் வரித்துக்கொண்ட இலக்கினை முதலில் மனப்படமாக வரைந்து, அதற்குத் தினமும் உயிரூட்ட வேண்டும். உதாரணமாக

"நான் டாக்டராக வருவேன்" என மனப்படம் வரைதல். இந்த மனப்பட "உறுதிக்கூற்றை" தினமும் நித்திரை மயக்கத்தின்போது வெளிமனத் தோற்றத்திலிருந்து ஆழ்மனத் திற்கு அனுப்பிவைக்க வேண்டும். நமது ஆழ்மனப் பதிவுகளாற் சாதிக்க முடியாதது என்று ஒன்று உலகில் எதுவும் இல்லை. என்பதை உளவியல் ரீதியாக உளவியலா ளர்கள் நிரூபித்துள்ளனர். இம் மனப்படக் கல்வி இன்று மேலை நாடுகளில் வழக்கில் உள்ளன.

அடுத்து, மாணவர் பரீட்சைக்குத் தோற்றும் பாடங்கள் ஒவ்வொன்றிலும் வகுப்பறை மட்டத்தில், சந்தேகமற்ற பூரணப் புலமையைத் தேடிக்கொள்ளவேண்டும். பரீட்சையின் வெற்றியானது வகுப்பறைக் கல்வியைக் கடினமாக்குவதிலிருந்து பெறமுடியும் என்பது உளவியலாளரின் கருத்து. எனவே, மாணவர்கள் அனைவரும் தம் ஆசான்களிடமும், சக மாணவர்களிடமும் சந்தேகங்களை உசாவி, சரியான தீர்வை அறிந்துகொள்ள வேண்டும். பெரிய பாட விதானங்களைச் சிறுகுறிப்பாக எழுதி, அதன் சுருக்கத்தைக் குறிப்புப் புத்தகத்தில் ஒரு பகுதியிற் குறித்துவைத்து அதனை அடிக்கடி நினைவூட்டிக்கொள்ள வேண்டும். முக்கிய மான பகுதியை அடையாளமிட்டும் நினை வூட்டிக் கொள்ளலாம்.

ஒவ்வொரு பாடத்தையும் மீட்டுப் பார்க்க மாணவர்கள் அவகாசத்தை ஏற்படுத் திக்கொள்ளவேண்டும். (Revision) கேள்வி களுக்கான பதில்களும் ஒற்றுமைத் தன்மை, வேற்றுமைத் தன்மைகளை தொடர்புபடுத்தி நினைவில் நிறுத்தி வைத்துக்கொள்ள வேண்டும். நினைவில் நிற்கவேண்டிய பல நீண்ட பதில்களை ஆங்கில எழுத்துக்களின் முதல் எழுத்துக்களை, கொண்டு அமைத்துக் கொண்டால் அவற்றை இலகுவில் நினைவு படுத்தி விடயத்தை விரிவுபடுத்தலாம்.

உ+ம் : மருத்துவர்கள் நெருப்புக் காய்ச்சல் பரவும் ஊடாக ஐந்து Fஐக் கொள்வர்.

**கற்றல் நடவடிக்கை :**

கற்கும்போது மாணவர்கள் மற்றவர் களுக்கு சொல்லிக் கொடுப்பது போன்று கற்கவேண்டும். நான்தான் படிக்கிறேன் எனும் போது நானோடு தானும் இருப்பதைப் புரிந்துகொண்டாற் பரீட்சையில் வெற்றி நிச்சயம். அப்பொழுதுதான் ஆழமான விளக் கம் ஏற்படும். வகுப்பறைக் கல்வியின்போதும், வீட்டுக் கல்வியின் போதும் சாதாரண பரீட்சை உயர்தர வகுப்பு மாணவர்கள் குறைந்த பட்சம் பத்து வருடங்களுக்கு மேற் பட்ட கடந்தகாலப் பரீட்சை வினாக்களுக்கு விடை எழுதிக் கற்றிருக்க வேண்டும். அடுத்து கல்வி கற்கும் மாணவர்களுக்கு, கற்கும் இடம் அமைதியான சூழலாக அமைந்திருக்க வேண்டும். இயந்திர மயமான இன்றைய உலகில் அணுகுண்டு இல்லாத அமைதியான மரணத்தை தரக்கூடியவை, கைத்தொழிற் புரட்சியால் ஏற்பட்ட பாரிய சத்தங்களாகும். இதனால், மாணவர்கள் தம் கல்வி கற்றலுக் கான முக்கிய காலமாக காலைப்பொழுதைத் தெரிவுசெய்ய வேண்டும். இரவில் படித்தபின் வேறு எந்த வேலையும் செய்யாது தம் மனப்படத்தை உறுதிப்படுத்திக்கொண்டு நித்திரைக்குச் சென்றுவிட வேண்டும். பகலிற் கிரகிக்கப்பட்ட செய்திகள் யாவும் நித்திரை யிலேயே மூளையினால் தரம்பிரிக்கப்பட்டு முக்கியமானவை பதிவு பெறுகின்றது. நித்திரைக்குச் சென்று படுக்கையில் இருக்கும் போது, நித்திரை வரும்வரை அன்றைய தினம் கற்றுக்கொண்ட சிக்கலான பாடங்களை மனத்திரையில் ஓடவிட்டுப்பாருங்கள். அவற் றில் நினைவில் நிற்கவேண்டிய பெரும்பகுதி, மறுநாள் மூளையிற் பதிவு பெற்றிருக்கும். பிரச்சினையான மீதிப்பகுதியை மீண்டும்

ஒருமுறை காலை நினைவூட்டிவிட்டு பரீட்சைக்குச் செல்லலாம். அதைவிடுத்து நாவிதன் மாராப்பு போன்று எல்லா உடைகளையும் ஒரு நாளில் சேர்த்துவைத்துவிட்டு ஒரு நாளில் வெளுக்கக்கூடாது. பரீட்சைக்கு முதல்நாள் படிக்கும் கோட்பாட்டை ஒரு போதும் கையாளாதீர்கள். நுனிப்புல் மேய்தலும், சப்பித் துப்பலும் பரீட்சையிற் சிறந்த பெறுபேற்றைத் தராது. கடினமான பாடங்களை மூளை பூரணமாக ஓய்வாக இருக்கும்போது கற்கவேண்டும். கற்றபின் வேறு வேலையில் ஈடுபடக்கூடாது. பசி-பட்டினி இருந்து இரவில் விழித்திருந்து படிக்காதீர்கள். படிக்கும் மாணவர்களுக்கு ஊட்டச்சத்தான உணவு; குறிப்பாக புரத உணவும், பூரண மன ஓய்வும், உடல் ஓய்வும் அவசியம். மனனம் செய்யவேண்டிய விடயங்களை உங்கள் கைகளால், குறிப்புக்களாக மீண்டும் மீண்டும் எழுதுங்கள். அவற்றைக் கணினிகளில் அல்லது ஒலிப்பதிவு நாடாக்களிற், பதிந்து திரும்பத் திரும்பக் கேட்பதன் மூலம் நன்றாய் நினைவில் இருக்கும் ஆங்கிலத்தைத் தவறாது கண்ணாற் பார்த்துத்தான் படிக்கவேண்டும்.

**பரீட்சை பற்றிய மனப்பயமும் ஞாபக மறதியும் :**

இவை இரண்டுமேதான் பெரும்பாலான மாணவர்களின் பரீட்சைத் தோல்வியின் மூலகாரணம். இதற்கான அடிப்படைக் காரணம் பரீட்சைக்குத் தயார் செய்ய வேண்டிய சரியான நெறிமுறையை அவர்கள் வழி அமைக்காததே ஆகும். வகுப்பறையைக் கடினமாக்கினால் மட்டுமே பரீட்சை மாணவர்களுக்கு இலகுவாகும். எல்லா மாணவர்களும் எல்லாப் பாடங்களையும் தமது விருப்பத்திற்குரிய பாடங்களாக முதலில் ஏற்றுக்கொள்ளவேண்டும். எமது மூளையில் நினைவு வங்கியுள்ளது (Memory Bank). இங்குதான் தகவல்கள் சேமிக்கப் படுகின்றது. ஞாபகம் என்பது எதிர்காலப் பயன்பாட்டிற்காய் கடந்தகால அனுபவங்களைப் பாதுகாத்தல் ஆகும். (Preservation of Bast Experience For Future Use of Memory) புலன்சார் நினைவாற்றலை நீண்டகால நினைவாற்றலாக்க வேண்டின் மனனம் செய்ய வேண்டும். அல்லது அடிக்கடி நினைவுபடுத்தி அதனை மனப் பழக்கமாக்கவேண்டும். இதனையே ஆன்றோர் வைத்தொரு கல்வி மனப்பழக்கம் என்றனர். மாணவர்களின் ஞாபக மறதிக்கான முக்கிய காரணம் எமது மன அலைகளும், கடல் அலைகளும் பிரபஞ்ச சக்தியின் மின்காந்த அலைகளினாலேயே ஏற்படுகின்றது. இதனை மனச்சுழற்சி அலைகள் (Mental Frequency) என ஆங்கிலத்தில் அழைப்பர். இந்த அலை எமது மூளையின் மின்னோட்டத்திற் சுழன்று கொண்டிருக்கின்றது. இந்த மூளை மின் அலைச் சுழற்சியினை E.E.G. என்னும் மின் மருத்துவக் கருவியால் அளக்கமுடியும். இந்த மூளை மின்னலைச் சுழற்சியின் இயற்கை அலைகளைப் பீற்றா அலைகள், அல்பா அலைகள், தீற்றா அலைகள், டெல்ரா அலைகள் என அவற்றின் சுழற்சி அளவுகளுக்கு ஏற்ப மருத்துவ விஞ்ஞானம் பிரித்துள்ளது. இது சாதாரணமாக 14 - 40 CPS ஆகும். டெல்டா அலைகள் 14 CPS இல் இருக்கும்போது சாதாரணமாக மாணவர்களின் கிரகித்தற் பதிவுகள் மூளையில இடம்பெறுகின்றது. மாணவர்கள் மனப்பயத்திற்கும், கோபத்திற்கும் ஆளாகும்போது அவற்றின் மனச்சுழல் ஆனது 20CPS ற்கு ஏறிவிடுகின்றது. 14CPS இல் பதிவுபெற்ற செய்தியினை 20CPS இல் மீளப்பெற முடியாது போகிறது. இதுவே மாணவர்களின் ஞாபக மறதிக்கான மூலகாரணம். இதனைத் தவிர்ப்பதற்கு மாணவர்கள் பரீட்சைபற்றிய பயம் நீங்க பரீட்சைக்குத் தம்மைப் பூரண

மாகத் தயார்ப்படுத்தி இருக்கவேண்டுவதுடன் பரீட்சையை எதிர்கொள்வதற்கான தற்றுணிவைக் கொண்டிருக்கவேண்டும்.

மேலும், மூளை மின்சுற்றுப் பீற்றா அலையினை மன ஒருமைப்படுத்தல்மூலம் 5 - 3 CPS ற்குக் கொண்டு வருவதன்மூலம் விஞ்ஞானிகள் பொருள்களின் உண்மைகளை அறிகின்றனர். இச் சுற்றை 0 -3 CPS ற்குக் கொணர்வதால் மெய்ஞ்ஞானிகள் தன்னை அறிகின்றனர். (Knows Himsell) மனித உயிர்ச் சக்தியானது மூலாதாரத்திற் பெண்களில் நாதமாகவும், ஆண்களில் விந்தாகவும் (Libido) புதைக்கப்பட்டுள்ளது. இந்த உயிராற்றலான லிபிடோவை உயர்வகுப்பு மாணவர்கள் அறிவைப் பெறவேண்டின் அதன் வழிதிருப்ப வேண்டும். எனவே, மாணவர்கள் பரீட்சைக் காலங்களிற் காதல் கற்பனைகளைத் தவிர்க்க வேண்டும்.

**பரீட்சை நேர ஒழுங்கு :**

அடுத்து, மாணவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினை நேர ஒழுங்கு பற்றியது. பரீட்சைத் தாளில் எந்தக் கேள்விக்கு முதலிற் பதிலளிப்பது என்பதிலும் வெற்றி தங்கியுள்ளது. மாணவர்களிற் கட்டாயமாக நன்றாகப் பதில் தெரிந்த கேள்விகளுக்கும், குறுகிய நேரத்தைக் கொண்டதுமான கேள்விகளுக்கும் முதலிற் பதிலளித்துவிட வேண்டும். சிக்கலான கேள்விகளுக்கு மனப்பதற்றம் அடையாது அவகாசம் எடுத்துப் பதிலளிக்க வேண்டும். முதலில் எக்காரணம் கொண்டும் சிக்கலான கேள்விக்குப் பதில் அளிக்கத் தொடங்கக்கூடாது.

---

மாயை எல்லையற்றது. தோற்றமில்லாதது. இன்ன நாள் இந்த உலகம் உருவாக்கப்பட்டது. ஒரு கடவுள் வந்து இந்த உலகங்களைப் படைத்தார். அதன் பிறகு இன்றுவரை அவர் தூங்கிக்கொண்டிருக்கிறார் என்பதில்லை; ஏனெனில் அவ்வாறு நடக்கமுடியாது. படைப்பாற்றல் இன்னும் இயங்கிக் கொண்டேதான் இருக்கிறது. கடவுள் எப்போதும் படைத்துக் கொண்டே இருக்கிறார். ஒரு போதும் ஓய்வு கொள்வதில்லை. "நான் ஒரு கணம் ஓய்வெடுத்தாலும் இந்தப் பிரபஞ்சம் அழிந்துவிடும்" என்று கீதையில் ஸ்ரீகிருஷ்ணர் சொல்வதை நினைவு கூருங்கள். நம்மைச் சுற்றி இரவும் பகலும் இயங்கிக் கொண்டே இருக்கின்ற அந்தப் படைப்பாற்றல் ஒரு வினாடி நின்று போனாலும் எல்லாம் தரைமட்டமாகிவிடும். பிரபஞ்சம் முழுவதும் அந்தச் சக்தி இயங்காத நேரமே கிடையாது.

சுவாமிஜீ விவேகானந்தர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் 1897ஆம் ஆண்டு ஆற்றிய சொற்பொழிவிலிருந்து....

# மாணவரின் கட்டிளமைக் காலப் பிரச்சினைகள்

திருமதி ம. கணேசன்
அதிபர், யா. புங்குடுதீவு சேர். வை. துரைசுவாமி வித்தியாலயம், புங்குடுதீவு.

உயிரும் உணர்ச்சியும்உள்ள மற்றைய விலங்குகள் போன்றே மனிதனும் வளர்ச்சி யடையும் உயிரி. இத்தகைய மாறுதல்களை மனிதனின் வளர்ச்சிப்பருவங்கள் (stage of development) என உளவியலாளர் வகுத்துள் ளனர். இயற்கையானது பிள்ளைகளின் ஒவ்வொரு பருவத்தையும் அதற்கான குறிப் பிட்ட நோக்குடனேயே வளர்த்து வருகின்றது மனிதவளர்ச்சியின் தன்மையை நிர்ணயிப் பதில் மரபு சூழ்நிலையாகி இரண்டிற்கும் முக்கிய பங்கு உண்டு. வளர்ச்சியென்பது தொடர்ச்சியான மாறுதலாகும். மனித வளர்ச்சியைப் பாலுணர்ச்சியுடன் (sex) தொடர்புபடுத்திக் கூறுகிறார் உளப்பகுப்புக் கோட்பாட்டின ரான சிக்மன் பிரயிட். அவர் பாலுணர்ச்சி நிறைவுறும் செயற்பாடுகளில் வாய், கழிவு றுப்பு, பாலுறுப்பு அடுத்தடுத்து வளர்ச்சியிற் பங்கு கொள்கின்றன. பின் பாலுணர்ச்சி மறைந்து காணப்படும் நிலையும், இறுதியாக பிறப்பதால் துணைகொண்டு நிறைவு பெறும் முதிர்ச்சி பெற்ற நிலையும் காணப்படும் (oral, anal phalllic, latent and gental stage). அவர் கோட்பாட்டின்படி வயது அதிகரிப்பினும், முதிர்ச்சிகுன்றிய நடத்தை முறையில் அவன் ஈடுபடும் நிலைமையும் எழக்கூடும் என்கிறார் உளவியளாளர் எரிக்சன் என்பவர் இவர் வளர்ச்சிப்படிகளிற் சமூகப்பிரச்னைக்குப் பாலுணர்ச்சி போன்ற உடற் தேவைகளைவிட அதிகமுக்கியத்துவம் அளித்து, அதன் அடிப்படையில் மனித வளர்ச்சிப்படிகளைப் பட்டியலிற் காட்டியபடி 8 நிலைகளாக வகுத்துள்ளார்.

| I (நிலை) | II (சமூகச் | III (பிரச்சினைகள்) செல்வாக்குகள் |
|---|---|---|
| 1. பிறப்பு முதல் 1 ஆண்டுவரை | தாய், செவிலியர் | நம்பிக்கை வைத்தல் அல்லது நம்பிக்கையின்மை. |
| 2. 2ஆம் ஆண்டு | பெற்றோர் | சுதந்திரமாக இயங்குதல் அல்லது வெட்கப்படுதல் , அல்லது ஐயப்பாடு. |
| 3. 3-5 ஆண்டுகள் | ஆதாரக் குடும்பம் | தானே முற்பட்டு செலாற்றுதல் அல்லது குற்ற உணர்வு |
| 4. 6 முதல் பால் முதிர்ச்சி பெறும் வரை | சுற்றுப்புறம் பள்ளி | உற்சாகமாக உழைத்தல் அல்லது தாழ்வுணர்வு |

| | | |
|---|---|---|
| 5. குமரப்பருவம் | ஒப்பார் குழு, பிற குழுக்கள், தலைமை | தன்னைப்பற்றிய தெளிவற்ற குழப்பமான கருத்து. |
| 6. முன் முதிர் பருவம் | நண்பர்கள், பால் தொடர்பு உறுப்பினர்கள், ஒத்துழைக்கும் மற்றும் போட்டியிடும் குழுக்கள் | நெருக்கமான உறவும் ஒருமைப் பாட்டுணர்வும் அல்லது தனிப்பட்ட நிலைமை |
| 7. நடு முதிர் பருவம் | பொறுப்புக்களையும் குடும்பக் கடமைகளையும் தன்னுடன் பகிர்ந்து கொள்வோர் | தாராள மனப்பான்மை அல்லது தன்னுள் ஒடுங்கிச் செயற்படுதல் |
| 8. பின் முதிர் பருவம் | மனித இனம் / நம் இனம் | நேர்மை அல்லது முழுமையாக நம்பிக்கை இழப்பு. |

பட்டியல் III இல் முதல் குறிப்பிட்டுள்ள ஒவ்வொன்றிலும் முதல் கருத்து ஆக்க பூர்வ மனப்பாங்கினைக் குறிக்கும். இத்தகையவற்றை வளர்த்தல் ஆசிரியரது பணியாகும்.

## முக்கிய வளர்ச்சிப் பருவங்கள்

நம் தேவையைக் கருத்திற் கொண்டு மனிதவளர்ச்சி நிலைகளை 7 நிலைகளுக்குள் அடக்கலாம். அவையாவன முறையே:

1) குழவிப்பருவம்
2) பிள்ளைப்பருவம்
3) கட்டிளமைப்பருவம்
4) முதிர்ப்பருவம்
5) நடுவயது
6) தளர்வுப்பருவம்
7) கிழட்டப்பருவம் என்பனவாகும்.

1) **குழவிப்பருவம் (Infency)**

இது பிறந்தது முதல் ஐந்து வயது வரையிலான காலமாகும். பிறந்ததும் குழந்தையின் மூளையின் உயர்மையங் கள் முதிர்ச்சியுற்றிருக்கிறது. இதனால் அது தன் உடலில்இருந்து எழும் வேட்கைத் தூண்டல் களில் முழுக் கவனத்தையும் செலுத்துகின்றது. வெளியுலகக் கேள்விக் காட்சித் தூண்டலை விட; பசி, உணவு ஆகியன அதற்கு முக்கிய மானதாகப்படுகிறது. மூளை முதிர்ச்சியுறவே புலன்களின் ஊடான தூண்டல்களை உணர்ந்து புறஉலக அறிவு எழுகிறது. குழந்தை ஒரு வருடமுடிவில் எளிய மொழிச் சொற்களைத் திரும்பச் சொல்லும். அதன் பொருளைப் பிறர் சொல்லப்புரிந்து கொள்ளும் படிப்படியாக ஆக்க நிலையுறுத்தல்மூலம்

பிள்ளை சொற்களஞ்சிய அளவை (vocabulary)பெருக்கிக் கொள்கின்றது. 3 வயதின்பின் கற்பனையூற்றுப் பெருக்கெடுத்து ஓடுகிறது. இக்காலத்தில் சுற்றுப்புறத்துடன் தொடர்பு கொண்டு அவைபற்றிய அறிவைப் பெறுகின்றன. இவ்வயதில் ஆராய்வு, ஊக்கம் முன்னிலை பெறுவதால் பெற்றோரைக் கேள்விமேல் கேள்வி கேட்டுக் கொள்வர். அத்தனைக்கும் பெற்றோர் பொறுமையுடன் சரியான பதில் கூற வேண்டும். நினைவுத்திறன் அதிகரிப்பதாற் சகல நிகழ்வுகளும் பசுமரத்தாணியாகப் பதிந்து விடுகின்றது. இப்படியாக வளர்ந்து வரும் குழவிப் பருவத்திற் நல வளர்ச்சிக்குப் பெற்றோரும், முன்பள்ளிகளும் உதவமுடியும். இப்பருவத்திற் பிள்ளை தாய் கூறுவதையே பெரும்பாலும் நம்புகிறது.

## 2) பிள்ளைப்பருவம்

ஐந்து வயதிலிருந்து பன்னிரெண்டு வயதுவரையான காலத்தை வளர்ச்சி நிலைப் பிள்ளைப் பருவமாகக் கொள்வர். இக்காலப பகுதியிற் பிள்ளை வெளியுலகத் தொடர்பைக் கொள்ளத் தொடங்குகிறது. இப்பருவத்தில் பல்வேறு சமூகப்பண்புகள் எழுகின்றது. குழுவுணர்வு இக்காலத்திலேயே எழுகின்றது. பிள்ளைப்பருவம் நிலைத்த தன்மை உடையது (stability and consolidation), இப்பருவத்தில் உடல் - உளவளர்ச்சியில் நிலைத்த தன்மையிருக்கும். இவர்கள் முதிர் பருவத்தினரைப் போல நடந்து கொள்வர் இப்பருவத்தில் குழந்தைப்பருவம், கட்டிளமைப் பருவம், போன்ற திடீர் மாற்றம் ஏற்படுவதில்லை. இப்பருவத்தில் 8 வயதின்பின் உடல், மனத்திறன் அதிகரித்துக்காணப்படும். எதைப்பற்றியும் அறியும் ஆவலுள்ளவர்களாக இருப்பர். முறைக்கல்வித்திட்டம் இவர்கள் கல்விக்கு உதவும். இப்பருவத்திலேயே கூட்டுணர்ச்சி முதிர்ச்சி பெறுகிறது. இப்பருவத்தினர் தம்மைவிட மூத்தோரிடம் பெருமதிப்புக் கொள்வர். ஆசிரியர் கூறுவதை முழுமையாக நம்புவர்.

## 3) கட்டிளமைப்பருவம் (குமரப்பருவம்)

முரண்பாடுகள் நிறைந்தஇப்பருவம் 12 வயதிலிருந்து 18-20 வயதுவரையான காலப் பகுதியாகும். ஒருவன் முழுமுதிர்ச் சியடையும் வரையான காலம் இப்பருவமாகும். இக் காலப் பகுதியில் ஒருவன் பால் முதிர்ச்சி யடைகின்றான். அதாவது பக்குவமடைதல் என்னும் பூப்பு (Puberty) தொடங்கி ஒரு கருவை உருவாக்கிப் பொற்றோராகும். உடல் தகுதிபெறும் காலம் வளரிளமைக்காலமாகும். இக்காலப்பகுதி குழந்தைப்பருவம் போன்றே தீவிர வளர்ச்சிக்காலமாகும். கானில் சுரப்பிகளான பிட்யூட்டறிச் சுரப்பியும் தீவிரமாகத் தம் சுரப்புகளை இரத்தத்தில் சுரக்கச் செய்வதால் அவற்றின் தூண்டல்களால் உடல், உள வளர்ச்சி பெறுகிறது. பெண்களில் ஈஸ்ரொகினும், ஆண்களில் ரெஸ்ரிஸ்ரரோன், சுரப்பதால் அவர்களின் பாலுறுப்புக்கள் எழுச்சி பெற்று முதிர்வடைகின்றன. இப்பருவத்தில் உடலில் எல்லாப்பகுதியும் வளர்ச்சியுறுகின்றது. இதனால் உயரமும் எடையும் அதிகரிக்கிறது. உடலின் உள்ளுறுப்புக்கள் வளர்ச்சி பெறுகின்றன. மூளைவளர்ச்சி பெற்றுச் சிக்கலடைகிறது. உடலில் வழமைக்கு மாறாக பாலுறுப்புக்கள் பெருப்பமடைதல், குரலில் 'ஆண்கள் குரல் தடித்தல், பெண்கள்குரல் இனிமையாதல், ஆண்களின் மீசை, தாடி வளர்தல் போன்றவற்றாற் பிள்ளைகள் கூச்சமடைகின்றனர். நடை தளர்கிறது. கூச்சமும் பதட்டமும் காணப்படுகிறது. வகுப்பறையில் இப்பருவத்தினரிடம் காணப்படும் கவனமின்மையும், பதட்டமும் இப்பருவமாற்றத்தால் ஏற்படுபவையாகும். இக்காலப்பகுதியில் உடல் தீவிரமாக வளர்ச்சியடைவதால் உணவுத் தேவை, பாலுறுப்புகளில் ஏற்படும் மாற்றமே

மிகுந்த கவலையையும், அச்சத்தையும் அளிக்கிறது. தன்மைஉணர்ச்சிமிக்க பருவமாகும். பிறர் தம்மைப்பற்றி என்ன நினைக்கின்றனர். குறிப்பாகத் தம்மை ஒத்தவர்கள் பிறர் தம்மை மதிக்கவேண்டும். ஏளனம் செய்யக்கூடாது என நினைப்பர். மேலும் இக்காலப்பகுதியில் எவர் கட்டுப்பாட்டையும் விரும்பர். ஆனால், கட்டுப்பாடுகள் வீட்டிலும், பாடசாலையிலும் இருந்தே தீரும். உடல் முதிர்ச்சியுடன் உள முதிர்ச்சி நிலையும் இப்பருவத்தில் முக்கியமானது ஒருவனோ, ஒருத்தியோ மனமுதிர்ச்சி பெற்றுவிட்டால்; அவனோ, அவளோ வளரிளமைப்பருவ முதிர்வையடைந்து விட்டதாகக்கூறலாம். இப்பருவத்தின் முடிவுகள் அவர்கள் வாழும் சமுதாயக் கலாச்சாரத்தைப் பொறுத்ததாகும். அத்துடன் கட்டிளமைக் கால நடத்தைக்கு சமூகக்காரணிகள் பெருமளவு அடிப்டையாக அமைகின்றது. இப்பருவத்தினரிடம், பிறபருவத்தினரிடம் காணப்படாத தனிப்பட்ட உடல், உள, சமூக அறப்பண்புகள் காணப்படுகிறது. இவை இப்பருவத்தினரை மற்றைய பருவத்தினரிடமிருந்து தனிமைப்படுத்திக் காட்டுகிறது. இப்பருவத்தினரை முரண்பாடு நிறைந்த பருவம் (Stage of Contradiction) என்று வர்ணிப்பர். இவர்கள் சிலபோது குழந்தைகள் போலவும், சிலபோது முதிர்ச்சி பெற்றவர் போலவும் நடந்து கொள்வர். இவர்கள் சிலபோது தமக்கென ஒரு இலட்சியத்தை அமைத்துக்கொண்டும் அல்லது தன்னலத்துடனும் வாழ்வர். இவர்கள் சிலபோது தளர் நோக்குடை யவர்களாகவும் (Pessimisim) சிலபோது தளராநோக் குடையவராகவும் (Optimism) தெளிவற்றவராக (Nomanaland) இருப்பர் என்கிறார் குட்குலவின் (Kurtlewin)

அமையவேண்டிய கட்டிளமையிலான ஆளுமைத் தேவைகள்

1) சுயமதிப்புத்தேவை (Status)
2) சுதந்திரம்
3) சாதனை (ACHIEVEMENT)
4) மன நிறைவைத் தரும் வாழ்க்கைத் தத்துவம்
5) சுய பூர்த்தி

### கட்டிளமைக்காலப்பிரச்சினைகள்

1) சினம், அச்சம், மகிழ்ச்சி, தன்மானம், சமநிலையின்மையுடையது இப்பருவம். மனவெழுச்சிகளைப் பொறுத்தவரை அமைதியற்ற பருவமாகும். குறிப்பாக, பெண்பிள்ளைகளிடம் மாதவிலக்குக் காலம் மனநிலைக்குழப்பம் (premenstural temisiom) கட்டுப்பாட்டினை விரும்பாத காரண காரியத்தொடர்பற்ற மன வெழுச்சிகள் இவர்களை ஆட்டிப்படைக்கும். சுருங்கக்கூறின் இக்காலப் பகுதி பாலுணர்ச்சி மிக்கதாய் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட நிலைக்கொப்பான, எழுமாந்தமான, தீர்மான மெடுக்கமுடியாத பதற்ற காலமாகும்.

2) சமூகக்கட்டுப்பாடுகளுக்கு, மானிடவிழுமியங்களுக்கு மதிப்புக் கொடாதவர்களாகவுமிருப்பர். சமூகக் கோட்பாடுகளுடன் முரண்பட்டுத் தனிக்கோட்பாட்டுடன் இருப்பர். தம் கருத்தையே வலியுறுத்துவர், குறிப்பாகத் தாம் புரட்சித்தன்மையர் என்ற முனைப்புடன் இருப்பர். எதற்கும் ஆத்திரப்படல், அவசரப்படப்படல், பின்விளைவறியாது காரியங்களில் இறங்கல், பிறரை எடுத்தெறிந்து பேசுதல், பிடிவாதம் பிடித்தல், பிரச்சினைகளைத் தீர்க்க வன்முறைகளில் ஈடுபடல், எதிர்ப் பாலரிடம் கவர்ச்சி என்பன காணப்படும்.

3) பெற்றோரினதோ, ஆசிரியரினதோ கட்டுப்பாட்டை, ஆலோசனைகளை அலட்சியம் செய்வர். நண்பர்கள் சொல்வதையே வேவதவாக்காய்க் கொள்வர்.

4) தன்உண்மை நிலை (Identity), கருத்துருவாக்கம், தன்னம்பிக்கை போன்றவற்றிற் பிரச்சினைப்படுவர்.

5) கல்வி, பொருளாதாரம், சமூகம் என்பவற்றோடு இணைந்தபல பிரச்சினைகளுக்கு இப்பருவத்தினர் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. எதிர்காலம் பற்றிய அவாவுடனும், தன்னம்பிக்கையுடனும் இருப்பர். மேற்படி முரண்பாடுகளுடன் இப்பருவத்தினர் நன்மையான பக்கத்தையும் கொண்டுள்ளனர். இப்பருவத்தினர் வயது, நிலை, அறிவு என்பவற்றின் அடிப்படையில் தம்மையொத்த நண்பர்களுடன் இணைகின்றனர். பிறர்நடத்தைகளைப் பார்த்துத் திருத்தவும் ஆசைப்படுவர். இப்படியான ஒப்பர் குழு இருப்பதால் நண்பர்களின் ஒத்துழைப்பு, கூட்டு வாழ்க்கை, பிறர் துன்பங்களிற் பங்குபற்றல், பற்றுறுதி, கூட்டுமனப்பான்மை, புரிந்துணர்வு கட்டுக்கோப்புப் போன்றனவும் குழுச்செயற்பாட்டில் வளர்ச்சி பெறுகிறது. இவர்களில் மரபு . சமூகச் சூழல் நன்கமைந்து நல்ல நெறிப்படி வளர்க்கப்பட்ட பிள்ளைகள் தமது வாழ்வின் குறிக்கோள்களை (GOALSETTING) அமைத்து, தம் அறிவுத் தேடலில் வெற்றியீட்டுகின்றனர்.

**கட்டிளமைக்காலப் பிரச்சினைகளைக் கையாளுவதிற் பெற்றோரினதும் ஆசிரியரினதும் வகிபாகம்.**

இப்பவரும் தம் ஆளுமையை வெளிப்படுத்துவது, நண்பர்களையே உலகமாக நம்புவது, தம் வேலைகளைத் தாமே செய்ய வேண்டும் என விரும்புவது போன்ற மன நிலையினர் தம் தனித்தன்மையடையப் பேராடுவார்கள். இவையனைத்தும் இப்பருவத்தின் இயற்கையான இயல்பு என்பதைப் பெற்றோரும், ஆசிரியரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே, இப்பருவத்தினரை எதிர்கொள்ளுமுன் தம்மைப் பெற்றோரும் , ஆசிரியரும் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும். அவையாவன:

1) பிள்ளைகளுக்குப் பாதுகாப்பான அன்பு மிகுந்த அரவணைப்பு நிறைந்த வீட்டுச் சூழலை ஏற்படுத்துதல்
2) ஒருவரை ஒருவர் நம்புவது , மரியாதை அளிப்பது
3) வயதிற்கு ஏற்பத் தனியாகவே காரியங்களைச் செய்ய அனுமதிப்பது
4) அவர்கள்மீது நம்பிக்கை உண்டென்பதை உறுதிப்படுத்தும் வகையில் நடப்பது, பேசுவது
5) பிள்ளைகள் மனம் தடுமாறியுள்ளபோது அவர்களுடன் கருத்துப்பரிமாற அனுமதிப்பது
6) பெற்றோர், கட்டிளமைப்பருவப் பிள்ளைகள், ஆசிரியர் மூவரும் தம்மிடையே உள்ள உறவைப்பலப்படுத்திக் கொள்வது
7) அவர்களது பொருளைப் பாதுகாப்பாகப் பேணக் கற்றுக் கொடுப்பது
8) எதிர்பார்க்கப்படும் குடும்பப்பொறுப்புக்கள், சமுதாயப் பொறுப் புகள் பற்றிப் போதிப்பது.
9) எந்தக்காரியத்திற்கும் அவர்களே முடிவெடுக்க அனுமதிப்பதுடன் பெற்றோர் ஆசிரியரது ஆலோசனை அவசியம் என்பதனை உணர்த்துவது.
10) பெற்றோரும், ஆசிரியர்களும் அப்பிள்ளையிடம் எதை எதிர்பார்க்கின்றனர் என்பதை அவர்களிடம் தெளிவாக எடுத்துரைப்பது.
11) வீட்டில் பெற்றோர் பருவமடைந்த ஆண்பிள்ளைகளுக்கு எனத் தனியான அறையை ஒதுக்கல். அதனுள் அதிரடியாக நுழையாது கதவைத்தட்டிவிட்டு நுழையுங்கள். அவர்கள் இல்லாதபோது

எந்தப் பொருளையும் சோதனையிடாதீர்கள், அவர்களையும் உங்கள் குடும்பப்பெரியவர் போன்று நடத்துங்கள். அவர்கள் தனிமைச் சுதந்திரத்தில் தலையிடாதீர்கள். காலம் தாழ்த்தி வீடு திரும்பும் பெண்பிள்ளையை நாசூக்காக விசாரியுங்கள். உள்ளே நுழைந்ததும் கேள்விக் கணைகளைத் தொடுப்பது குற்றவாளி போல் விசாரிப்பது போன்றவற்றை இப்பருவத்தினர் விரும்புவதில்லை . அப்படியாக அவமதிக்கும் பெற்றோரை அவர்கள் வெறுக்கின்றனர். அவர்கள் விரும்பும்பொழுது போக்கினை இரசிப்பதற்கு வசதியும் அனுமதியும் கொடுங்கள். பிள்ளைகளின் இலக்குகள், ஆர்வங்கள் பற்றிக் கூறும்போது அதை மழுங்கடிப்பது போல் பதில் கூறாதீர்கள். பொழுது போக்கிற்குப் பெற்றோர், பிள்ளைகளையும் உடன் கூட்டிச் செல்லுங்கள். அவர்களிடமுள்ள விருப்பத்தை வெளிப்படையாகக் கூறுங்கள். அவர்களது சிறிய திறமைகளையும் பாராட்டுங்கள். பிள்ளைகள் படிக்கும்போது பிள்ளைகளின் நண்பர்களாக அருகமர்ந்து சந்தேகங்களை நீக்குங்கள். இவர்களின் உள்ளகக் கிளர்ச்சிகள்தாம் சிந்தனையினையும் இயக்கும் விசையாகும். இவை தற்போது நடைமுறையிற் பயன்படுத்தப்படுவதில்லை. இவை கல்வியில் நல்லமுறையிற் கையாள வேண்டியவை. ஆசிரியர்கள்; மாணவர்களின் உள்ளக்கிளர்ச்சிகளைப் புரிந்தது அவர்களை நல்ல வழியில் தூய்மைசெய்ய உதவவேண்டும். அதாவது அவர்களிடையே இயல்பாகவே விஞ்சிநிற்கும் பகுத்தறிவை நெறிப்படுத்தல், இவர்களிடம் காணப்படும் தன்மனத்துணிவுக் குறைவைப் போக்க மன உறுதிப்பாட்டை ஏற்படுத்துதல், தன்னடக்கப்பயிற்சி, உலகோடு ஒத்துப் போகும் பாங்கு, உயரிய நோக்கு, ஊக்கம், உறுதியான அறிவு, நன்னடத்தை என்பவற்றை வளர்ப்பதில் ஆசிரியரதும், பெற்றோரினதும் கடமையே மிக முக்கியமானது அவர்களுக்குரிய இப்பருவமே. வருங்காலத்தில் அவர்களது தலைமைத்துவப் பண்புகளையும், ஆளுமையினையும் வளர்க்க வேண்டிய காலம். ஒவ்வொரு மனிதனுக்கும் தனிப்பண்புகள் உள்ளன. ஒருவனது நடத்தை அவனது வழக்கம், மனப் போக்கு, எண்ணங்கள், நோக்கங்கள், கருத்துக்கள், நம்பிக்கைகள், மனப்பான்மைகள் முதலிய யாவும் கலந்த மனப்போக்கே ஆளுமையாகும். இன்றைய இளைஞரே நாளைய நாட்டின் தலைவர்கள் என்பதை உணர்த்தும் பெற்றோரும், ஆசிரியரும் அவர்கள் ஆளுமை வளர்ச்சிக்கு உதவவேண்டும். இளைஞர்களே இந்த வயதே வாழ்விற் சாதனை படைக்கக்கூடிய வயது. வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்துங்கள்.

**குமரப் பருவத்தின் முக்கிய பொதுப் பண்புகளைக் கீழ்வரும் பட்டியல் தெளிவாக்கும்.**

**உடற் பண்புகள் :**

வயது : 12-15

உடல் வளர்ச்சியில் தீவிரம் பால் முதிர்ச்சி எழுதல், தன் தோற்றம் பற்றிய கவலை உடலியக்கத்தில் விகாரமான (Awkwardness) தொல்லை தொடர்ந்து உடல் வேலையிலோ, உள்ளச் செயலிலோ ஈடுபட இயலாமை.

வயது : 15-18

உடல் - மன முதிர்ச்சி நிலை அடைதல் - பால் முதிர்ச்சியின் செல்வாக்கு, தன்னைப் பற்றிய உணர்வும் கூச்சமும்.

**சமூகப் பண்புகள் :**

வயது : 12-15

ஒப்பார் குழு ஆதிக்கம் - பிறரைப் போல் நடக்க ஆர்வம் - நட்பும் பூசல்களும் வலுப் பெறுகின்றன. பெண்களது சமூக முதிர்ச்சி ஆண்களது நிலையை விடச் சிறிது அதிகமாகக் காணப்படும்.

வயது : 15-18

ஒப்பார் குழு ஆதிக்கம் பிறர்போல் நடக்க ஆர்வம்.

**மனவெழுச்சிப் பண்புகள் :**

வயது : 12-15

எதையோ எப்போதும் நினைத்திருத்தல் போன்ற (Moody) நடத்தை இவ்வாறு தான் நடத்தை எழும் என முற்கூட்டியே கூற இயலாமை. சகிப்புத் தன்மை இல்லாமை - தன் கருத்துக்களில் தீவிரப் பற்று - 'முதியோரைக் குறை கூறல்.

வயது : 15-18

குமரப் பருவம்: புரட்சி, பெற்றோருடன் பூசல், எதையோ பறிகொடுத்தவர் போல் இருத்தல், எதிலோ கவனம்.

**அறிதல் திறன் :**

வயது : 12-15

பகற்கனாப் பருவம் - பொதுமைக் கருத்துகள் பலவற்றைப் பயன்படுத்தும் திறமை அதிகரித்தல்.

வயது : 15-18

முழு மனத்திறன் முதிர்ச்சி. ஆனால் அனுபவம் குறைவு, வாழ்க்கைத் தத்துவம், தான் ஏற்கத்தக்க வாழ்க்கைப் பங்கு, (Identiry) பற்றி ஆராய்ச்சி, பால் தொடர்புள்ள சிந்தனைப் பிரச்சினைகள், தொழில் பற்றிய குழப்பச் சிந்தனை.

**பியாஜே, எரிக்ஸன் புரூனர் ஆகியோரது கருத்து.**

வயது : 12-15

ஒன்றுதலுக்கும் (Identity) வாழ்க்கையில் தனது பங்கு பற்றிய குழப்பமும் (Role Confusion), சமூக இயல்புடைய பேச்சு, ஒழுக்க நடத்தையில் சார்பு நிலை (Relativism) - குறியீடுகளைப் பயன்படுத்தல் (Symbols), கருத்துசார் மனச் செயல் (Formal Operations)

வயது : 15-18

மேற் குறிப்பிடப்பட்டவையே.

◈ நீ இருக்கும்வரை எவ்வளவு ஆயுட்காலம் வேண்டுமானாலும் வாழலாம். ஆனால், முதல் இருபது வருடங்களும் தான் உன் வாழ்வில் சிரமமான நீண்ட பகுதி. இன்பங்கள் இன்பமாக இருக்க வேண்டுமெனில் அதை அளவுடன் அனுபவிக்க வேண்டும்.



# பிள்ளைகள் பொய் சொல்லுவது திருடுவது ஏன்

ரி. தயாபரன்,
சிரேஷ்ட ஆசிரியர், கமலாம்பிகை வித்தியாலயம், புங்குடுதீவு.

ஐந்து வயதுச் சிறுவனைப் பார்த்து உனக்குக் கார் ஓட்டத் தெரியுமா? என்று கேட்டால், ஆம் தெரியுமே என்பான். அவன் மேலும் ஒருபடி சென்று என் தம்பிக்குக்கூடக் கார் ஓட்டத் தெரியுமே என்பான். அவன் சொல்வது பொய் என்றோ, இப்படி ஏன் கூற வேண்டும் என்றோ அப்பிள்ளைக்குத் தெரியாது. மனித இயல்புகளில் ஒன்று. தன்னை மற்றோர்கள் மதிக்கவேண்டும் என்று விரும்புவது. மாணவர்கள் தாம் செய்த தவறுக்காய் வகுப்பாசிரியரிடம் பிரம்படிபடு வதைப் பெரிதாக எடுக்கமாட்டார்கள். அம் மாணவர் செய்த குற்றத்தை ஆசிரியர் சக மாணவர் மத்தியிற்கூறி அவமதிப்பதை விரும் பமாட்டார்கள். காரணம்: தன் மதிப்பை இழப்பதை விரும்பாமையே. அதேபோன்றே அந்தப் பையனும் தன்னை மற்றவர்களைவிட உயர்ந்தவனாகக் காட்டிக் கொள்ள எண்ணு கிறான். அவ்வளவுதான் இதைத்தவிர அவன் பொய் சொல்வதற்கு வேறு எந்த உள்நோக்க மும் கிடையாது.

நான்கு முதல் ஐந்து வயதுவரை உள்ள பிள்ளைகள் கதை கேட்பதிலும், கதை சொல்வதிலும் ஆர்வமுடையவர்களாக இருப்பர். அவர்கள் சொல்லும்போது அது பொய் சொல்வதாகி விடுகிறது. பல நோக்கங் களில் அவர்களுக்கு எது உண்மை, எது கற்பனை என்று அவர்களுக்குத் தெரியாது. கதைகளிற் செய்யப்படும் சாகசங்களை உண் மையில் நடந்தவையாகவே அவர்கள் நம்பு வதால் அதேபோல் தாங்களும் செய்ததாகக் கூறுவார்கள். ஏன் பதினான்கு வயதுடைய மாணவர்கள்கூடப் பொய் சொல்கிறார்கள். காரணம்: தம்மைத் தற்காத்துக் கொள்வ தற்காகவோ அன்றி நண்பர்களைக் காப்பாற்று வதற்காகவோ இருக்கலாம். பெரும்பாலான தமது பொறுப்புகளைத் தட்டிக்கழித்து விட்டுத் தாம் பொறுப்புடன் நடந்து கொள்ப வராகக் காட்டிக் கொள்ளவே அப்படிச் செய்கிறார்கள். உதாரணமாக: அவசரமாகச் சேர்ப்பிக்கவேண்டிய கடிதம் ஒன்றினைத் தந்தை தபாற்கந்தோரிற் பதிவுத் தபாலிற் சேர்ப்பித்து வரும்படி மகனை அனுப்பிய போது, அவன் நண்பருடன் அரட்டையடித்து விட்டு அதை அனுப்பாது திரும்பி வந்து தந்தையிடம் தபாற்கந்தோர் பதிவுத் தபால் காலம் கடந்துவிட்டதால், தபாலதிபர் அதை ஏற்க மறுத்துவிட்டதாகக் கூறுகிறான். இதிற் பொறுப்பைத் தட்டிக்கழித்துவிட்டு, பொறுப்புடன் நடந்து கொண்டதாய்க் கூறுகி றான். இப்படியானவர்களுக்கு நேர்மையின் அவசியத்தையும், உண்மை வழிவாழ வழி சமைத்த முன்னுதாரணங்களை அறிவுறுத்த வேண்டும்.

சில வளர்ந்த பிள்ளைகள், பொய் சொல்வதாற் சில நேரங்களில் நல்ல விளைவு கள் ஏற்படுவதை அனுபவத்தில் அறிந்து, அதையே பழக்கப்படுத்தியும் வழக்கப்படுத் தியும் விடுகிறார்கள். இன்று இளையறுப் பவன் தான் நாளை கொலையறுப்பவனாக மாறுபவன் என்பதை அவர்கள் அறியார்கள். இதைப் பெற்றோர் உடனுக்குடன் கண்டித் துத் திருத்திவிடவேண்டும். வளர்ந்த பிள்ளை கள் பொய் சொல்லுவது தங்களது அந்தரங்

கத்தைப் பாதுகாக்கவும், பெற்றோரின் பாதுகாப்பில்லாது என்னால் தனித்து வாழ முடியுமென்பதைத் தெரிவிப்பதற்காகவும் தான். சில பிள்ளைகள் உண்மை எது, பொய் எது என்று நன்றாகத் தெரிந்திருந்தும், வாய்ப் புக் கிடைத்த பொழுது பொய்யை நடந்த உண்மைபோலச் சோடித்து உணர்ச்சி பொங்க விபரிப்பார்கள். இதற்கு முக்கிய காரணம் இப்படியான கட்டுக் கதைகளைச் சமூகத்தில் உள்ளோர் ஆர்வத்துடன் கேட்பதிற் பழக்கப் பட்டே அப்படிச் செய்கின்றனர். குழந்தை களும், பிள்ளைகளும் பொய்சொல்லிப் பழக் கப்பட்டுவிடுவதாற் பொய் சொல்வதுண்டு. காரணம்: பெற்றோரும், ஆசிரியரும், உடன் பிறப்புக்களும் அடிக்கடி ஏற்படுத்தும் நெருக் கீடுகளில் இருந்து தப்பித்துக்கொள்ளப் பொய் யை மூலமந்திரமாய்ப் பயன்படுத்துகின்றனர் பிள்ளைகள். இது ஒரு கெட்ட பழக்கம் என்ப தைப் பெற்றோர் பிள்ளைகளுக்கு உணர்த்தித் திருத்துவதுடன், அவர்களுக்கு நெருக்கீடுகள் செய்வதைக் குறைக்க வேண்டும். கல்வி நெருக்கீட்டிற் களைப்பும் சலிப்புமடையும் மாணவர்கள் இயலாத நிலையிற் பொய் ஆயுதத்தைப் பயன்படுத்துகிறார்கள். தாம் கல்வியில் அக்கறை உள்ளவனாகக் காட்டிக் கொள்வர்.

பாடசாலையிற் படிக்கும் மாணவ மாணவியர் அடிக்கடி பொய் கூறின், பெற்றோர்கள் பிள்ளையை அழைத்து மெய் யாலான பெருமைகளையும், பொய்யால் வரும் இழிவுகளையும் அவமானங்களையும் எடுத்துக்கூறி அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும். எந்தத் திருத்தமும் ஏற்படாது போனால் மன நல மருத்துவரை அணுக வேண்டும்.

## சிறுவர்களின் திருட்டு

சிறுவர்களின் திருட்டில் ஈடுபடு வதற்கு முதற் காரணம் பெற்றோரே. பாடசாலையில் மற்றையோரின் பென்சில், பேனைகளை எடுத்துவருவதை முளையிலே பெற்றோர் கண்டிக்கவேண்டும். 3-5 வயதிற்கு இடைப்பட்ட குழந்தைகள் தம்மைக் கவரும் சில பொருட்களை எடுத்து வைத்துக் கொள்வர். இது திருட்டு அல்ல தவறு என்ப தும் அவர்களுக்குத் தெரியாது. இதைப் புரிய வைப்பது பெற்றோர் கடமை.

குழந்தைகள் தம் பெற்றோர்போல் இருக்கவே முயற்சிக்கின்றனர். பிள்ளை படிக்க வேண்டும் என்றால், பெற்றோர் படிப்பதை, சகோதரர் படிப்பதைப் பிள்ளை அவதானித் தாலே படிக்கும். அதேபோன்றே அலுவலகம் செல்லும் தந்தையைப் பார்த்த குழந்தை தானும் அலுவலகம் செல்லப் புறப்படும். இப்படியாகக் குழந்தையின் முன் மாதிரி பெற்றோரே.

பால்மா கொம்பனியிற் பணியாற்றும் தாய், தினமும் வீட்டிற்குப் பால் மாவை எடுத்து வருவதை அவதானித்த பிள்ளை, அயல் வீட்டில் உள்ள பொருளைத் தானும் எடுத்து வருவதில் என்ன அதிசயம் உள்ளது. தாயைப்போல பிள்ளை எனவே, 'பிள்ளை நல்லபடியாக வளர வேண்டும்' என்றால், பெற்றோர் முன்னுதாரணமாக நல்லொழுக்கத் துடன் வாழ்ந்து காட்டவேண்டும்.

குழந்தை ஏதோ காரணத்தினால் ஒரு பொருளைத் திருடிக்கொண்டு வந்து விட்டாற்கூட அப்பழக்கத்திலிருந்து விடுவிக் கப் பெற்றோர் முயற்சிக்கவேண்டும். அதற் கான முன்மொழிவுகள் :

1. குழந்தை அடுத்தவர் பொருளைத் திருடுவது தவறு என்பதை உணர்த்தல்.
2. திருட்டுக் கொடுத்தவர் மனம் வருத்த மடையும் என்பதை உணர்த்தல்.
3. திருடிய பொருள்களை உரியவரிடம் சேர்ப்பிக்க உதவல். பெற்றோரோ

அவற்றை உரியவரிடம் சேர்ப்பித்து மன்னிப்புக் கோர முடியும்.

4. அடுத்தவர் பொருள் ஒரு பொழுதும் பயன்தராது. மற்றையோர் அழ தேடிய பொருள் அழுதழுதே போய்விடும் என்னும் வள்ளுவன் வாக்கை வலியுறுத்தல்.
5. நீண்ட அறிவுரை கூறுவதைத் தவிர்த்தல்.
6. உன் எதிர்காலம் பாதிக்கப்பட்டுவிடும் எனப்பயமுறுத்தக் கூடாது.
7. நீ திருடன், கெட்டவன் என்ற வார்த்தையைப் பிரயோகிக்க கூடாது.
8. வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் பிள்ளையின் தவறைச் சுட்டிக்காட்டிக் குறை கூறுவதோ, அவமானப்படுத்துவதோ கூடாது. அப்படிச் செய்தால் மோசமான சூழ்நிலையை ஏற்படுத்தும்.
9. இந்தப் பழக்கத்தை நமது குடும்பமும், நம்மைச் சுற்றியிருப் பவர்களும் விரும்பார் என்பதைப் பிள்ளைக்குப் புரிய வைத்தல் வேண்டும்.

பத்து வயதிற்கு மேற்பட்ட சிறுவர், சிறுமியர் பொது இடங்களில் திருடுகிறார்கள். இப்படி அவர்கள் செய்வது பல காரணங்களை அடிப்படையாகக் கொண்டது. அவர்கள் தாம் மற்றவர்களைவிட வீரம் மிகுந்தவர்கள் என்பதை நண்பர்களுக்கு நிரூபிக்க அப்படிச் செய்கிறார்கள். அதை அவர்கள் திருட்டு எனச் செய்வதில்லை. திறமை என்றே செய்கின்றனர். சிலர் நண்பர்களுக்குப் பரிசு கொடுக்கவெனத் திருடுகின்றனர். சிலர் தாம் மற்றையோரிற் சார்ந்திருப்பதை விரும்பாது திருடுகிறார்கள். இப்படியானவர்கள் இப்படியான சில்லறைத் திருட்டில் தம் திறமையினை வெளிப்படுத்துகின்றனர்.

சில பிள்ளைகள் தம் கோபத்தை வெளிப்படுத்தும் விதமாகவோ, தம் வெறுப்பை வெளிப்படுத்தும் விதமாகவோ, தம் எதிர்ப்பைக் காட்டும் விதமாகவோ திருட்டுச் செயலில் ஈடுபடுகின்றனர்.

இப்படியாகப் பொது இடங்களில் திருடிவரும் பொருட்களைப் பெற்றோர் உரிய கடைக்காரரிடமோ, உரிமையாளரிடமோ சேர்ப்பிக்கச் செய்து மன்னிப்புக்கோர வேண்டும். இப்படிச் செய்யும் போது பெற்றோரதும், உரிமையாளரதும் உரையாடலைப் பிள்ளை அவதானித்து, தன் செயல் தவறு என்பதையும், அது தன் சுயமதிப்பைக் குறைக்கும் என்பதையும், அது அவமானத்தை உண்டாக்கும் என்பதையும், அவன் உணர்ந்து கொள்கிறான்.

இப்படியான அணுகுமுறையின் பின்பும் குழந்தைப் பருவத்தினரோ பிள்ளைப் பருவத்தினரோ தொடர்ந்தும் திருட்டில் ஈடுபடின் அவர்களை மனநல மருத்துவரிடம் காட்டி ஆலோசனை பெற வேண்டும்.



# எம் மண்ணின் மாமனிதன் சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரன் M.A

மா. ஆறுமுகன் மகன், புங்குடுதீவு 12.

சமூக வாழ்விலும், அரசியல் வாழ்விலும், இளம்தளபதியான மகேன் புங்குடுதீவு 7ஆம் வட்டாரம் திரு. திருமதி கந்தையா தங்கம்மா தம்பதியர்க்கு 1951ஆம் ஆண்டு பிறந்த இவர், தனது ஆரம்பக் கல்வியைக் திருநாவுக்கரசு வித்தியால யத்திலும், இடைநிலைக் கல்வியை புங்குடுதீவு மத்திய மகா வித்தியாலயத்திலும், உயர்கல்வியை வேலணை சேர். வைத்திலிங்கம்துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்திலும் கற்றார், 1970களிற் சிங்களப் பேரினவாதம் இளைய தமிழ் தலைமுறைக் கல்வித்துறையினைக் கருவறுக்க முற்பட்ட போது கிளர்ந்தெழுந்த மாணவர்களில் ஒருவராக மாணவர் பேரவை என்ற அமைப்பின் மூலமும், பின்னர் இளைஞர் பேரவை என்ற அமைப்பினை உருவாக்கியும், அதன் தானைத் தளபதியாகி, செயற்பட்டவர். 1965ஆம் ஆண்டு ஊரைதீவு இளந்தமிழர் மன்றம் என்ற இயக்கத்தைத் தாபித்துத் "தொழிலாளர் தோழன்" என்ற நாடகத்தை மக்கள் மத்தியிற் சமர்ப்பித்து அவர் ஆற்றிய உரைமூலம் பல இளைஞர்களைக் கவர்ந்துகொண்டவர். அத்துடன் இவர் நெறிப்படுத்தி நடித்த நாடகங்கள் 35இற்கு மேற்பட்டவையாகும். அம் மாணவர்களுக்கு சமூகப் பணி ஆர்வத்தையூட்டி மேடைப்பேச்சு பயிற்சியும் அளித்தார். மனிதஅறிவு வளர்ச்சியில் மரபும், சூழலும் பெரும்பங்காற்றுகின்றது. இந்தவகையில் இவரது மரபினர் ஊரைதீவின் ஆன்மீக வளர்ச்சிக்கும் மானிடநேய பணிகளுக்காகவும் முன்னின்று உழைத்தவர்கள். அது மட்டுமன்றி கல்விப்பணிக்காக திருநாவுக்கரசு வித்தியாசாலையைக்கட்டி, இந்துபோட்டிடம் கையளித்தவர்கள். உள்ளூராட்சி மன்றத்தில், உள்ளூராட்சி மன்ற ஆரம்ப காலம்தொட்டு இன்றுவரை மன்றத்தின் பிரதிநிதிகளாக இருந்துவருவது இவர்களின் குடும்ப பாரம்பரியத்தின் சமூகப்பணிக்கு எடுத்துக்காட்டாகும். இவர் இளந்தமிழர் மன்றத்திற்கும், ஊரைதீவு கிராம முன்னேற்றச்சங்கம், சனசமூக நிலையம் போன்றவற்றுக்கும் சமகாலத்தில் தலைவராக இருந்து மக்கள் பணியாற்றியவர். குடிநீர் தட்டுப்பாடு நிறைந்த ஊரைதீவு கிராமத்தின் நிலக்கீழ் நீரினை அபிவிருத்தி செய்யும்பொருட்டு அதனைச் சூழ இருந்த மின்னியன் வாய்க்கால் குளத்தையும் அதனுடன் இணைந்திருந்த குளத்தையும் ஆழப்படுத்தி அணை அமைத்தார். புங்குடுதீவு நில அமைவு சுளகுபோன்றது. புங்குடுதீவின் தெற்குப்பகுதி உயரமாகவும் ஊரை தீவை வடகரையாகக் கொண்ட வடக்குப்பகுதி தாழ்நிலமாகவும் கொண்டுள்ளது. இதனால் புங்குடுதீவில் பெய்கின்ற மழை நீர் வடகரை ஊடாக கடலுள் கலந்துவிடுகின்றது. இதனைத் தடுப்பதற்கு அமரர் நீண்ட ஒரு அணை ஒன்றை கடலோரத்தில் அமைத்துள்ளார். அவர் பணிக்காக மக்கள் இவ்வணைக்கு அவர் பெயரையிட்டுள்ளனர். இப்பிரதேச மக்களின் ஆன்மீக மையமாக விளங்குவது ஈழத்து ராமேஸ்வரம் என அழைக்கப்படும் பாணாவிடை சிவன் ஆலயமாகும். இவ்வாலயத்தில் பல ஆண்டுகளாக தலைவராயிருந்து பணியாற்றியதுடன் தனது காரில் கல்லேத்தி வந்து அவ்வாலயத்துக்குத் திருப்பணிகள் செய்து 1980ஆம் ஆண்டுகளில் அதன் குடமுழுக்கையும் செய்த ஆன்மீகவாதியாவார். எமது

மண்ணின் விடுதலைக்காக கிளர்ந்தெழுந்த போது அவரது சிந்தனை எமது ஈழநாட்டுத் தமிழக விடுதலையாக இருந்தது. இக்கட்டான சூழ்நிலையில் அவர் நாடுகடந்து இந்தியாவிலும் கனடாவிலும் வாழ்ந்த போது இடம் பெயர்ந்த மக்களின் இடர்களையும் சுமை தாங்கியாக நின்றார். இதன்மூலம் அவரது சிந்தனை சர்வதேச மட்டத்தில் விரிவுபடுத்தப் பட்டிருந்தது. அவரது மரணத்தை கனடா நாட்டு மக்கள் மட்டுமன்றி 1995ஆம் ஆண்டுகளில் இடம்பெயர்ந்து சாவகச்சேரியில் வாழ்ந்த தீவக மக்களும் விழிநீர் சிந்த அவரை நினைவுகூர்ந்து மரணவீட்டைக் கொண்டாடியிருந்தனர். அத்துடன் ஈமைச் சடங்கி னையும் சமயசார முறைப்படி நிறைவேற்றியிருந்தனர்.

1977ஆம் ஆண்டு இலங்கை உயர் நீதிமன்றச் சட்டத்தரணியாகச் சத்தியப் பிரமாணம் செய்தமையையொட்டி புங்குடு தீவு மக்களால் அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவின்போது, தலைமை தாங்குவதற்கு ஏற்ற அறிவும், ஆற்றலும், ஆளுமையும் ஒருங்கே அமையப்பெற்ற இளம் தலைவராகத் தம்பி, மகேந்திரனைக் காணுகிறேன். என்று தலைவர் அமிர்தலிங்கமும், இளம்படை நடத்தவல்ல இளம் தளபதி என்று புலவர் ஈழத்துச் சிவானந்தனும் இயம்பிநிற்க, வித்துவான் சி. ஆறுமுகம் அவர்களோ உன் உரையை உலகமும் கேட்கும், என்று வாழ்த்தினார்கள். வித்துவான் அவர்களின் கூற்றும் யான் கூறிய எம்மண்ணின் மாமனிதன் என்ற கூற்று இன்று நனவாகியதை நாம் அறிவோம்.

தனது இளமைக் காலத்தை அரசியல் வாழ்வில் ஆகுதியாக்கியவர். தமது இளமைக் காலத்திலேயே தமிழ் ஈழ விடுதலை உணர்வு கொண்டு இலங்கையிற் பொது அரசியற் பணிகளில் ஈடுபட்டு, தமிழர்களின் இலட்சிய வேள்வியில் இதய பூர்வமாகப் பங்கெடுத்துக் கொண்டவர். தந்தை செல்வா, தளபதி அமிர்



மேற்படி பாராட்டு விழாவில் சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரன் அவர்கள் தமிழர் தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் அருகில் அமர்ந்திருப்பதையும் அவர் மைத்துனர் வைத்திய கலாநிதி ஆ. பேரின்பநாதன் வாழ்த்துரை வழங்குவதையும் படத்தில் காண்கின்றீர்கள்

ஆகியோரின் தமிழரசுப் பாசறையை வளர்ந்து எமது தீவகமண்ணின் தலைவர் எனப்பட்டை தீட்டப்பட்டிருந்த வைரம் மகேன்.

சட்டக்கல்லூரியிற் சட்டம் பயின்றிடும் காலத்திற் பல விவாத அரங்குகளிலும், பேச்சுப் போட்டிகளிலும், பட்டிமன்றங்களிலும் பங்கேற்றுப் பல பரிசில்கள் பெற்றவர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரச்சாரப் பீரங்கிகளில் ஒருவராக விளங்கி, தமிழ் ஈழமெங்கும் எங்கள் வாழ்வும் வளமும் மங்காத தமிழென்று முழங்கிடும் இவரின் சொல்லாட்சியும், அரங்கை வசீகரிக்கும் ஆளுமையும் பலரையும் வெகுவாகக் கவர்ந்திடும்.

சிறந்தோர் பேச்சாளனாக, இளைஞர் அணியின் அமைப் பாளனாக, வழக்கறிஞனாகத் தமிழர்களுக்கு அறிமுகமாகியிருந்த எஸ்.கே. "என்று முடியும் எங்கள் போட்டிகள்" என்னும் நூல் ஒரு சிறந்த ஞாபக சக்திமிகுந்த எழுத்தாளனாக இவரை இனம் காட்டியது. அரசியலையும், இலக்கியத்தையும், சமயத்தையும் மொழியியலையும் சுமந்து திரிந்த நடமாடும் பல்கலைக்கழகம் தாயக விடுதலை உணர்வோடு ஊறி வளர்ந்த ஒரு தமிழீழ தேசபக்தனாய்; மனித நேயத்தையும்,

மனிதாபிமானத்தையும் நிரம்பப் பெற்றவரான ஒரு மாமனிதன் இன்று எங்கள் மத்தியில் இருந்து மறைந்து சில ஆண்டுகள் கடந்தும் இன்றும் அவரது நாமம் நிலைத்து நின்றிடுகின்றது.

படிப்பறிவும் துடிப்பான கொள்ளையும் மிக்க விறைப்பான இளைஞர்கள் வீணான போக்குகளில் ஈடுபடாது தம் சேவைகளையும் வழிநடத்தல்களையும் ஏங்கிய உள்ளத்தோடும், ஏக்கம் மிகுந்த பார்வையோடும், தாய்நாட்டில் இருந்து இரத்தக்கண்ணீர் வடிந்திடும் நம் இரத்தத்தின் இரத்தங்களை நோக்கி நம் கடைக்கண் பார்வையைக் காருண்ய நோக்கோடு வீசவேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தவர்.

இனம், மதம், மொழி, வாழ்வுக்கு அத்திவாரம் தான் ஒவ்வொருவருக்கும் தூணாய் இருந்த அத்திவாரத்தின் மீது கட்டிஎழுப்பப்பட்ட அழகிய வீடு உலகம், இதில் அனைவரும் உரிமையோடு வாழ வேண்டும். அதற்கு உதவிபுரிய வேண்டியது மனிதநேயம் மட்டுமே என்று உரைத்த மாமனிதன் இன்று எங்கள் மத்தியிலில்லை. பாணாவிடை அப்பன் பாதங்களில் இளைப்பாறியுள்ளார்.

All these books constitute the scriptures of the Hindus. When there is such a mass of sacred books in a nation and race which has devoted the greatest part of its energies to the thought of philosophy and spirituality (nobody knows for how many thousand of years), it is quite natural that there should be so many sects; indeed it is a wonder that there are not thousands more. These sects differ very much from each other in certain points. We shall not have time to understand the difference between these sects and all the spiritual details about them; therefore I shall take up the common grounds, the essential principles of all these sects which every Hindu must believe.

*- Vivekananda Swami*

# தீவகம் - ஒரு வரலாற்று நோக்கு

பேராசிரியர் வி. சிவகாமி,
யாழ் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணக் குடாநாடு போன்று அதனையடுத்துள்ள பிரதான தீவுகளும் நீண்டகால வரலாறு கொண்டவை. இவற்றிலே வேலணை, புங்குடுதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, காரைதீவு (காரைநகர்) ஆகிய ஏழு (சப்த) தீவுகள் நன்கு குறிப்பிடத்தக்கவை. இவையே இங்கு தீவகம் எனத்தொகுப்பாக அழைக்கப் பட்டுள்ளன. புவியியல் ரீதியில் வரலாற்று ரீதியிலும் இவை யாழ்ப்பாணக் குடா நாட்டின் ஒன்றிணைந்த பகுதிகளாயினும் இவற்றிற்குத் தனிச் சிறப்பியல்புகளும் உள் ளன. இவற்றின் தொடர்ச்சியான வரலாற்றினைக் கூறும் இலக்கிய மூலகங்களோ வாய் மொழி மரபுகளோ இல்லை. ஆனால் சில ஐதீகங்களும் மரபுகளும் உள்ளன. எனினும் புராதன இலங்கை வரலாற்றைக் கூறும் தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம், பௌத்த ஜாதகக் கதைகள், மணிமேகலை, நம்பொத்த, கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை, வையாபாடல் முதலிய இலக்கிய நூல்கள், சாசனங்கள், கட்டிடங்கள், சிற்பங்கள், மட் பாண்டங்கள், இடப்பெயர்கள், சில வாய் மொழி மரபுகள் முதலியனவற்றின் துணை கொண்டு புராதன, மத்தியகால வரலாறு பற்றி ஓரளவு கூறலாம். போர்த்துகக்கீசர், ஒல்லாந் தர், பிரித்தானியர் கால ஆவணங்கள், வரலாற் றாசிரியர் குறிப்புக்கள், அவ்வக்கால இந்துக் கோவில்கள், கோட்டைகள், கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து சமயத் தேவலாயங்கள் முதலியன பிற்பட்ட கால வரலாற்றினை அறிவதற்கு ஓரளவு உதவி புரிவன. போர்த்துக் கீசர், ஒல்லாந்தர் ஆகியோரின் பிறசமய அழிவுக் கொள்கையினாலே, யாழ்ப்பாணக் குடாநாட்டைப் போன்று இங்கிருந்து முற் பட்ட கால இந்துக் கோவில்களும், பிறவழி பாட்டிடங்களும் அழிக்கப்பட்டுவிட்டன. அவ்வாறாயினும், அண்மைக்காலத்திலே சில பழைய கோவில்களின் சின்னங்கள் சில கிடைத்துள்ளன. இவை பற்றிப் பின்னர் கூறப்படும். மேலும் அண்மைக்காலத்திலே ஆங்கிலேயரான பேராசிரியர். யோன். காரஸ் வெல், அல்லைப்பிட்டி போன்ற இடங்களில் நடத்திய ஆய்வுகள், யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தினர் நடத்திய அகழ்வாய்வுகள், மேலாய்வுகள், யாழ்ப்பாண தொல்லிய கழகத்தினர் நடத்திய மேலாய்வுகள், இவர் களுக்கு முன் முதலியார் குலசபாநாதன், போன்றோர் செய்த சில ஆய்வுகள் மூலம் வரலாற்று உண்மைகளை அறியமுடிகிறது. இத் தீவுகளின் சில கேந்திர நிலையங்களில் ஒழுங்கான அகழ்வாய்வுகள் மேலும் நடத்தப் படின் இவற்றின் வரலாறு துலங்கும். வரலாற்று மரபுகள் முறைப்படி பேணப்ப டாமை பெரிய குறைபாடாகும்.

வரலாற்று ரீதியிலே நோக்கும் போது யாழ்ப்பாணக் குடாநாட்டிற் போன்று, இவற்றிலும் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம் தொட்டு மக்கள் நடமாட்டங்கள் நிலவி வந்துள்ளன என்பதில் ஐயமில்லை. இத் தீவுகள் அமைந்திருக்கும் நிலையம் இவ்விடங்களிலேயே குடியேறிய மக்களைப் பற்றி ஓரளவாவது அறிய உதவும். இவை

யாழ்ப்பாணக் குடா நாட்டிற்கு அண்மையில் உள்ளன. அதே வேளையில் தென்னிந்திய குறிப்பாக தமிழ் நாட்டு கரையோரப்பகுதிக்கு சற்று தொலைவில உள்ளன. எனவே ஒரு புறத்தில் இந்தியாவில் உள்ள தமிழ்நாடு, கேரள, ஆந்திரப் பிரதேசம் மாநிலங்களில் இருந்து காலம்தோறும் மக்கள் சிலர் வர்த்தகம், மீன்பிடித்தல், புதிய நாடுகளுக்கு செல்லும் ஆவல், சமய ஆர்வம் முதலிய காரணங்களாலும் பல்லவ, பாண்டிய, சோழ, விஜய நகர பேரரசுளின் ஆதிக்கப்படர்ச்சி களைத் தொடர்ந்தும் இவ்விடங்களிலே வந்து குடியேறியிருப்பர். இக் குடிபெயர்ப்புக்களில் தமிழ் நாடு தான் பிரதான பங்கு பெற்றிருந்தது என்பதில் ஐயமில்லை. தமிழ் நாட்டிலிருந்து இங்கு ஏற்பட்ட குடியேற்றம் பற்றி கைலாய மாலை, (196-197), யாழ்ப்பாண வைபவ மாலை ஆகியன குறிப்பிடுகையில், யாழ்ப் பாணத்தை ஆண்ட சிங்கை ஆரிய மகா ராசனின் வேண்டுகோளின்படி தொண்டை நாடு செய்யூர் இருமரபும் தூய தனிநாயக முதலி எனும் வேளாளன் தலைவன் நெடுந் தீவிலே குடியிருத்தப்பட்டான் என கூறுகின் றன. யாழ்ப்பாணத்தை அடுத்த தீவுகளில் தமிழகத்திற்கு மிக அண்மையில் உள்ளது நெடுந்தீவாகும் . இந்தியாவில் இருந்து இங்கு வந்த மக்களில் ஒரு சாரார் காலப்போக்கில் மற்றைய தீவுகளிலும் குடா நாட்டிலும் குடியேறியிருப்பர். தனிநாயக முதலி குடும் பத்தை சேர்ந்தோர் என தம்மை கூறிக்கொள் வோர் புங்குடுதீவு, வேலணை, அல்லைப் பிட்டி, மண்டைதீவு, அனலதீவு ஆகிய இடங்களிலும் இருந்து பரிபாலனம் செய்துள் ளனர் 1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடையும் வரை. எனவே, தனிநாயகம் முதலி வழி வந்தோர் வேறு சில தீவுகளிலும் தொடர்பு கொண்டு இருந்தனர் எனலாம். தொண்டை நாட்டில் இருந்து தீவகத்திற்கும், குடாநாட்டிற்கும் மாலிக்கபூர் படையெடுப் பால் புலம்பெயர்ந்த மக்கட்புலப் பெயர்ச்சி யின் ஓர் அலையென தனிநாயகம் முதலி வரவைக் கொள்ளலாம். (யாழ்ப்பாண வைபவ மாலை)

தொண்டை நாட்டிலிருந்து தீவகத் திற்கு வந்து குடியேறிய மக்களில் ஒருசாரார் தீவகத்திற்கு தென்கீழ் திசையிலுள்ள பூநகரி பிராந்தியத்திற்கும் சென்று குடியேறியுள்ளனர் என்பது அண்மைக்காலத்திலே வரலாற்று விரிவுரையாளர் திரு. ப.புஸ்பரத்தினம் பூநகரியிலே மேற்கொண்ட ஆய்வுகளாலும் தெளிவாகின்றது.

மேற்குறிப்பிட்டது போன்று இதற்கு முன்னரும் மக்கட் புலப்பெயர்ச்சிகள் தீவகத்திலும், குடாநாட்டிலும், பூநகரியிலும் ஏற்பட்டு இருக்கலாம். சில புலப்பெயர்ச்சிகள் நேரடியாகவே தமிழகத்திலிருந்து ஏற்பட்டு இருக்கலாம். வேறு சில குடாநாட்டில் ஏற் பட்டு பின்னர் தீவகத்தில் ஏற்பட்டு இருக்க லாம். இவை பெரும்பாலும் நேரடியாகவே தமிழ் நாட்டில் இருந்து ஏற்பட்டிருக்கலாம். பின்னர், வசதிளையும் தொழில்வாய்ப்புக் களையும் நாடி ஒருசாரார் குடாநாட்டிற்கும், பூநகரிக்கும் சென்றிருப்பர். இன்றும் இப் போக்கு நிலவுகிறது. எனவே, பெரும்பாலும் ஒருபுறத்திலே குறிப்பாக தமிழகத்திலிருந்து மறுபுறத்திலே சிறிதளவு குடாநாட்டில் இருந்தும் மக்கட்புலப்பெயர்ச்சிகள் தீவக்த்தி லே ஏற்பட்டிருக்கலாம். மேலும் இத் தீவுகள் அமைதியான இயற்கைச் சூழ்நிலையுள்ள இடங்களாகவும் கருதப்பட்டு வந்தன. தீவகத் திலே நிலவும் சில வழக்காறுகள், குறிப்பாக ஆற்றுப்பெருக்கு, மலையடி குறிப்பிடற் பாலன. ஆடிமாதத்திலே ஆற்றுப்பெருக்கு இருப்பதால் கிணறுகளிலும் நீர் அதிகரிக்கும்

என்பர். இது ஒருவேளை கடற்பெருக்கையும் குறிப்பிடலாம். ஆனால், இம்மாத்திலே மழை பொழிவதைத் தொடர்ந்து காவிரி ஆற்று நீர் பெருக்கெடுப்பதும் உண்டு. ஒருவேளை இம்மக்களின் மூதாதையர் சில காவேரி ஆற்றுப்பிரதேத்திலிருந்து புலம்பெயர்ந்து இருப்பர். எனவே, இது ஒரு பழைய நினை வாகவும் இருக்கலாம். அதுபோலவே மலை யடி நெடுந்தீவுக்கப்பால் இருக்கிறதென ஐதீகம் உண்டு. இதுவும் தமிழ்நாட்டு மலைப்பிரதேசம் ஒன்றுபற்றிய பழைய நினை வாகலாம். அல்லது, அலைகள் மலைபோல உயர்ந்து வருவதை இச்சொல் குறிக்கலாம்.

இத்தீவுகளிலே வாழும் மக்களி டையே பரஸ்பர தொடர்புகள் நிலவி வருகின் றன. அதே வேளையில் குடாநாட்டுடனும் தொடர்புகள் உள்ளன. இவ்விடங்களில் உள்ள சில முதியோரை வினாவும் போது தம்முடைய முன்னோரில் ஒருசாரார் குடாநாட்டில் இருந்து வந்தனர் என்பர். இங்கு குடியேறிய மக்களின் ஒருசாரார் தொடர்ந்து தொழில் வாய்ப்புக்கள், திருமண உறவுகள், கல்வி வசதிகள், சில சௌகரியங்கள் முதலியவற்றின் காரணமாக குடாநாட்டுக்குச் செல்வதைக் காணலாம்.

இத்தீவுகளின் கரையோரங்களிலே சில முக்கியமான துறைமுகங்கள் இருந்துவந் துள்ளன. அவற்றுள்ளே ஊர்காவற்றுறை (தற்போது காவலூர் எனவும் அழைக்கப்ப டுகிறது) முற்காலத்திலே ஊராத்துறை என அழைக்கப்பட்டது. சோழப் பெருமன்னர் இதன் கேந்திர நிலைய முக்கியத்துவத்தினை உணர்ந்து செயற்பட்டு வந்தனர். கி.பி. 12ஆம் நூற்றாண்டு தமிழகத்தைச் சேர்ந்த கல்வெட் டுக்களிலும் தற்போது நாகபூசணி அம்மன் ஆலயத்தில் உள்ள தமிழ்க் கல்வெட்டிலும் (சுமார் கி. பி. 12ஆம் நூற்றாண்டு) ஊராத் துறை என்னும் பெயரே வந்துள்ளது. இதன் மூலம் சமகால வெளிநாட்டு வர்த்தக முக்கியத் துவம் புலப்படுகின்றது. முற்பட்ட கால பௌத்த நூல்களிலும் ஊராத்துறை பற்றிய ஐதீகங்களுண்டு. இதைவிட பெரியதுறை (நெடுந்தீவிலும், புங்குடுதீவிலும் உண்டு) குறிகட்டுவான், கழுதைப்பிட்டி, புளியடித் துறை (புங்குடுதீவில் உள்ளன) கப்பலடி, சாட்டி, பண்ணைத்துறை (வேலணையில் உள்ளன) மாவிலித்துறை (நெடுந்தீவில் உண்டு) நயினாதீவு துறைமுகம், காரைநகர் களபூமியில் உள்ள துறைமுகம் (இது யானைப் பாலம் எனவும் அழைக்கப்பட்டது) அனலை தீவு, எழுவதீவு, மண்டதீவு என துறைமுகங்கள் குறிப்பிடற்பாலன. ஒல்லாந்தர் காலத்திலே களபூமியில் உள்ள யானைப்பாலம் மூலமாக இலங்கை யானைகள் தென்னிந்தியாவிற்கும், வங்காளத்திற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டமை குறித்துப்போல்டேஜஸ் எனும் ஒல்லாந்த தேச கிறிஸ்தவ சமய குருவும், ஒல்லாந்த அதிகாரி களும் குறிப்பிட்டுள்ளன. இதற்கு முன்னரும் நெடுங்காலமாக இதற்கூடாக வியாபாரம் நடைபெற்று வந்துள்ளது. மற்றைய தீவுகளி லும் சில துறைமுகங்கள் உள்ளன. புளியடித் துறையிலே பழைய கால பெருக்கமரம் ஒன்று உள்ளது. இம்மரங்கள் நெடுந்தீவு, மன்னார் போன்ற இடங்களிலும் உண்டு. இம்மரம் வெளிநாட்டவரால் - அராபியாரால் அறி முகப்படுத்தப்பட்டதாக தெரிகிறது. மேற் குறிப்பிட்ட துறைமுகங்களினூடாக ஒருபுறத் திலே யாழ்ப்பாணக் குடாநாட்டுடனும் இலங்கையின் பிற இடங்களிலும், மறுபுறத் தில் இந்தியா, சீனா போன்ற பிற நாடுகளுட னும் பல்வேறு தொடர்புகள் நிலவிவந்துள் ளன.

சில இடப்பெயர்வுகள் ஒன்றுக்கு மேற்பட்ட தீவுகளில் உள்ளன. பெரியதுறை பற்றி ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. இருப்பிட்டி எனும் இடப்பெயர் புங்குடுதீவிலும், காரைநகரிலும் உண்டு. மண்டைதீவு எனும் பெயர் வேலணைக்கு கிழக்கிலும், புங்குடுதீவிலும் உள்ளது. இவை போன்ற இடப்பெயர்கள் மூலம் ஓரிடத்தில் குடியேறியோர் மற்றைய இடத்திற்கு சென்ற போது முன்னைய இடப்பெயரை இட்டிருக்கலாம். மேலும், சில பெயர்கள் குடாநாட்டிலும், தீவகத்திலும், பூநகரிப் பகுதியிலும் பொதுவாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாகக் உயரப்புலம், மூத்தநயினாபுலம், இருப்பிட்டி, செட்டியார் தோட்டம், செட்டியா வளவு போன்ற இடப்பெயர்கள் குடாநாட்டிலும் தீவகத்திலும் உள்ளன. கிராஞ்சி, கேரதீவு ஆகிய இடப்பெயர்கள் முறையே பூநகரியிலும், தென்மராட்சியிலும் உள்ளன. மேலும், இவ் இரு இடங்களிலும் உள்ள ஐயனார் ஆலயங்களும், முருகன் ஆலயங்களும் ஒப்பிட்டு ஆய்தற்குரிய இப்பெயர்கள் புங்குடுதீவிலும் உண்டு. யாழ்ப்பாணக் குடாநாட்டின் மேற்குப்பகுதியிலே தெல்லிப்பளை தொடக்கம் அராலி வரை உள்ள வழுக்கி(கை) ஆறு எனும் பெயர் அராலிக்கு மேற்கே உள்ள சிறு கடலுக்கு அப்பால் எதிர்க்கரையிலே சரவணையிலேயுள்ளது.

இலங்கையின் பிற இடங்களிற் போன்றே தீவகத்திலே வரலாற்று வெளிச்சம் பெரும் கற்பண்பாட்டுடன் தொடங்கிற்று எனலாம். பெரும் கற்பண்பாடு தீவகற்ப இந்தியாவிலே சுமார் கி.மு. 1000 தொடக்கம் கி.பி. 500 வரை நிலவிற்று, இப்பண்பாட்டு மக்கள் திராவிடர் ஆவார். இப்பண்பாடு இலங்கையிலும் கிறிஸ்துக்கு முற்பட்ட, பிற்பட்ட நூற்றாண்டுகளில் நிலவிற்று. பௌத்தம் பரவுவதற்கு (கி.மு. 3ஆம் நூற்றாண்டு) முன்பே இப்பண்பாடு இலங்கையில் நிலவியதற்கான சான்றுகள் உள்ளன. அதற்கு முந்திய காலச் சின்னங்கள் செவ்வனே கிடைத்தில் ஒழுங்கான அகழ்வாய்வுகள் இன்னும் சில பிரதான இடங்களிலே நடைபெற்றன. 1981இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி பொ. ரகுபதி காரைநகரில் உள்ள களபூமியிலே உள்ள பெரும் கற்பண்பாட்டுச் சின்னங்கள் சிலவற்றை கண்டுபிடித்தார். இத்தகைய சின்னங்கள் சாட்டி, புங்குடுதீவு முதலிய இடங்களிலும் காணப்படுகின்றன. பெரும் கற்பண்பாட்டிற்கு முற்பட்ட குறுணிக்கற்காலச் சின்னங்கள் சிலவற்றையும் இவர் கண்டுபிடித்தார். சாட்டிக்கு வடக்கே குடாநாட்டில் உள்ள ஆனைக்கோட்டையிலும் பெரும் கற்பண்பாட்டுச் சின்னங்கள் அகழ்வாய்வுகளின் மூலம் வெளிக்கொணரப்பட்டுள்ளன. இதற்கு சில மைல்கள் தூரத்திலுள்ள கந்தரோடையிலே பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி விமலா பேக்லி, பேராசிரியர் புறொன்சன் முதலிய தொல்லியலாளர்கள் நடத்திய ஆய்வுகளாலும், அங்கு பெருங்கற்பண்பாட்டுச் சின்னங்கள் வெளிவந்துள்ளன. புங்குடுதீவின் வடபகுதியிலுள்ள ஊரதீவின் வடகரையில் வட்டக்கற்களான சிறு கிணறுகள் தென்பட்டனவாக கூறப்படுகின்றது. இத்தகைய கிணறுகள் வல்லிபுரம், பூநகரியில் கிராஞ்சி, திருக்கேதீச்சரம் முதலிய இடங்களிலும் காணப்பட்டன. ஊர தீவிலுள்ள ஐயனார் ஆலயம் குறிப்பிடற்பாலது. இது தற்பொழுது சிவாலயமாக விளங்கினாலும் பழைமை வாய்ந்தது. இங்குள்ள கருங்கற்றூண் லிங்கம் வளர்வதாக ஐதீகம் உண்டு. இதிலே சில எழுத்துக்கள் காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது. இவை செவ்வனே வாசிக்கப்படவேண்டியவை. இதன்மூலம் வரலாறு மட்டுமன்றி இப்பகுதி

வரலாறு மேலும் துலங்கலாம். மேற்குறிப்பிட்டபட்ட கிணறுகள் பெருங்கற்பண்பாட்டினைச் சேர்ந்தன எனப்பொதுவாகக் கொள்ளப்படுகின்றது.

இலங்கையின் பூர்வீகக் குடிகளான யக்ஷர், நாகர் பற்றி தீவவம்சம், மகாவம்சம் முதலிய கூறுகின்றன. இவர்களிலே யக்ஷர் ஆதி - ஒஸ்ரலோயிட் இனத்தவர் எனவும், நாகர் எனவும் திராவிடர் எனவும் வரலாற்று ஆசிரியர் அடையாளம் கண்டுள்ளனர். இந் நாகர் பெரும்பாலும் வடபகுதியிலே வாழ்ந்தன. இவர்களிடையிலே நாக வழிபாடு பிரபல்யமாக விளங்கிற்று. நாகம்மாள் (நாகபூசணியம்மன்), நாகதம்பிரான் கோவில்கள் தீவகத்திலே குறிப்பாக நயினாதீவிலும், அனலை தீவிலும் உள்ளன. நாக, நயின எனும் பதங்கள் பாம்பு எனும் பொருள்படும். நாகவழிபாடு இன்று இப்பகுதியில் பிரபல்யமாக விளங்குகின்றது. புராதன நாகர் மத்தியில் இவ் வழிபாடு நன்கு விளங்கிவந்துள்ளது. வையா பாடல் நாகநயினார்தீவு (60) எனக் குறிப்பிட்டிருப்பது ஈண்டுக்கவனித்தற் பாலனது.

பெரும்கற்பண்பாட்டினைச் சேர்ந்த திராவிடர் மத்தியில் புராதன இந்து சமய நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள் நிலவி வந்துள்ளன. எனவே, புராதன தீவகத்திலே வாழ்ந்த திராவிடர் குறிப்பாக தமிழர் மத்தியிலே ஆதி இந்து சமயம் நிலவி இருக்கலாம். இதைத் தொடர்ந்து இலங்கையின் பிற இடங்களிற் போன்று இங்கு பௌத்தம் பரவியிருக்கலாம். பௌத்த மரபினை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் புரதான வரலாறு கூறும் தீபவம்சம், மகாவம்சம் முதலிய நூல்களிலே நாகதீபம் ஒரு முக்கிய மான பௌத்த நிலையமாக கூறப்படுகிறது. இங்கு புத்தபிரான் வந்துசென்றார் என்ற ஐதீகம் உண்டு. நாகதீபம் எனும் பதம் பரந்த கருத்திலே வட இலங்கை முழுவதையும் குறிக்குமாயினும், சிறப்பாக நயினாதீவினையே குறிக்கும் என கருதப்படுகின்றது. பியங்கு தீபம் பிறிதொரு முக்கியமான பௌத்த நிலையமாகக் கூறப்படுகின்றது. இங்கு புகழ் பெற்ற அர்உறந்தஸ் (பௌத்த ஞானிகள்) வாழ்ந்தனர் எனக் குறிப்பிடப்படுகிறது.

இவ்விடம் பற்றி வல்லிபுரம் பொற் சாசனத்திலும் குறிப்பு உள்ளதென கருதப் படுகிறது. இவ்விடம் புங்குடுதீவென அடையாளம் காணப்படுகிறது. தீவகத்திலுள்ள கேரதீவு, மண்டைதீவு முதலிய இடப்பெயர்களும் மேற்குறிப்பிடப்பட்ட நூல்களிலே வருகின்றன. எடுத்துக்காட்டாக அபித்த யாதகத்திலே பிராமண முனிவரான அசித்த (அகத்தியர்) தனிமையை விரும்பி காசிக்கும் பின் (தமிழ்நாட்டிலுள்ள) காவிரிப்பூம் பட்டினத்திற்கும் அங்கிருந்து நாகர்களுடைய காரைதீவிற்கும் சென்றார் எனக் கூறப்படுகின்றது. துறவிகள் தனிமையையும் அமைதியையும் நாடி காடுகளிற் போன்று தீவுகளிலும் வாழ்ந்திருப்பர்.

மேலும், தமிழ் நாட்டு பௌத்த மரபினை அடிப்படையாகக் கொண்டு எழுந்த மணிமேகலையிலே கூறப்படும் மணி பல்லவம் நயினாதீவு என அடையாளம் காணப்படுகின்றது. சிலர் இது காரை தீவு (காரைநகர் )எனவும் கருதுவர். மணிமேகலை, ஆபுத்திரன் ஆகியோர் பற்றியும் அக்ஷய பாத்திரம் முதலியன பற்றியுமான ஐதீகங்கள் இன்று நயினாதீவிலே நிலவுகின்றன. எனவே, தென்னிந்திய, இலங்கை பௌத்த மரபுகள் தீவகத்திலும் சங்கமித்துள்ளமை குறிப்பிடற் பாலது. அக்கால கட்டத்தில் இங்கு வாழ்ந்த

பௌத்தர்களும் திராவிடர் குறிப்பாக தமிழர் எனலாம். இந்தியாவைப் போன்றும் இலங்கை யில் பிற இடங்கள் பலவிற் போன்றும் தீவகத்திலும் இந்துசமயம், பௌத்தமதம் போன்ற அக்கம்பக்கமாக பல நூற்றாண்டுகள் நிலவியிருக்கலாம்.

நயினாதீவு எனும் பெயர் நயினா பட்டர் எனும் பிராமணர் தமிழ்நாட்டி லிருந்து வந்து குடியேறியதைத்தொடர்ந்து இத்தீவிற்கு இடப்பட்ட பெயர் என ஒருசாரார் கருதுவர். இவரே அங்கிருந்த நாகதம்பிரான் கோவிலில் ஆதி அட்சகர் எனக்கூறப்படு கிறார். நயினார் எனும் மக்கட் குழுவினர் இங்குவந்து குடியேறியமையாலும் இப்பெயர் வந்திருக்கலாம் எனச்சிலர் கூறுவர். ஏற்கனவே, குறிப்பிட்டவாறு நயினா எனில் பாம்பு என பொருள்படும் நாகவழிபாடு நன்கு நிலவிய இடமாகையாலும் இப்பெயர் வந்திருக்கலாம். இதற்கு பிராமண தீவு எனும் பெயரும் இருந்தது. காரைச்செடிகள் அதிகம் இருந்த படியால் காரைதீவு எனும் பெயர் ஏற்பட்டி ருக்கலாம் எனக் கருதப்படுகிறது. பிரியங்குக் கொடிகள் அதிகம் காணப்பட்டபடியால் பிரியங்குதீவு எனும் பெயர் வந்ததாகவும் அது மருவி பியங்கு தீவு எனவும் பின் புங்குடுதீவு எனவும் பெயராயிற்று என ஒருசாரார் கருது வர். புங்கு எனும் மரத்தின் பெயரால் இப பெயர் வந்திருக்கலாம் எனவும் சிலர் கருதுவர். மேலும் புங்கனூர், பூங்குடி முதலிய இடப் பெயர்கள் தமிழ்நாட்டில் உள்ளன. ஒரு வேளை இப்பெயர்களில் ஒன்று மருவி புங்குடு தீவு எனவும் வந்திருக்கலாம். தீவுகளிலே மிக நீண்ட தீவு நெடுந்தீவு என அழைக்கப்பட்டது. மேலும் யாழ்ப்பாணத்தில் இருந்து மிகத் தொலைவில் இருப்பதால் இப்பெயர் வந்திருக் கலாம். பசுக்கள் அதிகமாக இருந்தபடியால் பசுந்தீவு எனவும் இதுபெயர் பெற்றது. வேலன் தானை என்பது மருவி வேலணை ஆயிற்று எனக் கருதப்படுகிறது. யாழ்ப்பாணத்தை ஆண்ட சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி காலத்தில் வேலன் எனும் நாட்டுத் தலைவர் தானை - சேனையுடன் அங்கு இருந்தபடியால் இவ்விடம் வேலணை எனப் பெயர் பெற்றது என்ற ஐதீகம் உண்டு. இதுபோலவே நாரா யணன் தானையுடன் தங்கியிருந்த இடம் நாரந்தனை என அழைக்கப்பட்டது எனும் ஐதீகமும் உண்டு. மேலும், வேலணை, தனத்தீவு எனவும் அழைக்கப்பட்டு வந்தது.

புராதன காலத்திலே தீவகத்திலே நிலவிய ஆட்சி முறைபற்றி அறியமுடியா துள்ளது. எனினும் சில குறுநிலத்தலைவர்கள் இத்தீவுகள் ஒன்றில் அல்லது பலவற்றில் ஆதிக்கம் செலுத்தியிருப்பர். இவர்கள் சுதந்திரமாகவோ அல்லது யாழ்ப்பாணத்தில் ஆட்சி புரிந்த அரசர் அல்லது சிற்றரசர்கள், அனுராதபுர மன்னனின் கீழ் ஆட்சி செய்த தேசாதிபதிகளின் கீழ் நிர்வாகத்தை கவனித்தி ருப்பர். வரலாற்றுக்காலம் தொட்டு தீவகம் தனிநிர்வாகப் பகுதியாக இருந்துவந்தி ருக்கலாம். குளக்கோட்ட மகாராசன், வெடி யரசன் பற்றிய கதைகள் நெடுந்தீவிலும் காரைதீவிலும், அல்லிராணி பற்றிய கதைகள் அல்லைப்பிட்டியிலும் நிலவுகின்றன. இவை ஐதீகங்களாகவே நிலவுகின்றன. இவற்றின் வரலாற்று இயல்பு நுணுகி ஆராயவேண்டி யதாகும். மேற்குறிப்பிட்ட நயினாபட்டர், வேலன், நாராயணன் முதலியோர் பற்றிய ஐதீகங்களும் இவற்றுடன் கவனித்தற்பாலன. வேலணையின் நடுப்பகுதியிலே கோபுரத் தடியிலுள்ள அழிபாடுகள் அல்லிராணியின் மாளிகைக்குரியன என மரபுவழியாகக் கூறப்படுகின்றன. ஆனால், உண்மையில் இது

போத்துக்கீசர் அல்லது ஒல்லாந்தரின் அவதானிப்பு நிலையமாக இருந்திருக்கலாம் எனவும் கூறப்படுகிறது. 1832இல் இது 50அடி உயரமுள்ளதாய் இருந்துள்ளது. ஆனால், இன்று அதன் கீழ்ப்பகுதியே இல்லை.

பல்லவர் - பாண்டியர் காலத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட ஆதிக்கப்படர்ச்சி, சைவ வைணவ மறுமலர்ச்சி முதலியவற்றின் தாக்கம் தீவகத்திலும் ஏற்பட்டிருக்கலாம். இச் சமயத் தாக்கம் வர்த்தக மூலமாகவும் ஏற்பட்டிருக்கலாம். அக்கால சமய மறுமலர்ச்சியின் விளைவாகத் தமிழகத்திலே பௌத்தம், சமணம் செல்வாக்கு இழந்தமைபோலத் தீவத்திலும் காலப்போக்கிலே பௌத்தம் மறைந்திருக்கலாம்.

கி.பி. 10ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட சோழப்பேரரசு அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்திலே இலங்கை முழுவதையும் அடிப்படுத்திற்று. தீவகத்திலும் இதன் தாக்கம் ஏற்பட்டதற்கான சான்று கிடைத்துள்ளன. வட இலங்கையினை கட்டுப்படுத்துவதற்கு கேந்திரநிலையிலுள்ள ஊர்காவற்றுறை போன்ற துறைமுகங்களையும் கட்டுப்படுத்தல் அவசியமாகும். ஊர்காவற்றுறைக்கு அண்மையில் நாரந்தனையில் இன்று தான்தோன்றி ஈஸ்வரி (மனோன்மணி ) ஆலயம் அமைந்துள்ள இடத்திலே சுமார் அரை நூற்றாண்டுக்கு முன் கல் சேகரிக்க வெடிவைத்தபோது சோழப்பேரரசனாகிய முதலாம் இராஜராஜனின் 38 செப்பு நாணயங்கள், சேர மன்னின் ஐந்து வெள்ளி நாணயங்கள், பொன்மணிகளின் துண்டுகள், சிறிய அம்பாள் (லக்ஷ்மி) சிலை முதலியனவும் வேறு சில பொருட்களும் வெளிவந்தனவாக கூறப்படுகின்றன. மேற்கூறிப்பிட்ட சின்னங்களில் சில யாழ்ப்பாண நுதனசாலையில் உள்ளன. பண்ணைத்துறை எனும் பெயர் பெண்னை ஆற்றுபகுதியிலிருந்து வந்தோரால் இடப்பட்டதென்றும் ஐதீகம் உண்டு. புங்குடுதீவிலுள்ள சோழனோடை, சோழகன்புலம் முதலிய இடப்பெயர்கள் குறிப்பிடற்பாலனது. மேலும் இத்தீவிலுள்ள பல்லதீவு சோழருக்கு முந்திய பல்லவ தொடர்பினைக் காட்டுவதாயும் இருக்கலாம். இதே வேளையில் தமிழ் நாட்டிலே சோழருக்கு முன் ஆட்சி செய்த பல்லவ வம்சத்தினை மணிபல்லவத்தினைச் சேர்ந்தவர் எனவும் இம் மணி பல்லவம் ஏற்கனவே குறிப்பிட்டவாறு நயினாதீவு, காரதீவு என்ற ஐதீகமும் குறிப்பிடற்பாலது. இதுபற்றி செவ்வையான ஆய்வு அவசியம். எனினும் தமிழ்நாட்டிலும் தீவகத்திற்கும் இடையிலே தொடர்புகள் நிலவி வந்தமை தெளிவாகும்.

கி.பி. 13ஆம் நூற்றாண்டிலே சிங்கை நகரை (நல்லூரை) தலைநகரமாகக் கொண்டு எழுச்சிபெற்ற யாழ்பாணத் தமிழரசு காலத்திலே தீவகத்திலும் புதிய திருப்பம் ஏற்பட்டது, இக்காலத்திலே குடாநாடு, வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி என நான்கு நிர்வாகப் பிரிவுகள் வகுக்கப்பட்டு இருந்தது. இத்துடன் தீவகம் •அல்லது தீவுப்பற்றும் ஒரு தனி நிர்வாகப்பிரிவாக இருந்தது. இப்பிரிவின் பிரதானிகளாக 1948வரை தனிநாயகம் குடும்பத்தவரே இருந்துள்ளனர். அத்துடன் யாழ்ப்பாணம் வலிகாமம் உட்பட்ட இடங்களிலும் இவர்கள் பிரதானிகளாக இருந்துள்ளனர். இத்தகைய பிரிவு இதற்கு முன்பே நெடுங்காலமாக நிலவி வந்திருக்கலாம். யாழ்ப்பாண மன்னரைத் தொடர்ந்து ஆதிக்கம் ஏற்படுத்திய போர்த்துகீசர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகியோர் தீவகத்தினை ஒரு

தனி நிர்வாகப் பிரிவாக பரிபாலித்து வந்தனர். பிரித்தானியர் ஆட்சிக்குப் பின் (1948) இக்காலம் வரை இந்நிர்வாகப் பிரிவு மேலும் இரண்டு நிர்வாகப் பிரிவுகளாகவும் பின் மூன்று பிரிவுகளாகவும் கவனிக்கப்பட்டு வருகிறது.

பன்னாட்டு வணிக பண்பாட்டுத் தொடர்புகள் தீவகத்திலும் நிலவி வந்தன. இந்தியத் தொடர்புகளைவிட கிரேக்க உரோம ஆராபிய, சீன வர்த்தகத் தொடர்புகளும், யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் நிலவியது போன்று தீவகத்திலும் நிலவியிருந்திருக்க லாம். இந்திய தொடர்புகளுக்கான சான்றுகள் சில ஏற்கனவே கூறப்பட்டுள்ளன. நயினாதீவு நாகபூசணியம்மன் கோவிலுள்ள கற்பலகைச் சாசனம் ஊர்காவற்றுறையிலிருந்து அங்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தெரிகிறது. இச்சாசனத்தின் மூலம் கி.பி. 12ஆம் நூற்றாண டின் பிற்பகுதியிலேயே, முதலாம் பராக்கிரம பாகு காலத்திலே ஊர்காவற்றுறையிலே நடைபெற்று வந்த வெளிநாட்டு வர்த்தகம் பற்றிய சில விபரங்கள் அறியப்படுகின்றன. இக்கல்வெட்டுத் தமிழிலே குறிப்பாக வர்த்தக ஒழுங்குமுறைபற்றி கூறுவதால் இவ் வர்த்தகத் திலே நடத்தியவர்களும் அதில் ஈடுபட்டுவந்த வெளிநாட்டவர்களும் தமிழர் என்பது வெள்ளிடைமலை, மேலும், ஊர்காவற்றுறை அக்காலத்திலே சர்வதேச வர்த்தகத்தொடர் புள்ள முக்கியமான துறைமுகமாக விளங்கிற்று என்பதும் புலப்படும் 1922லே வினாசிபிலிப் பன் என்பவன் அல்லைப்பிட்டியிலே கிடங்கு வெட்டியபோது 17 குஜராத் பொற்காசுகள் கிடைத்தனவாக அறியப்படுகின்றன. சோழப பெரு மன்னரின் காசுகள், மத்திய கால இலங்கை பொலநறுவை, தம்பதெனியா, யாப்பகூவ, கோட்டை மன்னரின் காசுகள் தீவகத்திலும் கிடைத்துள்ளன. இவை பெரும்பாலும் வர்த்தகத்தின் மூலம் இங்கு கொண்டுவரப்பட்டிருக்கலாம். பொலநறு வைக்காலத்தின் (கி.பி13ஆம் நூற்றாண்டின் முற்பகுதி) பின் தென்னிலங்கை மன்னரின் ஆதிக்கம் வடபிராந்தியத்திலே பொதுவாக நிலவவில்லை. யாழ்ப்பாண மன்னரின் சேது நாணயங்கள் தீவகத்திலும் கிடைத்துள்ளன. இவை அவர்களின் மேலாதிக்கம் இங்கு நிலவியதைக் காட்டுவதாகலாம். மேலும், இங்கு கிடைக்கும் போர்த்துகீசர், ஒல்லாந்த நாணயங்கள் அவர்களின் மேலாதிக்கம் நிலவியதை எடுத்துக்காட்டுவன.

சீனத்தொடர்புகளைக் காட்டும் சான்றுகள் குறிப்பிடற்பாலன. கி.பி. 10ஆம் நூற்றாண்டு தொடக்கம் சில நூற்றாண்டு களாக சீன வர்த்தகம் செழிப்பாக இலங்கையி லும் நடைபெற்று வந்தது. தீவகத்திலும் இதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. வேலணையின் மேற்குகரையிலுள்ள சீனன் கோயில் எனும் இடத்திலே சீனக்குடியிருப் பொன்று இருந்தாக தெரிகிறது, சுமார் அரை நூற்றாண்டுக்கு முன் நயினாதீவிலே துறை முகத்திற்கு அண்மையிலுள்ள பப்பரவன்சல்லி எனும் இடத்திலே கிடங்கு வெட்டிய போது பெரிய சாடிகள் வெளிவந்தன. அவற்றில் ஒன்று 1936இல் கொழும்பு நூதனசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு நூதன சாலை இயக்குனராக கடமையாற்றிய திரு. மல்பஸ் என்பவர் இதனை கி.பி. 12ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த சீனச் சாடியென அடையாளம் காட்டினார். இத்தகைய சாடிகள் தீவகத்தில் நயினாதீவு, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, முதலிய இடங்களிலும் வெளியே பொலநறுவவிலும் கிடைத்துள் ளன. இவை போன்ற சாடிகளின் துண்டுகள்

அல்லைப்பிட்டி, கந்தரோடை, வல்லிபுரம், மாந்தை முதலிய இடங்களிலும் காணப்பட்டுள்ளன. அல்லைப்பிட்டியிலே 1977லே பேராசிரியர் ஜோன் கார்ஸ்வெல் நடத்திய அகழ்வாய்வின் போது மேற்குறிப்பிட்ட சீனச் சாடிகள், மட்பாண்டங்கள் முதலியவற்றின் துண்டுகள் வெளிவந்தன. இவ்வகழ்வாய்வின் போது பழைய இந்துக்கோயில் இருந்ததற்கான தடயங்களும் கிடைத்துள்ளன. மேற்குறிப்பிட்ட பேராசிரியர் மாந்தையிலும் சீனத் தொடர்புடைய சான்றுகள் சிலவற்றைக் கண்டு பிடித்துள்ளார். இவை கி.பி. 10ஆம் நூற்றாண்டு தொடக்கம் சில நூற்றாண்டுகளாக நிலவிய சீனத் தொடர்புகள், குறிப்பாக வர்த்தகத் தொடர்புகளை எடுத்துக் காட்டுவதாக இப்பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார். கி.பி. 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சீனக்காசுகள் கந்தரோடையிலே கிடைத்துள்ளன. மலாய்த் தீபகற்பம், ஜாவா போன்ற இடங்களைச் சேர்ந்த சந்திரபானுவின் படையெடுப்பினாலும் வர்த்தகத் தொடர்பு போன்றவற்றிலும் மலாய் தீபகற்பம், ஜாவா போன்ற தென்கிழக்காசியத் தொடர்புகளும் நிலவின எனலாம். எடுத்துக்காட்டாக தீவகத திலுள்ள சில இடப்பெயர்களின் சாவான் (ஜாவாக்காரன்) வளவு, சீனன்புலம், கண காளார் வளவு, செட்டியார் தோட்டம், செட்டிவளவு, பணிக்கன்குளம் போன்றவை முறையே ஜாவா, சீன, இந்தியத் தொடர்புகளைக் காட்டுவனவாக இந்நாடுகளைச் சேர்ந்தவணிகர் இவ்விடங்களில் தங்கியிருந்திருக்கலாம் அல்லது தொடர்பு கொண்டிருக்கலாம். கோவளம் என்னும் இடப்பெயர் காரைநகரின் மேற்குப்பகுதியில், குடாநாட்டின் வடகரையிலும் உண்டு. இதே பெயர் கேரள மாநிலக் கரையிலும் உண்டு. எனவே, அங்கிருந்து இவ்விடங்களுக்கு ஏற்பட்ட மக்கட்புலப்பெயர்ச்சி அல்லது வர்த்தகப் பண்பாட்டுத்தொடர்பு அல்லது இவ்விரண்டினையும் இப் பெயர் காட்டுவதாகலாம். இதுபோலவே வேலணையில் உள்ள கரம்பன் எனும் இடம் கேரளத்திலும் உள்ளது. இதுவும் மேற்குறிப்பிட்ட தொடர்புகளை எடுத்துக்காட்டுவதாகலாம். தீவகத்திலுள்ள சில இடப்பெயர்கள் பழைய தூயதமிழ் வழக்காறுகளும் காணப்படுகின்றன. துருத்தி எனும் சொல் தீவையும் குறிக்கும். திருமுருகாற்றுப்படையில் (வரி 203) இக்கருத்தில் வந்துள்ளது. புங்குடுதீவிலே குறிகட்டுவானுக்கும் பிரதான தீவிற்கும் இடையில் உள்ள சிறு தீவு நடுவுத் துருத்தி (நடுவே உள்ள தீவு) என அழைக்கப்படுகிறது. களபூமி (போர்க்களம் அல்லது நெற்களம்) எனும் இடம் காரை நகரில் உள்ளது. களதீவு எனும் இடம்புங்குடு தீவிலுள்ளது. புறநானூற்றுச் செய்திகளை குறிப்பாக புறப்பொருள் அம்சங்கள் சிலவற்றை நினைவூட்டும் வெட்சி யாமுனை, வியப்புலி, கரந்தலி, பாணாவிடை போன்ற இடப்பெயர்கள் புங்குடுதீவில் உள்ளன என அவ்வூர் முதுபெரும் சைவத் தமிழ் அறிஞர் வித்துவான் அ. கனகசபை கருதுகிறான். பசுத்தீவு என அழைக்கப்படும் நெடுந்தீவில் இருந்தும் அயலிலுள்ள கச்சதீவிலிருந்தும் பால், தயிர், நெய் முதலியன இராமேஸ்வரத்திலுள்ள இராமநாதசுவாமி கோவிலுக்கு கொண்டுசெல்லப்பட்டதாக கூறப்பட்டதாக கூறப்படுகிறது. மேலும், பெரியபுலம், பள்ளம்புலம், உயரப்புலம், மண்கும்பான், மடத்துவெளி, குறிகட்டுவான், நெடுந்தீவு, பண்ணைத்துறை முதலிய இடப்பெயர்கள் குறிப்பிடற்பாலன. முதலாம் இராஜேந்திர சோழப் பெருமன்னரின் தென்கிழக்காசிய விஜயம் பற்றிக் கூறும் தமிழ் மெய்க்கீர்த்தியிலே அவன் வென்ற இடங்களில் ஒன்றாக பண்ணையும் குறிப்பிடப்படுகின்றது. துறை நீர்ப்பண்ணையென அது குறிப்பிடப்பட்டுள்

ளமை ஈண்டுகவனித்தற்பாலனது. பண்ணைத்துறை இவ்விடத்தினதும் பண்ணைத் துறையினதும் பெயர், சோழரின் பெண்ணை யாற்றுத் தொடர்பாலும் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். பெண்ணை பண்ணையாகத் திரிபுற்றிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. ஆறு போன்று இவையும் கடலை அடுத்தே இருப்பது கவனித்தற்பாலது. பெண்ணை யாற்றுப் பகுதியிலிருந்து புலம்பெயர்ந்து வந்த மக்கள் இங்கே இறங்கிய போது இதுதமது தாய்நாட்டில் உள்ள நிலம்போல இருந்தமையால் இப்பெயர் இட்டனர் என்ற ஐதீகம் உண்டு. இது நன்கு ஆராயப்படவேண்டிய தொன்றாகும்.

தமது தாய்நாட்டிலுள்ள சில அம்சங்கள் சில தீவகத்திலே காணப்பட்டபடியால் போலும் ஒல்லாந்தர் தாய்நாட்டிலுள்ள இடப்பெயர்கள் சிலவற்றை இவற்றிற்கு சூட்டினர். அங்குறையின் ஆற்றின் கீழ்ப்பகுதிகளில் தீவுகள் போன்ற நிலப்பகுதிகள் காணப்படுவது போன்ற இங்கு கடல் நீரினால் சூழப்பட்டுள்ள தீவுகளை அவர்கள் அவதானித்தும் பெயரிட்டிருக்கலாம். இங்குள்ள கடல்களை அவர்கள் உவர்நீர் ஆறுகள் எனவும் தமது ஆவணங்களிலே குறிப்பிட்டுள்ளனர். இப் பெயப்பட்ட வழக்காறு தீவகத்திலும் உண்டு. ஏழு தீவுகளையும் சூழ்ந்துள்ள கடல்நீர் ஒன்றுசேரும் இடம் ஏழாற்றுப் பிரிவு அழைக்கப்படுகிறது. இப்பகுதியிலே சுழி நீரோட்டம் இருப்பதால் வள்ளங்கள் முதலிய இவற்றை விலக்குவன அல்லது கவனமாக செல்லுவன. ஒல்லாந்தர் வேலணையினை லெய்டென் எனவும் காரைதீவினை (காரைநகரை) அம்ஸ்ரர்டம் எனவும் நெடுந்தீவினை டெல்வ்ற் எனவும் அழைத்தனர். இவற்றுள் லெய்டன், டெல்வ்ற் ஆகிய இரண்டு பெயர்களும் இன்றும் வழக்கில் உள்ளன. ஊர்காவற்றுறையினை போர்த்துக்கீசர் காயெஸ் (Gaes) எனவும் அழைத்தனர். அங்கு ஐரி (உருண்டி)க் கோட்டையினைக் கட்டினர். யாழ்பாணக் கடலை பாதுகாக்க அவர்கள் வோர்ட்டலெஷாடு காயெஸ் (Fortatexa do caes) எனும் கோட்டையினைக் கட்டினார். இதன் அழிபாடுகள் உள்ள இடமே காரைநகர் மேற்கிலுள்ள இராசாவின் தோட்டம் எனக் கருதப்படுகின்றது. இவ்விடத்திலே இப்பகுதி மன்னரின் மாளிகை இருந்திருக்கலாம். டச்சுமொழியில் கயிற்ஸ் (Kayts) என அழைக்கப்பட்டது. இப் பெயர் ஒல்லாந்தில் உள்ள ஓர் இடப்பெயராகும். காயெஸ் எனும் பெயர் முதலில் இதற்கு எதிரே காரைநகரிலுள்ள துறைமுகத்திற்கு இருந்ததாகவும் பின்னரே இவ்விடத்தைக் குறித்ததாகவும் கருதப்படுகின்றது. ஆங்கிலத்தில் Kayts எனும்பெயர் இன்றும் நிலைத்துள்ளது.

போத்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சியினை நினைவூட்டும் கோட்டைகள் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, காரைநகர் முதலிய இடங்கள் இன்றும் உள. இவற்றுள்ளே ஹமென்உறீஹீல் கோட்டை குறிப்பிடற்பாலது. காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையே உள்ள கற்பாறையிலான சிறு தீவில் இது அமைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து இந்தியாவிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே செல்லும் கப்பல்களை அவதானிக்கலாம். யாழ்பாணக்குடாநாட்டின் வெளித் தொடர்புகளை கட்டுப்படுத்தக்கூடிய கேந்திர ஸ்தானமொன்றில் இது அமைந்துள்ளது. இதன் முக்கியத்துவத்தினை போர்த்துகீசர் ஒரு சிறுகோட்டையினை இங்கு கட்டினர். அவர்களுக்கு முன் யாழ்ப்பாணத்து மன்னரும்

அதன் முக்கியத்துவத்தை உணர்ந்திருப்பர். போர்த்துகீசரைத் தொடர்ந்து ஆதிக்கம் பெற்ற ஒல்லாந்தர் இவ்வாறு அழைத்தனர். இப்பெயரே இன்றும் நிலைத்துள்ளது. இவர்களின் கட்டிடக் கலைத்திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். தொடர்ந்து பிரித்தானியரும் இதனைப் பயன்படுத்தி வந்தனர். அனலைதீவு, போர்த்துகீசர் காலத்திலே டொனாகிளார எனும் மாதினால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. அவர் பயன்படுத்திய கதிரை சாதாரணமாக இருவர் இருக்கலாம் எனவும் கூறப்பட்டுள்ளது. இத் தீவு அவரின் பெயராலும் அழைக்கப்பட்டது.

ஊர்காவற்றுறையிலே கப்பற் தொழில் நெடுங்காலமாக நிலைத்துள்ளது. காரைநகரில் மேற்குப் பகுதியில் உள்ள சூரியன்பிட்டி குறிப்பிடற்பாலது. இங்கு தமிழ்மன்னர் கால மாளிகை இருந்திருக்கலாம். இதன் மேலே போர்த்துகீசரின் கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருக்கலாம். ஆனால், அகழ்வாய்வு மூலமே இவற்றை உறுதிப்படுத்தல் அவசியம். ஒல்லாந்தர் குதிரை வளர்த்தலை ஊக்கப்படுத்தி வந்தனர். அராபியா, பாரசீகம் முதலிய நாடுகளிலிருந்து நல்ல இனக் குதிரைகளை இங்கு கொண்டு வந்து பெருக்கினார். பின் வந்த ஆங்கிலேயரும் இதில் ஓரளவு கவனம் செலுத்தினர். ஆனால் குதிரைகள் தரம்குன்றிய நிலையில் இன்றும் உள்ளன. பிரித்தானியர் ஆட்சியின் தொடக்கத்திலே இராணுவ அதிகாரியான நோலன், நெடுந்தீவு நிர்வாகத்தை கவனித்து வந்தான். அவன் அயர்லாந்து நாட்டினைச் சேர்ந்தவன். தாய் நாட்டினைப் போன்று முருகைக் கற்களான வேலியினை அறிமுகப்படுத்தியிருக்கலாம் என கருதப்படுகின்றது. இவ்வேலி முறை நெடுந்தீவிற்குரிய சிறப்பு அம்சமாகும். மேலும் புங்குடுதீவு மேற்கிலே கல்லடைப்பு எனும் பகுதியில் இத்தகைய வேலி சில காலத்தின் முன் இருந்தது. ஆனால், இப்பொழுது இல்லை.

போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரித்தானியர் தொடர்புகளினாலே கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து, கிறிஸ்தவ சமயங்கள் தீவகத்திலும் பரவின. இவற்றிற்கான தேவாலயங்களும் அமைக்கப் பட்டன. போத்துக்கீசர் கால தேவலாயங்களும் அமைக்கப்பட்டன. போர்த்துக்கீசர் காலத் தேவாலயங்களை ஒல்லாந்தர் திருத்தியோ, திருத்தாமலோ தமது தேவாலயங்களாகவும் பயன்படுத்தினர். இதனால் போர்த்துக்கீசர் காலக் கத்தோலிக்க தேவாலயங்கள் இன்று இல்லை. ஒல்லாந்தரின் தேவலாயங்கள் பலவும் பின் கைவிடப்பட்டன. இன்றைய தேவாலயங்கள் பெரும்பாலும் பிரித்தானியர் காலத்தவை. நயினாதீவு சாட்டி ஆகிய இடங்களிலே முஸ்லிம் குடியிருப்புக்கள் சில உள்ளன.

போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆவணங்கள், அறிக்கைகள், கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து சமய குருமார் எழுதிய நூல்கள் மூலம் தீவகம் பற்றிய மேலும் சில நம்பகரமான தகவல்கள் கிடைக்கின்றன. அவற்றுட் சில முற்பட்டவை, சில சமகாலத்தவை. சில ஐதீகங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. அவர்களிலே வேர்ணாவோடிகுவேறோஸ், போலோத திரிநிதாதேர ஆகிய கத்தோலிக்க மத குருமாரும், றிபெய்ரோ எனும் போர்த்துக்கீசத் தளபதயும், போல் டேயஸ் எனும் ஒல்லாந்த புரட்டஸ்தாந்து மதகுருவும், எழுதியுள்ள நூல்களும், ஒல்லாந்த தேசாதிபதிகள் சிலர் எழுதியுள்ள நூல்களும், ஒல்லாந்த தேசாதிபதிகள் சிலர் எழுதியுள்ள அறிக்கைகளும் (Memoirs) குறிப்பிடற்பாலன. போர்த்துகீசருடைய முக்கியமான ஆவணங்

களில் ஒரு பகுதி ஒல்லாந்தருடன் நடைபெற்ற போர்களில் அழிந்துவிட்டமை துரதிர்ஷ் டமே, எனினும் கோவாவிலும் லிஸ்பனிலும் சில முக்கியமான ஆவணங்கள் உள்ளன. ஒல்லாந்தர் கால ஆவணங்களைப் பிரித்தானியர் பெருமளவு பேணியுள்ளனர். எம்மவர் மத்தியிலே வரலாற்று மரபுகள் நன்கு பேணப்பட்டில. அதே வேளையில் எம் நாட்டிற்கு வந்து மேற்குறிப்பிட்ட பிறநாட்டவர் எழுதிவிட்டுச் சென்றுள்ள சில முக்கியமான ஆவணங்கள் இதுவரை நன்கு பயன் படுத்தப்படாமையும் துரதிர்ஷ்டமே, போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் கால வரலாற்று மூலங்களைப் பயன்படுத்துவதில் வரலாற்று மாணவர் நன்கு கவனம் செலுத்தவேண்டும். மேற்குறிப்பிட்ட போர்த்துக்கீச, ஒல்லாந்த ஆவணங்கள், அறிக்கைகள், நூல்கள் மூலம் இக்காலகட்டத்திலே தீவகத்திலே வாழ்ந்த மக்களின் தொகை, அவர்களின் தொழில், தொழில் வாய்ப்புக்கள், பொருள் வளங்கள் முதலியன பற்றி ஓரளவாவது அறியலாம். தீவகத்திலே விவசாயம், மந்தை வளர்த்தல், மீன்பிடித்தல் வியாபாரம் முதலிய தொழில் களும் சாயவோ, சிப்பி, சங்கு, மீன், மான், முயல், ஆடு, மாடு, எருமை, குதிரை (நெடுந் தீவில்) பனை, தென்னை முதலிய மூலவளங் களும் குறிப்பிடப்பட்டுள்ளன. சிறுகாடு களும் இங்கு இருந்தன. புங்குடுதீவிலுள்ள பெருங்காடு, கற்காடு, கோட்டைக்காடு, நாரந்தனையிலுள்ள பெரியகாடு போன்ற இடப்பெயர்கள் இதனை இன்றும் நினை வூட்டும். இவற்றில் மான், முயல் முதலிய மிருகங்களும் வாழ்ந்தன. இங்கு மான்கள் காணப்பட்டமை. குறித்து ஒல்லாந்த ஆவ ணங்களும் குறிப்பிடுகின்றன. மானெழுவம், மானாவெள்ளை, மானங்கள் முதலிய இடப்பெயர்கள் அதனை நினைவூட்டுவன போலும். கி.பி. 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே (1658 -1665) ஒல்லாந்த மதகுருவாகக் கடமையாற்றிய போல்டேயஸ் சுவாமிகள் புங்குடுதீவில் வாழ்நத ஆண்கள் ஏனைய இந்தியப் பகுதிகளிலுள்ளவர்களிலும் பார்க்க உயரமானவர்கள் எனக் குறிப்பிட் டுள்ளார். மேலும் போர்த்துக்கீச, ஆசிரியர் சிலரின் கூற்றுப்படி தீவகத்திலே கடற் கொள்ளையரின் அட்டகாசங்களினால் மக்கட் தொகை அக்காலத்திலே குறைவாக இருந்ததாகவும், போர்த்துக்கீசர் வருகை யினைத் தொடர்ந்து அமைதியேற்படக் கூடுதலான மக்கள் இங்கு வாழ்ந்தனர் எனவும் அறியப்படுகின்றது. இது எந்த அளவுக்கு வரலாற்றுண்மை என்பது ஆராயப்பட வேண்டியதாகும். சாயவேர் தீவகத்தின் பல இடங்களிலும் கிடைத்ததாயினும், காரை நகரிற் கிடைத்த சாயவேரே மிகச் சிறந்த ரகமானதாகக் கூறப்படுகின்றது. பருத்தியும், ஓரளவு பயிரிடப்பட்டது. பருத்தி'அடைப்பு, பருத்திவளவு பருத்தித்தீவிலே பருத்தி உற்பத்தியைப் பெரிய அளவில் தொடங்கினர் ஆனால், அங்கு பருத்திச்செடி நன்கு வளர்ந் தாலும் லாபகரமில்லாமையால் கைவிடப் பட்டது. ஆனால் பெயர் மட்டும் நிலைத் துள்ளது. நெடுந்தீவிலே நோலன் என்பவன் சணல் உற்பத்தியைப் பெருக்கினான்.

(பேராசிரியர் வி. சிவகாமி அவர்கள் தனது தாயார் திருமதி. விநாயகமூர்த்தி மகேஸ்வரிப்பிள்ளை அவர்களின் நினைவாக 1990 ஆம் ஆண்டு வெளியிட்ட நூலில் இடம்பெற்ற கட்டுரை)



# நான் கண்ட கமலாம்பிகை வித்தியாலயம்

**எஸ். கே. சண்முகலிங்கம்,**
அதிபர், ஸ்ரீகணேச மகாவித்தியாலயம்.

ஒரு பாடசாலை திறக்கப்படும்போது சிறைக்கூட மொன்று மூடப்படுகிறது. கல்வியின் நோக்கம் வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்தலே இந்த நோக்குடன் புங்குடுதீவு ஊரதீவு கிழக்குப் பகுதியினரதும் வாதீவு, மடத்துவெளி வாழ் மக்களுடன் வல்லன் வடக்கு மக்களின் கல்வித் தேவையையும், பொதுப்பண்பாட்டினையும் முன்னிறுத்தி யாழ். சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினரால் (Hindu Board) தல்லையம்பற்று முருகன் ஆலயக் 1.5 ஏக்கர் காணியில் 16.09.1936இல் மடத்து வெளியில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையே இப்பாடசாலை. இதன் ஒருபக்க வேலிக்கரையில் அரை நூற்றாண்டிற்கு முன்பாகவே அமைக்கப்பட்டு கல்விப் பணியாற்றிய அமெரிக்கன் மிஷன் பாடசாலையுள்ளது. இவை இரண்டுமே அப்போது ஆரம்பப்பாடசாலைகளாகும். சைவப்பாடசாலைகள் பெரும்பாலும் இந்து ஆலயங்கள் சார்ந்தே நடந்து வந்துள்ளது. திருநாவுக்கரசு வித்தியாலயம், இராஜரா ஜேஸ்வரி வித்தியாலயம், ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம், ஸ்ரீசித்தி விநாயகர் வித்தியாலயம் போன்றன ஆலயங்களுடன் இணைந்த பாடசாலைகளாயிருந்தது. இப்பாடசாலையில் ஆரம்ப காலத் தலைமை ஆசிரியர் வைத்திலிங்கம் கந்தையாவாகும்.

மற்றைய பாடசாலைகள் போன்றே 908 இலக்க சுவீகரிப்புச் சுற்று நிருபத்திற்கு ஏற்ப இவை அரசினர் பாடசாலைகளாகின. மேலும் இரு பாடசாலைகளும் திரு. என் பசுபதிப்பிள்ளை தலைமை ஆசிரியராக இருந்த காலம் 01.09.1962முதல் கமலாம்பிகை வித்தியாலயம் என்ற பெயரில் அரசினால் ஒருங்கிணைக்கப்பட்டது. கல்வி வளர்சியினைக் கருத்திற் கொண்டு ஆரம்ப பாடசாலையான இது இடைநிலைப் பாடசாலையாகி சாதாரண தர வகுப்புவரை கற்பிக்கப்பட்டது. 1991இக் இடப்பெயர்வின்போது இப்பாடசாலையில் 428 மாணவர்கள் சாதாரண வகுப்பு வரை கல்வி பயின்றனர். 10.04.1996இல் மீளக்குடியமர்ந்து பாடசாலை ஆரம்பமான போது எல்லா நெருக்கடிகளும் வளப்பற்றாக் குறைகளும் ஆபத்துக்களும் இருந்த போதும் அதன் அயலில் குடியேறி அதிபர் ந. இராசதுரை பாடசாலைப் பொறுப்பை ஏற்று 09.09.2008இல் ஓய்வு பெறும் வரை பாடசாலை வளர்ச்சியில் சகல வளங்களையும் ஏற்படுத்தி வரலாறு படைத்த பெருமை முன்னாள் அதிபரும் நா.இராசதுரையைச் சாரும். அவர் பின் நிரந்தரப் பொறுப்பினை ஏற்று புங்குடுதீவுப் பாடசாலைகளில், பெறுபேற்றில் முன்னணிப் பாடசாலையாக்கியவர். தற்போதைய அதிபர் திரு. நாகராசாவாகும், இப்பாடசாலையின் நில இடவசதியைக் கருத்திற் கொண்டு ஸ்ரீபாலசுப்ரமணியாலய தர்மகர்த்தாவும் நலன் விரும்பியுமான திரு. இராமநாதன் (V. M. R) அவர்கள். பாடசாலைக்கு கிழக்குப் பக்கமாயிருந்த 66 பரப்புக் காணியைப் பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியமை ஓர் வரலாற்றுப் பதிவாகும்.

இப்பாடசாலையின் கல்விப் பங்களிப்பு நோக்கின், இப்பாடசாலையில் ஆரம்ப கல்வியைப் பெற்ற நானும் சாதாரண தரக் கல்வி சான்றிதழைப் பெற்ற திரு. தருமபாலனும் சமகாலத்தில் ஸ்ரீகணேச மகாவித்தியாலயத்தினதும், புங்குடுதீவு மகாவித்தியாலயத்தினதும் அதிபராயிருந்

தமை பாடசாலைக்குப் பெருமை சேர்ப்ப தாகும். இப்பவள விழாவினைத் தலைமை யேற்று நடாத்திக்கொண்டிருப்பவரும் "கமலமலர்" பிரதம ஆசிரியரும், சமுகநல எழுத்தாளருமான வைத்தியகலாநிதி. ஆ. பேரின்பநாதன் அவர்களும் இப்பாடசாலை யின் ஆரம்பவகுப்பு மாணவராயிருந்தவர் என்பது இப்பாடசாலைக்குப் பெருமை சேர்ப்பதாகும். மேலும் இப்பாடசாலை மாணவர்கள் அரச சேவையாயிலும், தனியார் துறையிலும் உள்நாட்டிலும் வெளிநாட்டி லும் சிறப்புடன் வாழ்வது பாடசாலைக்குப் பெருமை சேர்ப்பதாகும். வெளிநாட்டிலுள்ள இப்பாடசாலைப் பழைய மாணவர்களதும் சுவிஸ் ஒன்றியம் நலன் விரும்பிகளதும் பெரும் பங்களிப்புடன் பாடசாலை பல வளர்ச்சி பெற்று வருவதுடன், அவர்கள் உதவியதுடன் பவளவிழாக் காண்பதையிட்டு இரட்டிப்பு மகிழ்ச்சியடைகின்றேன். அதற்காக இதன் பங்காளிகளான வெளிநாட்டில் உள்ள நலன் விரும்பிகளையும் உற்சாகமாக இயங்கும் பழைய மாணவரமைப்பினையும் விழாக் குழுவினரையும் மலராசிரியரையும், மாணாக் கர்களையும் மனமாரப் பாராட்டுகிறேன். என் நினைவில் நிற்கும் இப் பாடசாலையின் கல்விப் பணியில் முன்னின்றுழைத்த ஆசிரியர் களான அமரர்களான க. தியாகராசா, திரு. ஐயாத்துரை இறுப்பிட்டியைச் சேர்ந்த திரு. தாமோதரம்பிள்ளை போன்றோர் தம்பணியி னால் என்றும் என் நெஞ்சம் நிறைந்தவர்கள்.

அத்துடன் இன்றைய வளர்ச்சியின் கதாநாயகன் அதிபர் நா. நாகராசா உடன் ஆசிரியர்கள் ஊக்கமுடன் கற்கும் அனைத்து மாணவர்களையும் நான் மனமார வாழ்த்துகி றேன் பாராட்டுகிறேன்.

நேற்றுப் பிறந்து நாளை மறுநாள் சாவதற்கு விதியால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு குழந்தை என்னிடம் வந்து, என் திட்டங்கள் அனைத்தையும் மாற்றச்சொல்கிறது. அந்தக் குழந்தையின் அறிவுரையைக் கேட்டு, அதன் கருத்திற்கு ஏற்ப என் திட்டங்களை நான் மாற்றிக்கொண்டால், நான்தான் முட்டாளே தவிர வேறு யாரும் அல்ல. பல்வேறு நாடுகளிலிருந்து நமக்கு வருகின்ற அறிவுரைகள் எல்லாம் இப்படிப்பட்டவைதாம். தங்களை அறிவாளிகள் என்று காட்டிக் கொண்டிருக்கின்ற இந்த முட்டாள்களுக்குச் சொல்லுங்கள், "முதலில் ஒரு நிலையான சமுதாயத்தை உனக்கென்று நீ ஏற்படுத்து. அதன் பிறகு நான் உன் உபதேசத்தைக் கேட்கிறேன். இரண்டு நாட்களுக்கு உங்களால் ஒரே கருத்தை முற்றிலுமாகக் கைக்கொள்ள முடியவில்லை. அதற்குள் அடித்துக் கொண்டு அதை விட்டுவிடுகிறீர்கள். மழைக் காலத்தில் தோன்றும் ஈசல்கள் போல் தோன்றி, அவற்றைப் போலவே ஐந்து நிமிடங்களுக்குள் செத்துப் போகிறீர்கள். நீர்க்குமிழிகளைப் போல் தோன்றுகிறீர்கள், அவற்றைப் போலவே உடைந்து அழிகிறீர்கள். முதலில் எங்களுடையது போல் நிலையான ஒரு சமுதாயத்தை அமையுங்கள். நூற்றாண்டுகள் பலவாகியும் ஆற்றல் குன்றாமல் நிலைத்திருக்கின்ற சட்டங்களையும் சமுதாய அமைப்புக்களையும் உண்டாக்குங்கள். அதன் பிறகுதான் உங்களோடு இதைப்பற்றிப் பேசுவதற்கான நேரம் வரும். அதுவரை, என் நண்பர்களே, நீங்கள் வெறும் குழந்தைகளே".

சுவாமிஜீ விவேகானந்தர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில்
1897ஆம் ஆண்டு ஆற்றிய சொற்பொழிவிலிருந்து....



# ஏழு பிறவியும் ஒரு துறவியும்

சுகி

ஐந்து பூதங்களாகிய நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் சேர்ந்து உருவான ஒன்றைப் பிரபஞ்சம் என்கிறோம். பஞ்சம் என்றால் வடமொழியில் ஐந்து என்று பொருள். "பிர" என்பது கருணையால் இணைந்து உருவானது.

அதனுள் இருக்கும் நாம்; மெய், வாய், கண், மூக்கு, செவி, என்கின்ற ஐந்து பொறிகள் சேர்ந்து உருவானவர்கள். இந்த ஐந்தையும் ஆளும் மனம் ஆறாது அறிவு. இதை உடையவர் மனிதர். அந்த ஆறாம் அறிவையும் கடந்து, உடம்பையும் கடந்து, ஏழாம் நிலையில் நிற்க முடியும். அப்படி நிற்கும் நிலையே தெய்வநிலை.

உடம்பைத்தவிர வேறு சிந்தனை இல்லாத நிலை. மிருக நிலை, நான் வேறு, உடம்பு வேறு என்ற சிந்தனையின்றி உடம்பையே நான் என்றும் மதிமயங்கும் நிலை மனித நிலை. உடம்பு நான் அல்ல என்று உடம்பையும் தாண்டி "நான்" என்ற எண்ணத்தை ஏழாவது நிலையிலும் அதற்கு மேலும் நிறுத்தும் நிலை தெய்வ நிலை. இந்த நிலையிலி பல ஞானிகள் சர்வ சாதாரணமாக இருந்திருக்கிறார்கள்.

இந்தியாவின்மீது படையெடுத்து வந்த மாவீரன் அலெக்ஸாண்டர் திரும்பிப் போகும்போது பாரதஞானத்தின் மீது பெரும் மரியாதை கொண்டவன் ஆகிவிட்டான். இந்தியப் பெருஞானி ஒருவரைத் தம்முடன் கிரேக்கத்திற்கு அழைத்துப்போய் அங்குள்ளவர்களுக்குக் காட்டவும் விரும்பினான்.

அலெக்ஸாண்டர் இராஜமரியாதையுடன் தம்மை அழைத்துச் செல்ல விரும்புகிறான் என்பது தெரிந்ததும் பல சந்நியாசிகள் அவருடன் போகப் போட்டி போட்டனர். தாமாக வர விரும்பிய எவரையும் அலெக்ஸாண்டர் அழைத்துப்போக விரும்பவில்லை. காரணம்: பொன்,பொருள், மரியாதையை விரும்பும் எவனும் உண்மைச் சந்நியாசியாக இருக்க முடியாது என்று அலொக்ஸாண்டர் புரிந்து வைத்திருந்தான்.

எனவே, உண்மையான ஞானியை, தெய்வநிலை பெற்ற சந்நியாசியைத் தேடும்படி தன் படைவீரர்களுக்கு உத்தரவிட்டான். அவனது படை வீரர்கள் ஒரு நதிக்கரையில் தவம் செய்து கொண்டிருந்த ஒளிமிக்க ஒரு ஞானியைத் தேர்ந்தெடுத்தனர்.

"ஐயா நீங்கள் அதிர்ஷ்டசாலி. உமது பாக்கியம் வார்த்தைகளில் அடங்காது. போரின்மை காரணமாக உம்மைத் தம்முடன் அழைத்துச் செல்ல விரும்புகிறார். பல சந்நியாசிகள் அவருடன் வர விருப்பம் தெரிவித்தும் அவர்களைப் பேரரசர் அலெக்சாண்டர் மறுத்துவிட்டார். ஆனால், நீங்களோ பாக்கியவான்; எங்களுடன் புறப்படும்" என்று அவசரப்படுத்தினர் படைவீரர்கள்.

"ஒரு சந்நியாசியை அழைத்துப் போகும் சக்தி எந்தப் பேரரசனுக்கும் கிடையாது: அவனுடன் வரும் எண்ணம் எனக்கு இல்லை" என்று மறுத்துவிட்டார் துறவி. அலெக்ஸாண்டர் நேரில் வந்து வற்புறுத்தினார். துறவி கேட்கவில்லை. அலெக்ஸாண்டர் கோபம் அடைந்தார். "என்னை எதிர்த்தால் உன் வாழ்வு முடிந்து விடும்" என்று எச்சரித்தார். அதற்குத் துறவி, "என்வாழ்வை என்றோ நான் முடித்துக் கொண்டேன். அதன் பிறகு நீ முடிப்பதற்கு இங்கு என்ன இருக்கிறது? நீ பலரை வென்றிருக்கலாம். ஆனால், நான் என்னை வென்றவன். தன்னை வென்றவனை வெல்ல உன்னால் ஒரு போதும் முடியாது" என்றார் துறவி

வாளை உருவி அவர் கழுத்தில் வைத்து "நீ வர மறுத்தால் உன்தலை சீவப் படும்" என்றான் அலெக்ஸாண்டர். "அட முட்டாளே என் தலையை வெட்டும் போது நீ எப்படிப் பார்த்துக் கொண்டிருப்பாயோ அப்படிநானும் பார்த்துக் கொண்டிருப்பேன்" சாட்சியாக என்னை வெட்டுவதை நீ பார்ப்பது போல நான் வெட்டப்படுவதை நானே பார்ப்பேன். ஒரு போதும் நீ என்னை அழிக்க முடியாது. நீ என் தலையை வெட்டலாம். ஆனால், அதைப்பார்ப்பவனாக மாறியிருக்கும் போது நீ என்ன செய்ய முடியும்?" என்றார் துறவி. அலெக்ஸாண்டரின் வாளும் தலையும் ஒரே நேரத்தில் கீழே தாழ்ந்தன.

இந்தத் துறவியின் நிலைதான் ஏழாவது அறிவு. இதை அடைவதே தெய்வமாதல். இப்படி ஏழு சக்கரங்கள் என்ற இந்த யோக முறை எவற்றை விளக்குகின்றதோ அவற்றை ஏழு ஆலயங்கள் என்று பௌத்தமும், ஏழு வெளிகள் என்று சீனநாட்டு ஞான நூல்களும் விளக்குகின்றன. பெயரில்தான் சிறிதுமாற்றமே தவிர பொருள் ஒன்றுதான்.

இந்த ஏழையும் ஏழு பிறவிகளில் கடப்பதற்காகவே மனிதப்பிறவி ஏழு முறை கிடைக்கிறது என்று கூறுகிறது இந்து மதம். இந்த ஏழு பிறவியிலும் கணவன் -மனைவி இணைந்தே முத்தி பெற வேண்டும் என்பதாலேயே திருமணத்தில் தம்பதியர் கரம் கோர்த்து ஏழு அடிகள் நடக்கும் "சப்தபதி என்ற சடங்கு இடம்பெறுகிறது.

இந்த ஆன்மீக ஞானம் பெறுவது சுலபமா? கடினமா?

### யாரை எங்கே வைப்பது

துளசியைப் பூஜையறையில் வைக்கிறோம். கறிவேப்பிலையைச் சமையல் அறையில் வைக்கிறோம். இரண்டும் இலைதானே. இருந்தாலும் ஏன் வேறு வேறு இடம்? ஒரே இடத்தில் வைப்பதில்லையே. செருப்பை வாசலில் விடுகிறோம். பூங்கொத்தை வரவேற்பறையில் வைக்கிறோம். இடமாற்றி வைப்பதில்லையே! ஏன்? ஒரு வீட்டில் எதை எதை எங்கே எங்கே வைப்பது என்கிற தெளிவு நமக்கு இருக்கிறது. அதாவது உயிரற்ற அஃறிணைப் பொருட்களைக்கூட எங்கெங்கே வைக்கவேண்டும் என்கிற விழிப்பு நம்மிடம் இருக்கிறது. அது இருப்பதாற்றான் நாம் பழகும் நபர்களையும் இதே மாதிரி எங்கே எங்கே வைக்க வேண்டும் என்று நமக்குத் தெரிய வேண்டாமா? சமத்துவம், மனிதத் தன்மை, பண்பாடு, இரக்கம், இதன் காரணமாக எல்லா மனிதர்களையும் சமம் என்று மதித்தாலும், யாரை எங்கே எப்படி வைக்கவேண்டும் என்று தெரியாததால் எத்தனை குடும்பங்கள் வீணாகிவிட்டன தெரியுமா? கூனியை எங்கே நிறுத்தி இருக்கவேண்டும் என்று கைகேயிக்குத் தெரியவில்லை. சகுனியை எந்த இடத்தில் வைத்திருக்க வேண்டும் என்பது துரியோதனனுக்குப் புரியவில்லை. ஏன்? சூர்ப்பனகையை

எங்கு நிறுத்தி இருந்திருக்கவேண்டும் என்பது அந்த ராமனுக்கேகூட விளங்கவில்லை. யாரை எங்கு வைப்பது என்பது யாருக்கும் புரியவில்லை என்ற வரிகள் உண்மையில் எவ்வளவு அர்த்தமுள்ளவை. பெருவாரியான அரசியல் தலைமைகள் வீணாய்ப் போனதற்குக் காரணம் எல்லை தெரியாமல் ஆட்டம் போட்ட அதிகார மையங்கள்தான் என்று வரலாறு சமாளிக்கிறது. ஆனால், அந்த மையங்களைச் சரியான இடங்களில் நிறுத்தி வைக்காத தலைமைகள் தான் அதற்கு உண்மையான காரணம். நாயை வாசலிற் கட்டி வைக்கிறோம். பசுவைத் தோட்டத்திற் கட்டி வைக்கிறோம். பூனையை வீடு முழுவதும் உலவ விட்டாலும் சமையல் அறைக்குள் நுழையாமற் கவனமாகப் பார்த்துக் கொள்கிறோம். ஆனால், இப்படி நண்பர்களை, உறவினர்களை, பணியாளர்களை, நாம் சார்ந்த இயக்கத்தில் இருப்பவர்களை, ஏன் நமது வழிகாட்டிகளாகப் பவனிவரும் சமய குருமார்களைக்கூட எந்த எல்லையில், எந்தப் புள்ளியில் நிறுத்தி வைக்கவேண்டும் என்பது நம்மவருக்குத் தெரியவேண்டும். தெரிகிறதா? பேரறிஞர் அண்ணா அமரர் ராஜாஜியுடன் கூட்டுவைத்துத் தேர்தலைச் சந்தித்தபோது, தந்தை பெரியாரை எதிர்க்க நேர்ந்தது. தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் அண்ணாவிடம் "ராஜாஜியுடன் சேர்வது பெரியாரைப் பகைப்பது தமிழினத்திற்குத் தீங்கு தராதா?" என்று நேரடியாகவே கேட்டுவிட்டார். அண்ணா பொறுமையுடன் "நீங்களும் இருக்கத்தான் போகிறீர்கள். நானும் இருக்கத்தான் போகிறேன். பொறுத்திருந்து பாருங்கள்" என்றார். தாம் வெற்றிபெற்ற பின்னர் தம் ஆட்சியைப் பெரியாருக்கு அர்ப்பணித்தார். மூதறிஞர் ராஜாஜி சொன்ன நபர்களை அவர் சொன்ன பதவிக்கு நியமிக்க மறுத்துவிட்டார் என்பதை வரலாறு அறியும். இன்று பல குடும்பங்கள், இயக்கங்கள், நாடுகள் துன்பப்பட ஒரே காரணம் "யாரை எங்கே வைப்பது என்பது யாருக்கும் தெரியலே" என்கிற அனுபவ வரிகள்தான்!

ஒருவன் உன்மேல் பகை கொண்டானென்றால், அவனுடன் அன்பு வைத்து அவனுக்கு உண்மையை எடுத்துக் காட்ட வேண்டும். அதிலும் அவன் குற்றத்தை வற்புறுத்தி அவன் மேற் பழிசுமத்தக்கூடாது. உன்னுடைய பொறுமையையும் பெரிதாகக் காட்டிக் கொள்ள வேண்டா. மனமார அவனுக்கு உதவி செய்து அவனெண்ணத்தை மாற்று. அவன் பிழை செய்தானென்பது உனக்கு எப்படித் தெரியும்? ஒரு சொல்லுக்குப் பல காரணங்கள் உண்டு. மற்றொருவன் செய்தது தவறு என்று நிச்சயிக்க எவ்வளவோ விஷயங்களை ஆராயவேண்டும்.

- சுவாமி விபுலானந்தர்

# அன்னையைப் போல் ஒரு தெய்வமுண்டா

**க. கிஷானந்,** வித்தியாலய மாணவன், தரம் - 11.

இறைவனாற் படைக்கப்பட்ட உயிரினங்கள் அனைத்தும் "அ" என்னும் முதலடியைக் கொண்டே உச்சரிக்கின்றன. குழந்தை ஒன்று தாயின் கர்ப்பப் பையில் இருந்து வெளிவந்தவுடன் முதலில் பேசும் மொழி "அ" என்னும் ஒலிதான். அதேபோல் பசுவின் இனத்திற் கன்று பிறந்தவுடன் கத்தும் மொழியும் "அ" என்னும் மொழிதான். அம்மா என்னும் சொல்லுக்கும், பாசத்திற்கும் ஈரேழு உலகத்திலுமுள்ள சொத்துக்களை வைத்தாலும் ஈடிணையாகாது. விலை மதிப்பிட முடியாத தாயின் பாசத்திற்கு சாதி, சமய, பணக்காரன், ஏழை, ஊனமுற்றவன், தொழு நோயுள்ளவன், சித்தசுவாதீனமுற்றவன், அழகில்லாதவர் என்னும் வேற்றுமை கிடையாது. வறுமையில் வாடும் தாய், உணவு அருந்தக் கிடைக்காவிட்டாலும் தனது குழந்தைக்கு நேரம் தவறாமல் பால் கொடுக்க மறந்ததில்லை. தனக்குப் போர்வை இல்லாவிட்டாலும், தனது குழந்தைக்கு முகப்புச் சேலையாவது போர்த்தி, பாதுகாப்பாக பாதுகாத்துத் தன்னுடன் அணைத்து வைத்திருப்பாள்.

குழந்தைக்கு சுகயீனம் ஏற்பட்டாலும், தான் கண்விழித்திருந்து கண்ணை இமைகாப்பது போல, நேரத்திற்கு மருந்து கொடுத்து நோய்களிலிருந்தும் விஷஜந்துகளிலிருந்தும் பாதுகாத்துக் கொள்வாள்.

பசுக்கன்று பால் குடிக்கும் போது, மடியின் காம்புகளை இழுத்தும் கடித்தும் நோதல் செய்யும் போது தாய்ப்பசு, தனக்கு கன்று நோவையோ வேதனையையோ கொடுப்பதாக நினைத்து கன்றை இடிப்பதில்லை. பசு தனது நாக்கினால் கன்றை நக்கி தனது பாசத்தைக் கன்றுக்கு ஊட்டி நிற்கும். இந்தத் தாய்ப்பாசம் எத்தனை வகையான உயிரினங்களில் மேலோங்கிக் காணப்படுகின்றது.

சிறிய பறவை இனத்தில் கூடத் தாய்ப்பறவை தனது குஞ்சுகளுக்கு நேரம் தவறாமல் சுமார் பதினைந்து நிமிடங்களுக்கு ஒரு தடவையாவது இரை ஊட்டிக் கொண்டே இருக்கும். தாய்மை, பாசம் என்பது எல்லா உயிர்களிடமும் இருப்பது என்பர். நாம் தெரிந்து கொள்ளக்கூடிய மகத்தான தொன்றாகும்.

தாய் தன் குழந்தைகளுக்குப் பாலூட்டும்போது தனது மகன் நல்ல சிந்தனை உள்ளவனாகவும், பெரியோர்கள் மதிக்கத்தக்க வகையில் வளர்ந்து வர வேண்டும் என்ற எண்ணத்துடனுமே இருப்பாள்.

இறைவனைக் காண்பதற்கு முதல்; பாசத்தையும், கல்வியையும், கேட்டதைக் கொடுக்கும் தெய்வத்தையும் தாயினூடாகவே காண்கின்றோம். "தாய் இருக்கும்வரை கொடுப்பவள் இல்லாவிட்டால் கொடுப்பதற்கு என்ன உண்டு" என்று பட்டினத்தடிகளாரும் தனது பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

நாம் நடந்து செல்லும் போது எமக்கு ஒரு தீங்குவரின் "அம்மா" என்றே அழைக்கின்றோம். தாயின் அரவணைப்பில் கருணை, பாசம், தெய்வீகம் என்பவற்றைக்

காண்கிறோம். எமது தாய் இறைபதம் அடைந்தாற்கூட எமது தாயின் முகபாவம் உள்ளவரைக் கண்டால், எமக்குச் சில வேளைகளில் அத்தாயின்மேல் இனம் புரியாத பாசம் ஏற்படுவதை உணர்ந்துகொள்ளக் கூடியதாக இருக்கும்.

ஒரு மனிதன் தனக்கு மனவேதனை, சோதனைகள், நோய், இயலாமை என்பன ஏற்படும்போது எல்லாச் சுமைகளையும் தாயிடம் சமர்ப்பணம் செய்து தாயின்மடி யிற்றான் சாந்தமடைகின்றான். இதனாற்றான், "சொர்க்கம் என்பது தாயின் காலடியில் உள்ளது" என நபிகளும், "தவறுகளை மன்னிக் கும் உயரிய நீதிபதி அன்னை" என்று அறிஞர் களும் கூறியுள்ளார்கள்.

தாயின் பெருமையை எழுத்துக் களால் விளக்க முடியாது. ஏனென்றால், அதற்கு எல்லையே இல்லை!

வெறும் பேச்சு, மதம் ஆகாது. கிளிகள் பேசலாம், இப்போதெல்லாம் எந்திரங்கள் பேசுகின்றன. ஆனால் துறவு வாழ்வை, ஆன்மீக வாழ்வை, துன்பங்களை ஏற்கும் வாழ்வை, எல்லையற்ற அன்பு மயமான வாழ்வை எனக்கு நீங்கள் காட்டுங்கள் பார்க்கலாம். இத்தகைய வாழ்க்கைதான் ஓர் ஆன்மீகவாதியை அடையாளம் காட்டும். இத்தகைய கருத்துக்களும் அவற்றை வாழ்ந்து காட்டிய உன்னதமான வரலாறுகளும் நம் நாட்டில் உள்ளன. யோகியரின் மூளைகளிலும், இதயங்களிலும் செறிந்திருக்கின்ற இந்தக் கருவூலங்களை வெளியே கொண்டு வந்து ஏழைபணக்காரர், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று, இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்தில் உள்ள ஒவ்வொருவரின் சொத்தாகும்படி செய்யாமல் இருப்பது ஆழ்ந்த பரிதாபத்திற்குரியது. நாம் செய்ய வேண்டிய மகத்தான கடமைகளுள் இது ஒன்று. பிறருக்கு அதிகமாக உதவுகின்ற அளவிற்கு உங்களுக்கே நீங்கள் உதவி செய்து கொள்வதைக் காண்பீர்கள். நீங்கள் உங்கள் மதத்தை நேசிப்பது உண்மையானால், உங்கள் நாட்டை நேசிப்பது உண்மையானால் எழுந்து நின்று, உங்கள் சாஸ்திரங்களில் முடங்கிக்கிடக்கின்ற கருவூலங்களை வெளியே கொண்டு வந்து, அதற்கு உரிமையான வாரிசுகளிடம் தர வேண்டும், என்ற ஒரே கருத்துடன் முனைந்து செயலாற்றுங்கள். இது தவிர்க்க முடியாத கடமையாகும்.

*சுவாமிஜீ விவேகானந்தர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் 1897 ஆம் ஆண்டு ஆற்றிய சொற்பொழிவிலிருந்து.....*

# எம் சூழலைப் பாதுகாப்போம்

சைவசித்தாந்த கலாநிதி சைவப்புலவர் செ. கந்தசத்தியதாசன், M.A
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம்,

நம்மைச் சூழவுள்ள அனைத்தும் சூழல். நம்மைச் சுற்றிக் காணப்படும் நிலம், நீர், தீ, காற்று இவற்றைக் கொண்டிருக்கும் ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்கள், உயிர்கள் ஆகிய அனைத்தும் நம்மைச் சூழ உள்ளன. இவற்றை அன்பு பாராட்டி மதித்துப் போற்றுவதனால் அவை நம்மை ஆசீர்வதிக்கின்றன. எனவே, மனித வாழ்க்கை அல்லது உயிர் வாழ்க்கை சூழலுடன் முறையாக இயைவுபடும்போது ஆனந்தம் கிடைக்கின்றது. எனவே, ஒவ்வொருவரும் சூழலை மதிப்பதனாலேயே வாழ்வில் ஆனந்தத்தைப் பெறலாம் என்று ஞானிகள், தீர்க்கதரிசிகள், சான்றோர்கள் தம்முடைய வாழ்விற்பெற்ற அனுபவத்தால் எடுத்துக்கூறுகின்றார்கள். பூமியைப் பூமாதேவி என்றும், காற்றை வாயு பகவான் என்றும், நீரை வருணபகவான், என்றும், தீயை அக்கினிபகவான் என்றும் போற்றி, அவற்றை மதித்து வழிபாடு செய்தமையை நமது காலத்தால் முந்திய சைவ சமய மூல நூல்களான வேத நூல்கள் கூறுகின்றன.

வேதங்களில் இயற்கைச் சக்தியை விதந்து போற்றிய துதிப் பாடல்களாக அமைவு பெற்றிருப்பவை. இருக்கு வேதம். ஒருவனுடைய வாழ்வில் அனைத்து வளங்களும் இயற்கையிலிருந்தே கிடைக்கப் பெறுகின்றன. எனவே, கைமாறு கருதாது இயற்கை நமக்குத் தரும் உபகாரத்தினை நினைத்துத் தினமும் போற்றி வணங்குவது தலையாய கடனாகும்.

மண்ணில் உண்டாகும் அனைத்துச் செடிகொடிகளும் மரங்கள் அனைத்தும் நம் வாழ்வுக்கு உபகாரம் செய்கின்றன. நம் பசிப்பிணி போக்கி உடலை வளர்க்கும் உணவு பூமித்தாயின் கொடை ஆகும். அதே போன்று தாகசாந்தி தீர்க்கும் நீரும் இயற்கையாகவே காணப்படுகின்றது. நம்முடைய உடலிலே பிராணனைக் கொண்டுள்ள உயிர்மூச்சு. இயற்கையின் கொடையே. நாம் அன்றாடம் பயன்படுத்தும் அக்கினியும் இயற்கையானவையே ஆகும்.

இவற்றை எல்லாம் கொண்டு விளங்கும் எல்லையற்ற பரந்த ஆகாசமும் இயற்கையே. எனவே, இந்த உடல் பரிணாமத்திற்கும், உடல் வாழ்விற்கும், உயிர் வாழ்வுக்கும் ஆதாரமாக அமைந்தது இயற்கையே. இத்தகைய இயற்கையை, அதனுடைய உபகாரத்தை நன்குணர்ந்து போற்றுவது. தலையாய கடமையாகும். இத்தகைய நோக்கிலேயே இருந்து இயற்கையைப் போற்றுகின்றோம்.

ஒரு மனிதன் வாழ்கின்ற வீடு, அதைச் சுற்றிய சூழல், இவற்றைத் தூய்மையுடன் பேணிப் பாதுகாக்க வேண்டும். வீட்டைச் சுற்றி மரங்களை நாட்டி, அவற்றுக்கு நீர் ஊற்றி, சூரியஒளி, காற்றும் பெற்று வாழ ஆவன செய்யவேண்டும். எந்த ஒரு பயிர்களைக்கூட தேவையற்ற முறையில் அவற்றுக்கு நோதல் செய்யாது கிள்ளியோ, நுள்ளியோ, முறித்தோ சிதைக்கக்கூடாது. நாம் மரத்தைச் சிதைக்கும்போது ஏற்படும் வேதனை அலைகள் நம்மைச் சேர்ந்து நமக்குத் துன்பத்தை விளைவிக்கும். நாள்தோறும் நீரூற்றுவதால் மரங்கள் சந்தோஷத்தினாலே நீரூற்றிய

வரை ஆசீர்வதிக்கின்றது. மரங்கள் நீரினால் வளம்பெற்றுப் பச்சைப்பசேல் என்று இருக்கும்போது, நமது கண்ணும் மனமும் களிப்படைகின்றது. பச்சையானவற்றைப் பார்ப்பவர் உள்ளத்தில் அமைதிபெற முடியும் என்று பெரியோர்கள் கூறுகின்றார்கள். நவீன விஞ்ஞானமும் அதை நிரூபிக்கின்றது.

நாம் வாழ இயற்கையாகிய சூழல், பாதுகாக்கப்படவேண்டும். எனவே, வீடு, சமூகம், கிராமம், நகரம், நாடு அனைத்தையும் இயற்கை நியதிகளுக்கேற்பப் பேணப்பட வேண்டும். நாள்தோறும் ஒவ்வொருவரும் தன்னாலியன்ற அளவு சூழலைப் பாதுகாப்ப தற்கான நடவடிக்கைகள், காரியங்களில் ஈடுபடுவதும் வழிபாடாகும்.

காடு மனித வாழ்க்கைக்கு இன்றிய மையாதது. மரங்களினால் நமது உயிர் வாழ்க்கைக்கு அவசியமான மழை கிடைக்கின் றது. காட்டைப் பேணுவதனால் இயற்கை மூலிகைகளான மருந்துப் பொருட்கள், வீடு கட்டத் தேவையான மரங்கள், வீட்டுத் தளபாடங்கள், அழகு சாதனப் பொருட்கள் அனைத்தையும் பெறமுடியும். சைவசமயத்தில் ஒவ்வொரு ஆலயங்களும் தலவிருட்சத்துடன் தொடர்புபட்டதாக அமைந்திருப்பது குறிப் பிடத்தக்கது. விருட்சமாகிய மரங்களையே ஆரம்பகாலத்தில் கடவுளாகப் போற்றி வழிபட்டார்கள். பின்பு அவ்விடத்திலேயே விக்கிரகங்களை நிறுவி வழிபட்டார்கள். கட்டடங்கள் அமைத்து, பிரமாண்டமான கோயில்கள் உருவாயின. மனிதன் வெளிவிடும் காபனீரொட்சைட்டை ($Co_2$) உள்வாங்கி மனிதனுக்கு இன்றியமையாத பிராண வாயுவை (ஒட்சிசனை $O_2$) வழங்கி, மனித வாழ்வை நிலைபெறச் செய்வது மரங்களாகும். காட்டிலுள்ள கனிய வளங்கள் மனிதனுக்குப் பயனுடைவை. மேலும் விலங்குகள், பறவைகள் வாழும் இடமாகவும், உணவு பெறுமிடமாகவும் காடுகள் விளங்குகின்றன.

சூழலில் பிரதான கூறாகிய மண் மாசடைந்தால் உயிரினங்கள் மரணிக்க நேரிடும், குப்பை கூழங்கள், கழிவுப் பொருட் களை மண்ணில் வெளியே கொட்டும்போது சூழல் மாசடைகின்றது. அதனை மண்ணுக் குள் புதைக்கும்போது அவற்றில் உள்ள பக்ரீரியா போன்ற நுண்ணங்கிகள் அவற்றை உக்கலடையச் செய்து, பசளையாகி மண்ணை வளப்படுத்துகின்றது. பூமித்தாய் மாசுறுவத னால் உயிரினங்கள் வாழமுடியாத அவலம் ஏற்படுகின்றது.

நிலத்தில் கிடைக்கும் இரத்தினக் கற்கள், தங்கம், வெள்ளி, செப்பு, இரும்பு போன்ற எத்தனையோ கனிப்பொருட்கள் மனித வாழ்வுக்கு அவசியமானவை. மண்ணை மாசுபடுத்துவதால் கனிய வளங்கள் அருகிப் போகும். உணவுற்பத்தியிலும் பின்னடைவு ஏற்படும். குப்பை கூழங்களை எரித்து நிலத் தைத் தகித்தல் தவிர்க்கப்பட வேண்டிய தாகும். ஆனால், ஹோமம் செய்யும்போது அக்கினியிற் சமித்துக்களை இட்டுச் செய்யும் வழிபாடு சூழலைச் சுத்தப்படுத்துகின்றது.

அடுத்து, நீர்வளத்தைப் பேணுவதும் தலையாய கடமையாகும். நீர்வளம் குன்றினாலும், நீர் மாசடைந்தாலும் உலகில் வாழமுடியாது. மனிதனுக்கு இன்றியமையாத நீர் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய தாகும். நீரை உபயோகிக்கும்போது இயற் கைக்கு ஊறுபடாத வகையிற் பயன்படுத்த வேண்டும். நீர் அசுத்தமடைந்தால் நீர்வாழ் உயிரினங்கள் அழிவடைவதுடன் அந்நீரைப் பருகும் விலங்குகளும், மனிதரும் அழிவர். நீர் புனித தெய்வமாகப் போற்றி வழிபடல், புனித நீரில் தீர்த்தமாடிப் பாவம் போக்குதல் இன்றியமையாதாகும்.

சுத்தமான இடத்திலேயே நாங்கள் வாழ வேண்டும். எனவே, வீடு சுத்தமாக இருக்கவேண்டும். சூழல், ஆலயம் சுத்தமாக இருக்க வேண்டும். சுத்தமான இடத்திலேயே இறைவன் குடிகொள்ளுகின்றான் எனச் சைவசமயம் கூறுகிறது. எனவே, இச்சூழல்களைச் சுத்தமாகப் பேணி, நோய்களிலிருந்து விடுபடுவதோடு, ஆரோக்கியமான வாழ்க்கையைப் பெற்று இறை சாந்நித்தியத்தால் அமைதியும் பெறலாம்.

நகரப்புறங்களில் இயற்கையான மரங்கள் பெருமளவு இல்லாதிருப்பதுடன் அங்குள்ளவர்களது வாழ்க்கை முறைகளில் சூழல் மாசடைய மனிதவாழ்வு சுகமற்றதாகின்றது. நகரத்தை நரகமாக்காது சுத்தம் பேணி வாழ்ந்தால் எல்லோரும் சுகமாக வாழலாம். நகரத்தைத் தூய்மையாகப் பேணுதல் நாகரிகமாகும்.

மனிதனும் அவனைச் சூழவுள்ள அனைத்தும் இயற்கையே. மனித வாழ்வு இயற்கையைப் பேணுவதனால் வளம் பெறுகின்றது. சமூகமக்கள் அச்சமூகத்தில் வளமாக வாழவும், நகர மக்கள் அந்நகரத்தில் வளம்பெற வாழவும் இயற்கை பேணப்பட வேண்டியது மிகமிக அவசியமாகும்.

பண்ணும் பதமேழும் பலவோசைத் தமிழவையும்
உண்ணின்ற தோர் சுவையும் உறுதாளத் தொலி பலவும்
மண்ணும் புனலுயிரும் வருகாற்றுஞ் சுடர் மூன்றும்
விண்ணும் முழுதானான் இடம் வீழில் மிழலையே.

-சம்பந்தர்

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யான் எனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.

-மணிவாசகர்

பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விரிந்தாய் போற்றி

1. இல்லை என்று ஒரு போதும் சொல்லாதே,
   உன்னால் இயலாது என்று ஒரு நாளும் எண்ணாதே.
2. ஒரு மலரில் முள்ளும் உண்டு, மணமும் உண்டு, ஒரே மனிதனிடம் குறையும் உண்டு, குணமும் உண்டு.
3. பணத்தை நாம் ஆளவேண்டும்.
   பணம் நம்மை ஆளவிடக்கூடாது.
4. பாதை வகுத்தபின் பயந்து என்ன லாபம்?
   பயணம் நடத்திவிடு, கிடைத்திடும் லாபம்.

# புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களிடையே நடத்தப்பட்ட ஆய்வு

ஆய்வாளர் : Dr. கணேஸ் ஸ்ரீதரன்
கமலா வைத்திய நிலையம், புங்குடுதீவு.

**அறிமுகம்:**

புலமைப்பரிசில் பரீட்சையானது இலங்கையில் கல்வி கற்கும் தரம் ஐந்து மாணவர்களுக்கு வருடாவருடம் நடாத் தப்பட்டு சித்தியடையும் வறிய மாணவா களுக்கு உதவுதொகை வழங்கி அவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு ஊக்குவிக்க உருவாக்கப்பட்ட தாகும். ஆனால் இன்று இப்பரீட்சை மாணவர்களுக்கு ஒரு போட் டிப்பரீட்சையாகவும், நகரத்தில் முன்னணி தேசிய பாடசாலைகளில் அனுமதி பெறவும், தனது பிள்ளை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளது என பத்திரிகைமூலம் விளம்பரப்படுத்தல் என பல்வேறு நோக்கங்களுக் காக மாறிக் கொண்டு போகின்றது. இப்பரீட்சைக்கு மாணவர்களை தயார் படுத்தி சித்தி யடையச்செய்வதில் பாடசாலைக்கு சிறப் பான பங்குண்டு. அதற்கு உதவியாக பெற்றோர்களின் ஒத்துழைப்பு போதுமா னது. இதற்கு மேலாக தனியார் கல்வி நிலையங்கள் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக் கொண்டு பரீட்சைகளை வைத்தல், பரீட்சை வினாத்தாள்களை கண்டபடி அச்சிட்டு விநியோகித்து வியா பாரமாக மாற்றிக் கொண்டு வருகின்றன. இவைமட்டுமன்றி பத்திரிகைகள் தங்க ளின் பங்கிற்கு கேள்விப்பகுதிகளை போடல், பரீட்சைகள் வைத்தல், வங்கி, கழகங்கள், சனசமூகநிலையங்கள் என பல்வேறு நிறுவனங்களும் போட்டி போட்டுக்கொண்டு புலமைப்பரிசில் கருத்தரங்குகள், வினாத்தாள் தயாரித்தல் என தமது பணிகளைச் செய்கின்றன. இவ்வளவும் சிறு பிஞ்சுக் குழந்தைகளுக்கு எவ்வளவு சுமையாக வுள்ளது என எவரும் யோசிப்பதில்லை. இந்நிகழ்வினால் மாணவர்கள் கடுமையான உளப்பாதிப் புக்குள்ளாகியுள்ளது வைத்திய அறிக்கை மூலம் அறியக்கிடக்கிறது. பரீட்சை சம்பந்தமாக மாணவர்களுக்கு கொடுக்கும் அழுத்தங்கள் மாணவர்களை சுயமாக பரீட்சை எழுத முடியாமல் போகிறது. இக்காரணமே கெட்டிக்கார மாணவர்கள் கூட பரீட்சையில் கோட்டை விடுவது இயல்பாகவுள்ளது. இதற்கு மேலாக பெற்றோர், ஆசிரியர்களின் அதீத எதிர் பார்ப்பும் காரணமாகலாம். பெற்றோர்கள் தமது குழந்தைகளை அவர்கள் தமது இயல்பான செயற்பாடுகளை கட்டுப் படுத்தி கல்வியை திணிப்பதும் மாண வர்கள் தமது கல்வி கற்கும் முறையில் ஒருவித வெறுப்புணர்ச்சி காட்டுவதும் அறியக்கூடியதாகவுள்ளது. பெற்றோர்கள் பிள்ளைகளின் ஆரோக்கியத்தில் எந்த வித கவனமும் எடுக்காமல் இருப்பதும் பரீட்சைகளில் எதிர்பார்த்தளவு சித்தி யெய்தாமல் போவதற்கு காரணமாகிறது. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது பரீட்சையில் சித்தியடைவதற்கு ஆசிரியர்

கள், பெற்றோர்களின் திணிப்பு அவர்களை சுயசிந்தனைக்கு இடமளிக்காமல் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை வளர்த்தெடுப்பதற்கு முடியாமல் போகலாம் புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாணத்தில் 3-4 பாடசாலைகளே அதிகளவு மாணவர்களைச் சித்தியடையச் செய்து கொண்டிருந்தன. தற்போது யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் ஒவ்வொன்றும் தமது பாடசாலையிலிருந்து மாணவர்களைச் சித்தியடையச் செய்ய வேண்டும் என்ற உத்வேகத்துடன் செயற்பட்டு மாணவர்களை சித்தியடையச் செய்விப்பதால் முன்னணிப் பாடசாலையின் பெறுபேற்றில் சிறிது தளம்பல் ஏற்பட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

**பொதுவான குறிக்கோள்:-**

புலமைப்பரிசில் பரீட்சையில் திணைக்களத்தின் அடைவு மட்டப் புள்ளியினைப் பெற்று சித்தியடையச் செய்தல்.

**விசேட குறிக்கோள்:**

புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்களைச் சித்தியடையச் செய்தல்.

புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் அடைவு மட்டச்சித்தியினைப் பெறச் செய்ய ஊக்குவித்தல்.

புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்களைச் சித்தியடைய ஏதுவாக ஆசிரியர்களின் வாண்மைத்திறனை விருத்தி செய்தல்.

மாணவர்களின் கற்றலுக்கும், ஆசிரியர்களின் கற்பித்தலுக்கும் பாடசாலையை வளமுள்ளதாக மாற்றல்.

மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்கு ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களின் ஒத்துழைப்பை முழுமையாகப் பெறல்.

தேசிய ரீதியில் புலமைப்பரீட்சையில் முன்னணி பெறுபேறுகளை தொடர்ந்தும் பெற வழிவகுத்தல்.

**ஆய்வு முறை :-**

- ஆய்வு வகை: குறுக்குமுகக் கற்றலுடன் கூடிய விவரண ஆய்வாகும்.
- ஆய்வு செய்யப்பட்ட இடம்: யாழ்ப்பாணத்தின் முன்னணி ஆரம்ப பாடசாலையாகும்.
- ஆய்வுக்குரிய காலம்: 20. 11. 2007 - 27. 11.2007
- ஆய்வு அனுமதி: ஆய்வுக்குரிய அனுமதியை குறிப்பிட்ட பாடசாலையின் வலயக்கல்விப்பணிமனையிலும், குறிப்பிட்ட கல்லூரி அதிபரிடமிருந்தும் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது.
- ஆய்வுக்கு குறிப்பிட்ட பாடசாலையில் 235 மாணவர்களில் மாதிரி எடுப்பு முறையில் 84 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் 51 பேரும், புலமைப்பரிசில் சித்தியடையாத மாணவர்கள் 33 பேரும் ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டனர்.

**ஆய்வு உபகரணம்:-**

ஆய்வுக்குரிய தரவுகளைப் பெறுவதற்கு நன்கு பரீட்சிக்கப்பட்ட மூடிய, திறந்த வினாக்கள் 24 அடங்கிய வினாக் கொத்து மாணவர்களிடம் கொடுக்கப் பட்டு ஆய்வுக்கு உரிய தரவுகள் பெறப்பட்டன. பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டது.

**ஆய்வின் பலாபலன்கள்:**

அட்டவணை- 1 பெற்றோரின் தொழிலைக் காட்டுகிறது

| தொழில் | சித்தியடைந்தவர்களின் பெற்றோர் | | சித்தியடையாதவர்களின் பெற்றோர் | |
|---|---|---|---|---|
| | தந்தை | தாய் | தந்தை | தாய் |
| கூலி | 10 | - | 06 | - |
| ஆசிரியர் | 07 | 10 | 02 | - |
| வியாபாரம் | 07 | - | 07 | - |
| உதவி மருத்துவ உத்தியோகத்தர் | 06 | 02 | - | - |
| இலிகிதர் | 05 | 01 | 04 | - |
| மரவேலை | 05 | - | 02 | - |
| பூசகர் | 03 | - | 02 | - |
| தொழில்நுட்ப உதவியாளர் | 03 | - | 02 | - |
| சாரதி | 02 | - | - | - |
| முகாமையாளர் | - | - | 02 | - |
| விவசாயம | - | - | 03 | - |
| வேலை இல்லை | 03 | - | 04 | - |
| மொத்தம் | 51 | 51 | 33 | 33 |

பெற்றோர்களின் தொழில் பிள்ளைகளின் கல்வியில் எந்த வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

அட்டவணை- 2 மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களில் செலவிடும் நேரத்தைக் காட்டுகிறது (ஒரு கிழமைக்கு)

| மணித்தியாலம் | சித்தி எய்தியவர்கள் எண்ணிக்கை (வீதம்) | சித்தி எய்தாதவர்கள் எண்ணிக்கை (வீதம்) |
|---|---|---|
| 02 | 02 (3%) | - |
| 04 | 12 (25%) | - |
| 06 | 23 (45%) | 15 (46%) |
| 08 | 02 (3%) | 05 (15%) |
| 10 | 03 (4%) | - |
| 12 | 03 (4% | 01 (1%) |
| 18 | 02 (3%) | 02 (5%) |
| 21 | 07 (13%) | 10 (30%) |

பொதுவாக தனியார் கல்வி நிலையங்களில் ஒரு கிழமைக்கு 06 மணித்தியாலங்கள் செலவிட்ட மாணவர்கள் 45% சித்தியடைந்துள்ளார்கள். இவர்களில் 71% ஆறு மணித்தியாலத்திற்கு குறைவான நேரத்தையே தனியார் கல்வி நிலையங்களில் செலவிட்டிருக்கிறார்கள்.

அட்டவணை- 3 பரீட்சையில் சித்தியடைந்தமை, சித்தியடையாமைக்கான காரணங்களை மாணவர்களிடமிருந்து பெற்றதை காட்டுகிறது.

| சித்தி எய்தாமை | சித்தி எய்தியமை |
|---|---|
| பல பரீட்சைகள் நடத்தப்பட்டது. | ஞாபகமின்மை |
| பரிசில்கள் வழங்கி ஊக்குவித்தமை | பயம் |
| சுற்றாடல் சார்ந்த விடயங்களை | |
| அறிந்தமை | கவனக்குறைவு |
| பொது வகுப்புக் கற்பித்தல் | திட்டமிடல் இல்லை |
| விசேட கவனிப்பு | நோய் நிலைமை |
| மேலதிக தொடர் பயிற்சி | கணிதபாட விளக்கம் குறைவு |
| கோட்டமட்ட பயிற்சி | அதிக முயற்சியில்லை |
| ஆடல், பாடலுடன் கூடிய பயிற்சி பாடக் | |
| குறிப்புகள் | வீட்டில் மட்டும் பயிற்சி |
| பாடவிதானங்கள் திருப்தியான முறையில் | |
| நடைமுறைப்படுத்தப்பட்டமை | கவனயீனம் |
| பெற்றோரின் பங்களிப்பு | கற்ற பாடங்களை வீட்டில் திருப்பி |
| | பார்க்காமை |
| அதிபர், பிரதிஅதிபர், ஆசிரியர்களின் | |
| அதீத ஈடுபாடு | பெற்றோர்களின் செல்லம் |
| படங்களின் மூலம் சுற்றாடல் பாடங்களை | |
| இனங்காணல் | பெற்றோர்கள் சொல்வதை கேட்காமை |
| பிழைகளை சரியான முறையில் விளங்கிக் | |
| கொள்ளல் | கேள்விகளில் சிலவற்றுக்கு விடை |
| | எழுதாமை |
| ஆசிரியர் கற்பித்த விடயங்களை அன்றே | |
| திருப்பிப் பார்த்தல் | மரணவீடு |
| ஆசிரியர்களின் கூட்டான முயற்சி | எழுத்துப்பிழை |
| தேசிய பாடசாலையில் கல்வி பயில ஆவல் | |
| பரிசளிப்பு விழா நடாத்தி ஆர்வத்தை | |
| உண்டுபண்ணியது | |
| காலை, இரவு கற்றல் | |
| அயற்சூழலில் உள்ள போட்டி, இறைபக்தி | |

புலமைப் பரிசில் எடுக்கும் மாணவர்களுக்கு கூறும் ஆலோசனைகள்

1. ஒவ்வொரு நாளும் படித்தல் வேண்டும். பாடசாலையில் செய்த வேலையை திருப்பிச் செய்தல்.
2. தினமும் காலையில் சிங்களம், தமிழ், ஆங்கிலப் பதங்களை மனனம் செய்தல்.
3. பரீட்சை வினாக்களில் பிழை விட்டதைத் திருப்பிச் செய்தல்.
4. சித்தியடைதல் வேண்டும் என்ற ஆர்வத்துடன் கற்றல் வேண்டும்.
5. பரீட்சைக்கு ஒழுங்காகச் செல்லல்.
6. பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்லல்.
7. மாலையில் ஒரு மணிநேர ஓய்வு எடுத்தல்.
8. பெற்றோர் அறிவுரையைக் கேட்டல்.
9. பாடங்களை விளக்கமாகக் கேட்டுப் படித்தல்.
10. சந்தேகங்களை உடனடியாகத் தெளிவு படுத்தல் வேண்டும்.
11. கட்டுரையில் தலையங்கத்தை விளங்கி நன்றாக எழுத வேண்டும்.
12. வீட்டில் நேரசூசி வைத்துப் படித்தல்.
13. ஒரு வினாவிற்கு விடை தெரியாவிடின் உடனடியாக அடுத்த வினாவிற்கு போக வேண்டும்
14. பல கல்வி நிலையங்களுக்கு செல்ல வேண்டாம்.
15. பத்திரிகை, சஞ்சிகை வாசித்தல்.
16. கணித வினாத்தாள் செய்தல்.
17. சுற்றாடலில் நிகழும் மாற்றங்களை அவதானித்தல்.
18. எழுத்தப்பிழை திருந்த வேண்டும்.
19. பரீட்சை வினாக்களை தரப்பட்ட நேரத்தில் செய்து முடிக்க வேண்டும்.
20. கிரகித்து மிக விரைவாக விடை எழுத வேண்டும்.
21. படிக்கிறோம் என பெற்றோரை ஏமாற்றக் கூடாது.
22. நோய் ஏற்படாது கவனமாகவிருத்தல்
23. வீட்டில் கூடிய நேரம் இருந்து படித்தல்.
25. எழுத்தை உறுப்பமைய எழுத வேண்டும்.

**முடிவுரை:**

புலமைப்பரிசில பரீட்சைக்கு பாடசாலையால் வழங்கப்படும் கல்வி திருப்தியானது. பொதுவகுப்புக் கற்பித்தல், கற்றலுடன் சேர்ந்த அவதானிப்பு, கிரகிப்பு மாணவர்களுக்கு கூடிய பலனைக் கொடுத்துள்ளது. தாய், தந்தையின் கல்வியறிவு, அவர்களின் வேலை என்பன பிள்ளைகளின் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. அதிகளவு மாணவர்கள் சித்தியடைவதற்கு பாடசாலைக் கல்வி, தனியார் கல்விநிலைய அறிவு, பெற்றோர்களின் பங்களிப்பு ஆகியன சேர்ந்த கூட்டு முயற்சி உதவியுள்ளது.

கற்றலில் உள்ள கவனக்குறைவு, பிள்ளைகளுக்கு கொடுக்கும் அதிகளவான செல்லம், பிள்ளைகளுக்கு வீட்டில் கற்றலுக்குரிய சூழலை உருவாக்கிக் கொடுக்காமை, வீட்டில் தினமும் கற்றல், கற்பித்தலை ஏற்படுத்திக் கொடுக்காமை ஆகிய காரணங்களில் பெற்றோரின் ஈடுபாடு இல்லாமை பிள்ளைகள் வெட்டுப்புள்ளியை அண்மித்தும் சித்தியடைய முடியாமல் போனதற்கு காரணமாக அமைகிறது.

பாடசாலையில் ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 5 வரையுள்ள ஆசிரியர்களின் தொடர் கூட்டு முயற்சி அதிக பலனைத் தந்துள்ளது. இவற்றுக்கு மேலாக பாடசாலை வளம் மேன்மையாக இருப்பதும் மாணவர்கள் அதிக புள்ளிகள் பெறுவதற்கு காரணமாகிறது.

**நன்றியுரை:**

ஆய்விற்கு வேண்டிய அனுமதியைத் தந்துதவிய கல்விப்பணிப்பாளர், அதிபர், பிரதி அதிபர் அவர்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆய்வுக்குரிய வினாக்கொத்துக்களை மாணவர்களுக்கு கொடுத்துதவிய பகுதித்தலைவர், தரம் 5 ஆசிரியர்களுக்கும், ஆய்விற்குதவிய 2007 தரம் 5 மாணவர்களுக்கும், மற்றும் ஆய்விற்குதவிய அனைத்துள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.



# புங்குடுதீவு நாடகக் கலை

தம்பிஐயா தேவதாஸ்,
*B.A. (Cey), B.Ed.(Cey), M.A.(Journalism -India)*

ஈழத்து நாடகவரலாறு கூத்து, இசை,வசனநாடகம், நவீன நாடகம் என்று வளர்ந்து வந்தது. இதே அமைப்பிலேயே நாடகக் கலை யாழ்ப்பாண மாவட்டத்திலும் வளர்ந்து வந்தது. யாழ்ப்பாண மாவட்டத்தின் மற்றைய ஊர்களைப் போலவே புங்குடுதீவி லும் நாடக வரலாறு நாட்டுக் கூத்துடனேயே ஆரம்பமாகிறது.

புங்குடுதீவின் மத்திய பகுதியில் வாழ்ந்த கிறிஸ்தவ மக்கள் மத்தியிலேயே ஆரம்பத்தில் நாட்டுக்கூத்து பெரும்பாலும் நடிக்கப்பட்டது. வருடாவருடம் வைகாசி மாதத்திலே புனிதசவேரியார் ஆலய திருவிழா நடைபெறும் . அவ்வாலயத்தில் இறுதிநாள் திருவிழாவின் போது இரவு பகலாகக் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். அவற்றிலே நாட்டுக்கூத்து முக்கிய இடத்தைப் பிடிக்கும். புங்குடுதீவு புனித சவேரியார் ஆலயத்துக்குக் கிழக்காகவும் மகாவித்தியாலயத்திற்கு தெற்குப்புறமாகவும் சென்சேவியர் வாசக சாலை அமைந்திருக்கின்றது. அவ்வாசிக சாலைக்கு அருகில் மேடை அமைத்துப் பல நாட்டுக் கூத்துகளும் நாடகங்களும் மேடை யேற்றப்பட்டன. அவற்றில் ஒன்று 1955ஆம் ஆண்டளவில் மேடையேற்றப்பட்ட "சகுன கன்னி" என்ற நாட்டுக்கூத்தாகும். அண்ணாவி யாராக யாக்கோப்பு சூசைசவுரி தொழிற் பட்டார். இந்தக்கூத்தில் ஞானமுத்து நட்சத்திரம், சவுரி அந்தோனி, சலமோன் எயுசேனி, சலமோன் அமிர்தநாதர் சலேற்ரா சன், சிறில் இளவரசன், பிலேரி, மார்க் சூசைப் பிள்ளை ஆகியோர் நடித்தனர்.

*1960* ஆம் ஆண்டு காலப்பகுதியில் புனிதசவேரியர் ஆலயத்தின் முன்புறத்தில் மேடை அமைத்து "ஞானசௌந்தரி" என்ற நாடகம் மேடையேற்றப்பட்டது. இநாட கத்தைமூப்பர் துரைசாமி அண்ணாவியராக நின்று மேடையேற்றினார். அக்கால இளை ஞர்கள் பலர், இந்நாடகத்தில் நடித்தனர். சூசைப்பிள்ளை, டக்ளஸ், சேவியர் சூசைப் பிள்ளை, றிச்சாட், மரியன் மரியதாஸ், சவுரிமாசலின், பிரான்ஸிஸ், பேலின் , அருளப்பு வென்ஸ்ஸலாஸ், அம்புறோஸ் பீட்டர், அந்தோனி மாசிலாமணி, றிச்சட், பாஸ்கரன்,தேவசகாயம், புஸ்பராஜா, சந்தி யோகுசைத்தான், பிறேமா ஆகியோர் நடித்த னர். இந்த "ஞான சௌந்தரி" நாடகம் மீண்டும் பலமுறை இதே இடத்தில் மேடையேற்றப் பட்டது. இதே இடத்தில் பிற்காலத்தில் "அருளப்பு" என்ற நாடகமும் மேடையேற்றப் பட்டது. இதற்கு சூசைசவுரி அண்ணாவியா ராக தொழிற்பட்டார்.

புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தில் நசரேத் சனசமூக நிலையம் அமைந்தி ருக்கின்றது. இச்சனசமூகநிலையத்திற்கு அருகே தற்காலிகமாக மேடை அமைத்து நாடகங்களை மேடையேற்றினர். அங்கு 1965 ஆம் ஆண்டளவில் "எஸ்தாக்கியார்" என்ற நாடகம் மேடையேற்றப்பட்டது. மூப்பர் துரைசாமியே அண்ணாவியாராகத் தொழிற் பட்டு நாடகத்தை இயக்கினார். இந்த நாடகத்தில் கஸ்பாறு ஞானப்பிரகாசம், அம்புறோஸ் ரஞ்சன், அம்புறோஸ் மரியதாஸ், அடைக்கல முத்து, பிரான்ஸிஸ் பேலியன்,

அந்தோனிலோறன்ஸ். செல்வம் விசயன், கஸ்மீர் றொபின், குருசு கோரும், மரியான் மரியதாஸ் ஆகியோர் நடித்தனர். மூப்பர் துரைசாமி, நல்லோன் மனுவல், அம்புறோஸ் போன்றவர்கள் நாட்டுக்கூத்து ஆடுவதிலும் பாடுவதிலும் சிறந்துவிளங்கினர். புங்குடுதீவு 12ஆம் வட்டாரம் உயரப் புலத்தில் வாழ்ந்த இந்து ஹரிஜனமக்களும் சில நாடகங்களை மேடையேற்றினர். அவற்றில் காத்தவராயன் என்ற நாடகம் முக்கியமானது. இந்தநாடகத்தில்( "குட்டியன் ") என்பவர் முக்கியபாத்திரத்தில் நடித்தார்.

புங்குடுதீவுக்கிராமத்தில் நடைபெற்ற சிலசடங்குள் நாடக பாணியிலேயே நடைபெற்றன. 1950ஆம் ஆண்டு காலப் பகுதியில் கொடும்பாவி எரித்தல் என்பது நாடகம் போன்றே நடைபெற்றது. மாரிகாலம் பிறந்தும் மழைபெய்யாவிடின் ஆண்கள் பலர் பெண்கள் போல் வேடமிட்டு கொடும்பாவி கட்டி இழுப்பர். கொடும்பாவி என்ற ஒரு உருவ பொம்மையை வைக்கோலால் செய்து அதற்குத் தீமூட்டி எரித்தவாறு இழுத்துச் செல்வர். இக்கிராமத்தின் ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று ஒப்பாரி வைத்து அழுது காசு வாங்குவர். அந்தக் காசைக் கொண்டு பறை அடித்து படையல் செய்வர்.

கொடும்பாவி எரித்தல் நிகழ்ச்சியில் புங்குடுதீவு வல்லன் பகுதியைச் சேர்ந்த சிலர் முக்கிய பங்கு கொண்டிருக்கின்றனர். கணேசன், கோபாலன் போன்றோர் இந்நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்தினர். புங்குடுதீவு 12 ஆம் வட்டாரம் "உயரப்புலம்" என்ற பகுதியில் வாழ்ந்த ஹரிஜனமக்களும் இவ்வாறான கொடும்பாவி எரிப்பு நிகழ்ச்சியில் அக்கறையுடன் கலந்து கொள்வர். அம்மக்களின் இளைஞர்கள் இந்நிகழ்ச்சியை முன்னின்று நடத்துவர்.

கோயில்களில் நடைபெறுகின்ற சூரன்போர், போன்ற நிகழ்ச்சிகள் தெய்வ வணக்க முறையோடு இணைந்த சடங்கு சார்ந்த நாடகங்களாக உள்ளன. கிழக்கூரில் கலட்டில் பிள்ளையார் கோவிலும் மேற்கூரில் கந்தசாமி கோவிலிலும் நடைபெறுகின்ற சூரன்போர் இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். பிரமாண்டமான சூரன் சிலையையும் சூரனோடு போர் செய்கின்ற முருகன் சிலையையும் இரண்டு குழுவினராகப் பிரிந்து இந்த நிகழ்ச்சியை நடத்துவர். சடங்கிலிருந்து எங்கனம் நாடகம் பிரிந்து வந்தது. என்பதனை இந்த சூரன்போர்மூலம் அறியலாம். கோயில் வீதியிலே நடைபெறும் ஒரு நாடகம் போலவே இந்த சூரன் போர் இடம்பெறும்.

இந்த சிவராத்திரி நாடகங்களில் நடித்தவர்கள் பின்னாளில் சிறந்த நாடக நடிகர்களாக விளங்கினர். நாடகங்களின் ஆரம்பத்துக்கு மகாசிவராத்திரி விழாவும் ஒரு காரணம் எனலாம். மகாசிவராத்திரி காலத்தில் பெண்கள் விரதம் இருப்பர். ஆண்கள் மேடை அமைத்து அன்று இரவு முழுவதும் நாடகங்களை நடித்துக்காட்டுவர். புங்குடுதீவின் அனைத்துப் பகுதிகளிலும் அப்பகுதிகளில் வாழும் இளைஞர்கள் இவ்வாறான நாடகங்களை மேடையேற்றுவர்.

"அன்னஊஞ்சல்" ஆட்டம் என்பது இன்னுமொரு விசேட நிகழ்ச்சி, சிவராத்திரி தினத்தின் பகல் வேளையிலும் "அன்ன ஊஞ்சல்" ஆட்டம் நடைபெறும். பெரிய பனைமரங்கள் இரண்டுக்கு, இடையே குறுக்காகத் தீராந்தி போன்ற பெரிய மரமொன்றைக் கட்டுவர். தீராந்தியின் மத்தியில் வடக்கயிறு கொண்டு பெரிய ஊஞ்சல் ஒன்றைக் கட்டித் தொங்கவிடுவர். இரண்டு ஊஞ்சல்கள் போல் செய்து பலகை ஒன்றைக் கட்டித் தொங்கவிடுவர். இரண்டு ஊஞ்சல்கள் போல் செய்து பலகை ஒன்றைப் பொருத்து

வர். அந்த சதுரமான பலகையில் நான்கு அல்லது மூன்று பேர் ஆளை ஆள் பிடித்த வாறு அமர்ந்திருப்பார்கள். பக்கத்தில் எதிர் எதிரே இருவர் நின்று ஊஞ்சலை வலித்து ஆடுவர். ஊஞ்சலில் ஏறி இருக்கும் பெண்கள் பாட்டுப் பாடவேண்டும். இவர்கள் பாடா மல் இருந்துவிட்டால் சிறிய கற்களாலும் காய்ந்த சாணத்தாலும் வீசி எறிந்து பாடவைப் பர்.

ஆரம்பகாலத்தில் திரைப்படங்கள் பார்ப்பதில் ஆர்வம் கொண்டிருந்த சில கலைஞர்கள். யாழ்ப்பாண நகரில் கூத்து மடங்களில் நடித்த நாடகக் கலைஞர்களை புங்குடுதீவுக்கும் அழைத்து வந்து அவர்களது நாடகங்களை மேடையேற்றினர். 1910ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தில் மனோகரா திரையரங்கு இன்று அமைந்துள்ள இடத்தில் கூத்துக்கொட்டகை நிறுவப்பட்டது. இது தான் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்ட முதலாவது கூத்துக்கொட்டகையாகும். முதலில் ஓலைக்கொட்டகையாக ஆரம்பிக் கப்பட்ட இந்தத் கூத்துக்கொட்டகை பின்பு தகரக்கொட்டகையாக மாறியது. பின் னாளில் உருவான வின்ஸர் தியோட்டரிலும் இந்திய நடிகர்களின் நாடகங்கள் நடத்தப் பட்டன. கிட்டப்பாவுக்கும் சுந்தராம்பாளுக் கும் இங்குதான் காதல் அரும்பியது என்றும் செல்வார்கள்.

எம். கே தியாகராஜபாகவதர், எஸ் வி. சுப்பையா போன்ற நடிகர்கள் அங்கு நாடகம் போட்டிருக்கிறார்கள். இங்கு நாடகம் நடித்த கே.பி சுந்தராம்பாள் போன் றோரை பெருங்காட்டைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவர் புங்குடுதீவுக்கு அழைத்து வந்திருக் கின்றார். யாழ்ப்பாண நகரின் மனோகரா, வின்ஸர் தியேட்டர்களைப்போலவே கொழும்பு ஜிந்துப்பிட்டியில் உள்ள முருகன் தியேட்டரும் ஆரம்பத்தில் கூத்து மடமாக விளங்கியது. அதற்கு ஆரம்பகாலத்தில் ஜிந்துப்பிட்டி ரோகிஸ் என“ற பெயரே இருந்தது. அங்கு நாடகங்களில் நடித்து வந்த இந்திய நடிகை ஒருவரை கிழக்கூரைச் சேர்ந்த மூக்குப்புரி முத்துக்குமார் என்பவர்புங்குடு தீவுக்கு அழைத்து வந்திருக்கிறார். இந்த மூக்குப்புரி முத்துக்குமாரு கொழும்பு ஜிந்துப்பிட்டி முருகன் தியேட்டரில் பல நாடகங்களில் நடித்தவர். மூக்குபுரி என்ற சண்டியனுடன் சண்டைக்குப்போனதால் இவருக்கு “மூக்குப்புரி-முத்துக்குமாரு”என்ற பெயர் வந்தது.

சில நாடக அபிமானிகள், யாழ். நகரில் மேடையேறிய புகழ்பெற்ற நாடகங் களை புங்குடுதீவிலும் மேடையேறினர். 1956ஆம் ஆண்டளவில் மேடையேற்றிய “கண்ணகி” என்ற நாடகத்தையும் வ.வி.வைர முத்து நடித்த “அரிச்சந்திர மயான காண்டம்” நாடகத்தையும் உதாரணமாகக் கொள்ளலாம்.

பின்னாளில் அரியாலைக் கலைஞர்கள் நடித்த "வெளிக்கிடடி விசுவமடு வுக்கு;“அடங்காப்பிடாரி” போன்ற நாடகங் களும் புங்குடுதீவில் மேடையேற்றப்பட்டன. திரைப்படங்களின் அதிகமான வரவும் நாட்டின் சூழ்நிலைகள் மாறவும் புங்குடுதீவின் நாடகங்கள் அருகிவிட்டன. நாடகங்களை அரங்கேற்றவென்றே உருவாக்கப்பட்ட சங்கங்களும் அரங்குகளும் வெறுமையாகக் காணப்பட்டன. ஆரம்பத்தில் புங்குடுதீவு மேற்கில் நாடகஅபிமானிகள் சிலரால் நடிக்கப்பட்ட “அரிச்சந்திரன்” என்ற நாடகம் புகழ்பெற்றது. இந்நாடகத்தில் நடித்த நடிகர் தனது இயற்பெயரை இழந்து மக்கள் மத்தியில் “அரிச்சந்திரன்” என்றே நீண்டகாலம் அழைக்கப்பட்டார். அவர் எண்பது வயதில் இறக்கும் வரை அவரை அரிச்சந்திரன் என்றே அழைத்தனர். விசுவாமித்திரர், லோகிதாசன், சத்தியகீர்த்தி, சந்திரமதி (ஆண்) முதலிய பாத்திரங்களில் நடித்தவர்களும் பிற்காலத்தில்

விசுவாமித்திரர், லோகிதாசன் என்றே அழைக்கப்பட்டனர். இவர்களின் பேரன், பூட்டன் போன்றோர்கூட அரிச்சந்திரன் பேரன், விசுவாமித்திரர் பூட்டன் என்றே அழைக்கப்பட்டனர். சூரன் போரில் நாரதராக நடித்த பெரியதம்பியரை "நாரதர் பெரிய தம்பியர்" என்று அழைத்தனர். "நாரதர்" என்றதும் சூரன் போர் நிகழ்ச்சியில் இடம்பெறும் நாரதர் பாத்திரமும் முக்கிய மானது.

புங்குடுதீவு கிழக்கில் கலட்டி வரசித்தில விநாயகர் கோவிலில் நடைபெறும் சூரன் போர் நிகழ்ச்சியும் புகழ் பெற்றவை. முருகனுக்கும் சூரனுக்கும் இடையில் நாரதர் உலவுவதும் தூதுபோவதும் துள்ளிக் குறிப்பதும் இளைஞர்களிடம் அடிவாங்கு வதும் வேடிக்கையான விடயமாகும். வரசித்தி விநாயகர் கோவிலில் தபால் ஊழியர் தருமனும் கந்தசாமி கோவிலில் பெரிய தம்பியரும் பின் சரவணையப்பா மகன் செல்லையாவும் நாரதராகத் தோன்றி குமரக் கோட்டத்தின் பழைய குறிஞ்சிக் காட்சிகளை நடித்துக் காட்டுவர். இவை நாடகம் பார்ப்பதைப் போன்ற உணர்வை ஏற்படுத்தும். புங்குடுதீவுப் பாடசாலைகள் சிலவற்றில் அங்குள்ள ஆசிரியர்களின் நாடக அபிமானம் காரணமாகப் பலநாடகங்கள் மேடையேறின. இதன் மூலம் பாடசாலை மாணவர்கள் பலரும் நாடக அபிமானம் கொண்டிருந்தனர். 1960ஆம் ஆண்டளவில் ஸ்ரீகணேச வித்தியா சாலையில் ந. கோபாலபிள்ளை ஆசிரியரும் அதன் பின்பு திருநாவுக்கரசு ஆசிரியரும் மாணவர்களைக் கொண்டு பாடசாலைக்குள் நல்ல நாடகங்களை மேடையேற்றினார்கள். ஐ.சிவசாமி, இ.க. செல்வரத்தினம் போன்ற ஆசிரியர்களும் பாடசாலைமாணவர்களுக்கு நாடகம் பழக்கினர். இளைஞர்களைக் கொண்டு நாடகங்களை மேடையேற்றுவதில் பெரும்பாலும் ஆசிரியர்களே முன்னின்றனர்.

நாடக அபிமானம் கொண்ட இளைஞர்கள் புங்குடுதீவின் நாற்புறமும் பரம்பியிருந்தனர். இவர்களின் நாடக ஆர்வம், கிராமத்தின் நாற்புறமும் நாடக மன்றங்கள் உருவாக க்காரணமாக இருந்தன.

மடத்துவெளிப்பகுதி இளைஞர்கள், மேற்கூர்ப் பகுதி இளைஞர்கள், கிழக்குகூர்ப் பகுதி இளைஞர்கள் என்ற பலரும் நாடக முயற்சிகளில் ஈடுபட்டனர். புங்குடுதீவு நாடகவளர்ச்சியில் "இளைஞர்கழகம்" முக்கிய இடத்தைப் பெறுகிறது. இளைஞர் கழகம் பல நாடகங்களை மேடையேற்றியது. இக்கழகத்தினர் மேடையேற்றிய "வாழ்வுப் பலி" வாழ்வு மலர்ந்தது, " ஒரு திருமுருகன் வந்தான்" சாம்ராட் அசோகன் போன்ற நாடகங்கள் பெருமைபெற்றன. இப்பொழு தும் பலரால் ஞாபகப்படுத்தப்படுகின்றன. இந்நாடகங்களில் நடித்த இளைஞர்கள் பின்னாளிற் புகழ்பெற்ற மனிதர்களாக விளங்கினர். இளைஞர்கழகத்தின் சார்பாக ஐ.சிவசாமி ஆசிரியர் எழுதிய இலக்கிய "வாழ்வுப் பலி" என்ற நாடகம் கிராம மக்கள் மத்தியில் சிலகித்துப் பேசப்பட்டது.

சிவசாமி ஆசிரியர் நாடகங்களை மட்டும் எழுதவில்லை புங்குடுதீவு இளைஞர் களுக்கு நாடகக் கலையை அறிமுகப்படுத்தி அவர்களை நாடகங்கள் மூலம் ஜொலிக்கச் செய்தார். மேடையில் பல புதிய உத்திகளைக் கையாண்டார். நாடகம் ஆரம்பமாவதற்கு முன் கலைஞர்களை அறிமுகப்படுத்தும் பொழுது வெள்ளித்தட்டொன்றை மேடை யில் வேகமாக விட்டெறிந்து "டமார்" என்ற சத்தத்தை உருவாக்கிவிட்டு "டைரக்ஷன் சிவா" என்று அறிவிப்புச் செய்யும் பாணி அலாதியானது. ஆரம்பத்தில் தான் பிறந்த இடமான மேற்கூர் இளைஞர்களுக்கும் பின்பு, தான் புகுந்த இடமான கிழக்கூர் இளைஞர் களுக்கும் நாடகங்களைப் பயிற்றுவித்தார்.

ஐ.சிவசாமி ஆசிரியர் எழுதிய "வாழ்வுப்பலி" நாடகத்தில் கதாநாயகனாக நடித்தவர் ஈழத்துச் சிவானந்தன். சிறந்த மேடைப் பேச்சாளரான சிவானந்தன் அந்த நாடகத்தில் சிவாஜி கணேசன் போல வசனம் பேசி நடித்தார். அவர் அந்த நாடகத்தில் மேடையில் தோன்றும் பொழுதொல்லாம் ரசிகர்கள் "ஈழத்துச் சிவானந்தன்" என்று குரல் எழுப்பி ஆரவாரம் செய்து கரகோஷம் செய்தனர்.

"வாழ்வுப்பலி" நாடகத்தின் சிறப்பைக் கேள்வியுற்ற அப்போதைய யாழ். இந்துக் கல்லூரியின்அதிபர் தனது பாடசாலையிலும் இந்தநாடகத்தை மேடையேற்றும் படி கேட்டுக்கொண்டார். அங்கு தொடர்ந்து இருப்பத்தைந்து நாடகங்களில் ஒன்றாக "வாழ்வுப்பலி"யும் மேடையேற்றப்பட்டு முதலாவது இடத்தைப் பெற்றது. ஈழத்துச் சிவானந்தன் நடித்தார். 1960 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கணேச வித்தியாசாலையில் ஒரு நாடகம் மேடையேற்றப்பட்டது. அந்த நாடகத்தில் ஈழத்துச் சிவானந்தன் கதாநாயகனாகவும், சிவராசா கதாநாயகியாகவும் நடித்தார்கள். பெண்களின் பாத்திரங்களில் ஆண்களே நடித்தனர்.

நாடக ஆர்வம் காரணமாகப் பல இளைஞர்கள் ஒன்றுகூடி பல நாடக மன்றங்களை உருவாக்கினார்கள். இவற்றில் பெருங்காடு உதயகலா நாடகமன்றம் முக்கியமானது. இது 1967ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது. இந்நாடக மன்றத்தின் தலைவராக எம்.கே. கனகரத்தினமும் (பாட்டுக்காரக் கனகர்) செயலாளராக சேனாதி சிவசண்முக சுந்தரமும் பொருளாளராக எம். கே.சண்முக லிங்கமும் செயற்பட்டனர். இந்நாடக மன்றம் இளைஞர்களின் நாடக ஆர்வத்தை வளர்த்தது. நாடகப்பயிற்சிகளை நடத்தியது. பழம் பெரும் நாடகத்துறை அறிஞர்களையும் விற்பன்னர்களையும் இளைய சந்ததியினருக்கு அறிமுகம் செய்தது. வி.வி. வைரமுத்து, டி. ஆர். ஒ. ஸ்ரீனிவாசன், தேவன் யாழ்ப்பாணம் போன்ற நாடக விற்பன்னர்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர்.

க. செல்வரத்தினம் எழுதி உதயகலா நாடகமன்றம் மேடையேற்றிய "பிணம் பேசுகிறது" என்ற நாடகம் புகழ்பெற்றது. இந்நாடகம் புங்குடுதீவில் மட்டுமன்றி சாவகச்சேரியிலும் மேடையேற்றப்பட்டது. இந்நாடகத்தில் அப்பொழுது நடித்தவர்கள், பின்னாளில் பிரபலமானார்கள் ஐ. சண்முக நாதன், க. செல்வரெத்தினம், ம. கனகரெத்தினம், எம் கே. சண்முகலிங்கம், வி. எஸ். சிவலிங்கம், க. மகாலிங்கம், க. ஜெயக்குமார், க. ஜெயா விக்கிரமசிங்கம், இ.க அரியரெத்தினம், மலைப்பாம்பு மகேஸ்வரன், க. சரவணவபவன், சிவசண்முகசுந்தரம் போன்றோர் புகழ் பெற்றனர்.

"பிணம் பேசுகிறது" நாடகத்தைப் போல இ.க. அரியரெத்தினம் எழுதிய "இதயக் குமுறல்" என்ற நாடகமும் புகழ்பெற்றது. இறுப்பிட்டி சனசமூக நிலைய இளைஞர்கள் இந்த நாடகத்தை தயாரித்தளித்தனர். அன்றைய சமூகத்தைப் பீடித்திருந்த சாதியம், சீதனம் போன்றவற்றைச் சாடும் ஒரு புரட்சி இளைஞன் தன்னைப் போன்ற சக இளைஞர்களை முற்போக்குப் பாதையில் இட்டுச் செல்வதுதான் கதை. இ.க அரியரெத்தினம், ந. பரஞ்சோதிநாதன். த. சிவலிங்கம், க. சண்முகலிங்கம், க. மகாலிங்கம், ச. சிவலிங்கம், க. ஜெயக்குமார், க. ஜெயவீரசிங்கம், ஆகியோர் நடித்தனர். இந்த நாடகத்தைப்பார்த்த எழுத்தாளர் மு. தாளையசிங்கம் பெரிதும் பாராட்டினார். மலைப்பாம்பு மகேஸ்வரன் முக்கிய பாத்திரத்தில் நடித்த "மணப்பந்தலில் கொலை" என்ற நாடகமும் முக்கியமானது. இந்நாடகத்தில் மகேஸ்வரனுடன் க.குணராசா, தி. சிறிபதி போன்றோரும் நடித்தனர்.

1968இல் புங்குடுதீவு மூன்றாம் வட்டார இளைஞர்கள் உருவாக்கிய மன்றமே. "கலைமகள் மன்றம்" "மலராத வாழ்வு" "ஆச்சி வாணை கூத்துக்கு", "சட்டம்பியார் சரவணை" "கும்பகர்ணன்" போன்ற நாடகங்களை இம் மன்றம் மேடையேற்றியது.

கிழக்கூர் எழுத்தாளரான இந்துகேஷ் சிறுகதை, நாவல் எழுதியதுபோல நாடகங்கள் எழுதி மேடையேற்றுவதிலும் ஆர்வம் கொண்டிருந்தார். இவர் ஒரு சிவராத்திரி தினத்தன்று ஒரே இரவில் நான்கு நாடகங் களைக் கண்ணகை புரத்தில் மேடை யேற்றியது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவர் பின்னர் பல வானொலி நாடகங்களை யும் எழுதினார். ஜெர்மனியில் வாழும் இவர் "பூவரசு" என்ற சஞ்சிகையை நடத்திவருகி றார். சில குறுந்திரைப்படங்களையும் தயாரித் திருக்கிறார். புங்குடுதீவில் பிறந்த ஆசிரியர்கள் பலர் நாடக அபிமானம் கொண்டு வாழ்ந்தி ருக்கிறார்கள். பாடசாலை மாணவர்களைக் கொண்டு நாடகங்களை உருவாக்கி மேடை யேற்றியிருக்கிறார்கள். சிலவேளைகளில் இந்த ஆசிரியர்களே மேடையில் தோன்றி நடித்தி ருக்கிறார்கள். ஆசிரியர் சண்முகநாதனும் அப்படிப் பட்ட சிறந்த நாடக ஆசிரியராவார். இவர் எழுதி மேடையேற்றிய "சாம்ராட் அசோகன்" என்னும் நாடகம் புகழ் பெற்றது. சிறந்த பல நடிகர்கள் இந்த நாடகத்தின் மூலம் அறிமுகமானார்கள்.

1965ஆம் ஆண்டு எஸ்.கே. மகேந்திரன் உருவாக்கிய இளம்தமிழர்மன்ற ஆரம்ப விழாவின்போது அவர் இயக்கிய "தொழிலாளர் தோழன்" என மேடையேற் றப்பட்டது. இவர் 35 நாடகங்களை மேடை யேற்றினார். 1986ஆம் ஆண்டு "கரையைத் தொடாத அலைகள்" என்ற நாடகம் மேடை யேற்றப்பட்டது. எஸ். என். தனபாலன் எழுதிய இந்த நாடகத்தில் தி. சிறிதரன், ந. ரங்கன், ந. இராசதுரை, சித்திராமணாளன் போன்ற நடிகர்கள் நடித்தனர். இந்நாடகம் பின்னாளில் கனடாவில் இதே பெயரில் குறுந்திரைப்படமானது குறிப்பிடத்தக்கது.

1970ஆம் ஆண்டளவில் நவீன நாடகங்களைச் சினிமாவின் ஆக்கிரமிப்பி லிருந்து விடுவிக்கும் கலைஞர்கள் பலர் தோன்றினர். அக்காலத்தில் தான் மடத்து வெளி மலர்விழி நாடகமன்றம் ஆரம்பிக்கப் பட்டது. இந்த நாடகமன்றத்தை ஆரம்பிப் பதில் மூன்று கலைஞர்கள் முக்கியமான வர்களாக விளங்கினர். அ. சண்முகநாதன். என். தர்மபாலன், எஸ்.என் தனபாலன் போன்ற ஆசிரியர்களே அவர்கள். சமுதா யத்தை முன்னேற்றும் சாதனமாக நாடகங்கள் விளங்கவேண்டும் என்று இவர்கள் கருதினர். புங்குடுதீவுவின் மற்றைய நாடகங்களை மேடையேற்றுவதற்கு சிவராத்திரி விரத நாட்கள் சிறந்தனவாக விளங்கின. இவர்கள் முதன்முதலில் "அந்தஸ்த்து" என்ற நாடகத்தை மேடையேற்றினர். எஸ்.என். தனபாலன் இந்நாடகத்தை எழுதி இயக்கி னார். என் தர்மபாலன், அ. தாமோதரம் பிள்ளை, சிவபாலன், பாலசுப்பிரமணியம், சிவச்சந்திரபாலன், அமிர்தலிங்கம் அ. சண்முகநாதன் ஆகியோர் இந் நாடகத்தில் நடித்தனர்.

சமூக சீர்திருத்த நாடகமான "அந்தஸ்த்து" பலராலும் பாராட்டிப்பேசப் பட்டது. 1974ஆம் ஆண்டு அ. சண்முகநாதன், செத்தவன் சாக இருப்பவனைச் சாகடிப்பதா"? என்ற நாடகத்தை எழுதி இயக்கி மேடை யேற்றினார் இந்த நாடகத்தைப் பற்றி அப் பொழுது "வீரகேசரி" பாராட்டி விமர்சனம் எழுதியது. சடங்குகளின அடித்தளத்தில் அமைந்த சமூக அமைப்பை கேள்விக் குறியாக்கி, உள்ள இந்த நாடகம், சமூக மாற்றத்துக்கும் சமூக விழிப்புணர்வுக்கும்

உந்து கோலாக இருப்பதுடன். சடங்குகள் தேவையா? இதனால் ஏற்படும் நன்மைகள் என்ன? எனப்பலகேள்விகளை எழுப்பியது என்று வீரகேசரி விமர்சித்து எழுதியது. த. சண்முகநாதன் எழுதிய இயக்கிய இன்னு மொரு நாடகத்தின் பெயர் "சாதிகள் இல்லை யொடி பாப்பா" என்பதாகும். இந்த நாடகத் தின் மூலம் தீண்டாமை எதிர்ப்புக் கருத்துக் கள் எழுதப்பட்டன. "காணாமல் போனது கள்" என்ற நகைச்சுவை நாடகத்தையும் இவர் எழுதினார்.

மாமனிதர் எஸ்.கே . மகேந்திரன் சட்டத்தரணியாக நியமனம் பெற்றதையிட்டு புங்குடுதீவு மக்களால் மாபெரும் பாராட்டு விழா எடுக்கப்பட்டது. இவ்விழாவில் என்.தர்மபாலன் எழுதிய இயக்கிய "நதியில் லாத ஓடம்" என்ற நாடகம் மேடையேற்றப் பட்டது. இந்நாடகம் மத்தியதர வர்க்க மக்களின் வாழ்வையும் அங்கு உருவாகும் பலவீனங்களைப் பற்றியும் விமர்சனம் செய்தது. 1975ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது என். தர்மபாலன் அங்கு பட்டதாரி மாணவராக இருந்தார். பல்கலைக் கழகத்தில் பெற்ற நாடக அறிவையும் அனுபவங்களையும் தனது கிராமத்து நாடகங்களிலும் அறிமுகப் படுத்தினார். என். தர்மபாலனின் மேற்பார் வையில் சிவ. சந்திரபாலன் எழுதி இயக்கிய "கிராமத்து அத்தியாயம்" என்ற தாளலய நாடகம் ஒரு பரீட்சார்த்த நாடகமாக அமைந்தது இந்த நாடகத்தில் கந்தப்புலவராக என். தர்மபாலனும் தெய்வயானையாக சிவசந்திரபாலனும் நடித்தனர்.

எஸ். என். தனபாலன் எழுதி நடித்த நாடகங்களில் ஒன்றின் பெயர் "காகித ஓடம்" ஆகும். இந்நாடகத்தில் ஆர்.பிரபா சித்திராமணாளன், எஸ். சிவலிங்கம், எம். மோகனபாலன், பி.கிருஷ்ணபிள்ளை திகிலழகன் ஆகியோர் நடித்தனர். குடும்பம் என்பது ஒரு பல்கலைக்கழகம். அது ஒற்றுமையாக இருத்தல் வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியது இந்நாடகம் எஸ்.என். தனபாலன் பல நாடகங்களை எழுதி இயக்கினார். "மெழுகுவர்த்தி அணைகிறது", "கலந்தோடும் கனவுகள்"; "எதற்காக", "பாதை மாறிய பயணங்கள்", "விடியலை நோக்கி", துன்பங்கள் சிரிக்கின்றன, யாருக்காக போன்ற நாடகங்களை எழுதி மேடையேற்றினார்.

1977ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் நாடக அரங்கக் கல்லூரியால் நாடகப் பயிற்சி வழங்கப்பட்டது. அதில் தி. கருணாகரன், தி. திருச்செல்வம், சிவசந்திர பாலன், துரைரவீந்திரன் ஆகியோர் பயிற்சி பெற்றனர். 1980களில் மு.முத்துக்குமார் சிவசந்திரபாலன் ஆகியோர் "உதயத்தேடும்" "அஸ்தமனம்" எழு அழுவதற்காய்" விதி வரைந்த கோலங்கள் " போன்ற நாடகங்கள் மேடையேற்றினர். இந்நாடகங்களில் தி. கருணாகரன், யா யோகேஸ்வரன், த. திருச் செல்வம், நா. இராச குமார், அ. திகிழழகன், த. பிறேமானந்தன், துரை, இரவீந்திரன், ந.கணேஸ்வரன் , சிவகுமார், வி பகீர்தன், கா. பாலசுப்பிரமணியம், இ. இந்திரசித்து, கி. சுதாகரன் மனோகரன், கு. முரளிதரன், கு. அநு ராகவன், இ. ஸ்ரீஸ்கந்தராசா, க. பாலசிங்கம், க. சிவராசா , துரை , சுவேந்திரன், கு. வித்தி யானந்தன், கு. நித்தியானந்தன், வி. பாஸ்கரன் ஆகியோர் இந்நாடகங்களில் நடித்தனர்.

இவ்வாறான இளைஞர்களின் முயற்சியால் உருவாக்கப்பட்ட இந்நாடக வளர்ச்சியில். 1988இல் முற்றாக செயலிழந்து . அரசபடையின் செயல்களால் இவ் இளை ஞர்கள் பலர் புலம்பெயர்ந்து விட்டனர். இந்த இளைஞர்களில் பலர் கனடா நாட்டில் ஒன்று கூடினர் . 1966ஆம் ஆண்டு கனடா பூவரசம், பொழுது நிகழ்ச்சியில் எஸ். என் .

தனபாலன் இயக்கத்தில் "ஜீவராகம்" என்ற நாடகம் மேடையேற்றப்பட்டது. இதில் அ. சண்முகநாதன், ஆர். ஆர். பிரபா, தி. கருணாகரன், பத்மரவீந்திரன் க. சுதாகரன், க.ரஞ்சி ரவீந்திரன் ஆகியோர் நடித்தனர். இந்நாடகமும் பின்னர் "கரை தேடும் அலை" யில் என்ற பெயரில் (சிடிப்படம்)இறுவட்டு வெளிவந்தது அதற்கு விருதும் கிடைத்தது. கனடா தேசத்தில் எஸ். என். தனபாலனால் பல குறுந்திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டன. "வாலிப தேசங்கள்", "உணர்வுகள்" போன்ற படங்கள் முக்கியமானவை. மடத்து வெளி இளைஞர்கள் போல் வேறு எவரும் புலம் பெயர் நாடுகளில் அதிக பல கலைப்படைப் புக்களை உருவாகவில்லை. அந்த வகையில் அ.சண்முகநாதன், என். தர்மபாலன், எஸ்.என் தனபாலன் போன்ற பெயர்கள் முக்கிய மானவை.

புங்குடுதீவு கிழக்கில் பிறந்து இரத்தினபுரியில் படித்து பல்கலைக்கழகத்தில் பயின்ற மு. பொன்னம்பலம் தனது நாடகங் களை எழுதி மேடையேற்றியிருக்கிறார். பூரணசர்வோதய இயக்கத்தை ஆரம்பித்த எழுத்தாளர் மு. தளையசிங்கத்தின் தம்பியே இந்த மு. பொன்னம்பலம், மு.தலையசிங்கத் தின் சீரிய சிந்தனைகளை தம்பி மு.பொன்னம் பலம் தனது நாடகங்களில் புகுத்தினார். இவர் முதன்முதலில் எழுதி மேடையேற்றிய நாடகமே "ஆனா படித்த அரசடியார்" என்ற என்ற நாடகம். 1971ஆம் ஆண்டு புங்குடுதீவு 11ஆம் வட்டாரம் தெடங்கந்திடல் பிள்ளை யார் கோவிலின் வடக்கு வீதியிலே தற்காலிக மாக மேடை அமைத்து மேடையேற்றப் பட்டது. இந்த நாடகத்தில் சு. வில்வரெத்தி னம், நா. தர்மலிங்கம், கனகமகேந்திரன், செ. ஈஸ்வரமூர்த்தி போன்றோர் நடித்தனர். புங்குடுதீவில் மு. பொன்னம்பலத்தினால் எழுதப்பட்ட நாடகம் ஒன்று பேராதனை பல்கலைக்கழகத்திலும் மேடையேற்றப் பட்டது. 1972ஆம் ஆண்டு காலத்தில் புங்குடு தீவைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கிருஷ்ண பாலன் என்ற மாணவன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் "B.Com" படித்துக் கொண்டிருந்தார். மு. பொன்னம்பலம் எழுதிய நாடகம் ஒன்றை இந்த மாணவன் வாங்கிக்கொண்டு போய், பேராதனை பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு நாடகமாக மேடையேற்றினார். பல்கலை கழகப் பேராசிரியர்களாலும் மாணவர்க ளாலும் பாராட்டப்பட்ட அந்நாடகம் தான் "யுகம் ஒன்று மலரும்" என்பதாகும்.

1991ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை தீவுப்பகுதி இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்தது. தீவுப்பகுதிக்கும் குடாநாட்டிற்கும் இடையில் தொடர்பு இல்லாமல் இருந்தது. அந்த வேளையில் சில மாணவர்களும் ஆசிரியர்களும் புங்குடு தீவுக்குள் அகப்பட்டிருந்தார்கள். புங்குடு தீவில் மகாவித்தியாலயத்தை மட்டும் திறந்து சில மாணவர்களுக்கு சில ஆசிரியர்கள் கற்பித்தார்கள். அவர்களுக்கு மு.பொன்னம் பலமும் சம்பளம் இன்றிக் கற்பித்தார். அப்படிக்கற்பிக்கும் பொழுது அப்பாட சாலையின் மாணவர்கள் சிலரைக் கொண்டு நடிப்பித்து சில நாடகங்களை பாடசாலைக் குள்ளேயே மேடையேற்றினார். அவற்றிலே ஒரு நாடகம் தான் "செவ்வாயில் மனிதன்" என்பதாகும். இந்நாடகம் அப்பொழுது ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் பெரிதும் பராட்டப்பட்டது.

புங்குடுதீவின் இலகுவான போக்கு வரவுக்காக அப்போதைய தீவக எம்.பி. சேர்.வை துரைசுவாமி நிதி ஒதுக்கிய தாம்போதியே பின்னர் வாணர் தாம் போதி யை வாணர் சகோதரர்கள் அமைத்தார்கள்.

அவர்களின் ஞாபகார்த்தமாக 1997 ஆம் ஆண்டு அம்பலவாணர் அரங்கு திறந்து வைக்கப்பட்டது. அந்தத்திறப்பு விழாவில் பல கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. பூரண சர்வோதய இயக் கத்தின் சார்பில் எழுத்தாளர் மு. பொன்னம்பலம் எழுதி இயக்க "முக மூடிகள்" என்ற நாடகம் மேடை யேற்றப் பட்டது. நவீன பாணியில் அமைந்த இந்த நாடகத்தில் மு. பொன்னம்பலம் சு. வில்வ ரெத்தினம், ஈழத்து சிவானந்தன், மு. நேமிந்தன், ஈ. ப.சுந்தரலிங்கம், நா.தர்மலிங்கம், செ. ஈஸ்வரமூர்ததி, கனகமகேந்திரன் (மஞ்சுளா மகேந்திரன் - கனடா) ச. சதானந்தன். க. கிருஷ்ணபாலன், தம்பிஐயா, தேவதாஸ் க. குணரெத்தினம், க.பொன்னம்பலம் ஆகி யோர் நடித்தனர்.

இந்த நாடகத்தின் பின் அம்பல வாணர் அரங்கில் வேறு எந்த நாடகமும் மேடை யேற்றப்படவில்லை.

**சினிமாத்துறை**

புங்குடுதீவில் பிறந்த பல கலைஞர் கள் நாடகத்துறைப் போலவே சினிமாத் துறையிலும் ஈடுபட்டனர்.

புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தில் பிறந்த விஸ்வலிங்கம் அவர்களுக்கு நான்கு ஆண் பிள்ளைகளும் ஒருபெண் பிள்ளையும் பிறந்தார்கள். ஆண்களில் மூத்தவரின் பெயர் செல்லையா. அவர் படித்து ஆசிரியரானார். ஆசிரியர் செல்லையா சங்கானையில் மணம் முடித்து அங்குள்ள கிராம சபையின் தலை வராகத் தெரிவு செய்யப்பட்டார். இவரது மகன் தான் பிரபல தென்னிந்திய சினிமா இயக்குனர், தயாரிப்பாளர் என்று திரையு லகில் உயர்ந்தார். இந்தக் குகநாதன் புங்குடு தீவு 12ஆம் வட்டாரத்தில் பிறந்தார். இவரது முழுப் பெயர் விஸ்வலிங்கம் செல்லையா குகநாதன் என்பதாகும்.

1962ஆம் ஆண்டு முதலாவது தமிழப்பாடமான சமுதாயம் திரைக்கு வந்தது. இத்திரைப்படத்துக்கான கதை வசனத்தை எழுதியவர் ஜீவா நாவுக்கரசன் என்ற எழுத்தாளர் இவர், "பூமாலை" என்ற சஞ்சிகையும் நீண்டகாலம் நடத்தியவர் இவர் புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தில் பிறந்தவர்.

இலங்கையின் முதலில் தயாரிக் கட்ட "வர்ணச் சிங்களப்படம்" "றன்முத்து தூவ" என்பதாகும். "தங்கத்தீவு" என்பது அதன் அர்த்தம் இப்படத்துக்கான ஒளிப்பதிவைச் செய்தவர். ஏ.வி. எம். வாசகம் என்ற கலைஞர் ஆவார். அதனைத்தொடாந்து பல சிங்களப் படங்களுக்கு ஒளிப்பதிவு செய்தார். "வாடைக் காற்று" என்ற தமிழ்ப்படத்தையும் இவரே ஒளிப்பதிவு செய்தார். இப்பொழுது கனடா வில் வாழும் இவர் அங்கு உருவான பல ஆங்கிலத் தமிழ்ப்படங்களுக்கு ஒளிப்பதிவு செய்தார். இவர் புங்குடுதீவு 11ஆம் வட்டாரத் தில் பிறந்தவர்.

சி. சண்முகம் என்ற எழுத்தாளர் வானொலி நாடகங்கள் எழுதிப் புகழ் பெற்ற வர். இவர் எழுதிய பல கதைகள் சிங்களத் திரைப்படங்களாகவும் உருவாகியிருக்கின் றன. பிரபல வானொலிக் குயிலான திருமதி ராஜேஸ்வரி சண்முகத்தின் கணவரான இவர் நீண்டகாலம் வானொலியில் அறிவிப்பாள ராகக் கடமையாற்றினார். இந்த சி. சண்முகம் புங்குடுதீவு 10ஆம் வட்டாரத் தில் பிறந்தவர்

இலங்கையின் புகழ் பெற்ற நாடகக் கலைஞர் எம். உதயகுமார் பலமேடை நாடகங்களிலும் தொலைக்காட்சி நாடகங்

களிலும் நடித்தார். "கடமையின் எல்லை" "மஞ்சள் குங்கும்" போன்ற தமிழ்ப் படங்களில் நடித்தவர். "மாமியார் வீடு" என்ற படத்தில் தென்னிந்திய நடிகை ஜெயாவுக்கு துணையாகத் நடித்தவர். இவர் புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தில் பிறந்தவர்.

இலங்கை வானொலியில் அறிவிப் பாளராக கடமையாற்றிக் கொண்டு பல தொலைக்காட்சி நாடகங்களில் நடித்தவர். தம்பிஐயா தேவதாஸ் "இதயத்தின் ஓர் உதயம்" என்ற தொலைக்காட்சி நாடகத்தை 1995 ஆம் ஆண்டில் தயாரித்தார். இலங்கை சினிமா சம்பந்தப்பட்ட நூல்களை எழுதியிருக்கிறார். இவர் புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தில் பிறந்தவர்.

இந்தியாவில் பல தமிழ்படங்களைத் தயாரித்த சுந்தரம்பிள்ளை ஆனந்தசிவம் இப்பொழுது இங்கிலாந்தில் வாழ்ந்து வருகிறார். இவர் தயாரித்த படங்களில் "மார்கழிப்பூவே" என்ற படம் பிரபலமானது இவர் இந்தியப்படங்களை இங்கிலாந்துக்கு இறக்குமதி செய்து விநியோகித்தவர். ஆனந்தசிவத்தின் மகன் ஒருவர் இப்பொழுது ஹொலிவூரில் எடிட்டிங் பகுதியில் படித்து வருகிறார்.

உலகின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் புங்குடுதீவு இளைஞர்கள் தாங்கள் வாழும் நாடுகளில் சிலசில குறும்படங்களை யும் தொலைக்காட்சி நாடகங்களையும் தயாரித்து வருகிறார்கள். இவர்களில் கனடாவில் வாழும் ஆசிரியர்கள் தனபாலன், தர்மபாலன் மற்றும் இந்திரஜித் போன்றோர் முக்கியமானவர்கள். எஸ்.எம். தனபாலன் கரைதேடும் அலைகள், மறுபக்கம், வாலிபதேசங்கள், உணர்வுகள், போன்ற குறுந்திரைப்படங்களைத் தயாரித்தார் இந்திரஜித் "தமிழச்சி" என்ற படத்தை தயாரித்தார். 1965 இல் ஜேர்மனி "பூவரசு" என்ற நிறுவனத்தின் மூலம் இந்து மகேஷ் கோடையில் வந்த மழை என்ற" குறும் படத்தைத்தயாரித்தார். இவ்வாறு புங்குடுதீவு இளைஞர்கள் தமது நாடகக்கலை ஆர்வத்தை வெளிநாடுகளில் குறும்படத்தை தயாரிப் பதன் மூலம் தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

## சிந்தனைக்குச் சிலவரிகள்....

1. எதிரி கொடுக்கும் ஒரு ரொட்டியைவிட உற்ற நண்பன் கன்னத்தில் அறையும் அடி மேல்.
2. விரும்பியது கிடைக்க வேண்டும் என ஏங்குவதைவிட கிடைப்பதை விரும்பி ஏற்பதே நல்வாழ்விற்கு வழி.
3. உன்னைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பது முக்கிய மில்லை. நீ எப்படி இருக்கிறாய் என்பதே முக்கியம்.

# புங்குடுதீவு, ஈழத்து இராமேஸ்வரப் பெருமான்மீது பாடப்பட்ட ஐந்திணை சூழ்பதி

இராகம் : ஆனந்தபைரவி — தாளம் : ஏகதாளம்

**காப்பு**

அன்று மாங்கனிக்காக அப்பனை வலம் வந்து
அவனே உலகமென்றாய் !
இன்று நான் என் அப்பன் இராமலிங்கனைப் பாட
இன்னருள் தாரும் ஐயா - கணபதி நீ !!

**பல்லவி**

உன்னை நம்பினேன் ஐயா சரணம் - சம்போ

**அனுபல்லவி**

ஊரர் பதிவாழ் ஈசா! ராமலிங்கேசா !!

**சரணம்**

1. கோரவயல் சூழ்ந்த பதி
குளமும் நிறைந்த பதி
கொன்றை தும்பை மலர் தூவி
நின்று சொரியும் பதி
கன்றை நினைந்து பசு
என்றும் பால் சுரக்கும் பதி
மன்றுள் நின்றாடும் பிரான்
மனம் விரும்பி அடைந்த பதி
அன்று நாவலூர னுக்காய்
பரவையிடம் தூது சென்ற
பாணாவிடை அப்பன் விரும்பிப்
பாதம் பதிந்த பதி......... (உன்னை)

2. தளரா வளர் தெங்கும்
தருபனங் கூடலும். நிலவளமாகக்கொண்ட பதி
வளமாக நின்று குளிர் சுரக்கும் மருது
நிழலாக நிற்கும் பதி
களமான ஞான ஒளி காட்டும் நல்லரசும்-வேம்பும்
அருள் மரமமாகக் காணும் பதி
குளமாக மலர்விக்கும் தலவிருட்சம்
மூலலிங்கக் குடையாக நிற்கும் பதி
பழம் பதியாம் அப்பதி - ஊரர்வதி!
பாணாவிடைப்பதி (உன்னை)

3 "மீன் வலை வீசிய கானவன் லிங்காய்
வெளிப்பட்டு நிற்கும் பதி
வான் கடல் தழுவி அலையது புரளும்
அடவிலி ஆறு சூழ்பதி
மீன்கடல் அடியில் வேதம் இசைத்திடும்
வெண்சங்கு நிறைந்த பதி
மான் விழி உமையும் மகிழ்தணியும்
முத்து - மூழ்கி எடுக்கும் பதி
வானது அதிர மீனது பாடும் -ஓம் என்ற
மறை ஓசை கேட்கும் பதி..........!"

(உன்னை)

4. "சின்ன மலை பெரியமலை
சிவக்கன்று மருதப்பு சுவாமி இருக்கும் மலை
வண்ண நல் ஆலமரம் வளைந்து குடைபிடிக்க
அண்ணல்அவன் மூலகுருவாய் அமர்ந்து
நால்வருக்கு - ஞான அறிவளிக்கும்பதி
மண்ணதனை லிங்கமாக்கிமலர்விழியால்
அர்ச்சித்த கோதண்ட இராமன் கண்டபதி.....!
ஈழத்து இராமேஸ்வரர் பதி....!

(உன்னை)

தொட்ட வெளி உப்பு வெளி
சுடுமண்- வெட்ட நீர்சுரக்கும்
அப்பூதியடிகள் அடிபோற்றும்
அடியார் நிறைந்த பதி
அள்ள அள்ளக் குறையாத -அப்பர்
ஆறாத சோறு கண்டதிசயிக்கும் பதி
பட்டமரம் பால் சுரக்கப் பக்தர் எல்லாம் விழி சுரக்க
இட்டமுடன் லிங்கம் இன் அருள் சுரக்கும் பதி
பூங்குடியுறை பர்வதவர்த்தனி சமேத
இராமலிங்கேஸ்வரப் பதி....!

(உன்னை)

அடியார், வைத்திய கலாநிதி, ஆ. பேரின்பநாதன், ஜே.பி.

# தூர தேசத்திலிருந்து ஒரு பாடல்

கு. சுரேஸ்குமார், சுவிஸ்.

உப்புக் கலந்த தென்றல் வீசும்
உலர் மணற் புழுதி ஊரோடு பேசும்
தங்க நிற வெயில் சாமரம் போடும்
எமை ஈன்றெடுத்த கிராமத்து ஆன்மா இது

கிராமத்திற்கென்றோர் பாடசாலை
எமைத் தத்தெடுத்து தாகம் தீர்த்த சாலை
சாதிமத பேதங்களைத் தகர்த்த கூடம்
தரணியில் புகழ் வீசி நிற்கும் கூடம்

என்னை அணைத்தெடுத்து எனக்கறிவுச் சோறூட்டி
செல்லும் இடமெல்லாம் என் கால்கள் நடைபயில
முன்னமே நீயுணர்ந்து முதுகலை தந்தவள் நீ
கரம் பிடித்துக் கரையேற்றிக் கலங்கரையானவள் நீ

உனை வாழ்த்திடச் சொற்களில்லை பேசிட மொழியுமில்லை
அத்தீவின் வரலாற்றில் அரும்பெரும் காவியம் நீ
சின்னஞ் சிறு கொட்டிலில் பிறந்து தவழ்ந்து
சிறப்புற முதுமரமாய் சீரோங்கி நிற்கிறாய்

உன் புகழ் பாடிட சொற்களைத் தேடுகிறேன்
உன் மடியில் இளைப்பாற சில நாட்களைத் தேடுகிறேன்
உன்னோடு கலந்துவிட ஆன்மாவைத் தேடுகிறேன்
எழுபத்தைந்து ஆண்டில் நிற்கும்
எமதருமைக் கமலாம்பிகை வித்தியாலயமே
எமக்குத் தாய்ப்பால் ஊட்டிய
மஞ்சள் நிறக் கிராமத்தின் இதயமே
இதுபோலாயிரம் ஆண்டுகள்
தழைத்தோங்க வாழ்த்துகிறேன்

# கல்வி

செல்வி லவனியா, மாணவி, தரம் – 11

கல்வி என்பது மூன்றெழுத்து
இளமைக் கல்வியே சிலை எழுத்து
கல்வியில் உன்னை முழுமையாக ஈடுபடுத்து
அதனால் நீ பெறுவாய் உயர்மதிப்பு.

புத்தகத்தில் இருக்கும் போது எழுத்து
தத்துவமாய் வாய் சொல்லும்போது கருத்து
அதைப் பயன்படுத்துவது உன்னைப் பொறுத்து
கல்வி உண்மையான செல்வம்என உள்மனதில் நிறுத்து.

கல்வியை எதிர்ப்பவரை வருத்து
ஆசானைப் பேசாதே மறுத்து
அதை இன்றும் நீ வலியுறுத்து
நாளை உன்பெயர் பொன் எழுத்து.

தேடிப் பெறவேண்டிய சித்து
தேடிவைத்துப் பார்க்கும்போது முத்து
கோடி இன்பம் தந்துவிடும் வித்து
அதுவே கல்வி எனும் பொதுச் சொத்து.

# உழவர் பாடல்

திருமதி தி. பத்தினியம்மா, முன்னாள் யாழ். மேலதிக அரசாங்க அதிபர்

ஆற்றங்கரைப் பிள்ளையாரே எமை
ஆண்டருளும் பிள்ளையாரே
நேற்று முதல் உந்தன் அருளால்
நேர்த்தியாய் வாழ்ந்திருந்தோம்
கூற்றுவனும் அஞ்சி நின்றான்
கூத்தனருளைப் பாடி நின்றோம்
சாற்றுகிறோம் உந்தன் புகழ்
சாரும் வினை தீர்த்தருள்வாய்
ஏற்றுகிறோம் உன்னை நிதம்
ஏர்முனையிற் காத்தருள்வாய்
ஏர் எடுத்து நேர் பிடித்துக்
களனி வழி செல்வோம்
கார் வடித்த நீர் தொடுத்துப்
பயிரும் மிகச் செய்வோம்
போர் அடித்துச் சேர் எடுத்துச்
செந்நெல்தனை அளப்போம்
ஊர்முழுதும் ஒரு குடும்பம்
ஒற்றுமையாய் வாழ்வோம்.

கலப்பை எடுத்தே களிப்புடன் செல்வோம்
நிலத்தை உழுதே நீரும் பாய்ச்சுவோம்
களத்தைக் களனி ஆக்கி வாழ்வோம்
உளத்தில் உண்மை உணர்ந்து பாடுவோம்
கலப்பை எடுத்து மிகக் களிப்புடனே சென்றிடுவோம்
நிலத்தை உழுது பின்பு நீரும் அங்கே பாய்ச்சிடுவோம்
களத்தைக் களனியாக்கிக் காலமெல்லாம் வாழ்ந்திடுவோம்
உளத்தில் மகிழ்வு கொண்டு ஊக்கமுடன் வேலை செய்வோம்.

நாற்று நடுவோம் நாம் நாற்று நடுவோம்
இருவராகக் கூடிக்கூடி இன்பமாகப் பாடிப்பாடி
நாற்று நடுவோம் நாம் நாற்று நடுவோம்
நீளமாகக் கோடு கீறி நேசமாகப் பாடிப்பாடி
நாற்று நடுவோம் நாம் நாற்று நடுவோம்.

வானம் பொழியுது வையகம் குளிருது
வாவியெல்லாம் மிக மேவி வழியுது
மோனம் கலையுது மோகம் நுழையுது
மேதினி மீதினில் பாசம் படருது
பச்சை ஒளிருது பார்வை மலருது
பார்க்கும் இடமெல்லாம் பசுமை விளையுது
இச்சை வருகுது இன்பம் பெருகுது
இத்தரை மீதிலே துன்பந் தொலையுது.

பயிரும் வளருதம்மா பால்நிலவும் பொழியுதம்மா
கதிரும் ஒளிருதம்மா மெல்லக் காலமும் நகருதம்மா
பொழுதும் புலருதம்மா நிலம் பொன்னாய் விளையுதம்மா
இருளும் விலகுதம்மா எம்மிதயமும் மலருதம்மா.

நேற்றுவரை நிமிர்ந்து நின்ற நெற்கதிர்ப் பெண்ணாள் - நாம்
பார்த்து நிற்கத் தலை குனியும் காரணந்தான் என்ன?
ஏற்க வந்த கணவரென எம்மை எண்ணியோ
மாற்றறியாப் பொற் கொடியாள் மயங்கியே நின்றாள்.

ஓடியே செல்வோம் கையால் தாவி அணைப்போம்
அரிவாளை எடுப்போம் மெல்லத் தாளை அறுப்போம்
கூடியே சுமப்போம் ஒன்று சேரவே விரிப்போம் பின்பு
சூட்டிலே மிதிப்போம் பதர் போக்கியே பிரிப்போம்.

சுளகெடுப்போமே நாம் சுளகெடுப்போமே
சுளகினாலே நெல்லையெல்லாம் தூற்றி வைப்போமே
பறையெடுப்போமே நாம் பறையெடுப்போமே
பறையினாலே நெல்மணியை அளந்தெடுப்போமே.

அளந்தெடுப்போமே நாம் அளந்தெடுப்போமே
அளந்துடனே நெல்லுக்கிங்கே விலை கொடுப்போமே
நிறைவடைவோமே மன நிறைவடைவோமே
நிறைவுடனே எங்களுடை வீடு செல்வோமே.
பொன் விளைந்த பூமியடா இங்கு
போகமெலாம் சேருதடா
கண்மலருங் காலமடா இன்பக்
கனவுகளுங் கனியுதடா
எண்ணவரும் ஏர்முனையால் ஏற்றம்
மிகப் பெறுவோமடா

கண்ணயரும் வேளையிலும் கலப்பை
தன்னை மறவோமடா.

காலைமுதல் வேலை செய்து நாம்
மாலையிலே வீடு செல்வோம்
வேளை தவறாமல் என்றும்
வயல் வெளியில் வேலை செய்வோம்
காளையொடு வண்டில் கட்டி - நாம்
களனி நெல்லை ஏற்றிடுவோம்
சாலை மருங்கு எல்லாம் எங்கள்
சாமி புகழ் பாடிடுவோம்.

## காதல் கீதம்

பொன்னருவி ஓரத்திலே
போது விழும் நேரத்திலே
மின்னலாகப் போறியே நீ கண்ணம்மா - உந்தன்
எண்ணத்திலே இருப்பது தான் என்னம்மா - இந்த
மன்னவனுக்கின்று பதில் கூறம்மா.

பொன்னருவி ஓரத்திலே
போது விழும் நேரத்திலே
புன்னகையால் எனைமயக்கும் கண்ணையா - எந்தன்
கண்ணுக்குத் தந்த பதில் போதாதா - இன்னும்
விண்டுரைக்க வேண்டுவது ஏனையா.

பொன்னுலக வீதியிலே
பூவையுன தருகினிலே
அண்ணலிவன் துணைவருவதெப் போது - என்
அன்னமே உனை மணப்பேன் தப்பாது - உந்தன்
கன்னமே எனக்குச் சொந்தம் எப்போதும்.
பொன்னுலக வீதியிலே
பண்புடனே உனதருகே
அன்னமென நான் வருவேன் அப்போது - என்
மன்னவா உனை மணப்பேன் தப்பாது - எந்தன்
உள்ளமே உனக்குச் சொந்தம் எப்போதும்.

இருவரும்:
பொன்னுலக வீதியிலே

பொன்னருவி ஓரத்திலே
கன்னலெனச் சுவைத்திடுவோம் இப்போது - எம
தெண்ணமது நிலைக்க வேண்டும் எப்போதும் - நாம்
அன்புடனே காத்திருப்போம் தப்பாது.

**பெண்துயர்**

பெண்ணாகப் பிறந்தவர்க்கு
எந்நாளும் தொல்லையம்மா
பொன்னான வாழ்வு எல்லாம்
கண்ணீரிற் கழியுமம்மா. (பெண்ணாக)

பண்ணாத பூசையெல்லாம்
பாரினிலே செய்திடுவார்
பெண்ணாகப் பிறந்திடிலோ
பேசவுந்நாக் கூசுகிறார். (பெண்ணாக)

மண்ணாக இருந்திருந்தால்
மங்கலமாய் மதித்திருப்பார்
பெண்ணாகப் பிறந்ததினால்
பெரும்பழிகள் சுமத்துகிறார். (பெண்ணாக)

பாட்டிலும் பயனிலுந்தான்
பெண்மைநிலை தெய்வமென்பார்
நாட்டிலே நடப்பதெல்லாம்
நாணுகிறேன் சொல்லவம்மா (பெண்ணாக)

எண்ணாத எண்ணமெல்லாம்
எண்ணியெண்ணி நெஞ்சமெல்லாம்
புண்ணாகி மாள்வதற்கோ
பெண்ணாகப் பிறந்தோமம்மா. (பெண்ணாக)



# அமுதவாக்கு

தொகுப்பு: செல்வி கீர்த்திபா, மணிவாசகம் வித்தியாலய ஆசிரியை.

### அடக்கம் (பணிவு) (Humility, Modesty)

- அடக்கம் ஒரு ஆபரணம் மாத்திரமல்லாமல், நற்குணத்திற்கு ஒரு காவலன்.
- நீண்டநாள் வாழ்வதற்கு நிதானமாக வாழ்வது அவசியம்

### அதிர்ஷ்டம் (Fortune)

- நல்ல வாய்ப்பு பறந்த வண்ணம் இருக்கிறது. எவர் பிடிக்கிறாரோ அதை அவர் அடைகிறார்.
- அதிர்ஷ்டமும், துரதிர்ஷ்டமும் ஒரு கிணற்றின் வாளிகளைப்போல. ஒன்று மேலே ஏறுகிறது. மற்றது கீழே இறங்குகிறது.
- ஒவ்வொரு மனிதனுடைய வாசலையும் குறைந்தபட்சம் ஒரு முறையாவது அதிர்ஷ்டம் தட்டுகிறது.

### அபாயம் (Danger, Risk)

- ஒரு பயந்த மனிதன் அபாயம் வருவதற்கு முன்னரே பயப்படுகிறான். ஒரு கோழை அபாயம் நடந்து கொண்டிருக்கும்பொழுது பயப்படுகிறான். துணிவுள்ள மனிதன் அபாயத்திற்குப்பின் பயப்படுகிறான்.

### அழகு (Beauty)

- இயற்கை ஒரு பெண்ணுக்கு அளிக்கும் முதல் சீதனம் அழகு. இயற்கை ஒரு பெண்ணிடமிருந்து முதலிற் பறித்துக்கொள்ளும் சீதனமும் அதுவே.
- ஒருமனிதனின் அழகு அவன் நாவின் இனிமையில் இருக்கிறது.
- அழகின் தங்கை செருக்கு. அவளுடைய மகள் காமம்.
- கிணற்றுக்கு அழகு தண்ணீர். பெண்ணிற்கு அழகு பொட்டு

### அறிஞர்

- ஒரு போதும் திருப்தியடையாதவர்கள் இருவர் இருக்கின்றனர். அறிவைத் தேடுபவர் ஒருவர். செல்வம் தேடுபவர் மற்றொருவர்.
- மூன்றுபொருட்கள் இந்த மண்ணுலகில் விலை மதிப்பற்றதாகக் கணக்கிடப்பட்டுள்ளன. அறிவுடைமை, தானியம், நட்புடைமை.

### அறிமுகமானவர் (Acquiantance)

- ஒருவர் வாழ்க்கையில் முன்னேறும்பொழுது புது நண்பர்களைத் தன்னுடன் சேர்த்துக் கொள்ளாமலிருந்தால் அவர் சீக்கிரமே தனிமையில் விடப்படுவதை அறிவார் அதனால் ஒருவர் எப்பொழுதும் நட்பினைப் புதுப்பித்துக் கொண்டேயிருக்க வேண்டும்.

### அறியும் ஆவல் (Inquisitiveness)

- கேள்வி கேட்கும் முகம், அதிகம் கற்கத் தாகமுள்ள முகம், கூர்ந்து நோக்கும் முகம், அதிகம் பார்க்கும் முகம் இல்லாதவர்களை நான் வெறுக்கிறேன். மரியாயில் சீல்

### அறிவு (Knowledge)

மனிதர்களில் நாலுவகை:

- தன்னையே தெரியாதவன்: தனக்குத்தெரியாது எனத் தெரியாதவன். அவன் ஒரு மூடன். அவனைக் கைவிடு.
- தன்னையே தெரியாதவன்: தனக்குத் தெரியாது எனத் தெரிந்தவன். அவன் ஒரு அப்பாவி. அவனுக்குக் கற்றுக்கொடு.
- தன்னைத் தெரியும். தனக்குத் தெரியும் எனத் தெரியாது. அவன் தூங்குகிறான். அவனை எழுப்பு.
- தன்னைத் தெரியும்: தனக்குத் தெரியும் எனத் தெரியும். அவன் புத்திசாலி. அவனைப் பின்பற்று.

### அறிவார்ந்த வாழ்க்கை (Wise living)

- நேரத்தோடு படுத்து நேரத்தோடு எழுந்திருப்பவன் ஆரோக்கிய மானவனாக்வும், செல்வந்தனாகவும், புத்திசாலியாகவும் இருப்பான்.

### அறிவுரை (Advice)

- பனித்துகள்கள், மெதுவாக விழுந்து நீண்ட நேரம் தங்கியருப்பது போல; அறிவுரையும் வெகு ஆழமாக மனதிற் பதிகிறது.

### அன்பு (Affection, Kindness, Love)

- சட்டபூர்வமான திருமணமாக இல்லையேயானாலும், அன்பு புனிதமானது. சட்டபூர்வமான திருமணமேயானாலும் அன்பு இல்லையேல் அது புனிதமற்றது.

### அன்பு அன்பாலானது. அன்பு மூர்க்கமானதல்ல

- அன்பே தெய்வம்! மரம், செடி, கொடி, மலர்களுக்கு ஆதவன் போல, மனித இதயங்களுக்கு அன்பு: அன்பே சகல சமயங்களுக்கும் இதயம். எல்லாக் கலைகளுக்கும், காவியங்களுக்கும் மையம். அன்பு எந்த விலை கொடுத்தும் வாங்க முடியாதது. ஆதலால் விலை மதிப்பற்றது. இல்லறத்தை இனிதாக்குவது அன்பு. சகல கவலைகளையும் களைவது அன்பு. ஆகவே, நம் அனைவருக்கும் அன்பு தேவை.
- காதல் புரியும் இதயம் எப்போதும் இளமையாக இருக்கிறது.
- பெண்ணுக்குக் காதலிக்கும்போதும், தலைமயிர் நரைக்கும் போதும் இருமுறை பைத்தியம் பிடிக்கிறது.

அனுபவம் (Experience)

- மனிதன் நனைந்து போகும்வரை அவன் ஒரு குடிசை கட்டிக் கொள்ளமாட்டான். அவன் தலைஇடித்து வீங்கிப் போகும்வரை அவன் குனிந்து வளைந்துசெல்லக் கற்கமாட்டான்.

அனுமானம் (Guess)

- ஒரு பெண்ணுடைய அனுமானம் ஒரு ஆணுடைய உறுதியான முடிவைவிட மிகச்சரியாக இருக்கும்.

ஆசை (Desire)

- முதலில் தோன்றும் ஆசையை அடக்குவது சுலபம். அடக்காமல் விட்டுவிட்டால் அதன் விளைவாக அடுத்தடுத்துத் தோன்றும் தொடர் ஆசைகளை அடக்குவது கடினம்.
- ஆசை அறுபது நாள். மோகம் முப்பது நாள்.
- ஆசை உள்ளளவும் அலைச்சலும் உண்டு.

ஆடை (Clothes)

- எவறொருவர் உடுத்தியிருக்கும் ஆடைகளினால் கவரப்படாமல் இருக்கிறாரோ, அவர்தான் அழகாக ஆடை உடுத்தியவர்.
- ஒரு பெண் மரண தண்டனைக்குப் போவதற்குச் சற்று முன்னரும், தன்னுடைய அலங்காரத்தைச் சரி செய்யச் சற்றுநேரம் வேண்டும் என்று கேட்பாள்.

ஆண் - பெண் (Man and woman)

- ஒரு பெண், தான் விரும்பும் ஆணைத் திருமணம் செய்து கொள்வதைவிட, தன்னை விரும்பும் ஆணைத் திருமணம் செய்து கொள்வதே பெண்ணுக்கு நல்லது.

ஆத்மா (Soul)

- உணர்ச்சியை அடக்கினால் ஆத்மாவின் பலம் அதே விகிதாம்சத்தில் வளர்கிறது.

ஆர்வம், உற்சாகம் (Enthusiasm, Zeal)

- எந்த ஒரு பெரிய காரியமும் ஆர்வமில்லாமல் ஒருபோதும் சாதிக்க முடியாது.

ஆரோக்கியம் (Health)

- உங்கள் உடல் நலம் நன்றாக இருக்க வேண்டுமா? அதற்குள்ள ஒரே வழி சாப்பிடப் பிடிக்காததைச் சாப்பிட வேண்டும். குடிக்கப் பிடிக்காததைக் குடிக்க வேண்டும், செய்ய விரும்பாததைச் செய்ய வேண்டும்.
- அளவுக்கதிகமாகச் சம்பாதிப்பதன்மூலம் நம் ஆரோக்கியத்தை இழக்கிறோம். பின்னர், அதைத் திரும்பப்பெற முயற்சி செய்யும்போது பணத்தை இழக்கின்றோம்.

### இதயம் (Heart)

- சொர்க்கமும் நரகமும் உன்னுடைய இதயத்தில் இருக்கிறது.

### இயற்கை (Nature)

- இயற்கை மனிதர்களைச் சமமாகப் படைக்கவில்லை. அப்படி இருக்க மனிதர்களைச் சமமாகக் கருதுவதாலும், நடத்துவதாலும் பயனேது மில்லை.
- இயற்கையைப் பழிக்காதே. அவள் தன் பங்கை ஆற்றிவிட்டாள். நீ உன் பங்கைச் செய்.

### இரகசியம் (Secret)

- உன் இரகசியத்தை வைத்துக்கொள்வது விவேகம். ஆனால், அதை மற்றவர்கள் உனக்காக வைத்திருக்க எதிர்பார்ப்பது முட்டாள்தனம்.
- ஒரு பெண் இரகசியத்தை எல்லோருக்கும் சொல்லிவிட்டு யாரிடமும் சொல்லாதே என்று சொல்கிறாள்.

### இழப்பு

- இழப்புகளே இல்லாமலிருந்தால் எல்லா ஆதாயங்களையும் எங்கே வைப்பது என்று நீ அறியமாட்டாய்.

### இளமை (Youth)

- நீ இருக்கும்வரை எவ்வளவு ஆயுட்காலம் வேண்டுமானாலும் வாழலாம். ஆனால் முதல் இருபது வருடங்கள்தான் உன் வாழ்வின் பாதி நீண்டபகுதி.
- நீ இளமையாக இருக்கும்போது முதியவனாயிரு. அதனால் உன்னுடைய முதுமைப் பருவத்தில் உன்னால் இளைஞனாக இருக்க முடியும்.
- இளமையாயிருக்கும்பொழுது ரோஜா மலர்களின்மேற்படுத்தால் முதுமையாயிருக்கும் போது முட்களின்மேற் படுக்க நேரும்.

### இன்பம் (Pleasure)

- யாருடைய இன்பங்கள் மலிவாக இருக்கின்றனவோ, அவன்தான் செல்வந்தன்
- இன்பங்கள் இன்பகரமாக இருக்கவேண்டுமெனில் அவைகளைக் குறைக்கவும்.

### இன்று (to-day)

- இன்றே செயற்பட்டு, இன்றே சேமித்து, இன்றே நல்லது செய்தால் நாளைக்கு நன்றாக ஓய்வெடுக்க முடியும்.

### உடல் (Body)

- நலமான உடல் ஆன்மாவின் கோயில், நலிவான உடல் ஆத்மாவின் சிறைச்சாலை - பேக்கன்

### உடன்படிக்கை (Treaty)

- உடன்படிக்கைகள் என்பன ரோஜாப் பூக்கள், குமரிப்பெண்கள் போன்றவையாகும். அவைகள் இருக்கும் வரைதான் உடன் படிக்கைகள் நிலைத்து நிற்கின்றன.

### உடைமை (Possession)

- கல்வி, அனுபவம், ஞாபகசக்தி இம்மூன்றையும் உன்னிடமிருந்து யாரும் பறிக்க முடியாது.

### உண்பது (Eating)

- உண்பது உயிர் வாழ்வதற்காக இருக்கவேண்டும். உயிர் வாழ்வது உண்பதற்காக இருக்கக்கூடாது.
- ஏழைகள் உணவைத் தேடுகின்றனர். பணக்காரர்கள் பசியைத் தேடுகின்றனர்.

### உண்மை (Sincerity. Truth)

- ஒவ்வொருவரும் "உண்மை" தங்கள் பக்கம் இருக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனால், ஒருவரும் உண்மையின் பக்கம் இருக்க வேண்டுமென்று விரும்புவதில்லை.
- எது கனிந்ததோ அதைப் புசி; எது உண்மையோ அதைப் பேசு.
- மூவர் உண்மையைப் பேசுகிறார்கள். முட்டாள்கள், குழந்தைகள், குடிகாரர்கள்.
- உண்மை சொல்லி வாழ்ந்தாரும் இல்லை.

### உயர்வும் தாழ்வும் (Rice and Fall)

- உன்னுடைய மனப்பாங்குதான் உன் உயர்வைத் தீர்மானிக்கிறதே யொழியத் தகுதி அல்ல.

### உழைப்பு (Labour)

- சரியாகவும் உண்மையாகவும் உழைப்பதே கடவுளிடம் கூட்டிச் செல்லும் தங்கப்பாதை.

### உள்ளுணர்வு (Inspiration)

- எந்த மனிதனும் இறைவனுடைய ஆசீர்வாதமில்லாமல் உயர்ந்த மனிதனாக இருந்திருக்க முடியாது.

### உறவினர் (Relative)

- உறவினர்களை அடிக்கடி சந்தித்துவிட்டு வரலாம், ஆனால், அவர்களுடனேயே வாழ முடியாது.

### உறுதி கொள்ளுதல் (Resolution)

- இளம்பாலகர்களிடம் மென்மையாக இருக்கவும், கஷ்டப்பட்டு முயற்சிப்பவர்களிடம் இரக்கமாயிருக்கவும், தவறு செய்பவர்களிடமும், பலமில்லாதவர்களிடமும் சகித்து இருக்கவும் உறுதி செய்துகொள். ஏனெனில் வாழ்க்கையில் அவர்கள் மாதிரியே ஒரு சமயத்தில் நாமும் இருந்திருப்போம்.

### எச்சரிக்கை (caution)

- பார்க்காமல் எதையும் பருகாதே. படிக்காமல் எதிலும் கையெழுத்துப்போடாதே.
- யானைகளிடமிருந்து ஏழு யார் தூரமும், கொம்புடைய மிருகத்திடமிருந்து ஐந்து யார் தூரமும், பெண்ணிடமிருந்து இருபது யார் தூரமும், குடிகாரனிடமிருந்து முப்பது யார் தூரமும் தள்ளியே நிற்கவேண்டும்.

- உன் நண்பரிடம் அவரும் உன் எதிரியாகலாம் என்பதைப்போலப் பழகு உன் எதிரியிடம் அவரும் உன் நண்பராகலாம் என்பதைப் போலப் பழகு.

## எளிமை (Simplicity)

- நமது தேவைகள் குறைவாகவிருப்பின் கிட்டத்தட்ட கடவுளை ஒத்திருக்கிறோம்.
- உயர்வைவிட எளியது ஒன்றுமில்லை. உண்மையாகவே எளிமையாயிருப்பது உயர்வாயிருப்பதே.

## ஏழை

- சிறிதளவு உள்ளவன் ஏழையல்ல. ஆசை அதிகம் உள்ளவனே ஏழை.

## கடமை (Mission)

- வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட கடமை இல்லாதவன் ஏழைகளி லெல்லாம் ஏழை.

## கடல் (Sea)

- கொந்தளிப்பில்லாத கடல் ஒரு நல்ல மாலுமியை எப்பொழுதும் உருவாக்கியதில்லை.

## கடவுள் (God)

- இறைவன் ஆழமான தண்ணீரில் மூழ்க வைக்கிறார். மூழ்கடிப்பதற்காக அல்ல. பரிசுத்தப்படுத்துவதற்காக.
- இறைவன் மன்னிக்கவில்லையென்றால் சொர்க்கம் காலியாயிருக்கும்.
- இறைவனுக்கு அஞ்சுங்கள். அடுத்தபடியாக இறைவனுக்கு அஞ்சாதவனைக் கண்டு அஞ்சுங்கள்.
- பசுக்கள் எந்த நிறமானாலும் பால் வெள்ளைதான். மலர்கள் பல வகையானாலும் பூஜை ஒன்றுதான். மாதங்கள் பலவானாலும் இறைவன் ஒருவன்தான்.
- கடவுளோடு கடல் முழுவதும் போ, ஆனால், கடவுள் இல்லாமல் நீ வாசற்படி தாண்டிப் போகாதே.
- கடவுள் தூய கரங்களையே பார்க்கிறார். நிறைந்த கரங்களையல்ல. கடவுளை நெருங்கிச் செல்வதற்கு மலையேற வேண்டிய தேவையில்லை.

## கடன் கொடுத்தல் (Lending)

- கடன் கொடுத்து ஏழையாவதைவிட, கடன் வாங்கி ஏழையாவது மேல்.
- கடனைத் திருப்பிக் கொடுப்பவன் தன் மூலதனத்திற்கு மேலும் சேர்க்கிறான்.
- கடன் கொடுப்பவனாகவும் இருக்காதே. கடனை வாங்குபவனாகவும் இருக்காதே. கடன் கொடுப்பவன், கொடுத்த கடனையும், நண்பனையும் இழந்துவிடுவான்.

## கண் (Eye)

- கண்ணுள்ளவன் விழுவதைவிட, குருடர் குறைவாகவே விழுகிறார்.
- வாயை மூடி வைத்திருங்கள், கண்ணைத் திறந்து வைத்திருங்கள்.

### கணவன் (Husband)

- கணவன் இல்லையே என்று விதவை அழுகிறாள். கணவன் இருக்கிறானேயென்று மனைவி அழுகிறாள். இருவரோடும் சேர்ந்து திருமணமாகாத பெண்ணும் அழுகிறாள்.
- கணவன் மூளையாகவும், மனைவி இதயமாகவும் உள்ள திருமணம் மகிழ்ச்சியானது.

### கணவன் - மனைவி (Husband - Wife)

- ஏர்பூட்டின மாடுகள் இரண்டும் ஒரே வழியிற் போனாற்றான் பூமியை உழமுடியும். விவசாயம் செய்யமுடியும். கணவனும் மனைவியும் ஒத்துப்போனாற்றான் இல்லறம் என்ற தேர் ஒழுங்காகப் போகும்.

### கண்ணீர் (Tears)

- கண்ணீர் துயரத்தின் மௌன பாஷை - வால்ட்டேர்
- கண்ணீர் ஒரு மொழி, யார் அழுகிறாரோ அவர் மட்டுமே அதைப் புரிந்து கொள்ள முடியும்.

### கவர்ச்சி (Charm)

- ஒரு பெண் நாணமடைவதை நிறத்தினால் மிகவும் பலம் பொருந்திய அழகின் கவர்ச்சியையே அவள் இழந்து விடுவாள்.
- கவர்ச்சிகள் பார்வையை ஈர்க்கின்றன. ஆனால், திறமை ஆத்மாவை வெல்லுகிறது.

### கற்பனை (Imagination)

- ஒருவன் உயரத்திற் பறக்க உதவும் பட்டமே கற்பனை.

### கற்பது (Study)

- என்றைக்கும் வாழ்வோம் என்பதுபோற் படி. நாளையே இறந்து விடுவோம் என்பது போல் வாழ். - காந்தி
- மரக்கட்டையைச் சுழற்றிவிட்டால் மந்தமான தீச்சுடர்விட்டு எப்படி எரிகிறதோ, அப்படியே படிப்பைப் பற்றினால் மந்தமான மூளையும் சுடர்விட்டு எரியும்.

### கஷ்டம் (difficulty)

- கடினமான விஷயங்கள் மூன்று. ஒன்று ஒரு இரகசியத்தைக் காப்பது. இரண்டு மனப்புண்ணை மறப்பது. மூன்றாவது ஓய்வு நேரத்தைச் சரியாகப் பயன்படுத்துவது.

### கஷ்டகாலம் (Adversity)

- செழுமை நிலை ஒரு நியாயமான அளவுகோல் அல்ல. கஷ்டகாலமே நண்பர்களை எடைபோடும் ஒரே தராசு.

காமம் (Lust)

- மிக அதி உன்னத சிருஷ்டியான பெண்ணைக் காமப் பொருளாகக் கருதி, மனிதர்கள் மிருகங்களாக மாறுவதைக் காட்டிலும், அந்த மனிதகுலமே அழிந்துபோவதைக் காண விரும்புகிறேன்.

காலம் (Time)

- காலத்தின் மதிப்பை அறிந்துகொள். அதைப்பிடி, கைப்பற்று , அதன் ஒவ்வொரு வினாடியையும் அனுபவி. சோம்பலே வேண்டாம். தள்ளிப்போட வேண்டாம். இன்றைக்குச் செய்ய வேண்டியதை நாளைக்கென்று ஒத்திப்போட வேண்டாம்.
- ஆயுளே நமக்குக் குறைவு. காலத்தை வீணாக்குவதால் உன்னுடைய ஆயுளை இன்னும் கொஞ்சம் குறைத்துக் கொள்கிறாய்.
- சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள், அது இதயத்தின் இசை! சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள் . அது சக்தியின் பிறப்பிடம்!
- வசந்த காலம் ஒரு கன்னிப்பெண், கோடைக்காலம் ஒரு தாய், இலையுதிர்காலம் ஒரு கைம்பெண், மழைக்காலம் ஒரு வளர்ப்புத் தாய்.

குணம் (Character)

- பணத்தை இழந்தவன் எதையும் இழக்காதவன். நலத்தை இழந்தவன் ஏதோ ஒன்றை இழந்தவன். ஒழுக்கத்தை இழந்தவன் எல்லாவற்றையும் இழந்தவனாகிறான்.
- கர்வம் கொள்ளாதே, கடவுளை இழப்பாய் . பொறாமை கொள்ளாதே, நண்பனை இழப்பாய். கோபம் கொள்ளாதே, உன்னையே இழப்பாய்.
- உண்மை உயர்வை அளிக்கும், பொய்மை உயர்வை அழிக்கும், அன்பு துன்பத்தைக் குறைக்கும், செல்வம் துன்பத்தைப் பெருக்கும்.

குரல் (Voice)

- ஆத்மாவுக்குச் செவி சாய்ப்பது, அசைவற்ற சிறிய மனக்குரல்தானே யொழிய காதைச் செவிடாக்கும் விதியின் வெடிச்சத்தம் அல்ல.

குழந்தை (child)

- ஒரு குழந்தை குறை கூறப்பட்டே வாழ்ந்தால், அவன் கண்டனம் செய்யக் கற்றுக் கொள்கிறான்.

குழந்தைப் பருவம் (Childhood)

- எப்படி அதிகாலைப் பொழுது, வரப்போகும் முழு நாளையும் முன்கூட்டியே அறிவிக்கின்றதோ, அதுபோல குழந்தைப் பருவம், வளரவிருக்கும் மனிதனைக் காட்டுகிறது.

### சந்தேகம் (Doubt)

- சந்தேகம் ஒரு பெரிய நோய். சாமானியத்தில் அழியாது. வெட்ட வெட்டத் துளிர்க்கும்

### சந்தோஷம் (Happiness. Joy)

- சந்தோஷம் என்பது உன்னால் கொடுக்க முடிந்ததைப் பொறுத்தது. வாங்குவதைப் பொறுத்தது அல்ல - காந்தி
- பற்றற்றிருப்பதே மகிழ்ச்சியின் மிகப்பெரிய இரகசியம்
- மகிழ்ச்சியை வயலின் பழகுவதுபோல் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- மகிழ்ச்சியின் மூன்று முக்கிய அம்சங்களாவன: வேலை செய்ய ஒன்றும், அன்பு செய்ய ஒன்றும், எதிர்பார்ப்புக்கு ஒன்றும் இருக்க வேண்டும்.
- மகிழ்ச்சி நமது வீட்டின் அடுப்படியில் வளர்க்கிறது. அது மாற்றான் தோட்டத்திலிருந்து பொறுக்கப்படுவதில்லை.
- மகிழ்ச்சியைப்போல் ஒரு அழகு சாதனம் அழகிற்கு வேறெதுவு மில்லை.

### சாந்தம் (Equammity)

- வாழ்க்கையின் ஏற்றத் தாழ்வுகளை நிதானத்துடன் எடுத்துக்கொள்ள வேண்டும்.

### சாப்பாட்டுராமன் (Glutton)

- வயிறு நிறைந்துள்ளபோது சாப்பிடுபவன் தன் பற்களாலேயே தனக்கு சவக்குழி தோண்டிக்கொள்கிறான்.

### சாமர்த்தியம் (Talent)

- வெற்றிகரமான எழுத்தாளனாக இருக்க நல்ல வழி, நல்ல எழுத்துக் களைப் பிடிப்பது, ஞாபகம் வைத்துப் பின்னர் எங்கிருந்து ஞாபகம் வைத்தோம் என்று மறந்துவிடுவது.

### சிக்கனம் (Economy, Thrift)

- பணத்தை செலவழித்தல், மிச்சப்படுத்துதல் இரண்டையும் செய்பவன் சந்தோஷமாயிருப்பான். ஏனென்றால் அவன் இரண்டையும் அனுபவிக்கின்றான்

  - சாமுவேல் ஜான்சன்.

### சிரிப்பு. புன்சிரிப்பு (Laughter, Smile)

- மெய்மறந்து சிரிப்பவன் கடைசி வரையிற் சிரிக்கிறான்.
- சிரிப்புச் சக்தியை வரப்பிரசாதமாகப் பெற்ற பிராணி மனிதன் ஒருவன் தான் - கிரிவில்லே.
- நல்ல சிரிப்பு வீட்டிற்கு சூரிய ஒளி
- சிரிப்பதைவிடக் கோபமடைய அநேகத் தசைகள் தேவைப்படுகின்றன. கோபமடைவதை விடச் சிரிப்பது எளிது.
- வாழ்க்கைப் பாதையை மலர்களால் தூவ முடியாவிட்டாலும், குறைந்த பட்சம் சிரிப்புகளால் தூவுங்கள்

**சினம் (Anger)**

- சரியாகப் புரிந்து கொள்வதற்கு இருக்கும் இரண்டு எதிரிகள் சினமும் சகிப்புத் தன்மையின்மையும்.
- கோபத்தோடு எழுந்திருப்பவன் நஷ்டத்தோடு உட்காருவான்.

**சுத்தம் (Cleanliness)**

- சுத்தம் உண்மையான தெய்வீகத்திற்கு அடுத்தபடியானது.

**சுதந்திரம் (Freedom, Liberty)**

- எல்லாச் சுதந்திரங்களைக் காட்டிலும் எனக்கு அறியவும், யோசிக்கவும், நம்பவும் மற்றும் என்னுடைய மனசாட்சிப்படிக் கூறவும் சுதந்திரம் கொடு - மில்ட்டன்
- கண்களுக்கு ஒளி எப்படியோ, நுரையீரலுக்கு காற்று எப்படியோ, இதயத்திற்கு அன்பு எப்படியோ அதுபோலத்தான் மனிதனுடைய ஆத்மாவுக்கு சுதந்திரமும் - இங்கர்சால்.

**சுயஅறிவு (Self - Knowledge)**

- தன்னையே தேடும் முடிவில்லாத போக்கே வாழ்க்கை

**சூதாட்டம் (Gambling)**

- மனித வாழ்க்கையின் இரண்டு விலையுயர்ந்த பொருள்களைச் சூதாட்டத்தினால் இழக்கிறோம். ஒன்று நேரம். இரண்டாவது செல்வம்.

**செய்கை (Action)**

- நான் இந்த உலகத்தின் வழியே பயணம் செய்யப்போது இந்த ஒரே ஒரு முறை மட்டுமே. எனவே, எவருக்கேனும் நன்மை செய்ய முடியுமானாலும் தள்ளிப் போடாமலும், அன்புகாட்ட முடியுமானாலும் இன்றே செய்வேனாக. நான் மீண்டும் இந்த வழியிற் பயணம் இனி செய்யப்போவதில்லை.

**செல்வம் (Riches, Wealth)**

- செல்வம் வைத்திருப்பவனிடம் செல்வமில்லை, அதை அனுபவிப்பவனிடம்தான் இருக்கிறது.
- ஒரு பணக்காரன் ஆரோக்கியமாயிருக்க, ஒரே வழி உடற்பயிற்சி செய்வது, உபவாசமிருப்பது, ஏழையாயிருந்த மாதிரி இறந்து போவது.
- இன்பமான செல்வத்தைத் தருவன: மிகத் தேவையான பொருள்கள் நிறைந்துள்ள ஒரு சிறிய இல்லம். நன்றாய் விவசாயம் செய்ய ஒரு சிறிய இல்லம். நன்றாய் விவசாயம், நல்ல சிந்தனையுள்ள ஒரு மனைவி.
- வாழ்நாள் குறைவு, எவ்வளவு சீக்கிரம் ஒரு மனிதன் செல்வத்தை அனுபவிக்கமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் அனுபவிப்பது நல்லது.

- எவனொருவன் இருப்பதை வைத்துத் திருப்தி அடைகிறானோ அவனே செல்வந்தன். ஏனென்றால் திருப்திதான் இயற்கையின் செல்வம்.
- பணக்காரனாயிருந்தும் கருமியாயிருப்பவன் ஏழையினும் ஏழை.

## சேமிப்பு (Saving)

- வரவுக்குமேற் செலவு செய்பவன் பணக்காரன் ஆனதில்லை. வரவுக்குள் செலவு செய்பவன் ஏழையானதில்லை.

## சொற்கள் (Words)

- மகிழ்ச்சியற்ற வார்த்தைகளைப் பேசத் தேவையான பிரயத்தனத்தைவிட இன்பமயமான வார்த்தைகளைப் பேச அதிக முயற்சி தேவை.
- சொற்கள் வாள்களை விட அதிகம் வெட்டுகின்றன.
- சொற்களைப் போன்ற ஆற்றல் வாய்ந்த கருவி உலகத்தில் வேறெதுவும் இருக்கமுடியாது. படைக்கவும், காக்கவும், அழிக்கவும் வல்லமை கொண்டவை சொற்கள்.
- உன்னுடைய வாயில் வார்த்தை இருக்கும்பொழுது அது உன்னுடைய சொந்தம். ஒருமுறை பேசப்பட்டபொழுது அது மற்றொருவருக்குச் சொந்தம்.
- அம்புகள் உடலை ஊடுருவித் தாக்கித் துளைக்கின்றன. கொடுஞ் சொற்கள் ஆன்மாவை ஊடுருவித் தாக்கித் துளைக்கின்றன.
- இளைஞர்கள் செய்வதைச் சொல்கிறார்கள். பெரியவர்கள் செய்ததைச் சொல்கிறார்கள். முட்டாள்கள் செய்ய எண்ணி யுள்ளதைச் சொல்கிறார்கள்.

## தங்கக் கட்டளை (Golden rule)

- உண்மை பொய்யைத் தணிக்கிறது. அன்பு சினத்தைத் தணிக்கிறது. சுயதுன்பம் பலாத்காரத்தைத் தணிக்கிறது. இது மகான்களுக்கு மட்டுமன்றி எல்லோருக்கும் பொருந்தக் கூடிய சாஸ்வதமான ஒரு விதி
- இருப்பதைவிட அதிகம் செய் - வாழ்வதற்கு
- தொடுவதைவிட அதிகம் செய் - உணர்வதற்கு
- பார்ப்பதைவிட அதிகம்செய் - கூர்ந்து கவனிப்பதற்கு
- வாசிப்பதைவிட அதிகம் செய் - மனதிற் பதிவதற்கு
- கேட்பதைவிட அதிகம் செய் - ஆழ்ந்து கேட்பதற்கு
- ஆழ்ந்து கேட்பதைவிட அதிகம் செய் - புரிந்து கொள்வதற்கு
- எண்ணத்தை விதை, ஒரு செயலை அறுவடை செய். செயலை விதை, ஒரு பழக்கத்தை அறுவடை செய். ஒரு பழக்கத்தை விதை, ஒரு பண்பை அறுவடை செய். ஒரு பண்பை விதை, ஒரு தலைவிதியை அறுவடை செய்
- வாயை மூடி வைத்துக்கொள். கண்களைத் திறந்து வைத்துக்கொள்.
- நீ ஒரு எஜமானனாகயிருந்தால் சில சமயம் குருடனாக இரு. ஒரு வேலைக்காரனாக இருந்தால் சில சமயம காது கேளாதவனாயிரு.
- அறிவிற்கு முதுமையில்லை. உடலிற்கு உண்டு.
- தற்புகழ்ச்சி சிறுமையில் தெரியும்

- ஈனர் உறவு இறுதியில் தெரியும்
- அதிகப் பழக்கம் அவமரியாதை தரும்
- நண்பரைக் கூட்டல் வேண்டும். பகைவரைக் கழித்தல் வேண்டும். இனங்களைப் பெருக்கல் வேண்டும், துன்பங்களை வகுத்தல் வேண்டும்.

### தயக்கம் (Indecision)

- மனிதர்கள் நீச்சல் கற்றுக்கொள்ள விரும்புகிறார்கள். ஆனால், அதே சமயம் ஒரு காலைத் தரையில் வைத்துக் கொள்ளவும் விரும்பு கிறார்கள்.

### தரம் (quality)

- உன்னுடைய செய்கைகளைக் கவனி, அவைகள் உன்னுடைய பழக்கங்கள் ஆகும்.
- உன்னுடைய பழக்கங்களைக் கவனி, அவைகள் உன்னுடைய குணங்கள் ஆகும்.
- உன்னுடைய எண்ணங்களைக் கவனி, அவைகள் உன்னுடைய சொற்கள் ஆகும்.
- உன்னுடைய சொற்களைக் கவனி, அவைகள் உன்னுடைய செய்கைகள் ஆகும்.
- நீ எவ்வளவு காலம் வாழ்கிறாய் என்பதல்ல, எவ்வளவு நன்றாக வாழ்கிறாய் என்பதே.
- அநேகத் தனிநபர்கள் கரடுமுரடான வெளித் தோற்றத்தைக் கொண்டிருந்தாலும் அவர்கள் செதுக்கப்படாத வைரம் மாதிரி ஒளி பொருந்திய குணங்களைக் கொண்டுள்ளனர்.

### தற்காப்பு (Self - defence)

- தற்காப்பு ஒரு நற்குணம். எல்லா உரிமைகளுக்கும் தனித்த அரண்.

### தற்பெருமை (conceit)

- வாழ்க்கையில் நல்ல நிலையில் உள்ள ஒவ்வொருவனும் எல்லாம் தானே செய்ததாக நினைத்து மகிழ்ச்சி அடைகிறான். அவன் மனைவி சிரித்துக்கொண்டே அப்படியே விட்டுவிடுகிறாள்.

### தனிமை (Solitude) ஏகாந்தம்

- எவன் ஒருவன் தனித்து அதிகம் நிற்கிறானோ, அவன்தான் மிகப் பலமான மனிதன்

### தாய் (Mother)

- கடவுள் எல்லா இடங்களிலும் இருக்க முடியவில்லை. அதனாற்றான் தாய்மார்களை உண்டாக்கினார்.
- தாய் என்பவள் சாய்ந்து கொள்ளப் பயன்படும் ஒரு நபர் அல்ல. சாய்வை அவசியமற்றதாகச் செய்யத்தான் தாய்.
- தந்தையின் அன்பு சுடுகாடுவரை மட்டும்தான். ஆனால் தாயன்பு என்றென்றும் உள்ளது.

### தாம்பத்திய உறவு (Sex)

- தாம்பத்திய உறவு என்ற தீச்சுடரை அடக்கி ஆளாவிட்டால் அது சுட்டுப்பொசுக்கிவிடும். அதை முறையாக ஒழுங்குபடுத்தினால் அழிவற்ற தீவட்டியைப் பிரகாசிக்கச் செய்யும்.

- தன்னையே மதிக்கிறவன் மற்றவர்களிடமிருந்து பாதுகாப்பாக இருக்கிறான். அவன் யாராலும் துளைக்க முடியாத போர்க் கவச மேலாடையை அணிந்துள்ளான்.
- எவனொருவன் தனக்காகவே வாழ்கிறானோ, அவன் கேவலம் இறக்கப் போகிறவனுக்காக வாழ்கிறான்.

### தியாகம் (sacrifice)

- தியாக வாழ்க்கை கலையின் சிகரம். அதுதான் உண்மையான மகிழ்ச்சி.

### திருப்தி (contentment)

- எவனொருவன் குறைந்ததை வைத்துத் திருப்தி அடைகிறானோ அவன்தான் மிகப் பெரிய செல்வந்தன். ஏனென்றால் திருப்திதான் இயற்கையின் செல்வம்.

### திருமணம் (Marriage)

- திருமணத்திற்கு அழைப்பின்பேரில் செல். சாவுக்கு அழையாவிட்டாலும் செல்.
- பெண் திருமணத்திற்கு முன் அழுகிறாள். ஆண் திருமணத்திற்குப்பின் அழுகிறான்.
- ஆண்கள் களைத்துப் போவதால் திருமணம் செய்து கொள்கிறார்கள். புதுமையாயிருப்பதால் பெண்கள் திருமணம் செய்து கொள்கி றார்கள். இருவரும் ஏமாந்து போகிறார்கள்.
- திருமணம் ஒரு தலைகீழான ஜுரம். உஷ்ணத்தில் ஆரம்பித்து குளிர்ச்சியில் முடிகிறது.
- விரும்பும்போது உன் மகனுக்கு மணம் முடி, ஆனால் முடியும் போது உன் மகளுக்கு மணம் முடித்துவிடு.

### தீவிர உணர்ச்சிகள் (Passions)

- தீவிர உணர்ச்சிகள் காக்கா வலிப்புகள் மாதிரி. அவைகள் அந்த நேரத்தில் நம்மை வலுவுள்ளவராக்கினாலும் பின்னர் நம்மை பலவீனமுள்ளவர்களாக்கிவிடுகிறது.

ஆக்கம், துயரம், மனவேதனை

(Sorrow, Geief, Misery)

- துன்பத்தை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்ளும்போது அது துன்பமாகவே தெரியாது. அது சொல்லொணா இன்பமாக மாறிவிடுகிறது.
- வாழ்க்கையில் மிகப்பெரிய மூன்று துன்பங்கள் இவைதாம். இளம் வயதிலேயே தந்தையை இழத்தல், நடுவயதில் மனைவியை இழத்தல், வயதான காலத்தில் மகன்கள் இல்லாதிருத்தல்.
- துன்பம் வரும்பொழுது, தூரமுள்ள சகோதரனை விட அருகே உள்ள பக்கத்து வீட்டுக்காரரே சிறந்தவர்.

### தூக்கம் (Sleep)

- விழித்துக்கொண்டிருக்கும் துன்பங்களுக்கு தூக்கம்தான் நல்ல சிகிச்சை.
- ஒவ்வொருவரும் ஒரு சந்திரன். எவருக்கும் காண்பிக்காத இருட்டுப் பக்கம் அவரிடம் உள்ளது.

நட்பு (Friendship)

- உண்மையான நட்பு என்னும் செடி மிக மெதுவாகத்தான் வளரும்.
- என் உடைமையனைத்தும் நின் உடைமை. நின் உடைமை அனைத்தும் என் உடைமை.
- துன்பத்தில் துணை கொடுக்கும் நண்பன் உண்மையான நண்பன்

நம்பிக்கை (Fith, Trust)

- மகிழ்ச்சி என்ற பெரிய பழத்தைவிட நம்பிக்கை என்ற மிகச்சிறிய விதை சிறந்தது.
- அதிகத் தூரத்திலிருக்கும் கணவனையும், அதிகப் பக்கத்திலிருக்கும் பிரம்மச்சாரியையும் ஒருபோதும் நம்பாதே.
- எல்லோரையும் நம்புவது ஆபத்து. ஆனால் ஒருவரையும் நம்பாதிருப்பது பேராபத்து.

நன்றி (Gratitude)

- நன்றி என்ற நற்குணம் எல்லாப் பண்புகளிலும் சிறந்த நற்குணமாக இருப்பதோடு மட்டுமல்லாமல், அது மற்றவைகளுக்குப் பெற்றோரா கவுமிருக்கிறது.
- உதவி பெற்றவன் அந்த உதவியை என்றைக்கும் மறக்கக்கூடாது. உதவி செய்தவன் தான்செய்த உதவியை என்றைக்கும் நினைத்துப் பார்க்கக்கூடாது.

நஷ்டம் (Loss)

- சமையல் மோசமானால் ஒரு நாள் நஷ்டம், அறுவடை மோசமானால் ஒரு வருடம் நஷ்டம். திருமணம் மோசமானால் ஆயுள் முழுதும் நஷ்டம்.

நாகரிகம் (Civilisation)

- உண்மையான நாகரிகம் யாதெனில் ஒவ்வொரு மனிதனும் தனக்கென வேண்டுகிற உரிமைகளை மற்றவருக்கும் கொடுப்பதுதான்.

நாக்கு (Tongue)

- ஆண்டவன் செவியிரண்டும், நா ஒன்றும் படைத்துள்ளான். ஏன்? அதிகம் கேட்கவும் குறைத்துப் பேசவும்தான்.
- நாக்கு எனும் எழுதுகோல் இதயம் எனும் மையினால் தோய்த்தெடுக்கப்படட்டும்.

நாய் (Dog)

- சுயநலமுள்ள இந்த உலகில் நம்பகமான, சுயநலமில்லாத ஒரு நண்பனை மனிதன் பெற முடியுமானால் அது நாய் ஒன்றே. அது அவனை விட்டுப் பிரிவதில்லை. நன்றி மறப்பதில்லை. கள்ளங்கபடமாக இருப்பதில்லை.
- நாய் ஒரு பெண்ணைவிடப் புத்திசாலி. அதுதான் எஜமானனைக் கண்டு குலைப்பதில்லை.

நாளை (To-morrow)

- நாளைய தினத்தைப் பற்றித் தற்பெருமை பேசாதே. நாளைய தினம் என்ன கொண்டு வருமென்று உனக்குத் தெரியாது.

நிச்சயம் (Certainly)

- ஒரு விஷயத்தைப் பற்றி ஒருவன் முற்றிலும் நிச்சயமாயிருக்க வேண்டு மென்றால் அவன் எல்லாவற்றையும் அறிந்திருக்க வேண்டும். அல்லது ஒன்றுமே அறியாதிருக்கவேண்டும்.

நிதானம் (Moderation)

- மிதமான இதயம், மிதமான நடை, மிதமான ஆகாரம், மிதமான தூக்கம், இந்த மிதங்கள்தான் வயோதிப வாசலுக்கு வெளிச்சம் காட்டுகிறது.

நீதிமான் (Judge), நீதியரசன்

- நீயே உனக்கு நீதிமானாயிருந்து மகிழ்ச்சியாயிரு - காந்தி
- நம்மால் எவ்வளவு தூரம் செய்ய முடியும் என்பதை உணர்ந்து நம்மை நாம் மதிப்பிடுகிறோம். ஆனால் மற்றவர்களோ நீ ஏற்கனவே செய்ததை வைத்து மதிப்பிடுகிறார்கள்.

நேர்மை - பாவம்( Virtue - Sin)

- மற்றொருவன் உன்னைப் புகழட்டும், உன்னை உன் வாயாலேயே புகழாதே.
- திருப்தி மாதிரிப் பொக்கிஷம் வேறெதுவும் கிடையாது. மனவலிமை மாதிரிக் குணம் வேறேதுவும் கிடையாது.
- மற்றவர்களுக்கு நல்லது செய்வது நேர்மை. கெடுதல் செய்வது பாவம். பலமும் ஆண்மையும் நேர்மை. பலவீனமும் கோழைத்தனமும் பாவம். சுயேச்சை நேர்மை. சார்ந்திருப்பது பாவம். பிறரை நேசிப்பது நேர்மை. பிறரை வெறுப்பது பாவம். கடவுள் நம்பிக்கையும் தன்னம்பிக்கையும் நேர்மை, சந்தேகம் பாவம். ஒருமைப்பாடு நேர்மை, வேற்றுமை காண்பது பாவம்.

பசி (Hungry)

- பசி சுவை அறியாது, தூக்கம் சுகமறியாது, காமம் வெட்கமறியாது

படித்தல் (Reading, study)

- எப்படி உடற்பயிற்சி உடம்புக்குத் தேவையோ, அப்படியே படிப்பும் மனத்திற்குத் தேவை.

பணம் (Money)

- செல்வச் செழிப்பில் அன்னியர்கள் "உறவு" என உரிமை கொண்டாடுகின்றனர். துன்பத்தில் உறவினர்கள் அன்னியர்களாகி விடுகிறார்கள்.

- பணத்தைச் சம்பாதிப்பதில் வேதனை, சம்பாதிக்கப்பட்டதைப் பாதுகாப்பதில் வேதனை, அதனை இழப்பதில் வேதனை, அதனை செலவு செய்வதிலும் வேதனை, இவ்வளவு துன்பத்தின் சேமிப்புக் கிடங்கான அதை ஏன் பெறவேண்டும்?
- செல்வந்தர்கள் ஒரே ஒரு கண்ணாற்றான் பார்க்கிறார்கள். மற்றொரு கண்ணைப் பையில் வைத்திருக்கிறார்கள்.

பிடிவாதம் (Obstinacy)

- அபிப்பிராயத்திற் பிடிவாதமும் தீவிரமும் காண்பிப்பது முட்டாள்த்தனத்தில் உண்மையான நிரூபணம்.
- வாதத்திற்கு மருந்து உண்டு; பிடிவாதத்திற்கு மருந்தில்லை.

பிரம்மச்சாரி (Bachelor)

- பிரம்மச்சாரிகள் மனச்சாட்சிகள் வைத்துள்ளார்கள். திருமணமானவர்கள் மனைவிகள் வைத்துள்ளார்கள்.

பிரார்த்தனை (Prayer)

- பூஜைக்குப் பூ வேண்டும். ஜெபத்துக்குத் துளசி மாலை, வழிபாட்டுக்கு ஒரு ஆலயம். ஆராதனைக்கு ஒரு தெய்வம். ஆனால் பிரார்த்தனைக்கு எதுவும் வேண்டாம். நலல மனமும், நம்பிக்கையும் இருந்தாற் போதும்.

பெண் (Women)

- பெண்களுக்குக் கன்னிப்பருவம் சூரியன், கற்பு சந்திரன், திருமணம் இரவு.
- பெண்களுக்குக் கன்னிப் பருவம் அமைதி மயம். கற்பு முக்தி நிலை. திருமணம் சிறைவாசம்.
- பெண் இல்லாத வீடு வாளியில்லாக் கிணறு.
- தங்கத்திற்குச் சோதனை நெருப்பு, பெண்ணுக்கு சோதனை தங்கம், மனிதனுக்குச் சோதனை பெண்.

எம் மண்ணில் இடம்பெறும் பவள விழா சிறப்புற வாழ்த்துகிறேன்.

# சிவசக்தி

## ரெக்ஸ்ரைஸ்ஸ்



தரமான புடைவை வகைகளுக்கு
அனைவரும் இன்றே நாடவேண்டிய
இடம்

Sivashakthi Textiles

இல. 103A, பிரதான வீதி,
குளியாப்பிட்டி.

Tel: 0372281324


---

எம் மண்ணில் இடம்பெறும் பவள விழா சிறப்புற வாழ்த்துகிறேன்.

# சிவா

## நறுமணப் பூங்கா

- மென்பானம் தயாரிப்புப் பொருள்கள்
- கேக் தயாரிக்கும் பொருள்கள்
- பொலித்தீன், லஞ்ச் பொக்ஸ்
- இந்தியன் ஊதுபத்தி வகைகள்
- ஆயுர் வேத மூலிகைகள்
- பாடசாலை உபகரணங்கள்
- பான்சி குட்ஸ் வகைகள்
- ஹொட்டல் மற்றும் சைனிஸ் ஹொட்டலுக்குரிய பொருட்கள்
- ஐஸ்கிறீம் தயாரிப்புப் பொருட்கள்



- எமல்சன் வகைகள்
- பிஸ்கட்வகைகள்
- ஆயுர்வேத மருந்துகள்
- றோயல் தயாரிப்புப் பொருட்கள்
- சொக்லெட் வகைகள்
- பேப்பர் சேவியற்
- எசன்ஸ் வகைகள்
- ரொபி வகைகள்
- சொப்பிங் பாக்
- லைற் வகைகள்

மற்றும் பல்வேறு வகையான அனைத்துப் பொருட்களையும் ஒரே கூரையின்கீழ் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

Tel: 0212222567

சுவிஸ் நாட்டில் 20வருட காலமாக
இறக்குமதித் துறையில் அனுபவம் மிக்கவர்கள்

# Sai Trader Gmbh

**FRESH, FROZEN & DRY FOODS IMPORTERS + WHOLESALERS**

Raaterstrasse 24, 8175 Windlach. Tel: 044/855 86 50
Postfach 289, 8058 Zurich Airport. Fax: 044/855 86 51
Mobile: 079 218 70 75. E-mail: info@saitrader.com. Web: www.saitrader.ch

உடன் மரக்கறி வகைகள், பழ வகைகள், உலர் கடல் உணவு வகைகள்,
இலங்கை மதுபானம் போன்றவற்றின்
நேரடி இறக்குமதியாளர்களும் மொத்த விற்பனையாளர்களும்



இலங்கை, இந்தியா, தாய்லாந்து, மலேசியா, கென்யா, உகண்டா,
தென் அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து உடனுக்குடன்
இறக்குமதி செய்யப்பட்டு சுவிஸில் ஆசிய மற்றும் ஐரோப்பிய
வர்த்தக நிலையங்களுக்கு அதி துரித கதியில் விநியோகம் செய்வர்
எனும் நற்பெயர் எடுத்தவர்கள்.








இலங்கை, இந்திய அனைத்து
மீன் வகைகளையும் மொத்தமாக
இறக்குமதி செய்வதில்
தொடர்ந்து முன்னணி வகிக்கும்
நிறுவனம்.,

# Sai Trader Gmbh

Rasamanickam Ravindran

Harikanan, Jaffna.